2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

வரு.74 இல. 11 ★

www.vaaramanjari.lk

/Thinakaran.lk /ThinakaranLK

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

தினகரன்

வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI

தினகரன் வாரமன்ஜரி

2022 மார்ச் 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை March 13 Sunday, 2022 32பக்கங்கள்

50/-

03 உலக பொருளாதார நெருக்கடி; எதிரணிக்கு புரிய வேண்டும்!

24 விடைபெற்றார் ஷேன் வோர்ன்!



27 சம்பளத்தை அதிரடியாக உயர்த்திய நயன்தாரா

இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினை

ஜனாதிபதியுடன் கலந்துரையாடிய பின்னர் மே மாதம் பேச்சுவார்த்தை

அமைச்சர் டக்ளஸ் கச்சதீவில் தெரிவிப்பு

இனிவரும் பேச்சுவார்த்தை இராஜதந்திர மட்டத்தில் நடத்தப்பட வேண்டும். இரு தரப்புமே வலியுறுத்து

கச்ச தீவிலிருந்து லோரன்ஸ் செல்வநாயகம்

இலங்கை இந்திய மீனவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் எதிர்வரும் மே மாதத்தில் இரு தரப்பினரையும் இணைத்து பேச்சுவார்த்தை ஒன்றை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கச்சதீவில் தெரிவித்தார்.

கொழும்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்து கலந்துரையாடிய பின்னர் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை இலங்கை 04

இழுவை மடித்தொழிலை அனுமதிக்க முடியாது; இலங்கை மீனவர்கள் திட்டவட்டமாக தெரிவிப்பு

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழா நேற்று இலங்கை இந்திய பக்தர்களின் பங்கேற்புடன் பக்தி பூர்வமாக கொண்டாடப்பட்டது. யாழ். மறை மாவட்ட குருமுதல்வர் அருட்திரு ஜெபரட்ணம் அடிகளாரின் தலைமையில் இலங்கை இந்திய அருட்தந்தையர்களின் பங்கேற்புடன் திருவிழா கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுக் கப்படுவதை படங்களில் காணலாம். (படம்: கச்சதீவிலிருந்து லோரன்ஸ் செல்வநாயகம்)

நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடி;

நிபந்தனைகளுடன் 500 மில். டொலர் இலங்கைக்கு கடன் வழங்கும் இந்தியா

நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடியை நிவர்த்தி செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் 500 மில்லியன் டொலர் கடனுதவியை வழங்க இந்தியா நடவடிக்கை எடுத்துள்ளது. இந்திய எக்ஸிம் வங்கி இந்த கடன் தொகையை இலங்கைக்கு வழங்கவுள்ளது.

இவ்வாறு கிடைக்கும் கடன் தொகையிலிருந்து கொள்வனவு செய்யப்படவுள்ள முதலாவது எரிபொருள் தொகை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை கிடைக்குமென தெரிவிக்கப்பட்டுள்ளது. 04

எரிபொருள் விலை உயர்வு

பஸ் கட்டணம் 50 வீதம் அதிகரிக்க வேண்டும்

தனியார் பஸ் உரிமையாளர் சங்கம்

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனமும் எரிபொருள் விலையை அதிகரித்துள்ளதால் பஸ் கட்டணங்களை அதிகரிக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது. 04

சீனாவில் மீண்டும் முழு ஊரடங்கு சாங்சுன் நகரில் புதிய வைரஸ் பரவல்

சீனாவின் சாங்சுன் நகர் முழுவதும் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

புதிய வைரஸ் பரவலே காரணமென ஏ.பி. செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

சீனாவின் வூகான் நகரில் 2019ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸ் 221 க்கும் மேற்பட்ட உலக நாடுகளில் பரவி தற்போது வரை பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது.

கொரோனாவை கட்டுப்படுத்தும் வகையில் தடுப்பூசி செலுத்தும் பணிகள் தீவிரமாக நடைபெற்றும் வருகிறது. கொரோனா வைரஸ் பல்வேறு வகையில் உருமாற்றம டைந்து தொடர்ந்தும் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது.

உலகம் முழுவதும் தற்போது 45.50 கோடி பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நிலைமை இவ்வாறிருக்க, சீனாவில் அடுத்த வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன் அது மிகப் பெரிய பீதியை ஏற்படுத்தி உள்ளது.

சீனாவின் வடகிழக்கில் 04

கச்சதீவு பேச்சுவார்த்தை அடுத்த கட்டத்தை எட்ட வேண்டும்

இலங்கையும் இந்தியாவும் நெருங்கிய நாடுகளாக இருக்கின்ற போதிலும் இருநாடுகளுக்கும் இடையே ஓயாத பிரச்சினைகளும் இருக்கவே செய்கின்றன. முன்னர் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு தமிழ் வர்த்தகர்கள் தற்காலிக வதிவிட விசா பெற்று வருவது நாட்டைச் சுரண்டுவதற்காகவே என்பது இலங்கை அரசியலில் ஒரு இனவாத பார்வையாகவே இருந்தது. இருந்ததோடு எழுபதுகளில் பதவிக்கு வந்த ஸ்ரீமாவோ அம்மையார் தற்காலிக வதிவிட விசாவை இரத்து செய்து அந்த வர்த்தகர்களை இந்தியாவுக்கு அனுப்பி வைத்தார்.

அதன் பின்னர் இரு நாடுகளுக்கு இடையிலும் பல பிரச்சினைகள் தோன்றி மறைந்திருந்தாலும் இரு தரப்பு நல்லுறவுக்கும் பரஸ்பர நம்பிக்கைக்கும் பங்கம் ஏற்பட்டதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது இவ்விரு நாடுகளும் இரண்டு வகையான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளன. முதலாவது இராஜதந்திர ரீதியான அரசியல் தீர்வு தொடர்பானது. இரண்டாவது, இரு தரப்பு மக்கள் தொடர்பானது, அதாவது இலங்கை - இந்திய மீனவர்கள் தொடர்பிலான பிரச்சினை.

கச்சதீவு இந்தியாவுக்கு சொந்தமானதாக இருந்தபோது தமிழக மீனவர்கள் கச்சதீவையும் தாண்டி வந்து மீன் பிடித்தனர். ஒரு அரசியல் தந்திரோபாய நகர்வாகக் கருதி அன்றைய பாரதப் பிரதமர் இந்திரா காந்தி இலங்கைக்கு கச்சதீவை அன்பளிப்பாக வழங்கினார். இதனால்தான் கச்சதீவை தமது பாரம்பரிய மீன்பிடிக்கும் பகுதி எனவும் அந்த மட்டத்தில் எமக்கு இலங்கை எல்லைக்குள் 04

1,20,000 GAS சிலிண்டர்கள் சந்தைக்கு விநியோகம்

லிட்ரோ கேஸ் அறிவிப்பு

ஒரு நெருக்கடியான கால கட்டத்திலும் சமையல் எரிவாயு விநியோக பொறிமுறையை வழமைப்படுத்துவதற்கு முடிந்தவரை பல நடவடிக்கைகளை எடுத்து வருவதாக லிட்ரோ கேஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.தற்போது 1,20,000 எரிவாயு சிலிண்டர்கள் நேற்று முன்தினம் சந்தைக்கு வெளியிடப்பட்டதுடன் நாளாந்த தேவைக்கு ஏற்ப எரிவாயு சிலிண்டர்களின் அளவைப் பெற்று வருவதாக நிறுவனம் தெரிவித்துள்ளது. 04

பெற்றோலிய கூட்டுத்தாபனமும்

எரிபொருள் விலையை நேற்றுமுதல் அதிகரித்தது

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனமும் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் எரிபொருள் விலையை அதிகரித்துள்ளது.

அதற்கமைய ஒக்டேன் 92 பெற்றோலின் விலை 77 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. விலை அதிகரிப்பின் பின்னர் இதன் புதிய விலை 254 ரூபாவாகும். இதே போன்று ஒக்டேன் 95 பெற்றோலின் விலை 76 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய இதன் புதிய விலை 283 ரூபாவாகும். ஒட்டோ டீசலின் விலையை 55 ரூபாவால் அதிகரித்துள்ளது. அதற்கமைய இதன் புதிய விலை 176 ரூபாவாகும். சுப்பர் டீசலின் விலை 95 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. விலை அதிகரிப்புக்கமைய இதன் புதிய விலை 254 ரூபாவாகும்.

அரசிடம் தவறிருப்பின் சுட்டிக்காட்டி

வாக்காளர்கள் பொறுப்புள்ள பிரஜைகளாக மாறவேண்டும்

-நிமல் ஜீ. புஞ்சிஹேவா

தேர்தல்களில் வாக்களித்து அரசாங்கத்தை அமைப்பவர்கள் அந்த அரசாங்கங்களை பலப்படுத்தி அபிவிருத்திக்கு பங்களிக்க வேண்டும் எனவும், தவறுகள் இருப்பின் அவற்றை விமர்சன ரீதியாக சுட்டிக்காட்டி வாக்காளர்கள் பொறுப்புள்ள பிரஜையாக மாற முடியுமென தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் ஜீ. புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

வருடாந்த வாக்காளர் தினக் கொண்டாட்டத்தின் 04

நாளை முதல் பாடசாலைகளுக்கு

அனைத்து மாணவர்களையும் அழைக்குமாறு அறிவுறுத்தல்

கல்வி அமைச்சு சுற்றறிக்கை

பாடசாலைகளை நாளை 14 ஆம் திகதி திங்கட்கிழமை வழமை போன்று நடத்திச் செல்வதற்கான சுற்றறிக்கை ஒன்றை கல்வி அமைச்சின் செயலாளர் வெளியிட்டுள்ளார். முன்னதாக, கொவிட் 19 தொற்று நோயைக் கருத்தில் கொண்டு மாணவர்களின் எண்ணிக்கையின் 04

உக்ரைன் மீது 17 ஆவது நாளாக தாக்குதல்

மெலிடோபோல் மேயரை கடத்திய ரஷ்யப் படைகள்

உக்ரைன் பாராளுமன்றம் அறிவிப்பு



உக்ரைனிலுள்ள மெலிடோபோல் மேயர் இவான் ஃபெடோரோவை ரஷ்யப் படைகள் கடத்திச் சென்றதாக உக்ரைன் பாராளுமன்றம்நேற்று தெரிவித்துள்ளது.

உக்ரைன் மீதான ரஷ்ய இராணுவத்தின் தாக்குதல் நேற்று 17ஆவது நாளாக நீடிக்கிறது. தலைநகர் கீவ், கார்கிவ், மரியுபோல், சுமி உள்ளிட்ட முக்கிய நகரங்கள் மீது ரஷ்ய படைகள் 04



2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

தினகரன் அனுசரணையில் சென்னையில் நடைபெற்ற உலக தமிழ் வம்சாவளி விழா

தினகரன் தினகரன் வாரமஞ்சரி ஊடக அனுசரணையில் இந்தியா சென்னை மாநகரில் நடைபெற்ற உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பின் 8ஆவது ஆண்டு விழா வெள்ளிக்கிழமை (11) காலை சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட சில நிகழ்வுகளின் பதிவுகள்....

Cargills
විශ්‍රාම දීමනා
ஓய்வுக்கால வெகுமதி
Pensioners' Rewards
நன்றி உணர்வோடு
அரச ஓய்வூதியர்களுக்கு
கௌரவம்
நாடெங்குமுள்ள காகில்ஸ் புட்சிட்டி, எக்ஸ்பிரஸ் கிளைகளில்
மொத்த பில்லில் 5% விலைக்கழிவு
நிபந்தனைகள்:
- கொள்வனவின்போது அடையாள அட்டை உரிமையாளர் வருகைதரல் வேண்டும்
- இவ் விலைக்கழிவு குறைந்தபட்சம் ரூ.15,000 க்கு மேற்பட்ட கொள்வனவுகளுக்கு மாத்திரமே செல்லுபடியாகும்
- ஒரு மாதத்திற்கான அதிகபட்ச கொள்வனவு எல்லை ரூ.15,000
- மதுபானம், சிகரட் மற்றும் அரச விலைக்கட்டுப்பாட்டு உற்பத்திகள் குறைந்தபட்ச கொள்வனவு அல்லது விலைக்கழிவு தொடர்பாக செல்லுபடியாகாது
ශ්‍රී ලංකා විශ්‍රාම
இலங்கை ஓய்வு
Sri Lanka Pensions
இலங்கை ஓய்வூதியத் திணைக்களத்தோடு இணைந்து முன்னெடுக்கப்படும் செயற்திட்டம்
Cargills SINCE 1844
Cargills EXPRESS
Cargills food city
வீடு செல்லும் போது

ரொஷான் அஷ்ரப் அஸீஸ் நம்பிக்கை நிதியத்தினால் 170 மாணவ மாணவிகளுக்கு அப்பியாசப் புத்தகங்கள் வழங்கும் நிகழ்வு, கொழும்பு 12, ஆமர் வீதி, மைத்திரி போதிராஜ மாவத்தையில் நடைபெற்றது. அஸீஸ் மன்றத் தலைவர் அஷ்ரப் அஸீஸ் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில், முஸ்லிம் கல்வி மாநாட்டின் பொதுச் செயலாளர் சிரேஷ்ட சட்டத்தரணி ரஷீத் எம் இம்தியாஸ் அப்பியாசப் புத்தகங்கள் வழங்குவதையும், புதிய அலை கலை வட்டத் தலைவர் ராதா மேத்தா, நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் கலைஞர் ஏ. எச். எம். லாஹிர் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

106 ஜீ 1 லயன் கழகத்தின் கிளை நுழைவாயில் லயன் கழகத்தால் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு யாழ். மணியம் தோட்டத்தில் அமைந்துள்ள தேவாலயமொன்றில் கத்தோலிக்க மதப் பெரியார்கள் சகிதம் மகளிர் தினம் கொண்டாடப்பட்டது. அதன்போது அந்தக் கிராமத்தில் வாழும் குடும்பத்தினருக்கு மரமுந்திரிகை மரக்கன்று வழங்கியபோது எடுக்கப்பட்ட படம். *(வேலணை குறூப் நிருபர்)*

இலங்கை ஹோக்கி அணி தனது முதலாவது போட்டியில் உஸ்பெகிஸ்தான் அணியினை 5-0 என்ற கோல் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்தோனேசியா ஜகார்த்தா நகரில் நடைபெறும் ஆசிய ஹோக்கி சம்மேளன கிண்ணத்திற்கான இப்போட்டியில் அடுத்த போட்டியில்தாய்லாந்து அணியுடன் மோதவுள்ளது. உஸ்பெகிஸ்தானுடனான போட்டியில் முதல் காற் பகுதியில் 3-0 வித்தியாசத்திலும் இரண்டாவது காற் பகுதியில் 4-0, இறுதியில் 5-0 வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகராக நியமிக்கப்பட்ட முன்னோடி இசையமைப்பாளர் கலாபூஷணம் ஏ. மகேந்திரன், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்கவிடமிருந்து நியமனக் கடிதத்தைப் பெற்றுக்கொள்கிறார்.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

உலகளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியாலேயே நாட்டிலும் சில பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளன என்பதை அரசாங்கத்தை விமர்சிப்பவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் என கமத்தொழில் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார். நாட்டின் தற்போதைய நிலைமைகள் குறித்து அமைச்சர் எமக்கு பேட்டியொன்றை வழங்கினார்.

அரசியல் அரங்கம்

அர்ஜுன்

உலக பொருளாதார நெருக்கடியை எதிரணி புரிந்து கொள்ள வேண்டும்!

அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே பேட்டி

கே: அனைத்து அரச நிறுவனங்களிலிருந்தும் வினைத்திறனான பொதுச் சேவையை வழங்குவதில் நம்பிக்கை கொண்டிருப்பதாக ஜனாதிபதி அண்மையில் கூறியிருந்தார். இது பற்றி உங்கள் நிலைப்பாடு என்ன?

பதில்: குறிப்பிட்ட சில பகுதிகளில் அரச துறையின் செயற்பாடுகள் எதிர்பார்த்த அளவில் இல்லை என்பதைக் கூறுவதில் வருத்தமளிக்கிறது. எனவேதான் கடமைகளை சரியாக நிறைவேற்றுமாறு அரச அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார். அரசு துறையில் சீர்செய்ய வேண்டிய பல பிரச்சினைகள் உள்ளன. இதனை எனது அமைச்சிலும் பார்க்க முடிகிறது. சில சமயங்களில் அரச அதிகாரிகள் செய்ய வேண்டிய கடமைகளில் அமைச்சர்கள் ஈடுபட நேரிடும். இதனால் பெரும்பாலான பகுதிகளில் அரசுத் துறை திறமையற்றதாகிவிட்டது.

கே: ஸ்திரமான கொள்கைகளில் கவனம் செலுத்தாமல், தமது தலைவர்களுக்குத் தொல்லை கொடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்திருந்தார். இதனை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?

பதில்: ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவர்கள் மற்றும் ஏனைய தலைவர்களை தொல்லைக்கு உட்படுத்த வேண்டிய நோக்கம் என்ன? சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட ஏனையவர்களை உபத்திரவம் செய்யும் எண்ணம் எமக்கு இல்லை. மக்களால் நிராகரிக்கப்பட்ட தலைவர் அவர். எனவே, அத்தகைய தலைவரைத் தாக்கியோ துன்புறுத்தியோ என்ன பயன்?

கே: இலங்கை உணவு நெருக்கடியை நோக்கிச் செல்வதாக சர்வதேச ஊடகங்களில் வெளியாகும் செய்திகளில் உண்மை உள்ளதா?

பதில்: அரசாங்கம் தனது கடனைத் தீர்க்க முடியாததால் ஜனவரியில் நாடு பாரிய சவால்களுக்கு முகங்கொடுக்கும் என்று முன்னர் ஒரு தரப்புக் கூறி வந்தது. ஜன வரியில் உணவுப் பற்றாக்குறை ஏற்படும் என்றும், உரம் இல்லாததால் விவசாயிகள் சாகுபடியை கைவிட வேண்டிய நிலை ஏற்படும் என்றும் கூறப்பட்டது. தற்போது நெல்லுக்கு நல்ல விலை கிடைப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதால் விவசாயிகள் தமது உற்பத்திகளைத் தடையின்றி விற்பனை செய்து வருகின்றனர். தற்போது நெல்லுக்கு உத்தரவாத விலை கிடைத்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். தற்போது, நாட்டில் உணவுப் பற்றாக்குறை இல்லை, அரசாங்கம் அதன் கடமையைச் செய்துள்ளது. எனவே, குறிப்பிட்ட பிரிவினர் கணித்த படி எதுவும் நடக்கவில்லை.



கே: கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல்களில் அமோகமான ஆணை பெற்ற அரசாங்கம் ஒன்றரை வருட குறுகிய காலத்திற்குள் மக்களின் நம்பிக்கையை இழந்துள்ளதாக எதிர்க்கட்சி கூறுகிறது. இது பற்றி நீங்கள் கூறுவது என்ன?

பதில்: இது நமது நாட்டிற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட பிரச்சினையல்ல, உலகளாவிய பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்ட நிலைமை இது என்பதை அரசாங்கத்தை குறை கூறுபவர்கள் உணர வேண்டும். தற்போது உலக சந்தையில் ஒரு பரல் மசகு எண்ணெயின் விலை கணிசமாக உயர்ந்துள்ளது. நாளொன்றுக்கு எரிபொருளுக்காக அரசாங்கம் 500 மில்லியன் ரூபா நட்டத்தைச் சந்திக்கிறது. மின்சாரம் மற்றும் தண்ணீருக்கு மாதம் ஒன்றுக்கு அரசுக்கு ஏற்படும் இழப்பு ரூ. 14 பில்லியன் மற்றும் ரூ.12 பில்லியன் ஆகும். அப்படியெனில், எரிபொருள், மின்சாரம், தண்ணீர் ஆகியவற்றின் விலையை உயர்த்தினால் அது சரியாகி விடுமா? எரிபொருள், மின்சாரம், தண்ணீர் ஆகியவற்றின் விலைகளை உயர்த்தப் போவதில்லை என்ற அரசாங்கத்தின் முடிவு பற்றி எவரும் பேசுவதில்லை.

இலங்கையில் டொலர் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. வெளிநாடுகளில் வசிக்கும் சுமார் 1.4 மில்லியன் இலங்கையர்கள் டொலர்களை அனுப்புவதில்லை. இதன் விளைவாக, 400 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நாட்டுக்கு வரவில்லை. இலங்கையில் உள்ள முக்கிய ஏற்றுமதி சார்ந்த நிறுவனங்கள் தங்கள் டொலர்களை இலங்கைக்கு கொண்டு வருவதில்லை, எப்படியாவது தங்கள் டொலர்களை வெளியில் மறைக்க முயல்கின்றனர். ஆனால் இலங்கைக்கு டொலர்களை கொண்டு வரவில்லை என்று யார் பேசுகிறார்கள்? அரசாங்கம் விரும்பினால் நாளை எரிபொருள் விலையை உயர்த்தலாம். ஆனால் மக்கள் சார்பாக செய்த இந்த தியாகம் பற்றி யாரும் பேசுவதில்லை.

கே: மின்வெட்டுக்கு எதிராக கடந்த வாரம் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தீப்பந்தங்களை ஏந்தியவாறு போராட்டம் நடத்தியிருந்தனர். இதனை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?

பதில்: ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தோல்வியுற்றிருந்தால், அவர் பதவியேற்று ஒன்பது மாதங்களுக்குப் பிறகு பொதுத் தேர்தலில் மக்கள் அவருக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை எவ்வாறு வழங்கினார்கள்? கொவிட்19 தொற்றுநோய் வெளிப்படுவதற்கு முன்னர் பதவியில் இருந்த அந்த ஒன்பது மாதங்களில், ஜனாதிபதியின் நிர்வாகம் எவ்வளவு வெற்றிகரமாக இருந்தது என்பதை மக்களால் பார்க்க முடிந்தது. அதனால்தான் அவருக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை அளித்தார்கள். ஜனாதிபதியின் நிர்வாகம் வெற்றியடையவில்லை என்றால், பொதுத் தேர்தலில் அவருக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வழங்கியிருக்க மாட்டார்கள் என்பதை மக்கள் உணர வேண்டும்.

இலங்கையில் இந்த நெருக்கடியான சூழ் நிலைகள் அனைத்தும் கொவிட்19 தொற்று நோய் காரணமாக எழுந்துள்ளன, ஆனால் சிலர் இந்த அடிப்படை யதார்த்தத்தை புரிந்து கொள்ளவில்லை. உலகப் பொருளாதார மந்தநிலையின் மத்தியில் நாம் இருக்கிறோம். இங்கிலாந்தில் கூட, மக்கள் எரிபொருள் வரிசையில் நிற்க வேண்டும். மற்ற நாடுகளிலும் எரிபொருள் பிரச்சினைகள் இருந்தன. அமெரிக்காவிலும் பெரும் தொகை நாணயங்கள் அச்சிடப்பட்டன. எனவே, இந்த நிகழ்வு நம் நாட்டில் மட்டுமல்ல. துரதிர்ஷ்டவசமாக, அனுபவமுள்ள அரசியல்வாதிகள் சிலர் கொவிட்19 தொற்றுநோய் மற்றும் உலகப் பொருளாதார நெருக்கடியைப் புறக்கணித்து பல்வேறு பொறுப்பற்ற அறிக்கைகளை வெளியிடுகின்றனர்.

கே: உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைப்பதை உறுதி செய்ய சர்வதேச உதவியை கோர வேண்டியதன் அவசியத்தை பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை வத்திக்கானில் சுட்டிக் காட்டியுள்ளார். இது பற்றி என்ன கூறுகின்றீர்கள்?

பதில்: சர்வதேசத்தின் ஆதரவு எதுவாக இருந்தாலும், நாட்டில் தற்போதுள்ள சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். வெளிநாட்டில் இருந்தவர்கள் மற்றும் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் இலங்கைக்கு அழைத்து வரப்பட்ட நிலையில், தற்போது குற்றவாளிகளுக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. வழக்குகளை விசாரித்து குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்குவது நீதித்துறையின் கையில்தான் உள்ளது. எவ்வாறாயினும், ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் செய்தது போன்று ஜனாதிபதி, சட்டமா அதிபர் மற்றும் நீதிபதிகளுடன் பேசி சந்தேகநபர்களை சிறையில் அடைப்பார் என சில தரப்பினர் எதிர்பார்க்கின்றனர்.

நாங்கள் அதைச் செய்யக் கூடிய நிலையில் இல்லை, எனினும், நாமும் இதுபோன்ற விடயங்களைச் செய்ய வேண்டும் என சிலர் கருதுகின்றனர். நீதித்துறை விவகாரங்களில் அரசாங்கம் தலையிடாது என ஜனாதிபதி கூறியுள்ளதால், நீதித்துறை நடவடிக்கைகள் தடையின்றி தொடர்வதற்கு பூரண சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

கே: தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் இருந்து நாட்டை விடுவிப்பதற்கு புதிய அரசியல் சக்தியையும் அரசியல் கலாசாரத்தையும் உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்கு ஜே.வி.பி முயற்சிக்கிறது. இதனை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?

"சுதந்திரக் கட்சியினருக்கு உபத்திரவம் செய்யும் எண்ணம் எமக்கு இல்லை"

பதில்: ஜே.வி.பியால் அழகாகப் பேசவும் பல்வேறு வாதங்களை முன்வைக்கவும் முடியும். இருப்பினும், தேர்தல் நடந்து வாக்குகள் எண்ணப்படும் போது, அவர்களிடம் போதுமான வாக்குகள் இருக்காது. குழந்தைகளுக்கு விசித்திரக் கதைகளைச் சொல்ல அவர்கள் சிறந்தவர்கள். எதிர்காலத் தேர்தலில் வாக்குகள் எண்ணப்படும் போது அவர்களின் பலம் என்ன என்பதைப் பார்க்க முடியும்.

ஜே.வி.பியினால் அழகாகப் பேசவும் பல்வேறு வாதங்களை முன்வைக்கவும் முடியும். இருப்பினும், தேர்தல் நடந்து வாக்குகள் எண்ணப்படும் போது, அவர்களிடம் போதுமான வாக்குகள் இருக்காது!'

மலரும் யுகத்திற்கு புதியதோர் வடிவம்

மிலிந்த மொரகொட

பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கான பொருத்தமான நடைமுறைகளே அவசியம்

பற்றாக்குறைகள் ஏற்படும் போது வேலிகள் போடப்படும். இருப்பவர்களுக்கும் இல்லாதவர்களுக்கும் இடையேயான இடைவெளிக்கு அமையவே தடைகள் உருவாகின்றன. சாதாரண மக்களுக்கு அதுவரை கிடைத்த சந்தர்ப்பங்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன.

தற்போது நாட்டில் காணப்படும் பொருளாதார நிலைமைக்கு ஏற்ப பலவிதமான மூலோபாய யோசனைகள் காணப்படுகின்றன. வளங்களின் தட்டுப்பாட்டை கருத்திற் கொண்டு சிக்கனமாக செயல்படுவது தவறில்லை. கட்டுப்பாட்டு நெறிமுறைகளை பின்பற்றும் போது அனைவருக்கும் நியாயமான முறைகளே மிகவும் நல்லது.

இறக்குமதி கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. வாகனங்கள் இறக்குமதி நிறுத்தப்பட்டுள்ளது. வெளிநாட்டு பயணங்கள் கட்டுப்படுத்தப்படுவதாகத் தெரிகிறது. பல்கலைக்கழகங்களில் நுழைய சந்தர்ப்பம் கிடைக்காத பிள்ளைகளுக்கு வெளிநாடுகளுக்குச் சென்று கல்வி கற்க சந்தர்ப்பம் காணப்பட்டது.

சில பிரிவுகள் ஆலோசனை வழங்குவது போன்று வெளிநாட்டுக் கல்வியை தடை செய்ய வேண்டும். அப்பில், திராட்சை போன்றவற்றை இறக்குமதி செய்வது நிறுத்தப்பட வேண்டும் என்று கூறுகின்றன. சொகுசானவை எனக் கூறப்படும் பலவற்றை முற்றாக இறக்குமதி செய்வதை தடை செய்வதோடு அவற்றை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கூறப்படுவது இன்னொரு விடயமாகும்.

கட்டுப்பாடு தவறில்லை. ஆனால் அதிகாரம் மற்றும் பணமுள்ள மக்கள் பிரிவினருக்கு எந்த ஒரு கட்டுப்பாடும் பாதிப்பை ஏற்படுத்தாது.

சந்திரபாபு நாயுடு முதலமைச்சராக இந்தியாவின் ஆந்திர பிரதேசத்தில் ஆட்சி செய்த காலத்தில் ஒரு அமைச்சர் ஒரு யோசனையைக் கொண்டு வந்தார். பிராந்தியத்தில் உள்ள மாணவர்கள் கல்வி கற்பதற்காக வெளிநாடு செல்வதைத் தடை செய்ய வேண்டும் எனக் கூறப்பட்டது. "தற்போது உங்கள் பிள்ளைகளில் யாரேனும் வெளிநாடுகளில் கல்வி கற்பவர்கள் இருப்பார்களானால் அவர்கள் கையை உயர்த்துங்கள்" என அப்போது மக்களின் பிரதிநிதிகளிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அநேகமானோரின் கைகள் உயர்ந்தன.

"முதலில் உங்கள் பிள்ளைகளை திரும்ப அழையுங்கள். நீங்கள் அனைவரும் அதற்கு ஒப்புதல் அளித்தால் மாத்திரமே வெளிநாட்டுக் கல்வியை தடை செய்ய முடியும்" என அங்கு அவர் கூறினார்.

ஆட்சியாளர்களால் பின்பற்ற முடியாத முடிவுகளை மக்கள் மீது மாத்திரம் சுமத்துவது சரியல்ல. சமூகத்துக்கு எடுத்துக்காட்டாக திகழ வேண்டியவர்கள் ஆட்சியாளர்களே. உயர்வகுப்பார் தங்களுடைய அர்ப்பணிப்பை காட்ட வேண்டும். அவர்கள் பாதுகாப்பாக இருப்பதோடு மத்தியதர வகுப்பார் மற்றும் உயர்ந்த இடத்தை அடைய விரும்பும் கீழ்மட்ட தரப்பாருக்கும் தடைகளை ஏற்படுத்துவது நல்லதல்ல.

பொருளாதார முறைகளில் உயர்வு தாழ்வு ஏற்படலாம். பிரச்சினைகள் ஏற்படலாம். வளங்கள் குறைவடையும் சந்தர்ப்பங்கள் ஏற்படும். இவை சிக்கலான பிரச்சினைகள் என ஏற்றுக் கொள்ள வேண்டும். பிரச்சினைகளை தீர்ப்பதற்கு எடுக்கக் கூடிய நல்ல நடவடிக்கைகளை தெரிவு செய்ய வேண்டும். அந்த நடவடிக்கையை சமூகத்தில் அனைவரும் பிரதிநிதித்துவம் செய்யக் கூடிய கௌரவமான ஒன்றாக மாற்ற வேண்டியது ஆட்சியாளர்களின் பொறுப்பாகும். வறியவர்கள் அனுபவிக்கும் கஷ்டங்களை கருத்திற் கொள்ளாது முடிவெடுப்பது தவறாகும். வகுப்பு இடைவெளியை அதிகரிக்கும் நியாயமான சந்தர்ப்பங்களை இல்லாதொழிக்கும் பின்னணியில் ஏற்பட்ட நிலமைகளை மறக்கக் கூடாது. கடந்த சில தசாப்தங்களாக இடம்பெற்ற மோதல்கள், போராட்டங்கள், பயங்கரவாத நடவடிக்கைகள் எமக்கு நிறைய பாடங்களை கற்பிக்கின்றன. அந்த அனுபவங்களை மறக்கக் கூடாது.

நாட்டுக்குத் தேவை புதிய புத்துயிர்ப்பு என்பதோடு சமூகத்தை இணைத்துக் கொண்டு பயணத்தை விரைவுபடுத்த பொருத்தமான தீர்வுகள் அவசியம். பொருளாதாரத்தை நிலைப்படுத்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். பொருளாதார சீர்திருத்தம் அவசியம். இதுவரை பின்பற்றிய கட்டமைப்பை மாற்றுவதில் தவறில்லை.

அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பிரபுக்களுக்கு கிடைக்கும் வரப்பிரசாதங்கள் பற்றி சமூகத்தில் கவலைகள் உள்ளன. அரசியல் முறைகள் பற்றிய அருவருப்புள்ளது. பொதுமக்களின் பிரதிநிதிகள் கூறும் மற்றும் செயல்படும் விதம் குறித்து நல்ல அபிப்பிராயங்கள் இல்லை. நாட்டிற்கு இணைப்பும் மற்றும் ஒற்றுமையும் அவசியமாகும். தற்போதுள்ள சந்தர்ப்பத்தை இழப்பதற்கு பதிலாக அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு சரியான பொருத்தமான நடைமுறையே அவசியமாகும்.

தமிழில்: **வீ.ஆர்.வயலட்**

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

அரச மரக் கூட்டுத்தாபனம் கடந்த வருடத்தில் ரூ. 1496 மில். இலாபம்

அரச மரக் கூட்டுத்தாபனம் 2021ஆம் ஆண்டில் 6149 மில்லியன் ரூபாவை வருமானமாக ஈட்டியுள்ளதாக அரச மரக் கூட்டுத்தாபனபொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

2020 ஆம் ஆண்டை ஒப்பிடும் போது 2021 இல் வருவாயில் 43% அதி கரித்துள்ளது. 2020 ஆம் ஆண்டை விட 2021 ஆம் ஆண்டில் தளபாடங் கள் விற்பனை 62% அதிக வருமான வளர்ச்சியை எட்டியுள்ளது. மேலும், நிறுவனத்தின் செலவுக் குறைப்பும் அரச மரக் கூட்டுத்தாபனத்திற்கு 1496 மில்லியன் ரூபா இலாபத்தை ஈட்டி யுள்ளது.

இதன்படி, கடந்த இரண்டு மாதங்க ளுக்கும் மேலாக கொரானா தொற்று காரணமாக கல்வி நிறுவனம் மூடப் பட்டுள்ள நிலையில் அமைச்சர் முதல் களப்பணியாளர்கள் வரை அனைவரினதும் அர்ப்பணிப்பினால் இந்த சாதனை சாத்தியமாகியுள்ளதாக பொது முகாமையாளர் மேலும் தெரி வித்தார்.

யாழ். மாவட்டத்தில் ஜெய்ப்பூர் செயற்கை கால் பொருத்தும் முகாம்

பருத்தித்துறை விசேட நிருபர்

இந்திய அரசின் நிதியுதவியுடன், யாழ் இந்தியத் துணைக் தூதரகத்தின் ஏற்பாட்டில் □ஜெய்ப்பூர் செயற்கை கால் பொருத்தும் முகாம்□ யாழ். மாவட்டத்தில் இன்று முதல் 30ம் திகதி வரை, யாழ். மாவட்ட முகா மைத்துவ திறன் அபிவிருத்தி பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

வலுவிழந்தோருக்கு சேவை செய்யும் பகவான் மகா வீரர் சஹயட சமித்தி (BHAGWAN MAHAVEER VIKLANG SAHAYATA SAMITI) தொண்டு நிறுவனமும், யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு அலுவலகமும் இணைந்து இம்மு காமை நடாத்துகின்றனர்.

இது தொடர்பான கலந்துரையா டல் கடந்த பெப்ரவரி மாதம் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளரும், யாழ். மாவட்ட ஒருங்கி ணைப்புக் குழுவின் தலைவருமான

அங்கஜன் இராமநாதன், பகவான் மகா வீரர் சஹயட சமித்தி (Bhagwan Mahaveer Viklang Sahayata Samiti) தொண்டு நிறுவனத்தின் சர்வதேச விவ காரங்களுக்கான பணிப்பாளர் சதீஷ் சி மேத்தா ஆகியோருக்கிடையில் நடை பெற்றிருந்தது.

இதில், வடக்கில் போரினால் அங் கங்களை இழந்த மற்றும் இதர கார ணங்களால் அங்கங்களை இழந்த வறுமைப்பட்ட மக்களை கருத்தில் கொண்டு ஜெய்பூர் செயற்கை கால் பொருத்தும் முகாமை யாழ். மாவட் டத்தில் நடாத்துவது தொடர்பிலும், யாழ் மாவட்டத்தில் Jaipur Foot நிறு வனத்தின் கிளையொன்றை நிறுவுவது தொடர்பாகவும் கலந்துரையாடப் பட்டது. அதனடிப்படையில் முதற் கட்டமாக, ஜெய்பூர் செயற்கை கால் பொருத்தும் முகாம் இன்று அரம்பமா கிறது.

இம்முகாமில் கலந்து கொள்ளும் பயனாளிகள் தமது பதிவுகளை தத்த மது பிரதேச செயலகங்கள் ஊடாக மேற்கொள்ள முடியும்.

தவக்கால சிந்தனை

இறைவனின் பிள்ளைகளாக...

நாம் ஒவ்வொருவரும் இறைவனின் பிள்ளைகளாக மாற வேண்டுமென விரும்பு கிறோம். அதற்காக பல முயற்சிகளை நாம் மேற்கொள்கிறோம். சிலர் தான தர்மம் செய்கிறோம், இன்னும் சிலர் ஒருத்தல் முயற்சிகளை செய்கிறோம் இவ்வாறு பல வழிகளிலே நாம் முயற்சி செய்கிறோம். இயேசு இறைவனின் பிள்ளைகளாக மாறுவ தற்கான சரியான ஒரு வழியை நமக்குச் சொல்லித்தருகிறார்.

'உங்கள் பகைவரிடமும் அன்பு கூறுங்கள் உங்களை துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள், இப்படிச் செய்வதால் நீங்கள் விண்ணக தந்தையின் மக்கள் ஆவீர்கள்' (மத்தேயு 5: 44 45)

என்னை அன்பு செய்யக்கூடியவர்களை அன்பு செய்யவே எனக்கு நேரம் இல்லை. என்னை நேசித்து எனக்கு உதவி செய்பவர்களுக்காக செபிக்கக்கூட என்னால் இய லவில்லை. இப்படிப்பட்ட சூழலிலே நான் எப்படி பகைவரை அன்பு செய்ய முடியும்? எப்படி துன்புறுத்துவோருக்காக செபிக்க முடியும்? எனும் வினா நம்மில் எழலாம். இது நிச்சயமாக சாத்தியமான ஒன்று. ஏனென்றால், இயேசு தம்மீது பழியை சுமத்தி சிலுவையை பரிசாகத் தந்த பகைவர்களை நேசித்தார். இக்கட்டான சூழலிலேயே தன்மை உதரிச்சென்ற சீடர்களை அவர் வெறுக்காமல் அவர்கள் மீது அன்பு கூர்ந் தார். அது போல மூன்று ஆணிகளால் சிலுவையிலே அவரைத் தொங்க விட்டார்கள், அவ்வாறு செய்தவர்களுக்காக அந்த சிலுவையிலே தொங்கிக்கொண்டே ' தந்தையே இவர்கள் செய்வது இன்னதென்று தெரியாமல் செய்கிறார்கள்.

இவர்களை மன்னியும்' என்று தன்னை துன்புறுத்தியோருக்காக அந்த சிலுவை யில் இருந்து கொண்டு செபித்தார். நாமும் இறைவனின் பிள்ளைகளாக மாற வேண்டும் என்றால் நம் பகைவருக்கும் அன்பு காட்ட வேண்டும். நம்மை துன்புறுத்து வோருக்காக நாம் செபிக்க வேண்டும்.

அருட் தந்தை அருண்ரெக்ஸ்...

சிவனொளிபாதமலை யாத்திரை சென்ற இளைஞன் நீரில் மூழ்கி பலி

ஹற்றன் விசேட நிருபர்

சிவனொளிபாதமலை யாத்திரை சென்று வீடு திரும்பிகொண்டிருக்கும் வேளையில் நண்பர்கள் உடன் நீராடச் சென்ற இளைஞர் ஒருவர் பலியான சம்பவம் கினிகத்தேனை பகுதியில் இடம்பெற்றுள்ளதுஇச் சம்பவம் கினி கத்தேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கினிகத்தேனை நகருக்கு அருகில் உள்ள அம்பகமுவ ஆற்றில் நேற்று முன் தினம் மாலை 4.00 மணி அளவில் சம்ப வம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் உயிரிழந்தவர் ஆண மடுவ பிரதேசத்தைச் சேர்ந்த கவிந்து திசார வயது 22 என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இளைஞர் நீராடிக் கொண்டிருக்கும் போது நீரில் இழுத்துச் செல்லப்பட்டு கற்குகையில் இறுகியதன் காரணமாக இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் மேற்கொண்ட ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள் ளது. குறித்த நபரின் சடலத்தினை கெனில்வேத் தோட்ட மக்கள் மற்றும் பொலிஸார் இணைந்து மீட்டுள்ளனர்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக கினிகத்தேனை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கினிகத்தேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின் றனர்

கிணற்றில் விழுந்து குழந்தை பலி தாய் உயிர் தப்பினார்

அநுராதபுரம் தினகரன் நிருபர்

ஒரு வயது மதிக்கத்தக்க தனது குழந் தையொன்றுடன் தாய் ஒருவர் கிணற் றில் குதித்து தற்கொலை செய்வதற்கு முயற்சித்ததில் குழந்தை பரிதாபகர மான முறையில் உயிரிழந்த சம்பவ மொன்று வன்னியங்குளம் பகுதியில் இடம்பெற்றுள்ளதாக அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் அநு ராதபுரம் பொலிஸ் பிரிவிலுள்ள வன் னியங்குளம் பகுதியில் இடம்பெற்றுள் ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் அநுராதபுரம் வன்னி யங்குளம் பகுதியை வசிப்பிடமாக கொண்ட ஒரு வயதும் மூன்று மாதமும் வயதான குழந்தையொன்றே இவ்வாறு உயிரிழந்துள்ளது என தெரியவந்த துள்ளது.

சம்பவத்தில் படுகாயமடைந்த தாய் அநுராதபுரம் போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக் கப்பட்டுள்ளார். உயிரிழந்த குழந்தை யின் சடலம் அநுராதபுரம் போதனா வைத்திய சாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.சம்பவம் தொடர் பான மேலதிக விசாரணைகளை அநுரா தபுரம் பொலிஸார் மேற்கொண்டு வரு கின்றனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் வெள்ளி விழா

ஏ.எஸ்.எம்.ஜாவித்

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத் தின் 25 ஆவது பேராளர் மாநாடு நேற்று மருதானை அல் ஹிதாயா பாடசாலை எம்.சி.பகவுதீன் கேட்போர் கூடத்தில் முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என்.எம்.அமீன் தலைமையில் நடை பெற்றது.

நிகழ்வில் பிரதம அதிதியாக ஊடகத் துறை அமைச்சர் டளஸ் அலகப்பெரும கலந்துகொண்டார்.அத்தோடு பிரதம பேச்சாளராக கலாநிதி எம்.சி.ரஸ்மின் கலந்து கொண்டார். சிறப்பு அதிதியாக இந்திய லோக்சபா உறுப்பினர் நவாஸ் கனியும் கலந்து கொண்டார்.

இதன்போது மீடியா டிரக்டி மற்றும் வருடாந்த அறிக்கை என்பன ஊடக அமைச்சரிடம் மீடியா போரத்தின் தலைவர் என்.எம்.அமீன் வழங்கி வைத்தார்.தமையுரையை தலைவர் என்.எம்.அமீன் நிகழ்த்தினார். பிரதம பேச்சாளராக கலந்து சிறப்பித்த கலாநிதி எம்.சி.ரஸ்மின் விசேட உரைநிகழ்த்தினார். சிறப்பதிதியாக கலந்து சிறப்பித்த இந்திய லோக்சபா உறுப்பினர் நவாஸ் கனியும் விஷேட உரையாற்றினார்.நிகழ்வில் கலந்து சிறப்பித்த அதிதிகள் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். புதிய நிர் வாகக்குழு உறுப்பினர்கள் தெரிவும் இடம்பெற்றது.போரத்தின் பொதுச் செயலாளர் சாதிக் சிஹான் நன்றியுரை நிகழ்த்தினார்.போரத்தின் புதிய தலை வராக முதல் முதலாக இம்முறை சிரேஷ்ட ஊடகவியாலளர் புர்ஹான்பீ இஸ்திகார் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

வலம்புரி கவிதா வட்டத்தின் 78ஆவது கவியரங்கம்

வலம்புரி கவிதா வட்டத்தின் 78 ஆவது கவியரங்கம் கொழும்பு பழைய நகர மண்டபத்தில் 17 ஆம் திகதி வியா ழக்கிழமை காலை 10 மணிக்கு உலக கவிதை தின கவியரங்காக நடைபெ றும்.

கவிஞர் கம்பளை ரா. சேகர் கவிய ரங்கிற்கு தலைமை வகிப்பார்.வகவ சிரேஷ்ட ஸ்தாபகர் கலாபூஷணம் சத்திய எழுத்தாளர் எஸ். ஐ. நாகூர் கனி முன்னிலை வகிக்கிறார்.

தொடர்புகள் என். நஜ்முல் ஹுசைன் (தலைவர்) 0741438447இள நெஞ்சன் முர்ஷிதீன் (செயலாளர்) 0777388149, ஈழகணேஷ் (பொருளா ளர்) 0717563646

வாக்காளர்கள் பொறுப்புள்ள...

தேசிய நிகழ்வு ஜனாதிபதி கோட் டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் (11) கொழும்பில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அத்துடன் தேர்தல் காலங்களில் ஆணைக்குழு அறிமுகப்படுத்திய அளவுகோல்களை நடைமுறைப்படுத்துவதற்கு அரச ஊடகங்கள் மட்டுமன்றி தனியார் மற்றும் சமூக ஊடகங்களும் செயற்பட வேண்டும். இல்லை என்றால், ஊட கங்களை ஒழுங்குபடுத்த வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அகில இலங்கை கிராமிய கலை ஒன்றியம் அண்மையில் அவிசாவளை பிலிப் குணவர் தன மைதானத்தில் நடத்திய கிரிக்கெட் திருவிழாவில் வெற்றிபெற்ற அணிக்கு சங்கவி பிலிம்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் துரைராசா சுரேஷ் வெற்றிக்கிண்ணத்தை வழங்குவ தைப் படத்தில் காணலாம். (படம்: எம்.நஸார்)

சீனாவில் மீண்டும் முழு ஊரடங்கு...

தொழிற்சாலைகள் நிறைந்த சாங்சன் பகுதி உள்ளது. இந்த நகரில் சுமார் 90 இலட்சம் மக்கள் வசித்து வருகின்ற னர். இந்த நகரில் தான் புதிய வைரஸ் மக்களுக்கு பரவி வருகிறது.

இதையடுத்து, இந்த சாங்சன் நகர் முழுவதும் ஊரடங்கு பிறப்பிக்கப்பட் டுள்ளதாக ஏ.பி. செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. சீனாவில் கண்டுபி டிக்கப்பட்டுள்ள வைரஸ் எந்த மாதிரி யானது, அதன் பரவும் வேகம் என்ன, எப்போதிருந்து ஊரடங்கு பிறப்பிக்கப் பட்டுள்ளது என்பது தொடர்பான விவ ரங்கள் வெளியாகவில்லை.

அனைத்து மாணவர்களையும்...

அடிப்படையில் மாணவர்களை பாடசாலைக்கு அழைக்க வேண்டு மென்று கல்வி அமைச்சு அறிவித்தி ருந்தது.

எவ்வாறாயினும், நாளை 14ஆம் திகதி முதல் அனைத்து மாணவர்க ளையும் வழமை போன்று பாடசா லைகளுக்கு அழைக்குமாறு கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா புதிய சுற்றறிக்கையின் ஊடாக அறிவித்துள்ளார். கொவிட் 19 தொற்று காரணமாக பாடசாலை களை நடத்திச் செல்வதில் சிக்கல் ஏற்பட்டால் வலயக் கல்விப் பணிப் பாளரின் அனுமதியுடன் மேலதிக நடவடிக்கைகளை எடுக்க சந்தர்ப்பம் உள்ளதாகவும் சுற்றறிக்கையில் குறிப் பிடப்பட்டுள்ளது.

நிபந்தனைகளுடன் 500 மில். டொலர்...

பெற்றோலிய பொருட்களை இறக் குமதி செய்வதற்காக கடந்த பெப்ரவரி 02 ஆம் திகதி இலங்கை அரசாங்கத் டன் இந்திய எக்ஸிம் வங்கி 500 மில்லி யன் டொலர் கடனுதவிக்கான ஒப்பந் தத்தை கைச்சாத்திட்டது.

அந்த ஒப்பந்தத்துக்கமைய இந்த 500 மில்லியன் டொலரில் 75 வீதத்தை இந் தியாவிடமிருந்து எண்ணெய் கொள் வனவு செய்வதற்கு பயன்படுத்த வேண்டும் என்றும் , 25 வீதத்தை மூன் றாவது தரப்பிடமிருந்து எண்ணெய் கொள்வனவு செய்வதற்கு பயன்ப டுத்த முடியமென்றும் இந்திய எக்ஸிம் வங்கி நிபந்தனை விதித்துள்ளது. அத்துடன் இந்த கடனை மீள செலுத் துவதற்கான கால அவகாசத்தை 12 மாதங்களை விட நீடிக்க முடியாதென வும் இந்திய எக்ஸிம் வங்கி தெரிவித் துள்ளது.

பஸ் கட்டணம் 50 வீதம் அதிகரிக்க...

அத்தியாவசிய பொருட்கள் விலை அதிகரிபுக்கு அரசாங்கம் உடனடி தீர்வை காணவேண்டுமென அந்த சங் கங்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

டீசல் விலை அதிகரித்துள்ளதால் ஐ.ஓ.சியின் எரிபொருள் நிரப்பு நிலை யங்களை தங்களால் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கங் கள் தெரிவித்துள்ளன.

அதேபோன்று இலங்கை பெட் ரோலிய கூட்டுத்தாபனமும் டீசல் விலையை அதிகரித்துள்ளதால் பஸ் கட்டணங்களை 50 வீதம் அதிகரிக்க வேண்டிய நிலையேற்பட்டுள்ளதாக சங்கங்கள் தெரிவித்துள்ளன.

1,20,000 GAS சிலிண்டர்கள்...

கடந்த சில நாட்களாக கெரவலப்பிட் டிய கடற்பரப்பில் பல கப்பல்கள் நங் கூரமிடப்பட்டிருந்தனபணம் செலுத்து வதில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக அவை நங்கூரமிடப்பட்டிருந்தன. எனினும் பணம் செலுத்துவதில் சிக்கல் கள் தீர்க்கப்பட்டவுடன் எரிவாயு இருப் புக்களை இறக்கும் பணி ஆரம்பிக்கப் படுமென லிட்ரோ நிறுவனத் தலைவர் உறுதியளித்தார்.

அத்துடன் டீசல் நிவாரணத்தை வழங்க நடவடிக்கை எடுக்காவிடின் அல்லது பஸ் கட்டண அதிகரிப்பை மேற்கொள்ளாவிடின், நாளை திங்கட் கிழமை முதல் தனியார் பஸ் போக்கு வரத்தை நிறுத்த வேண்டிய நிலைமை ஏற்படுமென பஸ் சங்கங்கள் தெரிவிக் கின்றன.

எரிபொருள் விலை அதிகரிக்கப்பட் டதை அடுத்தே, இந்த நிலைமை ஏற் பட்டுள்ளது.

குறுகிய தூர பஸ் சேவைகளை சேவையில் ஈடுபடுத்தும் பட்சத்தில், நாளொன்றுக்கு 5,500 ரூபா நட்டம் ஏற்படுவதாக அனைத்து இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத் தின் பிரதம செயலாளர் அஞ்சன பிரி யஞ்ஜித் தெரிவிக்கின்றார்.

டீசல் விலை அதிகரிக்கப்பட்டதை அடுத்து,நேற்று 80 வீதமான பஸ்கள் சேவையில் ஈடுபடவில்லையென தெரிவித்த அவர் 20 வீதமான பஸ்களே சேவையில் ஈடுபட்டதாகவும் குறிப் பிட்டார்.

அத்துடன், இந்தப் பிரச்சினைக்கு தீர்வு வழங்காத பட்சத்தில் தனியார் பஸ் போக்குவரத்து முடங்கும் நிலைமை ஏற்படுமென அவர் கூறியுள் ளார்.

இதேவேளை, பஸ்களுக்கு பழைய விலையில் எரிபொருள் வழங்கப்ப டும் பட்சத்தில், ஏனைய எந்த பொருட் களின் விலை அதிகரித்தாலும் பஸ் கட்டணத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படாதென தனியார் பஸ் உரி மையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுணு விஜேரத்ன தெரிவிக் கின்றார்.

எங்கள் கருத்து...

கச்சதீவு பேச்சுவார்த்தை அடுத்த கட்டத்தை எட்ட வேண்டும்...

மீன் பிடிக்கும் அனுமதி வழங்கப்பட வேண்டும் என்றும் இந்திய மீனவர்கள் தம்பக்க நியாயத்தை முன்வைக்கின் றனர். இந்த பாரம்பரிய உரிமை வாதத்தை ஏற்க மறுக் கும் இலங்கை மீனவர்கள், இந்திய மீனவர்கள் தமது மடிவலை மீன் பிடித்தலைக் கைவிட்டு நாட்டுப்படகு மீன் பிடித்தலுக்கு மாற வேண்டும் என்கின்றனர்.

இரு தரப்பினரும் இந்த இருவேறு நிலைப்பாடுகளில் இருந்து அசைந்து கொடுக்க மறுப்பதே பிரச்சினை நீடிப் பதற்கான மையப் புள்ளி. இதை வெளியில் இருந்து பார்ப்பதற்கு எளிய பிரச்சினை போலத் தோன்றினாலும் இது புரையோடிப்போன ஒன்று என்பதை மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் புரிந்து வைத்துள் ளார். கடந்த சனிக்கிழமை கச்சதீவு சென்றிருந்த அமைச் சர் இரு தரப்பு மீனவ பிரதிநிதிகளிடமும் கலந்துரையா டிய பின்னர் தமது நிலைப்பாடுகளில் இருந்து அசைந்து கொடுக்க மறுக்கும் மீனவர்களின் வாதங்களை உன்னிப் பாக அவதானித்த பின்னர் தான் நடுநிலை வகிப்பதாக வும், மீனவர் மத்தியில் உள்ள பிரச்சினையை இராஜாங்க மட்டத்தில் முன்னெடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருப் பதாகவும் தெரிவித்துள்ளார். இதில் உள்ள ஆழ அகலங் களை அமைச்சர் தெளிவாகவே புரிந்து வைத்துள்ளார்.

தமிழக மீனவர்கள் இழுவைப்படகு முறைக்கு பழகிப் போயிருக்கிறார்கள். அவர்களுக்குப் பின்னால் பெரும் பணக்காரர்களும் மீன் ஏற்றுமதியாளர்களும் உள்ளனர். அரசியல்வாதிகளும் தான். எனவே இப்பிரச்சினைக்கு ஒரு இராஜதந்திர ரீதியான முடிவை எட்ட வேண்டும். இந்தப் பிரச்சினை தமிழக அரசியல் மட்டத்திலும் டில்லி மட்டத்தி லும் விவாதிக்கப்பட்டு ஒரு தீர்வு எட்டப்பட வேண்டும். இது உடனடியாகவும் நடைபெற்றாக வேண்டியது அவசியம். ஏனெனில் மோதிக்கொள்வது இரு தரப்பு தமிழ் மீனவர் கள். இரு நாடுகளுக்கும் இடையிலும் நல்லுறவு நிலவு வது போலவே இரு தரப்பு தமிழ் சமூகங்களுக்கு மத்தி யிலும் தொப்புள்கொடி உறவு உள்ளது. இந்த உறவுக்கு பங்கம் ஏற்பட்டுவிடக்கூடாது. உடனடியாக குறுகிய கால தீர்வும் நீண்ட கால தீர்வும் ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியம்.

மெலிடோபோல் மேயரை கடத்திய...

தொடர்ந்து தாக்குதலை நடத்தி வருகின்றன.

உக்ரைனின் சில நகரங்களை ரஷிய படைகள் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விட்டன. அதேபோல் அந்நாட்டின் முக்கிய அணுமின் நிலையங்களும் ரஷியா வசம் உள்ளது. ஆனால் தலைநகர் கீவ், 2ஆவது பெரிய நகர மான கார்கிவ் ஆகியவற்றை ரஷிய படையால் இன்னும் கைப்பற்ற முடியவில்லை.

ரஷ்ய படைகளுக்கு எதிராக உக்ரைன் இராணுவ வீரர்களும் கடுமையாக போரிட்டு வருகிறார்கள். இதனால் தலைநகர் கீவ் மீதான தாக்குதலை ரஷ்யா அதிகப்படுத்தியபடியே இருக்கிறது. மனிதாபிமான அடிப்படையில் கீவ் உள்ளிட்ட 05 நகரங்களில் தற்காலிக போர் நிறுத் தத்தை ரஷ்யா அறிவித்தாலும், அதையும் மீறி தாக்குதல் நடத்தி வருவதாக உக்ரைன் குற்றம் சாட்டியுள்ளது.

இதனால் உக்ரைனில் ரஷ்யாவின் தாக்குதல் இடைவிடாமல் தொடர்ந்தபடி இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில்,தொடர்ந்து தெற்கு உக்ரைனின் மெலிடோபோல் நகரை ரஷ்ய படை ஆக்கி ரமித்துள்ளது. அங்கு, 10 பேர் கொண்ட குழு மேயர் இவான் ஃபெடோரோவை கடத்திச் சென் றுள்ளது. ஆயுத விநியோகப் பிரச்சினையைக் கையாளும்போது மேயர் ரஷ்யப் படைகளுடன் ஒத்துழைக்க மறுத்துவிட்டதால் சுற்றி வளைத்து கடத்தியதாக உக்ரைன் பாராளுமன்றம் தெரிவித் துள்ளது.

மேலும், மேயர் கடத்தலை ஜெலென்ஸ்கி வீடியோ பதிவு ஒன்றின் மூலம் உறுதிப்படுத் தினார். அதில், வெளிப்படையாக ரஷ்யப் படையெடுப்பாளர்களின் பலவீனத்தின் அறிகு றியாகும். ரஷ்யப் படை அடுத்தகட்ட பயங்கர வாதத்திற்கு நகர்ந்துள்ளனர்.

மெலிடோபோல் மேயர் பிடிபட்டது ஒரு குறிப்பிட்ட நபருக்கு எதிரானது. ஒரு குறிப் பிட்ட சமூகத்திற்கு எதிரானது. உக்ரைனுக்கு எதிரானது மட்டுமல்ல. இது ஜனநாயகத்திற்கு எதிரான குற்றம் என்று அவர் கூறினார்.

ஜனாதிபதியுடன் கலந்துரையாடிய ...

இந்திய மீனவர்களின் பிரச்சினைகள் தொடர் பில் தாம் நடுநிலையாக செயற்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழா வில் கலந்து கொண்டிருந்த இலங்கை, இந்திய மீனவர்களுக்கிடையிலான சிநேகபூர்வ பேச்சு வார்த்தையொன்று அமைச்சர் டக்ளஸ் தேவானந் தாவின் தலைமையில் கச்சதீவில் நடைபெற்றது.

இதன் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித் தார். இங்கு கருத்து தெரிவித்த இலங்கை மீன வர்கள்,

இந்திய மீனவர்கள் இழுவைப் படகு மூலமாக மேற்கொள்ளும் நடவடிக்கைகளை முற்றாக நிறுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்ட னர்.

அதற்கான கால அவகாசத்தைப் தமக்கு வழங் குமாறு இந்திய மீனவர்கள் கோரிய போதும் எந்த விதத்திலும் அதற்கான அவகாசம் வழங்க முடியாதென்றும் உடனடியாக இழுவைப்படகு மூலமான தொழில் நடவடிக்கைகளை நிறுத்த வேண்டுமென்றும் வலியுறுத்திக் கூறினர்.

அவ்வாறு இழுவைப்படகு நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்பட்டால் நாட்டுப் படகு மூலம் மீன் பிடிப்பது தொடர்பில் பரிசீலனை செய்யப்ப டுமென்றும் இலங்கை மீனவர்கள் இதன்போது வலியுறுத்திக் கூறினர்.

இழுவைப்படகு மூலம் இலங்கை கடற்பரப் பில் மேற்கொள்ளப்படும் அழிவுகள் தொடர்பில் அவர்கள் இங்கு தெளிவுபடுத்தினர்.

மீனவர்களுக்கிடையிலான பல பேச்சுவார்த் தைகள் தொடர்ச்சியாக நடைபெற்று வந்துள்ள துடன் இனிவரும் பேச்சுவார்த்தை இராஜதந்திர மட்டத்தில் நடத்தப்பட வேண்டும் என்பதை இரு தரப்புமே வலியுறுத்தினர்.

இந்திய மீனவர்கள் கருத்து தெரிவிக்கையில்,..

பரம்பரை பரம்பரையாக தாம் இலங்கை கடற் பரப்பில் தொழில் செய்து வருவதாகவும் உடனடி யாக அதை நிறுத்த முடியாததால் அதற்கான கால அவகாசமொன்றைப் பெற்றுத்தருமாறு கேட்டுக் கொண்டனர்.

எவ்வாறெனினும் பேச்சுவார்த்தையின் இறுதி யில் கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா,

இருதரப்பு மீனவர்களுக்கிடையில் நடுநிலை யாக தான் செயல்படுவதாகவும் எதிர்வரும் மே மாதத்தில் பேச்சுவார்த்தை ஒன்றை மேற்கொள் வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் மேலும் தெரிவித்தார்.

மேற்படி இரு தரப்பினரும் தனிப்பட்ட ரீதியி லும் கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர். (ஸ)

எம்.எம்.நஹியாவின்... (13ஆம் பக்கத் தொடர்)

ஹொக்கி விளையாட்டு ஷாபிமரிக்கார் காலத்திலேயே 1968இல் கல்லூரியில் முதன் முதல் அறிமுகப்படுத்தப்பட்டது. மிகக்குறுகிய காலப்பிரிவில் அது துரித வளர்ச்சியைக் கண்டு பிரபல ஹொக்கி விளையாட்டு வீரர்களை உருவாக்கியது.

1967இல் ஷாபிமரிக்கார் அதிபரான தும் கல்லூரியின் 75வது ஆண்டு நிறைவு மிக எளிமையான முறையில் கொண்டா டப்பட்டது. 75ஆம் ஆண்டு சிறப்பு மல ரொன்று பழைய மாணவர் சங்கத்தினால் வெளியடப்பட்டது. ஸாஹிராக் கல்லூரி அதன் 85வது ஆண்டு விழாவில், 'உலகப் பிரச்சினைகளுக்கு இஸ்லாத்தின் முக்கிய தீர்வு' என்ற தொனிப்பொருளில் கொழும்பு ஸாஹிராவில் ஒரு சர்வதேச இஸ்லாமிய மாநாடு நடைபெற்றது.

உலக இஸ்லாமிய நாடுகளின் பிரதிநி திகள், சர்வதேச இஸ்லாமிய அமைப்புக ளின் பிரதிநிதிகள் இதில் கலந்துகொண் டனர். பலமுக்கிய தீர்மானங்கள் இதில் நிறைவேற்றப்பட்டன.

கொழும்பு ஸாஹிராக் கல்லூரியின் நூற் றாண்டு விழாவிற்கான ஏற்பாட்டுக்குழுவி லும் ஷாபிமரிக்கார் பங்கேற்றார். அதன் தொடக்க விழாவில் one Hundred years of Zahira என்ற தலைப்பில் அவர் ஒரு கட்டுரை படித்தார்.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

வரலாற்றிலிருந்தும் கற்றுக்கொள்ளாத மந்தைக் கூட்டமாக இலங்கையர்கள்

"யுத்தம் முடிந்து விட்டது. இனிப் பிரச்சினையில்லை. வருவது நல்ல காலம் தான்" என்று நம்பியவர்களின் கனவில் மண் விழுந்துள்ளது.

யுத்தம் முடிந்த பிறகு "கனவுச் சுற்றுலா"வில் யுத்தம் நடந்த பிரதேசம் உள்பட நாடு முழுவதற்கும் சுற்றுலாச் சென்றவர்களின் மகிழ்ச்சிக்கும் முடிவு வந்து விட்டது.

இப்பொழுது அடுப்பை மூட்ட முடியாத அளவுக்கு நாட்டிலும் வீட்டிலும் நிலைமை வந்துள்ளது.

ஒவ்வொரு நாளும் கெட்ட சேதிகளே கிடைக்கும் காலமாகி விட்டதா? என்று எண்ணும் அளவுக்கு தினமும் பொருட்களின் விலை ஏறிக் கொண்டிருக்கிறது. விலையேற்ற அறிவிப்பு வருவதற்கு முன்பு பொருட்கள் தலைமறைவாகி விடுகின்றன. எல்லாமே பதுக்கப்படுகிறது. பதுக்கலைக் கட்டுப்படுத்துவதற்கு வழியில்லை. பதுக்குவதன் நோக்கமே செயற்கைத் தட்டுப்பாட்டை உருவாக்கி, டிமாண்டை அதிகரிப்பது. இதன் மூலம் ஒரு சிறிய தரப்பு பெரும் லாபம் சம்பாதிக்கிறது. இந்தப் பதுக்கல் மாஃபியாக்களின் கைகளிலேயே இன்று அனைவருடைய வாழ்க்கையும் தீர்மானிக்கப்படும் நிலை உருவாகியுள்ளது.

இந்த மாதிரியான சூழலில் அரசாங்கமே மக்களைப் பாதுகாக்கும் நடவடிக்கையில், பொறுப்பில், கடமையில், வழிமுறையைக் காண்பதில் இருக்க வேண்டும்.

ஆனால், அரசாங்கமோ என்ன செய்வதென்று தெரியாத நிலையிலேயே உள்ளது.

இதைச் சரியாகச் சொன்னால், ஏறக்குறைய அரசாங்கம் கட்டுப்பாட்டை இழந்து வருகிறது எனலாம். இதை நிரூபிக்கின்ற விதமாகவே நிதி அமைச்சர் உள்பட அரசாங்கத் தரப்பில் உள்ள அத்தனை பிரதானிகளின் பேச்சும் உள்ளது.

உதாரணமாக, "நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமை எப்போது தீரும்? என்பதற்கு இப்பொழுது பதிலளிக்க முடியாது. ஆனால், அரசாங்கம் தீர்வு காணும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது" என்று கூறியிருக்கிறார் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஸ.

ஆனால், இந்தப் பொருளாதார நெருக்கடி எப்படி ஏற்பட்டது? இதைத் தீர்ப்பதற்கான உண்மையான, சரியான வழிமுறைகள் என்ன? இப்பொழுதுள்ள உண்மையான நிலைமை என்ன என்பதைக் குறித்தெல்லாம் அரசாங்க மட்டத்திலும் சரி, அரசுக்கு வெளியே எதிர்கட்சிகள், அரசியல் தலைவர்கள் தொடக்கம் நாட்டிலும் நாட்டிற்கு வெளியிலும் உள்ள பொருளியல் நிபுணர்கள் வரையில் யாருமே தயாரில்லை என்றே தெரிகிறது.

பதிலாக எல்லாத் தரப்பினரும் அதிர்ச்சியில் உறைந்து போயிருக்கிறார்கள். கவிஞர் முருகையனுடைய கவிதை ஒன்றில் சொல்லப்பட்டுள்ளதைப்போல "வாயடைத்துப் போச்சுது நண்பா, வராதாம் ஒரு சொல்லும்." என்ற நிலையில்தான் எல்லோரும் உள்ளனர்.

விலக்காக, அண்மையில் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மட்டுமே இந்த நிலைமையைக் குறித்து ஓரளவுக்குப் பேசியிருக்கிறார். உலகளாவிய ரீதியில் ஏற்பட்டு வரும் பொருளாதார வளர்ச்சிப் போக்கை மையப்படுத்திப் பேசியுள்ள ரணில் விக்கிரமசிங்க, ஆசியப் பொருளதாரத்தின் இன்றைய – எதிர்கால நிலைமையைக் குறித்து தெளிவூட்டுகிறார். இதில் இலங்கை மேற்கொள்ளக் கூடிய அவதானங்களைச் சுட்டுகிறார்.

ரணிலின் பார்வைக்கு மறுபார்வையை வேறு யாரும் முன்வைக்கக் கூடும். ஆனால், அடிப்படையில் ஒன்று மட்டும் உண்மை, ரணில் இன்றைய நிலைமையைக் குறித்து ஆழமாக சிந்திக்கிறார். தற்போதைய நிலைமையக் குறித்த புரிதல் அவருக்குண்டு.

இதேவேளை இன்றைய பொருளாதார நெருக்கடி உள்பட இனப்பிரச்சினை அதன் விளைவாக நீண்டு கொண்டிருக்கும் அரசியல் நெருக்கடி போன்றவற்றில் ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பொறுப்புண்டு. தவறுகளில் அவருடைய பாத்திரமும் முக்கியமானது.

ஆனால் இன்று இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்று அவர் சிந்திக்கிறார். இதைப்போல கடந்த ஆண்டு கொரோனா நெருக்கடி தீவிரமாகியிருந்த போதும் "இது ஒரு தேசிய நெருக்கடி. இதற்கு அரசியல் வேறுபாடு, கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் அனைவரும் ஒருங்கிணைந்து தீர்வு காண வேண்டும்" என்று கூறியிருந்தார்.

ஏறக்குறைய இப்பொழுதும் அப்படியான ஒரு மனநிலையிலும் கருத்திலும்தான் ரணில் உள்ளார்.

ஏற்பட்டிருக்கும் இந்தப் பொருளாதார நெருக்கடிக்கு விரைவாகத் தீர்வைக் காணவில்லை என்றால் அது நாட்டை மிகக் கீழே கொண்டு போய் விட்டு விடும். இதையே அவர் கோடி காட்டுகிறார். ஆனால், இந்தச் சமிக்ஞை எவ்வாறு புரிந்து கொள்ளப்படப் போகிறது என்பது கேள்வியே.

ஆனால், ஒரு உண்மையை அரசாங்கமும் மக்களும் புரிந்து கொள்ள வேண்டும். குறிப்பாகச் சிங்கள மக்கள் புரிந்து கொள்வது அவசியம்.

உள்நாட்டுப் போரில் புலிகளையும் தமிழர்களையும் வெற்றி கொண்ட அரசாங்கம் பொருளாதார நெருக்கடியில் அந்நியச் சக்திகளிடம் தோற்றுச் சரணடைந்து பலியாகி விடும்.

இப்பொழுது அவ்வாறானதொரு நிலையே காணப்படுகிறது.

ஆனாலும் இந்த ஆபத்தான நிலையைக் குறித்து எவரிடத்திலும் சரியான பார்வைகள், யோசனைகள், விமர்சனங்கள் வெளிப்படுவதைக் காண முடியாதுள்ளது.

இதில் வேடிக்கை என்னவென்றால், தேசிய பந்தோபஸ்தில் பலரும் கவனம் செலுத்துகின்ற அளவுக்கு தேசியப் பொருளாதாரத்தில், தேசியப் பொருளாதாரக் கொள்கையில் கவனம் செலுத்துவதில்லை.

இதன் விளைவே இன்றை நிலை. இதற்கு ஒரு எளிய உண்மையை – உதாரணத்தை இங்கே கூறலாம்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்த போது ஒரு நண்பர் சொன்னார், "கிளிநொச்சியில் இரண்டே இரண்டு தொழிற்சாலைகள் (ஆடை உற்பத்தி நிலையங்கள்) மட்டுமே உண்டு. ஆனால், 25 படைமுகாம்கள் உள்ளன.

உண்மையில் இரண்டு படை முகாம்களும் (அது கூடத் தேவையா என்று பார்க்க வேண்டும்) 25 க்கு மேற்பட்ட தொழிற்சாலைகளுமல்லவா இருக்க வேண்டும். அப்பொழுதுதானே, பொருளாதார வளர்ச்சி ஏற்படும். இப்பிடி எல்லா இடங்களிலும் மாற்றத்தைக் குறித்துச் சிந்திக்க வேணும்" என.

"யாருக்கெல்லாமோ விளங்குகிற விசயங்கள், விளங்க வேண்டியவர்களுக்கு விளங்குதில்லையே!" என்று சொல்லிக் கவலைப்படுகிறார் இன்னொரு நண்பர்.

உண்மை இதுதான். நம்முடைய நாட்டின் தேசிய உற்பத்தில் கடந்த 50 ஆண்டுகளாக ஒரு தொகுதி இளைய தலைமுறையினர் பங்களிக்க வில்லை.

நாட்டில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடிகளின் காரணமாக படைகளிலும் அரசுக்கு எதிரான போராட்டங்களிலும் ஈடுபட்டதன் விளைவாக இந்தப் பங்களிக்கா நிலை ஏற்பட்டது.

யுத்தம் முடிந்த கடந்த பத்து ஆண்டுகளில் ஓரளவுக்கு தேசிய உற்பத்தியின் வளர்ச்சியைக் குறித்தும் தேசியப் பொருளாதா விருத்தியைக் குறித்தும் சிந்தித்திருக்க வேண்டும்.

ஆனால், அப்படிச் சிந்திக்கவில்லை.

பதிலாக பாதுகாப்புக்கான நிதி ஒதுக்கீட்டை அதிகளவில் செய்வதிலும் இனமுரண்பாட்டைக் கூர்மைப்படுத்துவதிலுமே அனைத்துத் தரப்பினரும் ஈடுபட்டனர். நாட்டைக் கடன் பட்டு நிர்வாக பரிபாலனம் செய்தனர்.

இன்னமும் அப்படியான ஒரு நிலையே – சூழலே காணப்படுகிறது.

இடையில் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதிலேயே பெரிய கவனம் எடுக்கப்பட்டது.

நாட்டில் போர் ஓய்வுக்கு வந்த பின் கிடைத்த அமைதிச் சூழலில் சுற்றுலாத்துறைக்கான சாத்தியங்கள் அதிகமாக உண்டென சில பொருளாதார நிபுணர்கள் வழிகாட்டினர்.

ஆனால், சுற்றுலாத்துறை என்பது ஏறக்குறைய ஒரு சூதைப் போன்றதே.

எந்த நேரத்தில் திசை மாறும் என்று சொல்ல முடியாதது.

அது ஒரு அலையைப் போன்றது.

எந்தப் பக்கமாகக் காற்று வீசுகிறதோ அந்தப் பக்கமாக அலைகள் உயரும். அதைப்போல இன்னொரு நாட்டில் புதிய அம்சங்கள், கவர்ச்சித் தன்மைகள், புதிய நன்மைகள் உண்டென சுற்றுலாப் பயணிகளால் உணரப்படுமானால் அவர்கள் அந்தத் திசைநோக்கியே பயணிப்பர். அலை மாறி அந்தப் பக்கமாகவே வீசும்.

இதனால்தான் சுற்றுலாவுடன் தேசிய உற்பத்தித் துறையிலும் 60 வீதமான கவனத்தைச் செலுத்துங்கள் என்று கோரப்பட்டது.

தேசிய உற்பத்திக்கான முதலீடுகளை – முதலீட்டாளர்களை ஊக்குவிக்க வேண்டும் என்ற நியாயங்களும் முன்வைக்கப்பட்டன.

தப்பட்டிருக்கும். இதன் மூலம் வேலை வாய்ப்பின்மை குறித்த நெருக்கடியும் தீர்ந்திருக்கும்.

இதைச் செய்யத் தவறியது தப்பு.

இது ஒரு புறமிருக்க சுற்றுலாத்துறை எதிர்பார்த்ததை விட மோசமான அடியை வாங்கியது கொரோனாவினால்.

கொவிட் 19 உண்டாக்கிய உலகளாவிய முடக்கமும் இலங்கையில் நிகழ்ந்த அசாதாரணச் சூழலும் இந்தத்துறையை படுக்கையில் தள்ளியது.

ஆகவே எதிர்பார்க்காத அளவுக்குப் பொருளாதார முடக்கம் ஏற்பட்டது.

கூடவே, இலங்கையில் அரசியல் தீர்வு காணப்பட்டு அமைதி எட்டப்பட வேண்டும் என்ற சர்வதேச விருப்பத்தை இலங்கை நிறைவேற்றத் தவறியது இன்னொரு காரணம்.

இதனால் பல நாடுகள் இலங்கை ஒரு சொற் கேளாத நாடு என்ற எண்ணத்துக்கு வந்தன. சாதாரணமாகவே சொல்வழி கேட்டு நடக்கின்ற பிள்ளைக்கோ நண்பர்களுக்கோ, அமைப்புகளுக்கோதான் உதவியும் ஆதரவும் கிடைக்கும். அதாவது ஒரு நற்பேர், நன் மதிப்பின் அடிப்படையில்தான் ஆதரவோ உதவியோ வழங்கப்படுவதுண்டு.

அதை இழந்தால் ஆதரவும் உதவியும் கிடைக்காது என்பது உலக நடைமுறை.

போரின் முடிவுக்குப் பின்னர் சர்வதேசம் எதிர்பார்த்ததும் பரிந்துரைத்ததும் நல்லிணக்கம், பகை மறப்பு, அமைதித்தீர்வு, மக்களுடைய சுபீட்சமான எதிர்காலம் போன்றவையே.

இதைச் செய்யவே இல்லை. பதிலாக இதைச் செய்வதைப் போல பாவனை செய்யப்பட்டது. பதிலாக இனமுரண்பாடு முன்னரை விடக் கூர்மைப்படுத்தப்பட்டது.

இதில் அனைவருக்கும் பொறுப்புண்டு.

இது ஒரு மூடத்தனம் என்பது கூடப் பலருக்கு விளங்கவில்லை. கடந்த காலத்திலிருந்து எதையும் படித்துக் கொள்ளாத – வாழ்விலிருந்தும் வரலாற்றிலிருந்தும் கற்றுக்கொள்ளாத மந்தைக் கூட்டமாக இலங்கையர்களாகிய நாம் இருந்திருக்கிறோம்.

மீண்டும் இரத்தித்திலும் கடனிலும் கண்ணீரிலும் வாழ்க்கையை நடத்துவதற்காக கங்கணம் கட்டிக் கொண்டிருந்தோம்.

இந்தக் கூட்டுத் தவறுக்குக் கிடைத்த கூட்டுத் தண்டனையே இதுவாகும்.

இதற்கு இன்று உண்மையில் அவசியமாகத் தேவைப்படுவது மாற்று சிந்தனை ஒன்றே. அதுதான் சரியான வழியைத் திறக்கக் கூடியது.

அது மாற்று வழியாகும். அதைச் செய்யக் கூடியவர்கள் மாற்றாளர்களே!

கருணாகரன்...✍

இவை பற்றிய உரையாடல் நடந்ததுண்டு. மறுப்பதற்கில்லை. அரசாங்கமும் பொது அழைப்பை விடுத்துக் கொண்டிருந்ததுண்டு. ஆனால், அதற்கப்பால் இதைக் கரிசனைப்படுத்தி உரிய செயல் வடிவம் கொடுத்திருக்க வேண்டும்.

அப்படிச் செய்திருந்தால் இன்று தேசிய உற்பத்திகளிலும் வளர்ச்சி ஏற்பட்டிருக்கும். வளப்பயன்பாடுகளும் நடந்திருக்கும். அதில் ஒன்றான மனித வளமும் உரிய முறையில் பயன்படுத்

RDB லியசவிய Plus
திறி அபிமானி

நாம் தேடுவது உங்களைத்தான்
தைரியமிக்க பெண்களுக்கு மகுடம் சூட

RDB லியசவிய Plus
திறி அபிமானி

சிறந்த பெண் தொழில்முயற்சியாளரை தெரிவு செய்வதற்கான
'திறி அபிமானி 2022' போட்டிக்கு ஜூன் 30 ஆம் திகதிக்கு முன் உங்களுக்கு அருகாமையில்
உள்ள RDB கிளைக்கு வருகை தந்து அல்லது
www.rdb.lk இணையத்தளம் / RDB Facebook முகநூல் பக்கத்தின்
ஊடாக விண்ணப்பிக்கவும்.

HOTLINE
0112 425 262
www rdb lk

RDB
பிரதேச அபிவிருத்தி வங்கி
Regional Development Bank

பிரதேச அபிவிருத்தி வங்கி - இலங்கையின் முதன்மை அரச அபிவிருத்தி வங்கி

RDB லியசவிய Plus
திறி அபிமானி

பெருமிதத்துடன் கொண்டாடுகின்றது...

நாட்டின் முன்னோடி அரச அபிவிருத்தி வங்கியான பிரதேச அபிவிருத்தி வங்கி தேசத்திற்கு வாழ்வு தரும் பெண் தொழில்முயற்சியாளர்களுக்கு மகுடம் சூடும் **"RDB** திறி அபிமானி" விருது வழங்கும் வைபவம் சர்வதேச மகளிர் தினத்திற்கு சமாந்தரமாக 2022 மார்ச் 08ஆம் திகதி இலங்கை மத்திய வங்கியின் "விது பியச" மண்டபத்தில் நடைபெற்றது.

இவ் வைபவத்தில் இலங்கை முதலீட்டு சபையின் பணிப்பாளர் நாயகம் ரேணுகா வீரக்கோன், இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் எம். எஸ். கே. தர்மவர்தன, தேசிய சேமிப்பு வங்கியின் தலைவி கேஷிலா ஜயவர்தன, நிதி அமைச்சின் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தமித்தா இரத்நாயக்க ஆகியோர் விஷேட விருந்தினர்களாக கலந்து கொண்டதுடன் பிரதேச அபிவிருத்தி வங்கியின் சார்பில் அதன் தலைவர் மஹிந்த சாலிய பொது முகாமையாளர் ஏ.எச்.எம்.எம்.பீ.ஜயசிங்ஹ உட்பட வங்கியின் பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களை பிரதிநிதித்துவப்படுத்தி பெண் தொழில் முயற்சியாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

சிறிய மற்றும் நடுத்தரளவு பிரிவில் முதலாம் இடம் திருமதி. W.ருவினி இரோஷா குமாரி விக்ரமாரச்சி

நுண்ணளவு பிரிவில் நாட்டின் முதலாம் இடம் திருமதி. A.M.I.G.வீரக்கோன்

இதன் போது 2021 வருடத்திற்கான **"**திறி அபிமானி**"** போட்டியில் நுண் மற்றும் சிறிய, நடுத்தரளவு எனும் இரு பிரிவுகளின் கீழ் தேசிய மற்றும் மாகாண மட்டங்களில் விருதுகள் வழங்கப்பட்டன என்பதுடன் நுண்ணளவு பிரிவில் நாட்டின் முதலாமிடம் ஏ.எம்.ஐ.ஜீ.வீரக்கோன், இரண்டாம் இடம் -ஆர்.எம்.தம்மிகா இரத்நாயக்க, மூன்றாம் இடம்- கே.டீ.யு.தனுஜா குமாரி விமலரத்ன ஆகியோர் பெற்றுக் கொண்டனர் என்பதுடன் சிறிய மற்றும் நடுத்தரளவு பிரிவில் முதலாம் இடம் - டபிள்யு.ருவினி இரோஷா குமாரி விக்ரமாரச்சி, இரண்டாம் இடம் - டபிள்யு.எச்.ரி-.கே.வடகல, மூன்றாம் இடம் - எஸ்.எம். கங்கா சாந்தனி சிறிவர்தன ஆகியோர் வெற்றியாளர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

வெற்றி பெற்றவர்களுக்கு வெற்றிக் கோப்பை மற்றும் சான்றிதழ்களுக்கு மேலதிகமாக முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களுக்கு முறையே ரூ.200,000/-, ரூ 150,000/- மற்றும் ரூ. 125,000/- ஆகவும் மாகாண வெற்றியாளருக்கு ரூ. 100,000/- ஆகிய பணப்பரில்களை வழங்கவும் **RDB** வங்கி நடவடிக்கை மேற்கொண்டிருந்தது.
"RDB திறி அபிமானி 2022" போட்டிக்கு தற்பொழுது விண்ணப்பப் படிவங்கள் கோரப்படுகின்றன என்பதுடன் நாட்டின் தைரியமிக்க பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு பிரதேச அபிவிருத்தி வங்கி அழைப்பு விடுக்கின்றது.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

இலங்கை அரசின் நிலைப்பாட்டுக்கு உலகில் பெருமளவு நாடுகள் ஆதரவு

ஜெனீவாவில் நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் இலங்கை விவகாரம் குறித்த கலந்துரையாடல்கள் முடிவடைந்துள்ளன. இக்கலந்துரையாடல்களில் இருதரப்புகளின் கருத்துகளும் முன்வைக்கப்பட்டிருந்தன. இலங்கை குறித்த கலந்துரையாடல்களில் தமக்கு வெற்றி கிடைத்தி–ருப்பதாக வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ .எல்.பீரிஸ் கொழும்பில் தெரிவித்துள்ளார்.

மேலைத்தேயத்தின் சில நாடுகள் இலங்கைக்கு எதிராகக் கடுமையான நிலைப்பாட்டை எடுத்திருந்தாலும், இலங்கைக்கு நட்பு நாடுகள் முழு ஆதரவு

இலங்கை பற்றிய கலந்துரையாடல்களில் கலந்து கொண்டிருந்த 45 நாடுகளில், 31 நாடுகள் இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாட்டை நேரடியாக ஏற்றுக் கொண்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார். மனித உரிமை விடயம் மற்றும் நல்லிணக்க செயற்பாடு உள்ளிட்டவற்றில் அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்து சர்வதேசத்துக்கு முன்வைத்த விளக்கம் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாடு தெளிவாக எடுத்துக் கூறப்பட்டது. இதனை பெரும்பாலானவர்கள் அங்கீகரித்திருப்பதாக அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் குறிப்பிட்டார்.

சட்டச் சீர்திருத்தங்கள் உட்பட தேசிய செயன்முறைகளின் மூலம் நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துவதில் இலங்கையின் அர்ப்பணிப்பு மற்றும் கொவிட்19 தொடர்பான சவால்களைப் பொருட்படுத்தாமல் இந்த விடயத்தில் இலங்கை அடைந்து கொண்டுள்ள முன்னேற்றம் ஆகியவற்றை உலகளாவிய அரசுகள் பாராட்டியுள்ளன. தன்னார்வ தேசிய செயல்முறைகளை ஆதரிப்பதன் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டிய மனித உரிமைகள் பேரவை மற்றும் சர்வதேச சமூகம் பாரபட்சமற்ற தன்மை, தேர்ந்தெடுக்காத தன்மை மற்றும் அரசியல்மயமாக்காமை போன்ற அடிப்படைக் கொள்கைகளை நிலைநிறுத்தியிருப்பதாக வெளிவிவகார அமைச்சு சுட்டிக்காட்டுகிறது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் கிடைத்திருக்கும் இந்த வெற்றிக்கு அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட்டமையே காரணம் என்று அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார். குறிப்பாக தன்னுடன் சென்ற இலங்கைப் பிரதிநிதிகள், ஜெனீவாவில் உள்ள இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மற்றும் ஏனைய நாடுகளில் உள்ள இலங்கை இராஜதந்திரகள் என அனைவரும் ஒன்றிணைந்த நிலைப்பாட்டில் செயற்பட்டமையால் சர்வதேச அரங்கில் எமது நாட்டுக்கான ஆதரவைப் பெற முடிந்தது என அமைச்சர் குறிப்பிட்டார்.

ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நாயகத்தின் இலங்கை குறித்த அறிக்கை மீதான ஊடாடும் கலந்துரையாடல் கடந்த நான்காம் திகதி நடைபெற்றது. 46/1 தீர்மானத்தை இலங்கை நிராகரிக்கின்ற போதும் மனித உரிமைகள் குறித்த சர்வதேச பணிப்பொறுப்புக்களைத் தன்னார்வத்துடன் நிறைவேற்றுவதற்கு சர்வதேசத்துடன் தொடர்ந்தும் செயற்பட்டு வருவதாக இங்கு உரையாற்றிய அமைச்சர் பீரிஸ் சுட்டிக்காட்டியிருந்தார்.

மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சேல் முன்வைத்த அறிக்கையானது பலவீனங்களைக் கொண்டதாக அமைந்துள்ளது எனக் குறிப்பிட்டிருந்த பேராசிரியர் பீரிஸ், அதன் ஊடுருவும் தன்மை சகிக்க முடியாதது எனச் சுட்டிக் காட்டியிருந்தார். ஆணையாளரினால் பயன்படுத்தப்படும் தரநிலைகளின் சீரான தன்மை மற்றும் நிலைத்தன்மை ஆகியவை ஐக்கிய நாடுகளின் சகோதரத்துவத்தின் அனைத்து உறுப்பினர்களின் இறையாண்மை சமத்துவம் தொடர்பான அத்தியாவசியக் கொள்கையுடன் இறுதியான இணக்கமும் இந்த அறிக்கையில் உள்ள பல பகுதிகளில் குறைகண்டுபிடிக்கும் தன்மையில் அத்துமீறப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

அதேநேரம், ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் மற்றும் உண்மையாக நடந்தவற்றின் சிக்கலான தன்மையை உணராமல், மேலெழுந்தவாரியான முடிவுகள் பல இந்த அறிக்கையில் இடம்பெற்றிருப்பது வருத்தத்துக்கு உரியது எனவும் இலங்கை, ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கு விளக்கிக் கூறியுள்ளது.

இலங்கை தனது நிலைப்பாட்டைத் தெளிவாகக் கூறியிருந்த நிலையில் சவுதி அரேபியா, சீனா, மாலைதீவு, ஜப்பான், ஈரான், பங்களாதேஷ், மாலைதீவு பிலிப்பைன்ஸ் உள்ளிட்ட 31 நாடுகள் இலங்கைக்கு ஆதரவாகத் தமது கருத்துக்களை முன்வைத்துள்ளன. கடந்த கால அமர்வுகளிலும் ஒரு சில மேலைத்தேய நாடுகள் இலங்கைக்கு எதிராகக் கடுமையான நிலைப்பாட்டை எடுத்திருந்தாலும் இலங்கையின் நட்பு நாடுகள் கரம் கொடுத்திருந்தன. இவ்வாறான பின்னணியில் ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையிலான மோதல்கள் மனித உரிமைகள் பேரவையில் விசேட கவனம் செலுத்தப்படும் விடயமாக இருக்கின்ற நிலையில், இலங்கையின் விவகாரமும் ஓரளவுக்கு அரசுக்கு சாதகமாக அமைந்துள்ளது என்பதே உண்மையாகும்.

மேலைத்தேய நாடுகள் தமக்கு சாதகமான ஆட்சியாளர்கள் அமையாத நாடுகளில் எப்பொழுதும் நெருக்கடிகளைக் கொடுப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளன. இந்த வரிசையிலேயே இலங்கை மீதான அழுத்தத்தையும் பார்க்க முடியும். கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் இலங்கை மீது சர்வதேசத்தின் நிலைப்பாட்டிலும், தற்போதைய நிலைநாட்டிலும் வித்தியாசம் இருப்பதைக் காண முடியும்.

இது இவ்விதமிருக்க, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணைகள் குறித்த அதிருப்தி தொடர்பில் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரிடம் விளக்கிக் கூறியுள்ளார். உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் அடிப்படைவாதக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் என ஆரம்பத்தில் கருதிய போதும், இத்தாக்குதல்களின் பின்னணியில் அரசியல் ரீதியான திட்டம் இருப்

"மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சேல் முன்வைத்த அறிக்கையில் பலவீனங்கள்!"

பது தற்பொழுது புலப்பட்டுள்ளது என அவர் கூறியுள்ளார். விசாரணை நடவடிக்கைகள் திருப்தி தரும் வகையில் இல்லையென்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, நீதமன்றத்தை அவமதித்த குற்றத்துக்காக கடுழியற் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவை விடுதலை செய்வதற்கு ஐக்கிய மக்கள் சக்தி கடுமையான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. ஜனாதிபதியின் பொதுமன்னிப்பு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில், ரஞ்சன் ராமநாயக்கவுக்கு அநீதி இழைக்கப்பட்டிருப்பதாக ஐ.நா மனித உரிமைகள் பேரவையிலும் குரல் கொடுக்கப்பட்டுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களான ஹரீன் பெர்னாந்து மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோர் ஜெனீவா சென்று இதற்காகக் குரல் கொடுத்து வருகின்றனர். ஐ.நா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடரில் ஹரீன் பெர்னாந்து தனது கருத்துக்களை முன்வைத்திருந்தார். ராமநாயக்கவுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக அவர் குரல் எழுப்பியிருந்தார்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை விவகாரம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ள நிலையில், பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஹரீன், நாணயக்கார ஆகியோரின் ஜெனீவா சந்திப்புக்கள் இலங்கை தொடர்பான சர்வதேசத்தின் பார்வையில் தாக்கத்தைச் செலுத்துவதற்கான வாய்ப்புக்களும் காணப்படுகின்றன.

பி.ஹர்ஷன்...✍

இந்தியர்களை மீட்பதில் நரேந்திர மோடி அரசு அதிகூடிய கரிசனை

உக்ரைன்– ரஷ்யா பிரச்சினையில் இரு நாடுகளுக்கும் மத்தியில் அமைதிப் பேச்சுவார்த்தைக்கு இந்தியா எப்போதும் ஆதரவாக இருக்கும் எனப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளமை தொடர்பாக உலகெங்கும் இருந்து சமாதான விரும்பிகள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

உக்ரைன்_ரஷ்யா இடையே போர் இன்னும் நீடித்து வருகிறது. இரு தரப்பிலும் நூற்றுக்கணக்கான உயிர்கள் பலியாகியிருக்கின்றன. இந்தப் போர் நிறுத்தப்பட வேண்டும் என உலக நாடுகள் வலியுறுத்தி வருகின்றன.

மேலும், ரஷ்யாமீது பொருளாதாரத் தடைகளையும் விதித்து வருகின்றன.

இந்த நிலையில் ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையில் சமாதானத்தை ஏற்படுத்த நரேந்திர மோடி முயற்சி மேற்கொண்டு வருவதை பலரும் பாராட்டியுள்ளனர். ரஷ்யா_ உக்ரைன் போர் தொடர்பாக ரஷ்ய ஜனாதிபதி புட்டினுடன், பிரதமர் மோடி சில தினங்களுக்கு முன்னர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியுள்ளார். அப்போது இரு நாடுகளுக்கு மத்தியில் பேச்சுவார்த்தைகள், மோதல் தொடர்பான விவரங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. அதன் பிறகு புட்டினிடம் பேசிய பிரதமர் மோடி, மனிதாபிமான பிரச்சினைகள் குறித்து வருத்தங்களைத் தெரிவித்தார். மேலும், இரண்டு நாடுகளுக்கும் மத்தியில் அமைதிப் பேச்சுவார்த்தைக்கு இந்தியா எப்போதும் ஆதரவாக இருக்கும் எனத் தெரிவித்திருக்கிறார். மோடியின் இந்த முயற்சிக்கு இந்திய மக்கள் பலரும் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

அதேபோல, உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியுடனும் பிரதமர் மோடி தொலைபேசியில் உரையாடியிருக்கிறார். சுமார் 35 நிமிடமாக இந்த உரையாடல் நீடித்தது. உக்ரைனிலிருந்து இந்தியக் குடிமக்களை அழைத்து வர வசதி செய்ததற்காக ஜெலன்ஸ்கியிடம் பிரதமர் மோடி நன்றி தெரிவித்தார்.

இன்னமும் உக்ரைனில் இருக்கும் இந்திய மாணவர்களைப் பாதுகாப்பாக, இந்தியாவுக்கு அனுப்பத் தொடர்ந்து உதவ வேண்டும் எனவும் மோடி கேட்டுக் கொண்டார்.

உக்ரைன்_ ரஷ்யாவிற்கு இடையே நடந்து வரும் போரால் மாணவர்கள் உள்பட ஏராளமான இந்தியர்கள் வெளியேற முடியாமல் தவித்து வருகின்றனர். இதனால் இந்திய மத்திய அரசு 'ஒபரேஷன் கங்கா' என்ற திட்டத்தின் கீழ் சிறப்பு விமானங்கள் மூலம் மாணவர்களை மீட்டு வருகிறது. இருப்பினும், உக்ரைனில் இருந்து தப்பித்து வர முடியாத சூழ்நிலையில் பல இடங்களில் இந்தியர்கள் சிக்கியுள்ளனர்.

உக்ரைன் எல்லையை விட்டு இதுவரை 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இந்தியர்கள் வெளியேறியுள்ளனர். இதுவரை 10,400 இந்தியர்கள் மீட்கப்பட்டுள்ளனர். உக்ரைன்_ ரஷ்யா போர் தொடர்ந்து நடைபெற்று வருவதால் இந்தியர்களை மீட்பதில் இந்திய அரசு கடுமையான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. இருப்பினும், உக்ரைனில் இருந்து தப்பித்து வர முடியாத சூழ்நிலையில் பல இடங்களில் இந்தியர்கள் சிக்கியுள்ளனர்.

உக்ரைன்_ ரஷ்யா இடையேயான மோதல் தொடர்வதால் மீட்புப் பணியில் சிக்கல் தொடர்கிறது.

உக்ரைன்–ரஷ்யா இடையே சமாதானத்தை ஏற்படுத்த இந்திய அரசு மேற்கொள்ளும் முயற்சிக்கு புகழாரம்

உச்சநீதிமன்றமும், மனிதநேய ஆர்வலர்களும் பாராட்டு

உக்ரைனில் சிக்கியுள்ள இந்திய மாணவர்கள் குறித்து கவலை தெரிவித்துள்ள இந்திய உச்சநீதிமன்றம், அவர்களை மீட்கும் மத்திய அரசின் முயற்சிக்கு பாராட்டு தெரிவித்துள்ளது. உக்ரைனில் சிக்கியுள்ள இந்திய மாணவர்களை மீட்பது தொடர்பான வழக்கு தலைமை நீதிபதி ரமணா, நீதிபதிகள் போபண்ணா, ஹிமா கோஹ்லி அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது.

அப்போது மத்திய அரசின் சார்பில் ஆஜரான அட்டர்னி ஜெனரல் வேணுகோபால் "மத்திய அரசின் விரைவான நடவடிக்கைகள் காரணமாக உக்ரைனில் இருந்து ஏராளமான இந்தியர்கள் அழைத்து வரப்பட்டனர். எஞ்சியுள்ள 7 ஆயிரம் பேரை மீட்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. விரைவாக மீட்பது தொடர்பாக அமைச்சர்களுடன் பிரதமர் ஆலோசனை நடத்தி வருகிறார். இந்தியர்களை பத்திரமாக அழைத்து வருவதற்கு எந்த வாய்ப்பையும் மத்திய அரசு தவற விடாது. இந்த விவகாரத்தை அரசிடம் விட வேண்டும். குவைத் போரின் போது இலட்சகணக்கான இந்தியர்கள் தாயகம் அழைத்து வரப்பட்ட முந்தைய வரலாறும் உண்டு" எனக் கூறினார்.

இதனை தொடர்ந்து நீதிபதிகள் கூறுகையில் "மத்திய அரசு குறித்து எந்த ஒரு வார்த்தையும் கூற விரும்பவில்லை. மத்திய அரசின் நடவடிக்கைகளுக்கு பாராட்டு தெரிவிக்கிறோம். ஆனால், அங்கு சிக்கியுள்ள மாணவர்கள் குறித்து கவலை கொள்கிறோம்" என்றனர்.

இதன் பின்னர் தலைமை நீதிபதி கூறுகையில், "கடந்த கால போர் துயரங்களில் இருந்து மனிதர்கள் எதையும் கற்றுக் கொள்ளாதது கவலை அளிக்கிறது. தவறுகள் குறித்தும் பாடம் கற்று கொள்ளாமல், தற்போது போரை நடத்தி வருகின்றனர். அதிகம் சொல்வதற்கு எதுவும் இல்லை. ஆனால், மாணவர்கள் குறித்து கவலையாக உள்ளது" என்று கூறினார்.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் கடந்த வாரம் மேற்கொண்ட அமைச்சரவை மாற்றத்தில் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச மற்றும் பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில ஆகியோர் அமைச்சுப் பதவிகளில் இருந்து அகற்றப்பட்டுள்ளனர். அதனைத் தொடர்ந்து கொழும்பு அரசியலில் பரபரப்பு ஏற்பட்டது.

மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்துடன் தொடர்ந்தும் ஸ்திரமான நிலையில் அரசாங்கம்!

வார இறுதி அரசியல் குறிப்பேடு

சம்யுக்தனி

பொதுஜன பெரமுன கட்சியைப் பிரதானமாகக் கொண்ட அரசாங்கத்தில் பல்வேறு கட்சிகள் பங்காளிகளாக உள்ளன. பங்காளிக் கட்சிகளுக்கிடையில் கடந்த சில மாதங்களாகவே கருத்து வேறுபாடுகள் நிலவி வந்த நிலையில் கட்சிகளின் தலைவர்கள் இருவருடைய அமைச்சுப் பதவிகள் பறிக்கப்பட்டுள்ளன. இதற்கு முன்னர் இராஜாங்க அமைச்சராகவிருந்த சுசில் பிரேம ஜயந்த அமைச்சுப் பதவியில் இருந்து ஜனாதிபதியினால் அகற்றப்பட்டிருந்தார்.

இது மாத்திரமன்றி, அரசாங்கத்தில் அங்கம் வகித்த தேசிய சுதந்திர முன்னணியின் உறுப்பினரான ஜயந்த சமரவீர தனது இராஜாங்க அமைச்சர் பதவியிலிருந்து விலகியுள்ளார். அது மாத்திரமன்றி, அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியான ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் அமைச்சர் வாசுதேவ நாணயகார அமைச்சரவைக் கூட்டங்களில் பங்கெடுக்கப் போவதில்லையென அறிவித்திருந்தார். இவ்வாறான அரசியல் நடவடிக்கைகளால் ஆளும் கூட்டணிக்குள் காணப்பட்ட கருத்து முரண்பாடு உச்ச நிலைக்குச் சென்றிருப்பதாக அரசியல் அவதானிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

அமைச்சுப் பதவிகள் பறிக்கப்பட்ட விவகாரம் திடீரென முன்னெடுக்கப்பட்டதொன்றல்ல. கடந்த சில மாதங்களாக அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களே அரசை விமர்சித்து வந்தனர். குறிப்பாக கெரவலப்பிட்டிய அனல் மின்நிலைய அபிவிருத்தித் திட்டத்தை அமெரிக்க நிறுவனமொன்றுக்குக் கையளிப்பதற்கு அரசு எடுத்த தீர்மானத்தை விமல் வீரவன்ச, உதய கம்மன்பில மற்றும் வாசுதேவ நாணயக்கார ஆகியோர் பகிரங்கமாக விமர்சித்திருந்தனர். அமைச்சரவைக் கூட்டத்திலும் தமது எதிர்ப்பினை வெளியிட்டிருந்தனர்.

அவர்களுக்கிடையில் ஏற்கனவே இருந்து வந்த கருத்து முரண்பாடு இதன் மூலம் பகிரங்கமானது. அன்றிலிருந்து அவர்கள் பொது இடங்களில் அரசாங்கத்தின் சில செயற்பாடுகளை விமர்சிக்கத் தொடங்கினர். இதனால் பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இவர்களுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியிருந்தனர். குறிப்பாக பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் விமல் வீரவன்ச உள்ளிட்டவர்களைக் கடுமையாக விமர்சித்து வந்தார். அரசாங்கத்திற்குள் இருந்து கொண்டு விமர்சிப்பதை விட, பிடிக்கவில்லையெனில் அரசிலிருந்து உடனடியாக விலக வேண்டும் என்றும் அவர் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தார்.

சாகர காரியவசம் மாத்திரமன்றி, அமைச்சர்கள் பிரசன்ன ரணதுங்க போன்றவர்களும் விமர்சனங்களை முன்வைத்து வந்தனர். இவ்வாறான பின்னணியில் பொதுச் சந்தையொன்றுக்குச் சென்றிருந்த சுசில் பிரேமஜயந்த விலைவாசி அதிகரிப்புத் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போது அரசின் கொள்கைகளை விமர்சித்திருந்தார். இவர் கருத்துத் தெரிவித்து ஓரிரு தினங்களில் அவர் அமைச்சுப் பதவியிலிருந்து அகற்றப் பட்டார்.

அரசாங்கத்தை விமர்சிக்கும் ஏனையவர்களையும் அமைச்சுப் பதவிகளிலிருந்து விலக்க வேண்டும் என்ற கோரிக்கை தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டு வந்தது. இந்த வரிசையிலேயே கடந்த வாரம் நடைபெற்ற அமைச்சரவை மாற்றத்தில் விமல் வீரவன்ச மற்றும் உதய கம்மன்பில ஆகியோருக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவில்லை.

அதேநேரம், அரசாங்கத்துடன் கருத்து முரண்பாடுகள் ஏற்படத் தொடங்கியதிலிருந்து அரசில் அங்கம் வகிக்கும் 11 பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் பல தடவைகள் கூடிக் கலந்துரையாடியிருந்தனர். இவர்கள் இறுதியாகக் கூடி மாநாடொன்றை நடத்தியதுடன், நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்வதற்கான யோசனைத் திட்டமொன்றையும் முன்மொழிந்திருந்தனர். இதுவே விமல், கம்மன்பில போன்றவர்களுக்கு எதிராக ஜனாதிபதி திடீர் நடவடிக்கை எடுப்பதை துரிதப்படுத்தியிருந்தது.

சுதந்திரக் கட்சியின் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் சுதந்திரக் கட்சியின் பிரமுகர்கள் ஜனாதிபதியுடன் சந்திப்பு; சு.க–வினால் முன்வைக்கப்பட்ட 15 அம்சக் கோரிக்கையை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டிருப்பதுடன், சர்வகட்சி மாநாடொன்றைக் கூட்டுவதற்கு இணக்கம்

நாடு எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதை விடுத்து தமது அமைச்சுப் பதவிகளைப் பறிப்பதில் எவ்வித பயனும் இல்லை. தமது அமைச்சுப் பதவிகளைப் பறித்தமையால் நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினை தீரும் என்றால் அது குறித்து தாம் மகிழ்ச்சியடைவதாக விமல் வீரவன்ச மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் குறிப்பிட்டிருந்தார்.

நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் செயற்பாடுகளால் தாம் அதிருப்தியடைந்திருப்பதாக அவர்கள் இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்திருந்தனர். அரசு தரப்பு மீது பலவிதமான விமர்சனங்களையும் அவர்கள் முன்வைத்திருந்தார். அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கு ஆதரவான குழுவினருக்கும், அதற்கு எதிரான குழுவினருக்கும் காணப்பட்ட இழுபறி நிலையின் வெளிப்பாடாகவே இது அமைந்துள்ளது என அரசியல் அவதானிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இந்த நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் பொதுஜன பெரமுன கட்சியின் பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான கூட்டமொன்று நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தலைமையில் பாராளுமன்றத்தில் நடைபெற்றிருந்தது. இதில் அரசாங்கம் முன்னெடுக்கும் செயற்றிட்டங்களுக்கு தமது ஒத்துழைப்பு வழங்கப்படும் என்பதை பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

கடந்த காலத்தில் தமக்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவரையும் ஒன்றிணைத்துக் கொண்டு பயணிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை நிதி அமைச்சர் வலியுறுத்தியிருந்த போதும், அவர்களுடன் பயணிக்க முடியாவிட்டால் அதற்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுக்கத் தயங்கப் போவதில்லையென்றும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டிருந்த பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி ஊடகங்களுக்குக் கூறியிருந்தார்.

அதேநேரம், அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளுக்கிடையில் ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடுகளைக் களைந்து ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கிடையில் தற்போதைய அரசாங்கத்துக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைப்பதற்கு அதிக ஒத்துழைப்பை வழங்கி வரும் கட்சியான சுதந்திரக் கட்சி, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சில தினங்களுக்கு முன்னர் சந்தித்திருந்தது. சுதந்திரக் கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் சுதந்திரக் கட்சியின் பிரமுகர்கள் கலந்துகொண்டிருந்தனர். இதில் சுதந்திரக் கட்சியினால் முன்வைக்கப்பட்ட 15 அம்சக் கோரிக்கையை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டிருப்பதுடன், சர்வகட்சி மாநாடொன்றைக் கூட்டுவதற்கு இணக்கம் தெரிவித்ததாக மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டிருந்தார்.

கருத்து முரண்பாடுகள் இருந்தாலும் அரசாங்கம் முன்னெடுக்கும் எந்த எண்ணமும் தமக்குக் கிடையாது என விமல் வீரவன்ச மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் திட்டவட்டமாகக் கூறியுள்ளனர். அமைச்சுப் பதவிகளை இழந்தமையால் வீரவன்சவுக்கும், உதய கம்மன்பிலவுக்கும் பாராளுமன்றத்தில் ஒதுக்கப்பட்டிருந்த முன்வரிசை ஆசனங்களில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. அவர்கள் சாதாரண எம்.பிக்களுக்கான ஆசனங்களில் அமர்ந்திருந்ததையும் காணக் கூடியதாகவிருந்தது.

எதுவாக இருந்தாலும் பாராளுமன்றத்தில் அரசாங்கத்துக்குக் காணப்படும் பெரும்பான்மையில் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. ஒருசிலர் அரசாங்கத்துக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்திருந்தாலும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் அரசாங்கம் இன்னமும் காணப்படுகிறது. மறுபக்கத்தில், பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர்களுக்கிடையிலான கருத்து வேறுபாடுகளும் வலுவடைந்து காணப்படுகின்றன. ஐக்கிய மக்கள் சக்தி மீண்டும் மறுசீரமைக்கப்பட வேண்டும் என சம்பிக்க ரணவக்க கூறியுள்ளார்.

அரசியல் கட்சிகள் தமக்கிடையிலான முரண்பாடுகள் குறித்து

"கருத்து முரண்பாடுகள் இருந்தாலும், அரசாங்கத்தை விட்டு வெளியேறி எதிர்க்கட்சியுடன் இணைந்து செயற்படும் எந்த எண்ணமும் விமல் வீரவன்ச மற்றும் உதய கம்மன்பிலவிடம் கிடையாது!"

"பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர்களுக்கிடையில் கருத்து வேறுபாடுகள் தீவிரம்; ஐக்கிய மக்கள் சக்தி மீண்டும் மறுசீரமைக்கப்பட வேண்டுமென சம்பிக்க ரணவக்க வலியுறுத்தல்

அக்கறை செலுத்தியிருக்கும் நிலையில் கொவிட்19 நெருக்கடியால் ஏற்பட்ட பொருளாதார சவால்களின் மத்தியில் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். தற்போதைய நிலையில் அரசாங்கம் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையும் இணைத்துக் கொண்டு தேசிய அரசாங்கமொன்றுக்குச் செல்லவிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தன. எனினும், இவை வெறும் வதந்திகள் என ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார். தற்போதைய சூழ்நிலையில் அரசியல் கட்சிகள் யாவும் ஒன்றாக இணைய வேண்டுமே தவிர தேசிய அரசாங்கம் அமைப்பது முக்கியமானது அல்ல என்றும் அவர் கூறியுள்ளார்.

மக்கள் எதிர்கொண்டுள்ள பல்வேறு பிரச்சினைகளுக்கு எந்தவொரு தரப்பினரும் தனித்தனியாக நின்று தீர்வுகளை வழங்க முடியாது என்பதால் அனைவரும் தமது அரசியல் பேதங்களைக் கைவிட்டு ஒன்றிணைந்து நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும் என்பதே மக்களின் கருத்தாக உள்ளது.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

மலையக பல்கலை கழகம் ஜீவனின் சூளுரை வாகை சூடுமா?

2015 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் கல்வி அமைச்சு மீதான வரவு செலவு திட்ட விவாதத்தின் போது அப்போதைய நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் திலகராஜ் மலையக சமூகம் பல்கலைக் கழகம் ஒன்றைப் பெற வேண்டிய அவசியம் பற்றி அக்கு வேறு ஆணி வேறாக விளாசித் தள்ளியிருந்தார். அவர் வெறும் வாய் வீச்சுக் காட்டவில்லை. ஆதாரங்ளோடு பேசினார்.

அதில் அவர் முக்கிய விடயம் ஒன்றினைச் சுட்டிக் காட்டியிருந்தார். அதுதான் பல்கலைக்கழக கல்லூரி கோரிக்கை. அப்போது பல்கலைக் கழகமா? பல்கலை கழக கல்லூரியா? என்று எதிர் அணியினர் எள்ளி நகையாடவே செய்தனர். ஆனால் பல்கலைக்கழக கல்□ரி பின்னர் பல்கலைக் கழகமாக மாற்ற மடைந்த வரலாறு குறித்து திலகராஜ் சுட்டிக் காட்டியிருந்தார். அதுவும் ஒரு மருத்துவ கல்லூரி எப்படி இப்படி பல்கலைக் கழகமானது என்னும் விபரம் அவர் சொல்லியே பலருக்கும் தெரிந்தது. அதுவரை இவ்விடயம் பெரிய விடயமாக காணப்படவில்லை.

1870களில் ஆங்கிலேய அரசாங்கம் மருத்துவ துறைசார் பாடசாலையாகவே இதனை ஆரம்பித்தது.1881இல் மருத்துவ கல்லூரியாக தரமுயர்த்தப்பட்டது. இங்கு கற்றவர்கள் பிரித்தானியாவில் பயிற்சிப் பெற தகுதி கண்டார்கள். 1913ஆம் ஆண்டு பிரித்தானிய ஆட்சி ஒரு பல்கலைக் கழக கல்லூரியை ஸ்தாபிக்க முடிவெடுத்தது. அதன் படி இம் மருத்துவ பாடசாலை கல்லூரியாக மாற்றப்பட்டது.1942ஆம் ஆண்டில் கொழும்பு பல்கலைக் கழகம் என்று அந்தஸ்து உயர்வு கண்டது. இது பற்றி சபையில் பிரஸ்தாபித்த திலகராஜ் இலங்கையில் முதலாவது பல்கலைக் கழக கனவு ஒரு தமிழராலேயே தோற்றம் பெற்றது. அந்த தமிழர் தான் சேர் பொன்னம்பலம் இராமநாதன் என்று கூறி வைத்தார்.

கடந்த நல்லாட்சிக் காலத்தில் இது சம்பந்தமான நகர்வுகள் இடம் பெறுவது போல ஒரு தோற்றப்பாடு இருக்கவே செய்தது. பல்கலைக்கழக கல்லூரி அமைப்பதற்கான பொருத்தமான இடம் தேடப்படுவதாக கூறப்பட்டது. அமைச்சர்கள் பல இடங்களைப் பார்வையிடவும் செய்தார்கள். ஆனால் எதுவுமே ஆரம்பிக்கப்படவில்லை என்பதுதான் அபத்தம். இதே போது பெருந்தோட்டப்பாடசாலைகளில்நிலவும்ஆசிரியர் பற்றாக்குறை,,வளக்குறைவு,போன்ற அடிப்படைப் பிரச்சினைகள் கூட முற்றாக களையப்படவில்லை என்பதையும் திலகராஜ் அப்போது கோடிட்டுக் காட்டியிருந்தார்.

நாடு 1948இல் சுதந்திரம் அடைந்தது.. அரை நூற்றாண்டுகளைக் கடந்து பிற சமூக மாணவர்கள் இலவச கல்வியைப் பெற்று வருகின்றனர். ஆனால் காலம் தாழ்த்தி தான் மலையக மாணர்வர்களுக்கு அந்த வாய்ப்பு கிடைக்கலானது.1972களில் அனைத்து தோட்ட பாடசாலைகளும் அரசுடைமை ஆக்கப்பட்டதினால் இச் சந்தர்ப்பம் கிட்டியது. பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கான தனிப் பிரிவு ஒன்று இயங்கி வருகின்றது. எனினும் தேசிய ரீதியாக வளங்கள் பெற்றுக் கொடுக்கும் போது விகிதாசார முறைமைப் பின்பற்றப்படுவது கிடையாது. உதாரண மாக ஒரு கல்வி வலயத்தில் 75சத வீதமான தமிழ்ப் பாடசாலைகளும் 25சத வீதாமான சிங்கள பாடசாலைகளும் இயங்கும் பட்சத்தில் வளப்பகிர்வின் போது 25 சத வீதமான சிங்கள பாடசாலைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படுவதே நடைமுறையில் உள்ளது.

இத்தனைக்கும் பெருந்தோட்டக் கல்வி வரலாறு நீண்ட பதிவுகளைக் கொண்டிருக் கின்றது. 1820களிலே இங்கு கட்டாயக் கல்விச் சட்டம் நடைமுறையில் இருந்தது.1839ஆம் ஆம் ஆண்டு தோட்டப் பாடசாலைகளின் பாடத்திட்டம் சுதேச கல்விக்கு அப்பாலும் விரிவுபடுத்தப்பட்டது.1947இல் கூட மலையக கல்வி மேம்பாடு சம்பந்தமான ஒரு சட்டம் கொண்டு வரப்படலானது. இதன்படி தோட்டத் தொழிலாளரது பிள்ளைகள் கல்வி கற்பதற்காக தரமான கட்டிடம் வழங்கல், தலைமை ஆசிரியருக்கான விடுதி, பாடசாலை தோட்டத்துக்குத் தேவையான இடம், விளையாட்டு மைதானத்துக்காக ஒரு ஏக்கருக்கும் குறையாத காணி ஒதுக்கிடல் போன்ற அம்சங்கள் உள்வாங்கப்பட்டிருந்தன. எனினும் இதனை நடைமுறைப்படுத்த தோட்டத் துரைமார் சங்கம் மறுத்துவிட்டது. இதே போன்றதொரு இடைத் தடை நிலைமையே இப்போதும் கூட மலையக கல்வி அபிவிருத்தி சந்தித்துக் கொண்டிருக்கின்றது.

பௌதீக வளம் பூரணப்படுத்தாமை, ஆசிரியர் பற்றாக்குறை என்பன கற்றல் ,கற்பித்தல் நடவடிக்கைகளில் குந்தகம் ஏற்படுத்துகின்றது. தவிர உளவியல் ரீதியிலான தாக்கங்களையும் உற்பவிக்கின்றது. இதன் காரணமாகவே ஒப்பீட்டளவுவில் பிற சமூக இன மாணவர்கள் பெறும் கல்வி தேர்ச்சி மட்டத்தை அடைய முடியாத படி தடை ஏற்படுகின்றது. இன்றும் கூட மலையக பாடசாலைகளை தோட்டப் பாடசாலைகளாகவே எடைபோடும் கல்வி துறைசார் அதிகாரிகள் சிலர் இருக்கவே செய்கின்றார்கள்.

மலையகத்தில் அரசியல் செயற்பாடுகள் ஆரம்பமாகி வருடங்கள் பல ஆகின்றன. தேர்தல் காலத்தில் பேரம் பேசும் அரசியல் தலைமைகள் இருக்கின்றன. மலையக கல்வி குறித்து போதிய அக்கறையின்றி காணப்படும் அரசியல் பிரமுகர்கள் தான்தோன்றித்தனமாக இயங்குவதால் அரசாங்கத்தில் அரசியல் அதிகாரம் பெறும் நிலையிலும் கையாலாகாத வர்களாகவே காலத்தை வீணடித்துக் கொண்டிருக்கிறார்கள். உயர் கல்விக்கான ஒரு நிறுவனத்தின் தேவையை அரசியல் மயப்படுத்தி ஆதாயம் காண எத்தனிக்கின்றார்கள்.

மலையகததுக்கு ஒரு பல்கலைக் கழகம் அவசியம் என்பதில் தமிழ் முற்போக்குக் கூட்டணிக்கும் இ.தொ.காவுக்கும் இடையில் ஏகோபித்த கருத்தே இருக்கின்றது. எனினும் எங்கே அமைப்பது என்னும் இடத் தெரிவில் அரசியல் ஊசலாடுகின்றது. முன்னைய ஆட்சியில் முடியாமற் போனமை இந்த ஆட்சியில் இதுவரை மௌனம் காத்தமை எல்லாம் ஏமாற்றத்தை தரவே செய்தது.

அதனை ஆசுவாசப்படுத்துவது போல இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் பாராளுமன்றத்தில் குரல் பதிவிட்டுள்ளார். மலையகத்துக்கு தனியான பல்கலைக் கழகம் அமைப்பதற்குப் பொருத்தமான காணியைத் தேடிக் கொண்டிருக்கிறோம். நாங்கள் நினைத்திருந்தால் எங்காவது கட்டிடத்தை, பல்கலைக் கழகத்தை அமைத்திருக்கலாம். ஆனால் எமது நோக்கம் அதுவல்ல. அனைத்து வசதிகளையும் கொண்ட பல்கலைக் கழகத்தை அமைப்பதே எமது நோக்கம். அதனை நிறைவேற்றியே தீருவோம். மலையகத்துக்குப் பல்கலைக்கழகம் வரும். அது இ.தொ.காவினாலேயே உருவாக்கப்படும். அதனைத் தடுக்க முடியாது என்று கூறியிருந்தார் ஜீவன் தொண்டமான்.

இது சாத்தியமாகும் பட்சத்தில் எவருக்கும் தடுக்க வேண்டிய தேவை இருக்காது. ஏனெனில் மலையக சமூகத்தின் ஆய்வுக்குரிய உயர் கல்வி நிறுவனமாக பல்கலைக் கழகம் அவசியம் என்பதை ஆணித்தரமாக வலியுறுத்திய அப்போதைய பாராளுமன்ற உறுப்பினரும் இப்போதைய மலையக அரசியல் அரங்க தலைமை ஒருங்கிணைப்பாளருமான எம். திலகராஜ் முதலில் பல்கலைக்கழக கல்லூரியிலிருந்தாவது அந்த வாய்;ப்பைப் பெற்றுத் தாருங்கள் என பவ்வியமாகவே வேண்டுகோள் விடுத்திருந்தார்.

மனம் இருந்தால் இடம் ஒரு பிரச்சினையாக இருக்க முடியாது. இதேவேளை மலையக பாடசாலைகளில் அபிவிருத்திக்கு ஆப்பு வைக்கும் சமாச்சாரங்களை களைய ஆவன செய்ய வேண்டியது மலையக பிரதிநிதிகளின் கடப்பாடு. ஒரு சிலரைத் தவிர பல பிரதிநிதிகள் மௌன விரதிகளாகவே பாராளுமன்ற நேரத்தைச் செலவிடுகின்றார்கள். மாகாண தமிழ் கல்வி அமைச்சுகளை மத்திய மாகணத்திலும் ஊவா மாகாணத்திலும் ஏற்படுத்தி மலையகக் கல்வி நிலையை உயர்த்தும் வாய்ப்புகள் முன்னர் கிடைத்திருந்தன.

1988ஆம் ஆண்டு முதல் மாகண சபை நிர்வாகத்தின் கீழ் மத்திய, ஊவா, சப்பரகமுவ மாகாணங்களின் தமிழ் மொழி மூல பாடசாலைகள் மாகாண தமிழ் கல்வி அமைச்சு என்றொரு தனிப்பிரிவின் மூலமே இயங்கி வந்தன. ஆனால் அண்மைக் காலங்களில் அந்த வாய்ப்புகள் பறிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான பின்புலத்திலேயே மலையக பல்கலைக்கழக கனவு இன்னும் நனவாகாமலேயே இருந்து வருகின்றது. உடனடியாக ஒரு பல்கலைக் கழகத்தை உருவாக்குவதில் சிரமங்கள் இருக்குமாயின் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் யோசனைப்படி ஒரு பல்கலைக் கழக கல்லூரியையாவது அமைத்து தர ஆவன செய்வாரா ஜீவன் தொண்டமான்? காரணத்தைக் கற்பித்துக் காலத்தைக் கடத்துவதை விட கிடைத்ததை வாங்கி வளர்ச்சியை நோக்கி வீறு நடை போடலாமே! அல்லது முழுமையான ஒரு பல்கலைக் கழகத்தை முறையாக பெற்றுத் தந்து அரசியலில் வெற்றி வாகை சூடலாமே!

பந்து என்னவோ ஜீவன் பக்கம். பார்ப்போம் பொறுத்திருந்து ஆட்டநாயகன் அவரா என்று!

பன். பாலா ...✍

மலையக மக்கள் அரசியல் ரீதியாகவும் விழிப்புணர்வு பெறக்கூடியவர்களே

அரசியல்வாதிகள் இதை புரிந்துகொள்ள வேண்டும்

மலையகத்தில் காணப்படும் சமூக பொருளாதார பிரச்சினைகளுக்கு அடிப்படைக் காரணம் மக்களின் கல்வியறிவும், அடிப்படை அரசியல் விழிப்புணர்வும் போதாமையாகும்.

மலையக மக்களுக்குத் தேவையான விடயங்களை அரசாங்கத்திடம் இருந்தும், தோட்டக் கம்பனிகளிடம் இருந்தும் பெற்றுக்கொள்ள வேண்டிய சலுகைகள், உரிமைகளை பெற்றுக்கொள்வது தொடர்பாக இதுவரைகாலமும் முறையான வழிகாட்டல் ஆலோசனைகளை இம்மக்களுக்கு போதிய ளவு வழங்கப்படவில்லை.

ஒரு அடிமைச் சமூகமாக தொடர்ந்து நோக்கப்பட்டு வந்தாலும், இவர்களுக்கு சலுகைகள், கல்வி வாய்ப்புக்கள், அடிப்படை வசதிகள் போன்றவற்றைப் பெற்றுக் கொடுத்தால் சில தொழிற்சங்களுக்கும், அரசியல் கட்சிகளுக்கும், கம்பனிகளுக்கும் எதிர்காலத்தில் தங்களுடைய தொழிற்சங்க, அரசியல் விடயங்களை தோட்டங்களில் தொடர்ச்சியாக கொண்டு நடத்துவதில் பாதிப்பை ஏற்படுத்தி விடுமோ என்ற ஐயப்பாட்டாலும், அநேக விடயங்களில் காலம் காலமாக மலையக மக்களுடையப் பிரச்சினைகளை ஒரு சமூகப் பிரச்சினையாக யாரும் முன்னெடுக்க முயற்சிப்பதில்லை.

காலத்துக்கு காலம் சிலர் மாற்றுவதற்கு முயற்சி செய்தபோதும் அதனை பல்வேறு வழிகளில் அல்லது வடிவங்களில் மழுங்கடித்த வரலாறுகளும் மலையகத்தில் இல்லாமல் இல்லை.

ஒரு கட்சி நல்ல விடயத்தை செய்ய முயற்சிக்கும்போது அதற்கு ஏனையக் கட்சிகள் இடையூறாக இருப்பதும், ஏனைய கட்சிகள் ஒன்றிணைந்து பல நல்ல விடயங்களை செய்யும்போது அதற்கு ஒன்று, இரண்டு கட்சிகள் இடையூறாக இருப்பதும் மலையகத்துக்கேயுரிய சாபக்கேடாக தொடர்கிறது.

மலையக மக்கள் கல்வி கற்க வேண்டும், சுயமாக சிந்திக்க வேண்டும். நான்கு பரம்பரையாக லயத்து காம்பிராக்களில் எவ்வித அடிப்படை வசதிகளும், விமோசனமும் இன்றி வாழுகின்ற இவர்களுக்கு அரசியல் ரீதியான வழிகாட்டல் ஆலோசனைகளை செய்வது யார்?.

இரா. சிவலிங்கம்...✍

தொழிலாளர்கள் சொந்தக் காணியில் வீடமைத்து வாழ்வது எப்போது?



பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு வீடுகளை நிர்மாணிக்க குடும்ப மொன்றுக்கு தலா ஏழு பேர்ச் காணி வழங்கப்படும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தீர்மானித்துள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே தெரிவித்திருக்கிறார்.

தற்போதைய அரசாங்கத்தில் தோட்ட வீடமைப்பு இராஜாங்க அமைச்சராக இ.தொ.கா.வின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் இருக்கிறார். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பொறுப்பிலேயே தோட்ட வீடமைப்பு இருக்கிறது. இந்த நட்புறவைப் பயன்படுத்தி மலையக மக்களின் காணிப்பிரச்சினைக்கு உரிய தீர்வை பெற்றுக் கொடுக்க வேண்டும் .

1999ம் ஆண்டு ஒகஸ்ட் 16ஆம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையிலான ஐக்கிய மக்கள் முன்னணி வெற்றியீட்டி அரசாங்கம் அமைக்க மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ. சந்திரசேகரனின் ஒரு ஆசனமே உதவியது.

அந்த ஒரு காரணத்திற்காகவே ம.ம.மு தலைவர் சந்திரசேகரனுக்கு தோட்ட வீடமைப்பு பிரதியமைச்சர் பதவி வழங்கப்பட்டது. இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொண்ட அவர் தோட்டத் தொழிலாளர்கள் தனித்தனி வீடுகள் அமைக்க ஏழு பேர்ச் காணி வழங்கப்பட வேண்டும் என்னும் கோரிக்கையை முன்வைத்தார். அவரது கோரிக்கையை ஏற்றுக் கொண்ட சந்திரிகா குமாரதுங்க அதனை செயல்படுத்தினார்.

அதன் பின்னர் பதவிக்கு வந்த அரசாங்கங்கள் இதுகாலவரை அந்த நடைமுறையை பின்பற்றி வந்தபோதிலும் தோட்டத் தொழிலாளர்களின் வீட்டுப் பிரச்சினை தீர்க்கப்படாத ஒன்றாகவே இருந்துவருகிறது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் காணிப் பிரச்சினை தொடர்பாக தொழிற்சங்கங்கள், சமூகநல அமைப்புகள் மற்றும் புத்திஜீவிகளினால் நீண்டகாலமாக கோரிக்கை விடுக்கப்பட்டு வருகிறது. எனினும் இன்றுவரை அந்த மக்களுக்கு இன்னும் தீர்வு கிடைக்கவில்லை. பல தேர்தல்கள் வந்துவிட்டன. தேர்தல் காலங்களில் பல்வேறு வாக்குறுதிகளை வழங்கிய தொழிற் சங்க அரசியல் பிரதிநிதிகள் பதவிக்கு வந்ததும் அவற்றை மறந்துவிடுவதுமாக காலம் ஓடிக் கொண்டிருக்கிறது. மாறி மாறி பதவிக்கு வந்த ஆட்சியாளர்களின் சிந்தனைக்கு இந்த மக்களின் பிரச்சினைகள் உரியமுறையில் கொண்டு செல்லப்படாமையும் காரணமாக இருக்கலாம்.

அவிசாவளை பென்ரித் தோட்ட கீழ்ப்பிரிவில் தோட்டத் தொழிலாளர் குடும்பமொன்றிற்கு ஏழு பேர்ச் காணி தோட்ட நிர்வாகத்தினால் மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபகர் பெரியசாமி சந்திரசேகரன் தோட்ட வீடமைப்பு பிரதியமைச்சராக பதவி வகித்த காலத்தில் வழங்கப்பட்டது. அவ்வாறு வழங்கப்பட்ட காணிகளில் முப்பத்

இவதன்...✍

தைந்து தோட்டத் தொழிலாளர் குடும்பங்கள் தமது வசதிகளுக்கேற்றவாறு வீடுகளை நிர்மாணித்து சுதந்திரமாக வாழ்கிறார்கள்.

ஒருசிலர் தேசிய வீடமைப்பு அதிகார சபை, ஊழியர் சேமலாப நிதி, வங்கிகள் போன்ற நிறுவனங்களின் நிதி உதவிகளைப் பெற்று வீடுகளை நிர்மாணித்துக் கொண்டனர்.

ஆனால் கண்டி, மாத்தளை, இரத்தினபுரி பகுதி தனியார் தோட்டங்களில் இவ்வாறான நிலைமைகள் இல்லை. காணிப்பகிர்வு விடயத்தில் பாரபட்சம் காட்டப்படுவதுடன் தொழிலாளர்களின் வீட்டு நிர்மாணத்திற்கான காணிகள் தோட்டக் கம்பனிகளினால் சரிவர ஒதுக்கப்படாமையும் பதவிக்கு வந்த அரசாங்கங்களும் போதுமான நிதியையும் ஒதுக்கவில்லை என கூறப்படுகிறது.

இந்திய அரசாங்கம் தோட்டத் தொழிலாளர்களுக்கு நாலாயிரம் வீடுகளை அமைப்பதற்கான நிதியை ஒதுக்கியிருந்தது. அந்த நிதியைக்கொண்டு நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் தொழிலாளர்களிடம் கையளிக்கப்பட்டன. அதன் பின்னர் பத்தாயிரம் வீடுகளை நிர்மாணிப்பதற்கான நிதியை ஒதுக்கியது இந்திய அரசாங்கம். அந்த நிதியை பயன்படுத்தி முழுமையாக வீடுகள் நிர்மாணிப்பதில் பல்வேறு பிரச்சினைகள். வீடுகள் முறையாக கட்டப்படவில்லை எனவும் உட்கட்டமைப்பு வசதிகள் எதுவும் செய்யப்படவில்லை

ஆங்கிலேயர் காலத்தில் தேயிலை உற்பத்திக்காக தென்னிந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்ட மக்களில் ஒரு சிலர் பெருந்தோட்ட தொழிலில் ஈடுபடாது வியாபாரம் மற்றும் கடைகளை ஆரம்பித்து நடத்தியவர்கள் ஓரளவு அபிவிருத்தி அடைந்த நிலையில் தங்களுக்கென சொந்தமாக நிலங்களை கொள்வனவு செய்தும் வீடுகளை நிர்மாணித்துக்கொண்டும் உள்ளனர்.

அதே போல் இப்பிரதேசத்திலிருந்து கல்வி கற்ற வர்களில் சிலர் வெளியிடங்களுக்கு சென்று தமக்கென சொந்தமான நிலம் வீடுகளை கொள்வனவு செய்துள்ளமையும் காணமுடிகிறது. ஆனால் இவர்களில் இன்றுவரை தோட்டத் தொழிலில் ஈடுபட்டுவரும் மக்களினது நில வீட்டுரிமைகள் கேள்விக்குரியாகவே உள்ளது.

அந்த வகையில் முதலில் காணி உரிமை விடயத்தில் இவர்களுக்கு தோட்டப்புற நிலங்களை கொள்வனவு செய்வதற்கோ விற்பனை செய்வதற்கோ நிலையான சொந்தம் கொண்டாடுவதற்கோ எவ்வித காணி உரிமையும் இல்லை.

ஆரம்பத்தில் தோட்டத் தொழிலாளர்களை தங்களின் கட்டுப்பாட்டின் கீழ் தொடர்ச்சியாக வைத்திருக்கும் நோக்கில் பிரித்தானியர்களால் லயன் முறையிலான தங்குமிட வசதிகள் மாத்திரமே வழங்கப்பட்டிருந்தது. எனினும் நில உரிமை மறுக்கப்பட்டிருந்தது. தற்போதும் தோட்ட முகாமைத்துவத்தினால் தோட்ட தொழிலாளர்களுக்கு அதே பழமையான வசதிகளற்ற 400 சதுர மீட்டர் அடி கொண்ட லயன் வீடுகளே வழங்கப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் 'இலங்கை பிரஜைகள்' என்ற அங்கீகாரத்தினையும் பிரித்தானியர்கள் இவர்களுக்கு வழங்கியிருக்காததன் காரணமாக நாட்டின் ஏனைய பிரஜைகள் போல இவர்களால் தமக்கென சொந்தமாக ஒரு நிலத்தை கொள்வனவு செய்வதற்கோ வீடு கட்டுவதற்கோ வாய்ப்பில்லாமல் போயிருந்தது.

மேலும் ஆரம்ப காலகட்டத்தில் தனியார் வசமாக பெருந்தோட்டங்களில் மூன்று நான்கு தலைமுறைகளுக்கு மேலாக இருந்த மக்களினது காணிகள் 1972இல்; அரசுடமையாக்கப்பட்டதுடன் பல தேயிலை தோட்டங்கள் துண்டாடப்பட்டு சிங்கள மக்களுக்கு அவை பகிர்ந்தளிக்கப்பட்டன. அவ்வாறு வழங்கப்பட்ட நிலங்களில் ஒரு நிலம் கூட தமிழ் தோட்டத் தொழிலாளர் ஒருவருக்கேனும் வழங்கப்படவில்லை.

1972ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிலச் சீர்திருத்தச் சட்ட பிரகாரம் நிலச் சீர்திருத்த ஆணைக்குழு உருவாக்கப்பட்டு தனியார் காணி உரிமைக்கு உச்ச வரம்பு கொண்டுவரப்பட்டதுடன் இதற்கமைய 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு பெருந்தோட்ட காணியாயின் 50 ஏக்கர் எனவும் மற்றைய நிலமாயின் 25 ஏக்கர் எனவும் உச்ச வரம்பு நிர்ணயிக்கப்பட்டது.

இந்த நிலை இன்னும் தொடர்கிறது. மலையகத்தில் கல்வி ரீதியில் ஓரளவு வளர்ச்சியடைந்திருப்பதாக நாமே கூறிக்கொள்கின்றோம். ஆனால் நமக்கென உரிமைகோர ஒரு காணித்துண்டையேனும் சொந்தமாக வைத்திருக்க முடிகிறதா என்றால் இல்லையென்பதே உண்மையாகும்.

அன்றிலிருந்து இன்றுவரை தொழிலாளராகவே தோட்டக் கம்பனிகளையும் மாறிமாறி வரும் அரசாங்கங்களையுமே நம்பியிருக்க வேண்டிய நிலையிலேயே மலையகம் இருக்கிறது.

மூன்று நான்கு தலைமுறைகளாக வாழ்ந்து வரும் இந்த மக்களுக்காக குரல்கொடுக்கும் தொழிற்சங்க அரசியல் தலைமைகள் தமது இருப்புக்காகவும் வாக்கு வங்கிகளுக்காக மட்டுமே செயற்படுகின்றன.

இந்த நிலையில் இளைய சமூகத்தினர் இவ்விடயத்தில் கூடிய கரிசனையுடன் செயற்படுவது அவசியமாகும். இந்திய அரசின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்படும் வீட்டுத்திட்டத்தை தொடர்ந்து முன்னெடுக்கும் அதேவேளை தொழிலாளர் குடும்பமொன்றிற்கு ஏழு பேர்ச் காணியை ஒதுக்கி அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். தொழிலாளர்களுக்கு காணி வழங்கி சொந்த வீடுகளில் சுதந்திரமாக வாழ வழிவகுக்க வேண்டும்.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

SLIIT ACADEMY

பலதரப்பட்ட வாய்ப்புகளின் உலகத்தை நோக்கி ஒரு படி

உங்களது க.போ.த உயர்தர பரீட்சையின்
பிறகு SLIIT Academy யுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணை குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட Bedfordshire மற்றும் Liverpool John Moores பல்கலைக்கழகங்களுடன் தொடர்புடைய பலதரப்பட்ட இளங்கலை பட்ட படிப்பை நீங்கள் விரும்பியவாறு தொடரலாம்.

2022 மார்ச் உள்வாங்கல்

நிலுவையில் உள்ள க.பொ.த உயர்தர பரீட்சையின் முடிவுகளுடன் இப்போதே விண்ணப்பிக்கவும்

In partnership with LIVERPOOL JOHN MOORES UNIVERSITY

University of Bedfordshire

க.பொ.த உயர்தர பரீட்சையில் ஒன்று அல் லது இரண்டு தேர்ச்சிகளுடன், தகவல் தொழினுட்பம் / வணிகத்தில் வெளிநாட்டு பட்டம் ஒன்றை நீங்கள் பெறலாம்.

பட்ட நிகழ்ச்சித்திட்டங் கள் 3 வருடங்கள்

- பிஎஸ்சி (ஹானஸ்) கணினி அறிவியல் மற்றும் மென்பொருள் பொறியியல்
- பிஎஸ்சி (ஹானஸ்) கணினி வலையமைப்பு
- பிஏ (ஹானஸ்) வணிக முகாமைத்துவம
- பிஎஸ்சி (ஹானஸ்) மனிதவள முகாமைத்துவம UOB
- பிஇடிக்ஜி (ஹானஸ்) மின்னணு மற்றும் மின் பொறியியல் LJMU

குறைந்தபட்ச தகுதிகள்

தகவல் தொழில்நுட்பம் / வியாபார நீர்வாகம்
ஒரே அமர்வில் பெறப்பட்ட க.போ.த உயர்தர பரீட்சையில் குறைந்தபட்சம் ஒரு S தேர்ச்சி.

பொறியியல்
கணிதம், தொழில்நுட்பம் அல்லது உயிரியல் பாடங்களின் கீழ் க.போ.த உயர்தர பரீட்சையில் குறைந்தபட்சம் மூன்று S தேர்ச்சிகள். மூன்று தேர்ச்சிக்கு குறைவான மாணவர்கள் விடே தேர்வு பரீட்சைக்கு உட்படுத்தப்படலாம்.

தகுதி பரீட்சை

19 மார்ச் 2022
முற்பகல் 10 மணியிலிருந்து 11 வரை
13 ஆவது மாடி, BOC Merchant Tower,
28, செயிண்ட் மைக்கேல்ஸ் தெரு, கொழும்பு - 03

மேலதிக விபரங்களுக்கு : 0772 66 55 55

www.sliitacademy.lk @ sliitacademy@sliit.lk

onlinegraphic.lk

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
MINISTRY OF EDUCATION

கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு அலுவலர், நிகழ்ச்சித்திட்ட கணக்காளர் மற்றும் நிகழ்ச்சித்திட்ட அதிகாரி பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு

இடைநிலைக் கல்வித் துறை மேம்பாட்டுத் நிகழ்ச்சித்திட்டம் (SESIP)

கல்வி அமைச்சின் கீழ் செயற்படும் மேற்படி SESIP நிகழ்ச்சித்திட்டத்தின் துறைசார் கண்காணிப்பு மற்றும் தொழில்நுட்ப அனுசரணை பிரிவில் பின்வரும் பதவிகளுக்கு தகுதியும் அனுபவமும் உள்ள இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இடைநிலைக் கல்வித் துறை மேம்பாட்டுத் நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடக இலங்கையின் ஒட்டுமொத்த இடைநிலைக் கல்வித்துறையின் மறுசீரமைப்புக்கான அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு அனுசரணை வழங்கப்படுகின்றது. உயர் பொருளாதார ரீதியான பொருத்தப்பாடுள்ள விஞ்ஞானம், தொழில்நுட்பம், கணிதம் மற்றும் வணிகத் துறைகளின் பாடத்திட்டங்கள், கற்பித்தல் மற்றும் மதிப்பீட்டு முறைகளின் முறையான மறுசீரமைப்பு செய்தல் அதில் உள்ளடக்கியுள்ளது. கொவிட்-19 பெருந்தொற்றில் கற்றுக்கொண்ட பாடங்களை இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதோடு, டிஜிட்டல் மீடியா மற்றும் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் கற்றலுக்கு அனுசரணை வழங்ககின்றது. அதனூடாக கொவிட்-19 பாதிப்புகள் மற்றும் அதுபோன்ற எதிர்கால அனர்த்தங்களிலிருந்து மீள்வதற்கான கல்வி அமைப்பின் இயலுமையை இது மேம்படுத்தும்.

நிகழ்ச்சித்திட்ட கடன் ஒப்பந்தம் மற்றும் நிகழ்ச்சித்திட்ட அமுலாக்க ஆவணத்துக்கு (PID) ஏற்ப பங்குதார நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை கண்காணிப்பு செய்வதற்கான அனைத்து திட்டமிடல் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல், கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு அலுவலரால் மேற்கொள்ளப்படுவதோடு, ஆசிய அபிவிருத்தி வங்கி, கல்வி அமைச்சு, திறைசேரி / வெளிநாட்டு வள திணைக்களம் மற்றும் தேவையின் படி எனைய நிறுவனங்களுக்கு சமர்ப்பிக்க வேண்டிய அறிக்கைகள் தயாரிக்க வேண்டும்.

கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு அலுவலர் கடன் ஒப்பந்தம் மற்றும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்துக்கு (SESIP) அறிக்கையிடல் உள்ளிட்ட வருடாந்த பெறுபேற்றை அடிப்படையாகக் கொண்ட குறிகாட்டி (DLI) மற்றும் நிகழ்ச்சித் திட்ட அமுலாக்க திட்டத்தில் குறிப்பிட்ட குறிகாட்டிக்கு உரிய கால எல்லைக்குள் அடைந்து கொள்வதற்கு கல்வி அமைச்சு மற்றும் ஏனைய உரிய இராஜாங்க அமைச்சுகளின் உரிய அலகுகள் , தேசிய கல்வி நிறுவகம் (NIE), பரீட்சைகள் திணைக்களம் (DOE), கல்வி வெளியீட்டுத் திணைக்களம் (EPD) மற்றும் ஏனைய பலவித கல்வி நிறுவனங்கள், 09 மாகாண கல்வி அதிகார வலுக்கள் (PEAs), ஆசிய அபிவிருத்தி வங்கியின் தொழில்நுட்ப உதவி (TA) குழுவினர் மற்றும் நிகழ்ச்சித் திட்டத்தின் சுயாதீன சான்றுகைப்படுத்தும் முகவரகம் (IVA) என்பனவற்றுடன் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும். இதற்கு மேலும், விளைவு அடிப்படையிலான இலக்குகளை மீளாய்வு செய்தல் மற்றும் அடைந்து கொள்ளல் போன்றவற்றை அறிக்கையிடுவதற்கான ஏனைய தொடர்புடைய நிகழ்ச்சித் திட்ட செயற்பாடுகளுக்கு அமைய கண்காணிப்பு முறைமைகளை வடிவமைத்தல், பேணுதல், இற்றைப்படுத்தல் மேற்கொள்ள வேண்டும்.

நிகழ்ச்சித் திட்ட அமுலாக்க ஆவணம் மற்றும் கடன் ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட அனைத்து நிதி முகாமைத்துவம், கணக்காய்வு மற்றும் பெறுகை இலக்குகளை அடைய கல்வி அமைச்சு, சம்பந்தப்பட்ட இராஜாங்க அமைச்சுக்கள், தேசிய கல்வி நிறுவகம், பரீட்சைகள் திணைக்களம் மற்றும் பல்வேறு கல்வித் திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் கணக்குப் பிரிவு / அலகுகள் அத்துடன் 09 மாகாணங்களின் கல்வி அதிகாரிகளோடு இணைப்பாக்கம் செய்து நிதி அறிக்கைகள், ஆண்டு கணக்குகள், நிதி திரும்பப் பெறுவதற்கான விண்ணப்பங்களை தயாரித்தலானது நிகழ்ச்சித் திட்டக் கணக்காளரால் மேற்கொள்ளப்படுவதோடு நிகழ்ச்சித்திட்ட முகாமையாளருக்கு (SESIP) அறிக்கையிட வேண்டும்.

நிகழ்ச்சித் திட்ட அதிகாரியால் முதன்மையாக ஆங்கில மொழி மூல ஆவணமாக்கல் செயன்முறை மற்றும் வெளித்தரப்பு நிறுவனங்களுக்கு கடிதம் அனுப்புதல், முன்னேற்ற மீளாய்வு மற்றும் பங்குதாரர்களின் கூட்டங்களுக்கு அறிக்கையிடல் மற்றும் முன்வைத்தல் நிகழ்ச்சிகளுக்குரிய கடிதப் பரிமாற்றம் என்பன முன்னெடுப்பு செய்யப்பட வேண்டும். இதற்கு மேலதிகமாக, தேசிய நிகழ்ச்சித்திட்ட முகாமையாளரால் (SESIP) வழங்கப்படும் வேறு எந்தப் பணியையும் நிகழ்ச்சித்திட்ட அதிகாரி மேற்கொள்ள வேண்டும்.

பதவி	அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை	அனுமதிக்கப்பட்ட மட்டம்	தகுதிகள் மற்றும் அனுபவம்	வயது
கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு அலுவலர்	01	PS4 (வகை A)	1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையில் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்ட அடிப்படை பட்டம் அல்லது பட்டத்திற்கு சமமான தகுதியாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட துறையில் பெற்ற தகுதி அல்லது தகுதியைப் பெற்ற பிறகு குறைந்தபட்சம் 09 வருட அனுபவத்துடன் தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில் நிறுவனத்தில் இருந்து பெறப்பட்ட இணைப்பு உறுப்புரிமை / சமமான தொழில்முறை தகுதி	45-55 வயதுக்குள் இருக்க வேண்டும்
நிகழ்ச்சித் திட்ட கணக்காளர்	01	PS4 (வகை A)	2. நாடளாவிய ரீதியில் அரச சேவையில் III/II வகுப்பு அல்லது அதற்கு மேல் சம்பந்தப்பட்ட துறையில் சமமான பதவியில் உள்ள அதிகாரி மற்றும் வகுப்பு III/II பதவியில் குறைந்தபட்சம் 09 வருட அனுபவம்	
நிகழ்ச்சித் திட்ட அதிகாரி	01	PS6	ஆங்கிலம் மற்றும் சிங்களம் / தமிழ் உட்பட மூன்று (3) திறமை சித்தி பெற்று ஆறு (6) பாடங்களில் க.பொ.த (சா/த) பரீட்சையில் சித்தியடைந்திருப்பது ஆங்கிலத்திற்கான சிறந்த சித்தியை பெற்றிருப்பது முக்கியமானதாகும். மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் செயலாளர் கடமை தொடர்பாக பாடநெறி அல்லது பட்டயச் செயலாளர் பதவிக்கான பரீட்சைக்கு உரிய பெறுபேறுகளை பெற்றிருக்க வேண்டும். மற்றும் சம்பந்தப்பட்ட துறையில் குறைந்தபட்சம் 06 வருட அனுபவம்.	55 வயதுக்கு குறைவானதாக

அரச சேவை அலுவலர்கள் தற்காலிக இணைப்பு (முழு நேர விடுவிப்பு) அடிப்படையில் ஆட்சேர்க்கப்படுவதோடு அரசாங்க சேவைக்கு வெளியே உள்ள அலுவலர்கள் ஒப்பந்த அடிப்படையிலும் ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்கள். இந்த நியமனம் ஆரம்பத்தில் ஒரு வருட காலத்திற்கு வழங்கப்படுவதோடு வெற்றிகரமான செயல்பாட்டின் அடிப்படையில் சேவை நீட்டிப்பு வழங்கப்படும்.

தகுதி மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

விண்ணப்பதாரர்களால் தாமே தயாரித்த விண்ணப்பங்கள் பரீட்சையில் சுய விபர பதிவு விவரங்கள் சகிதம் உறவினர்கள் அல்லாத இருவரின் விபரம் மற்றும் கல்வி மற்றும் தொழில்முறைத் தகுதிகள் தொடர்பான சான்றிழ்களின் பிரதிகளோடு பதிவுத் தபாலில் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும். அது போல, அதன் ஸ்கேன் (scan) செய்யப்பட்ட பிரதிகள் மின்னஞ்சலில் அனுப்புதல் : யனளநஉ-யனஅகை;அழந.பழஎ.டம அல்லது இந்த முகவரிக்கு கொண்டுவந்து ஒப்படைக்க முடியும். விண்ணப்பங்களை ஒப்படைக்கும் இறுதித்திகதி 2022. மார்ச் 25 ஆகும்.

நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் (SESIP) மற்றும் விண்ணப்பிக்கப்படும் பதவி விண்ணப்பம் அனுப்பப்படும் கடிதவுறையில் இடது மேல் மூலையில் எழுதப்பட வேண்டும்.

பதவிக்காக விண்ணப்பிக்கும் அரசாங்க அல்லது மாகாண அரச சேவையின் அலுவலர்கள் தமது விண்ணப்பங்களை உரிய நிறுவன தலைவர் ஊடாக விண்ணப்பதாரி பூரண கால அடிப்படையில் விடுவிக்கப்பட முடியும், முடியாது என்பது தொடர்பாக அவரின் பரிந்துரையுடன் அனுப்பப்பட வேண்டும்.

பேராசிரியர் கே. கபில சீ.கே. பெரேரா
செயலாளர் கல்வி அமைச்சு
இசுறுபாய, பெலவத்த பத்தரமுல்ல

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

ஒதபியச

ஒளடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சு

ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான அழைப்பு (EOI)

அனுராதபுரம் ஒயாமடுவ 'தெயட்டகிருல' நடைபெற்ற வளவில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள மேற்கத்தைய ஒளடதங்களை உற்பத்தி செய்யும் உள்ளூர் முதலீட்டாளர்களுக்கு 'சுவசிரிபுர ஒளடத உற்பத்தி வலயம்' இற்குள் ஒளடத உற்பத்திக்காக முதலீடு செய்வதற்கு ஆர்வம் காட்டுகின்ற தகைமையான சாராரிடமிருந்து ஆர்வத்தை வெளிப்படுத்தல் ஆலோசனைகளுக்காக ஒளடத உற்பத்தி வழங்கல்கள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சு அழைப்பு விடுக்கின்றது.

ஆர்வம் காட்டுகின்றவர்களுக்கு தமது ஆலோசனைகளை பொறியிடப்பட்ட உறையில் இட்டு செயலாளர், ஒளடத உற்பத்தி வழங்கல்கள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சு, 'ஒசுபியச' இல. 464/A, டி. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு -10 (ர்ஞ கட்டிடம் - 5ஆம் மாடி) என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது நேரில் கையளிப்பதன் மூலம் 2022 மார்ச் 28 மு.ப. 10.30 இற்கு முன் கிடைக்கச் செய்தல் வேண்டும். குறித்த உறையின் இடது பக்க மேல் மூலையில் 'சுவசிரிபுர ஒளடத உற்பத்தி வலயத்திற்குள் ஒளடத உற்பத்திக்காக ஆர்வத்தை வெளிப்படுத்துதல்' என்று குறிப்பிடுதல் வேண்டும்.

செயலாளர்,
ஒளடத உற்பத்தி, வழங்கல்கள் மற்றும்
ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சு,
'ஒசுபியச',
இல. 464/A, டி. பி. ஜாயா மாவத்த,
கொழும்பு -10.

(HQ கட்டிடம் - 5ஆம் மாடி).
தொலைபேசி: +94 112103219
மின்னஞ்சல்: psrp.scc@health.gov.lk

முன்மொழிவுகளுக்கான அழைப்பு

தேசிய அருங்காட்சியக திணைக்களம்

ஒல்லாந்த அருங்காட்சியக மீள்ஒழுங்கமைத்தல் செயற்றிட்ட உத்தேசிக்கப்பட்ட கண்காட்சிக்கான உள்ளக வடிவமைப்பு சேவைகள் வழங்கல், விலைமனுக்கோரல் ஆவணங்கள் மற்றும் ஒப்பந்த முகாமைத்துவத்தை தயாரித்தல்

1. மேலேயுள்ள பணிக்காக தகுதியுள்ள உசாத்துணையாளர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட முன்மொழிவுகளை தேசிய அருங்காட்சியக திணைக்களமானது அழைக்கின்றது.
2. முன்மொழிவுகள் இலங்கையின் தாபிக்கப்பட்டுள்ள தகைமையுள்ள உசாத்துணை நிறுவனம் ஒன்றிலிருந்து சமர்ப்பிக்கப்படலாம். உசாத்துணை நிறுவனமானது ஆகக் குறைந்தது 5 வருட அனுபவத்தை நிகரான தன்மையுடைய வேலைகளில் கொண்டுள்ளதாகவும் கடந்த 5 வருடங்களில் இரு (2) நிகரான தன்மையுடைய உசாத்துணைகளை சித்திகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
3. முன்மொழிவு ஆவணங்கள் இலவசமாக பரீட்சிக்கப்படலாமென்பதுடன் ஆர்வமுள்ள உசாத்துணை நிறுவனங்கள் 2022 மார்ச் 14 ஆம் திகதியிலிருந்து 2022 ஏப்ரல் 04 ஆம் திகதி வரையும் அலுவலக நாட்களில் மீளளிக்கப்படாத கட்டணமாக 2,000 இலங்கை ரூபாவை மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் செலுத்திய பின்னர், கொழும்பு-07, ஸ்ரீமத் மார்க்கஸ் பெர்ணாண்டோ மாவத்தை, 53 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய அருங்காட்சியக திணைக்கள கணக்கிடல் பிரிவிலிருந்து முன்மொழிவு ஆவணங்களை கொள்வனவு செய்யலாம்.
4. முத்திரையிடப்பட்ட முன்மொழிவுகள் பிரதித் தொகுதியொன்றுடன் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **'Providing Interior Design Services, preparation of Bidding Documents and Contract Management for the proposed Exhibition re-arrangement Project of Dutch Museum"** என குறிப்பிடப்பட்டு பதிவுத் தபாலில் அல்லது நேரடியாக கொழும்பு-07, ஸ்ரீமத் மார்க்கஸ் பெர்ணாண்டோ மாவத்தை, 53 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய அருங்காட்சியக திணைக்கள கணக்கிடல் பிரிவு அலுவலகத்தில் ஒப்படைக்கப்படல் வேண்டும். உசாத்துணையாளர்கள் முன்மொழிவுகளை 2022 ஏப்ரல் 5 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதுடன் முன்மொழிவுகள் அவற்றை ஏற்றுக் கொள்ளலை முடிய பின்னர் விரைவாகவே திறக்கப்படும்.
5. உசாத்துணையாளர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் நிதியிடல் முன்மொழிவுகளை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். தேசிய அருங்காட்சியக திணைக்கள உசாத்துணையாளர்கள் பெறுகைக் குழுத் தலைவர் நிதியிடல் முன்மொழிவுகளை திறக்கும் நேரம் மற்றும் திகதி ஆகியவற்றை அறிவிப்பார்.
6. மேலதிக விபரங்களுக்கு, தயவு செய்து 011-2667750 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக கலாச்சாரத்திற்கான பணிப்பாளர் திரு. செனரத் விக்கிரமசிங்ஹவுடன் தொடர்பு கொள்ளவும்.
7. 2022.04.01 ஆம் திகதியன்று விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும்.

தலைவர்,
திணைக்கள உசாத்துணையாளர்கள் பெறுகைக் குழு,
தேசிய அருங்காட்சியக திணைக்களம்,
இல. 53, ஸ்ரீமத் மார்க்கஸ் பெர்ணாண்டோ மாவத்தை,
கொழும்பு-07.

இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்
மிஹிந்தலை

பதவி வெற்றிடங்கள்

பின்வரும் பீடங்களுக்காக நிரந்தர கல்விசார் மற்றும் கல்விசார் ஆதரவு அலுவலர்களிடமிருந்து பொருத்தமான தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்களை இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகமானது ஏற்றுக் கொள்ளும்.

1. மருத்துவம் மற்றும் இணைந்த விஞ்ஞானங்கள் பீடம்.
2. முகாமைத்துவ கற்கைநெறிகள் பீடம்
3. பிரயோக விஞ்ஞானங்கள் பீடம்
4. விவசாய பீடம்
5. தொழில்நுட்பவியல் பீடம்
6. பிரதான நூலகம்.

விண்ணப்பங்கள்:
http://www.rjt.ac.lk/news/?cat=2 என்ற பல்கலைக்கழக இணையதளத்திலிருந்து விண்ணப்பப்படிவங்கள் மற்றும் உரித்தான தகவலை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இணையதளத்தில் வழங்கப்பட்டுள்ள உருமாதிரியில் மாத்திரமே விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும்.
அரச சேவை, கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் நிரந்தர பதவிநிலை விண்ணப்பதாரிகள் அவர்களின் விண்ணப்பங்களை உரித்தான நிறுவனங்களின் தலைவர்களூடாகவே அனுப்புதல் வேண்டும்.

கல்விசார்/ தொழில்சார், சேவை சான்றிதழ்கள் போன்றவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட நிழற்படபிரதிகள் விண்ணப்பத்துடன் அனுப்பப்படல் வேண்டும்.

விதிக்கப்பட்ட படிவங்களில் உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் உரித்தான ஆவணங்களின் சான்றளிக்கப்பட்ட பிரதிகள் (பட்டப்படிப்பு சான்றிதழ்கள், பட்டப்படிப்பின் விபரமான சான்றிதழ், சேவை சான்றிதழ்கள் போன்றவை) ஆகியன பதிவுத் தபாலில் 2022 ஏப்ரல் 11 ஆம் திகதியன்று பி.ப. 4.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பிரதி பதிவாளர்/ கல்விசார் தாபனக் கிளை, இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம், மிஹிந்தலை என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். மூடும் திகதிக்கு பின்னர் பெற்றுக் கொள்ளும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பங்களின் மூடும் திகதிக்கு பின்னர், எந்தவொரு விண்ணப்பத்தின் ஆதரவிற்காக அனுப்பப்படும் மேலதிக ஆவணமாக்கல் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

விண்ணப்பங்களை மூடும் திகதியன்று அதற்கு முன்னராக பதவியின் ஒவ்வொரு அம்சத்திற்குமான தேவைப்படும் தகைமைகளை விண்ணப்பதாரிகள் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள், ஆதரவு வழங்கப்படாத ஆவணங்களின் விண்ணப்பங்கள் (பட்டப்படிப்பு சான்றிதழ்கள், பட்டப் படிப்பு விபரமான சான்றிதழ்கள், சேவை சான்றிதழ்கள் போன்றவை) மற்றும் மூடும் திகதிக்கு பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். காணாமற் போன அல்லது தபாலில் பிந்திவரும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

தகுதியுள்ள விண்ணப்பதாரிகளை தெரிவு செய்யவும் அப்படியான வர்களை மாத்திரம் நேர்முகப்பரீட்சைக்கு அழைப்பதற்கான உரிமையை பல்கலைக்கழகமானது கொண்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு http://www.rjt.ac.lk/news/?cat=2 என்ற பல்கலைக்கழக இணையதளத்தை பார்வையிடவும்.

பதில் கடமையாற்றும் பதிவாளர்,
இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்,
மிஹிந்தலை.
திகதி: 13.3.2022

விலைமனுக்களுக்கான அழைப்பு

ராகம, வெலிசர வர்த்தக வெடி பொருட்கள், துப்பாக்கிகள் மற்றும் ரவைகளை கொள்வனவு செய்யும் பிரிவிற்கு ரவைகளைப் பெற்றுக்கொள்ளல்

1. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வழங்குநர்களிடமிருந்து வர்த்தக வெடி பொருட்கள், துப்பாக்கிகள் மற்றும் ரவைகளைக் கொள்வனவு செய்யும் பிரிவிற்கு (CEFAP Unit) பின்வரும் வெடி பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்காக விலைமனுப் படிவத்தின் மூன்றாம் பிரிவில் (Section III) குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வழங்குநர்களிடமிருந்து மட்டும் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

ஒப்பந்த இல.

CEFAP/PRT/09/2021

a.	**Cartridges 12 SG**	**-**	**250,000 No's**
b.	**Cartridges 12 / 4**	**-**	**200,000 No's**
c.	**Cartridges 16 SG**	**-**	**9,000 No's**
d.	**Cartridges 16 / 4**	**-**	**8,000 No's**
e.	**.177 Air Pallets**	**-**	**500,000 No's**

2. விலைக்கோரல் சர்வதேச போட்டி விலைக்கோரல் நடைமுறைக்கமைய செயற்படுத்தப்படும்.
3. இதில் ஆர்வம் காட்டும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வழங்குநர்கள் தேவையான மேலதிகத் தகவல்களை வெலிசர, ராகமயில் அமைந்துள்ள வர்த்தக வெடிபொருட்கள், துப்பாக்கிகள் மற்றும் ரவைகளைக் கொள்வனவு செய்யும் பிரிவின் கொள்வனவு அதிகாரியிடமிருந்து தொலைபேசி இல. 0112958227 அல்லது வர்த்தக வெடிபொருட்கள், துப்பாக்கிகள் மற்றும் ரவைகளைக் கொள்வனவு செய்யும் பிரிவின் பணிப்பாளர் (தொலைபேசி இல. 0112955514) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
4. ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் வெவ்வேறாக விலைமனுக்களைக் கொள்வனவு செய்தல் வேண்டும்.
5. ராகம, வெலிசர, வர்த்தக வெடிபொருட்கள், துப்பாக்கிகள் மற்றும் ரவைகளைக் கொள்வனவு செய்யும் பிரிவின் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான கோரிக்கையொன்றைச் செய்வதன் பேரில் ஒரு விலைமனுவிற்கு மீளளிக்கப்படாத 4500.00 ரூபா வீதம் கட்டணத்தை ரொக்கப் பணமாகச் செலுத்தி 2022 மார்ச் மாதம் 14ஆம் திகதி முதல் 2022 மே மாதம் 04ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை விலைமனு ஆவணங்களைக் கொள்வனவு செய்யலாம். (வெளிநாட்டு வழங்குநர்களால் இதற்காக உள்நாட்டு முகவர்கள் நியமிக்கப்படல் வேண்டும்)
6. விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 120 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாகும் தன்மையில் இருத்தல் வேண்டும் என்பதுடன் சகல விலைக்கோரலுக்கும் நிபந்தனையற்ற விலைமனுப் பிணை முறியொன்றைச் (Bid Bond) சமர்ப்பித்தல் வேண்டும். குறித்த விலைமனுப் பிணை முறி விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 150 நாட்கள் வரையில் செல்லுபடியாதல் வேண்டும். (அவ்வாறு வழங்கப்படும் விலைமனுப் பிணை முறியை உள்நாட்டு வர்த்தக வங்கியொன்றின் மூலமாக வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்)
7. தருவித்தற் கட்டளை படிவம் கையளிக்கப்பட்டவுடன் இயைபுடைய வழங்குநரால் வரியின்றி விலைக்கோரல் பெறுமதியின் 10% பெறுமிக்குச் சமமான நிபந்தனையற்ற செயலாற்றுகை பிணை முறியொன்று (Performance Bond) வழங்குதல் வேண்டும்.
8. 2022 மே மாதம் 05ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை கொழும்பு-01, கொடிகஹ வீதியிலுள்ள இலங்கை கடற்படை தலைமையகத்தின் கேள்விச் சபைத் தலைவருக்கு இரு நகல்களிலான முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை ஒப்படைக்கலாம் அல்லது அம்முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கடற்படை தலைமையத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம் என்பதுடன் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு முடிவடைந்த உடனடுத்து விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் கலந்து கொள்ளும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் அவைகள் திறக்கப்படும்.
9. இந்த விலைக்கோரல் தொடர்பான மேலதிக விபரங்களை கடற்படையில் www.navy.lk எனும் இணையதளத்தின் ஊடாக பெற்றுக்கொள்ளலாம்.

பணிப்பாளர்,
வர்த்தக வெடிபொருட்கள், துப்பாக்கிகள் மற்றும் ரவைகளைக் கொள்வனவு செய்யும் பிரிவு,
அரசாங்க வெடிமருந்துகள் களஞ்சியசாலை,
வெலிசர, ராகம.

பெறுகை அறிவித்தல்

பெருந்தோட்ட அமைச்சு

நிறுவனத் தோட்டங்களின் மறுசீரமைப்பு, தேயிலை மற்றும் இறப்பர் தோட்டம் சார்ந்த பயிர்ச்செய்கை மற்றும் தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்துதல் மற்றும் தேயிலை மற்றும் இறப்பர் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு

தேயிலை சிறு பற்றுநில அபிவிருத்தி அதிகார சபை

உயர்ந்த நிழல் கன்றுகளை கொள்வனவு செய்வதற்கான விலைக்கோரல் – 2022ஆம் வருடம்

1. அல்பீசியா முலுக்கானன் (Albizzia Moluecana) - கன்றுகளின் தேவைப்பாடு - 950,000
2. கிரவெலியா ரொபுஸ்டா (Grevilliea Robusta) - கன்றுகளின் தேவைப்பாடு - 250,000

தேயிலை சிறு பற்றுநில அபிவிருத்தி அதிகார சபையால் தேயிலைக் காணிகளில் அதியுச்ச பொருளாதார விளைச்சலைப் பெற்றுக்கொள்வதற்காக உயர்ந்த நிழல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உயர்ந்த நிழல் கன்றுகளை பின்வரும் வகையில் கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிடப்பட்ட உயர்ந்த நிழல் கன்றுகளை மேற்குறிப்பிடப்பட்ட அளவில் கொள்வனவு செய்வதற்காக உயர்ந்த நிழல் கன்றுகளை வழங்குவதற்கு ஆர்வம் காட்டும் தரப்பினரிடமிருந்து விலைகள் கோரப்படுகின்றன. இதன் பிரகாரம் பின்வரும் சகல தேவைப்பாடுகளும் பூர்த்தியாகும் வகையில் தம்மால் தயாரித்துக்கொள்ளப்பட்ட மாதிரிப் படிவத்தின் மூலம் விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

1. 9x5 / 7x5 அங்குலத் தொட்டியாகவும் 150 கேஜ் பொலித்தீன் உறையாகவுமிருத்தல் வேண்டும்.
2. வளருவதற்குப் பொருத்தமான மண் கலவையுடன் தொட்டி நிரப்பப்பட்டிருத்தல் வேண்டும்.
3. கன்று குறைந்தபட்சம் 08-10 அங்குலம் வளர்ந்திருக்க வேண்டும்.
4. நோய் பீடைகள் அற்றதாகவிருத்தல் வேண்டும்.
5. போக்குவரத்து செய்யவேண்டிய இடத்திற்கு விலைமனுக்களை வெவ்வேறாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(காலி, மாத்தறை, களுத்துறை, இரத்தினபுரி, கேகாலை, கண்டி, நுவரெலியா, பண்டாரவளை எனும் இடங்களுக்கு போக்குவரத்து செய்தல் வேண்டும் என்பதுடன் அந்தப் பிரதேசத்திற்கான போக்குவரத்திற்காக வெவ்வேறாக விலைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்)

மேலே காட்டப்பட்டுள்ள விடயங்களின் பிரகாரம் விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். விலைமனுக்கள் 2022-03-13ஆம் திகதி 2022-03-28ஆம் திகதி வரை விலைமனுக்கள் கோரப்படும். சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்களை 2022-03-28ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட உறையினுள் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் உயர்ந்த நிழல் கன்றுகளுக்கான விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் - 2022 எனக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது பின்வரும் முகவரியில் அமைந்துள்ள அதிகார சபையின் சேவை பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும் என்பதுடன் விலைமனுக்கள் 2022-03-28ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்குத் திறக்கப்படும்.

விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் போது விலைக்கோரல் பிணை முறியாக மீளளிக்கப்படும் 5,000.00 ரூபா தொகையை இந்த அதிகார சபையின் நிதிப் பிரிவிற்கு செலுத்தி விலைமனுக்களுடன் அந்தப் பற்றுச்சீட்டின் இரண்டாம் பிரதியை இணைத்து அனுப்புதல் வேண்டும். மேலும் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டதன் பின் வெற்றிகரமான விலைமனுதாரர் இந்த அதிகார சபையுடன் முறையான உடன்படிக்கை ஒன்றுக்கு வருதல் வேண்டும் என்பதுடன் அதிகார சபையினால் அறிவிக்கப்படும் அளவின் பிரகாரம் மேற்படி கன்றுகளுக்கான கட்டளையை வழங்குதல் வேண்டும். மேலதிக விசாரனைகளை 076-3598695/011-7909039 எனும் தொலைபேசி இலக்கத்தில் விரிவாக்கல் உதவி முகாமையாளரைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்,
தேயிலை சிறு பற்றுநில அபிவிருத்தி அதிகார சபை,
இல. 70, பாராளுமன்ற வீதி, பெலவத்த,
பத்தரமுல்ல.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

	NVQ 05	NVQ 06
வயது	**17-27 வயது**	**17-27 வயது**
கல்வித் தகைமைகள்	**க.பொ.த சாதாரண தரம்** • இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு (06) பாடங்களில் சிங்களம் / தமிழ்மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுடன் மேலும் ஒரு பாடத்தில் கட்டாயமாக திறமைச் சித்தி (C) அல்லது அதை விட உயர்வான சித்தி அடைந்திருத்தல் வேண்டும். • இரண்டு தடவைகளில் அல்லது அதற்கு மேற்பட்ட தடவைகளில் ஆங்கிலப் பாடத்திற்கு குறைந்தது சாதாரண சித்தி (S) பெற்றிருத்தல் வேண்டும். **க.பொ.த உயர் தரம்** • உயிரியல் பிரிவில் தோற்றி அதில் ஆகக்குறைந்தது ஒரு பாடத்தில் சாதாரண சித்தி (S) ல் பெற்றிருத்தல் வேண்டும். • தொழில்நுட்பவியல் துறையில் கல்வி பயின்று உயிரியல் தொழில்நுட்பம் / பொறியியல் தொழில்நுட்பம், தொழில்நுட்ப துறைக்கான விஞ்ஞானம் விவசாயம் ஆகிய பாடங்களுக்கு தோற்றி அதில் குறைந்தது ஒரு பாடத்திலேனும் சாதாரண சித்தி (S) பெற்றிருத்தல் வேண்டும். • **NVQ 4 சான்றிதழிற்கு** க.பொ.த சாதாரண தர தகைமையுடன் விவசாயம் தொடர்பான NVQ 4 சான்றிதழிற்கு க.பொ.த உயர் தரத்தில் சித்தியடைந்திருத்தல் கட்டாயம் இல்லை	**க.பொ.த சாதாரண தரம்** • இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். சிங்களம் / தமிழ்மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுடன் மேலும் ஒரு பாடத்தில் கட்டாயமாக திறமைச் சித்தி அல்லது அதை விட உயர்வான சித்தி அடைந்திருத்தல் வேண்டும். • இரண்டு தடவைகளில் அல்லது அதற்கு மேற்பட்ட தடவைகளில் ஆங்கிலப் பாடத்திற்கு குறைந்தது சாதாரண சித்தி (S) பெற்றிருத்தல் வேண்டும். **க.பொ.த உயர் தரம்** • உயிரியல் பிரிவில் தோற்றி அதில் குறைந்தது சாதாரண சித்தி (S) 03 இனை ஒரே முறையில் பெற்றிருத்தல் வேண்டும். • தொழில்நுட்பவியல் துறையில் கல்வி பயின்று உயிரியல் தொழில்நுட்பம் / பொறியியல் தொழில்நுட்பம், தொழில்நுட்ப துறைக்கான விஞ்ஞானம், விவசாயம் ஆகிய மூன்று பாடங்களுக்கு தோற்றி அதில் ஒரே முறையில் மூன்று பாடங்களிலும் சாதாரண சித்தி (S) பெற்றிருத்தல் வேண்டும்.
விண்ணப்பப்படிவங்கள் கோரல்	**2022.04 முதல் வாரம் முதல்**	**2022.03.04 முதல் 2022.04.04 வரை**
உயர் கல்வி வாய்ப்பு	• விவசாயக் கல்லூரிகளில் • தொழிற்துறை தொழிநுட்ப பல்கலைக் கழகங்களில் (NVQ 07) • உள்நாட்டு பல்கலைக் கழகங்களில் • வெளிநாட்டு பல்கலைக் கழகங்களில்	• தொழிற்துறை தொழிநுட்ப பல்கலைக் கழகங்களில் (NVQ 07) • உள்நாட்டு பல்கலைக் கழகங்களில் • வெளிநாட்டு பல்கலைக் கழகங்களில்
தொழில் வாய்ப்புகள்	• விவசாயத் திணைக்களம் உள்ளிட்ட அரச நிறுவனங்களில் • அரச சார்பற்ற, பகுதி அரச நிறுவனங்களில் • தனியார் நிறுவனங்களில் • வெளிநாடுகளில் **மேற்பார்வையாளர் மட்டத்தில் தொழில் வாய்ப்புகள்**	• விவசாயத் திணைக்களம் உள்ளிட்ட அரச நிறுவனங்களில் • அரச சார்பற்ற, பகுதி அரச நிறுவனங்களில் • வெளிநாடுகளில் • தனியார் நிறுவனங்களில் **மத்திய முகாமைத்துவ மட்டத்தில் தொழில் வாய்ப்புகள்**
பாடநெறியை கற்பிக்கும் பாடசாலைகள்	❖ அநுராதபுரம் - அநுராதபுரம் மாவட்டம் ❖ லபுதுவை - காலி மாவட்டம் ❖ பிபிலை - மொணராகலை மாவட்டம் ❖ பாலமுனை - அம்பாரை மாவட்டம் ❖ பரந்தன் - கிளிநொச்சி மாவட்டம் ❖ வாரியபெல - குருணாகலை மாவட்டம்	❖ அகுனுகொலபெரஸ்ஸ - அம்பந்தோட்டை மாவட்டம் ❖ கரபிஞ்ச - இரத்தினபுரி மாவட்டம் ❖ குண்டசாலை - கண்டி மாவட்டம் ❖ பெல்வெகரா - மாத்தலை மாவட்டம் ❖ வவுனியா - வவுனியா மாவட்டம்
பாடநெறி நடாத்தப்படும் காலம்	**1 1/2 வருடங்கள்**	**2 1/2 வருடங்கள்**

மேலதிக விபரங்களுக்கு : கல்விப் பிரிவு, விரிவாக்கம் மற்றும் பயிற்சி மையம் விவசாயத் திணைக்களம்
081-2 388 340, 081-2 388 341

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

டொலர் விலை அதிகரிப்பு தந்திருக்கும் பொருளாதார அதிர்ச்சி!

கடந்த வாரம் இலங்கைப் பொருளாதாரத்திற்கு சோதனை மிக்க ஒரு வாரமாக அமைந்தது. நாட்டில் தொடர்ச்சியாக ஏற்பட்டிருந்த பெற்றோல், டீசல், எரிவாயு போன்ற எரிபொருள்கள் மற்றும் பால்மா உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களுக்கான தட்டுப்பாடுகள் தொடர்ச்சியாக நீடித்திருந்த அதேவேளை இவற்றைப் பெற்றுக்கொள்ள மக்கள் நீண்ட வரிசைகளில் காத்திருக்கும் நிலைமையும் தொடர்ந்தது.

அதேவேளை நாட்டில் எரிபொருள் நெருக்கடி காரணமாக மின் வெட்டு தொடர்ந்து செல்லுகிறது. டொலருக்கு எதிரான ரூபாவின் பெறுமதியை செயற்கையான 203 ரூபா என்ற மட்டத்தில் கடந்த ஒருவருட காலமாக கட்டிவைத்திருந்த மத்திய வங்கி திடீரென அதனை அவிழ்த்துவிட்டு 230 ரூபா உச்ச எல்லைக்கு உட்பட்டு ரூபாவின் பெறுமதி சந்தையில் கேள்வி நிரம்பல் சக்திகளுக்கு அமைய நிர்ணயிக்கப்படுமென அறிவித்தது.

அதாவது பட்டினி போட்டு கட்டி வைத்திருந்த ஒரு எருதை அவிழ்த்து விட்டால் என்ன நடக்குமோ அதற்கொப்பான நடவடிக்கை சந்தையில் அவதானிக்கப்பட்டது. டொலரின் பெறுமதி எகிறிச் சென்று 260 ரூபாவாக அதிகரித்தது. 230 ரூபா உச்ச எல்லை மத்திய வங்கியினால் நிர்ணயிக்கப்பட்ட போதிலும் விலை அதனை மீறிச் சென்ற போது அதனைத் தடுக்கும் வல்லமை வங்கிக்கு இல்லை.

ஒவ்வொரு வணிக வங்கியும் வெவ்வேறு நாணய மாற்று வீதங்களைப் பின்பற்றியமை கடந்த வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமை ஆகிய வேலை நாட்களில் அவதானிக்கப்பட்டது. அது சந்தையில் தளம்பலான நிலையையும் நிச்சயமற்ற தன்மையையும் ஏற்படுத்தியது.

எதிர்வரும் வாரநாட்களில் இடம்பெறும் டொலர் உட்பாய்ச்சல்கள் மற்றும் வெளிப்பாய்ச்சல்களின் அளவைப் பொறுத்து டொலரின் விலையில் மாற்றங்கள் ஏற்பட்டு சந்தை ஒரு நிலைத்த தன்மைக்கு திரும்பக் கூடும். ஆனால் முன்னறிவிக்கப்படாத இந்த நடவடிக்கை நடைபெறக் கூடுமென பலரால் எதிர்வு கூறப்பட்டிருந்த போதிலும் பொருளாதாரத்தில் மின்சார அதிர்ச்சி ஏற்பட்டது போன்ற நிலையை ஏற்படுத்தியது.

பெற்றோல் மற்றும் டீசல் என்பவற்றின் விலைகள் IOC நிறுவனத்தால் ஏற்கெனவே அதிகரிக்கப்பட்டிருந்த போதிலும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் விலைகளை அதிகரிக்கவில்லை. அதனால் கடந்த வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமை CPC எரிபொருள் நிரப்பு நிலையங்களின் முன் வாகனங்கள் மிக நீண்ட வரிசைகளில் காத்து நின்றன.

ஆனால் வெள்ளியன்று நள்ளிரவிலிருந்து எரிபொருள் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. ஒரு லீற்றர் 92 ஒக்டேன் பெற்றோலின் விலை 254 ரூபாவாக 77 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. டீசலின் விலை லீட்டர் ஒன்று 55 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டு 176 ரூபாவாக விற்கப்படுகிறது. வெகு விரைவில் எரிவாயுவின் விலைகளும் அதிகரிக்கப்படலாம்.

டொலரின் விலை அதிகரிப்பும் உக்ரேன் ரஷ்ய மோதலும் உலக எரிபொருள் விலையை ஒரு பீப்பாய் மசகெண்ணெய் 106 அமெரிக்க டொலர்கள் வரை அதிகரித்துள்ள காரணத்தால் எரிபொருள் விலைகள் உயர்த்தப்படுவதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் உள்நாட்டு எரிபொருள் விலையில் அரசாங்கம் அறவிடும் வரிகளும் முக்கியமான சதவீதம் என்பதையும் கவனத்திற் கொள்ள வேண்டும். மறுபுறம் மிக நீண்டகாலமாக ஒரு லீட்டர் பெற்றோலின் விலை 117 ரூபாவாக இருந்து வந்தது.

இப்போது ஏற்பட்டுள்ள அதிகரிப்பின்படி நோக்குமிடத்து மிகக் குறுகிய காலத்திற்குள்ளாக அதன் விலை 117 சதவீதத்தினால் இரு மடங்கிற்கும் அதிகமான உயர்ந்துள்ளது. எரிபொருள் விலை அதிகரிப்பும் டொலரின் விலை அதிகரிப்பும் ஒன்றிணைந்து பொருளாதாரத்தில் அதிர்ச்சி அலைகளை உருவாக்கியுள்ளன. உடனடியாகவே எல்லாப் பொருள்களின் விலைகளும் அதிகரித்துள்ளன.

கோதுமை மாவின் விலை 30 தொடக்கம் 45 ரூபாவால் அதிகரிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது. ஒரு இறாத்தல் பாணின் விலை 30 ரூபாவாலும் பேக்கரி உற்பத்திகள் 10 ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளன. மருந்துகளின் விலைகள் 29 சதவீதத்தால் அதிகரிக்கப்படுவதாகவும் ஒரு சோற்றுப்பார்சலின் விலை 20 ரூபாவினாலும் குறைந்தபட்ச பஸ் கட்டணங்கள் 35 ரூபாவாகவும் குறைந்த பட்ச முச்சக்கர வண்டிக் கட்டணங்கள் 80 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

மின்சாரக் கட்டணங்களும் வெகு விரைவில் அதிகரிக்கப்படுவதற்கான எல்லாச் சாத்தியங்களும் உள்ளன. மறுபுறம் ஏற்கெனவே இறக்குமதி செய்யப்பட்டு களஞ்சியங்களில் வைக்கப்பட்டுள்ள பொருள்களின் விலைகளையும் அதிகரித்து சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கொள்ளை இலாபம் பார்க்கும் நோக்கில் மிகப்பெரிய இறக்குமதியாளர்கள் கடந்த வெள்ளியன்று கொள்வனவுக் கட்டளைகளை பெறுவதில் தயக்கம் காட்டினர். ஏற்கெனவே இறக்குமதி செய்யப்பட்டுள்ள பொருள்களின் விலை அதிகரிப்பதை தடுக்க அரசாங்கம் எதையும் செய்ததாகத் தெரியவில்லை. தவித்த முயல் அடிக்கும் இந்தக் கூட்டம் களேபரமான இந்த சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்திக் கொள்ள முனைகிறது.

நாட்டில் ஏற்பட்டுள்ள இந்த நிச்சயமற்ற நிலை காரணமாக மக்களின் வருமானம் அதிகரிக்காத நிலையில் முன்னர் 100 ரூபாவைக் கொண்டு கொள்வனவு செய்த பொருள்கள் சேவைகளை 160 ரூபாவுக்கு மேல் செலவு செய்து கொள்வனவு செய்ய வேண்டிய கட்டாய சூழல் தோன்றியுள்ளது.

வேறு வகையில் கூறுவதானால் இப்போதைய பொருளாதார அதிர்ச்சி மக்களின் மெய் வருமானத்தை அரைவாசிக்கும் மேலாகக் குறைத்து விட்டிருக்கிறது. இது மக்களின் வாழ்க்கைத்தரத்தில் மிக மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தும். குறிப்பாக இலகுவில் பாதிக்கப்படும் நிலையில் உள்ள முதியவர்கள் பெண்கள் குறைந்த வருமானம் பெறும் விளிம்பு நிலையில் உள்ள மக்களின் வாழ்க்கை கேள்விக்குறியாக மாறும்.

நிரந்தர வருமானம் பெறும் நடுத்தட்டு மக்கள் தமது அன்றாட செலவுகளை செய்து தமது சமூக அந்தஸ்தைப் பேணிச் செல்வதில் மிகப்பெரிய பிரச்சினைகளை எதிர் நோக்குவர். இதனால் அத்தியாவசிய தேவைகளான உணவு போன்றவற்றை குறைத்து நுகர்வர். எனினும் மிக அத்தியாவசியமான சேவை வழங்கும் வைத்தியர்கள் மற்றும் வக்கீல்கள் போன்றோரும் எந்திரிகள் தொழினுட்பவியலாளர்கள் போன்ற சிறப்புச் சேவை வழங்குநர்களும் இந்நிலைமையினால் அதிக இலாபம் உழைக்கலாம்.

ஏற்கெனவே மருந்துப் பொருள்களின் விலைகளை 29 சதவீதம் அதிகரிப்பதற்கு ஆலோசகைள் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில் மருத்துவ சேவைக் கட்டணங்களும் பெரியளவில் உயர்வதற்கான சாத்தியங்கள் உண்டு. கட்டடப்பொருள்களின் விலைகள் ஏற்கெனவே மலை போல் உயர்ந்து விட்டன. தற்போது ஏற்பட்டுள்ள விலை அதிர்ச்சியினால் அவை மேலும் கட்டுக்கடங்காமல் அதிகரித்துச் செல்கின்றன. ஒரு சாதாரண குடிமகனால் தனது தலைக்கு மேல் ஒரு நிழற்குடையை அமைத்துக் கொள்ள முடியாத ஒரு அவலச் சூழல் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் மக்கள் செய்வதறியாது கைகளைப் பிசைந்து கொண்டு நிற்கின்றனர் கோவிட் வந்தது. உலக சந்தையில் எண்ணெய் விலை அதிகரித்தது அதற்கு நாம் என்ன செய்வது என்று அரசியல் வாதிகள் காரணங்கூறுகின்றனர். ஆனால் செய்ய வேண்டியதை செய்ய வேண்டிய நேரத்தில் செய்யாமல் விட்டு பொருளாதாரத்தில் அதிர்ச்சி ஏற்பட அனுமதித்தமை யாருடைய குறைபாடு என்பதையும் தேடிப்பார்ப்பது நன்று.

பட்டினி போட்டு கட்டி வைத்திருந்த ஒரு எருதை அவிழ்த்து விட்டால் என்ன நடக்குமோ அதற்கொப்பான நடவடிக்கை சந்தையில் அவதானிக்கப்பட்டது. டொலரின் பெறுமதி எகிறிச் சென்று 260 ரூபாவாக அதிகரித்தது. 230 ரூபா உச்ச எல்லை மத்திய வங்கியினால் நிர்ணயிக்கப்பட்ட போதிலும் விலை அதனை மீறிச் சென்ற போது அதனைத் தடுக்கும் வல்லமை வங்கிக்கு இல்லை.

ரஷ்யாவின் போர் தந்திரமும் மேற்குலக ஊடகப் போர் தோல்வியும்

உக்ரைன்-ரஷ்ய போர், தீவிரத்தின் எல்லையை நோக்கி நகர்கிறது. ஏறக்குறைய கீவ் நகரை ரஷ்யப் படைகள் நெருங்கிவிட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. ஆனால் ரஷ்யாவின் தாக்குதலின் தாமதமும் அதன் போக்கில் காணப்படும் நகர்வுகளையும் தற்போதைய ஊடக உலகம் தேட ஆரம்பித்துள்ளது. அமெரிக்க புலனாய்வுத் தகவல்படி 96 மணித்தியாலத்தில் கைப்பற்றக் கூடிய உக்ரைனை ஏன் ரஷ்யா இரண்டு வாரங்களையும் கடந்தும் கைப்பற்றாதுள்ளது என்பதே பிரதான குழப்பமாக மேற்கு ஊடகங்களுக்கும் நாடுகளுக்கும் ஏற்பட்டுள்ளது. இக்கட்டுரையும் ரஷ்யாவினது நகர்வில் உள்ள உபாயங்களை தேடுவதாகவே அமையவுள்ளது.

முதலாவது, ரஷ்ய உக்ரைன் போர் ஒப்பீட்டடிப்படையில் நிதானமாகக் கையாளப்படுகிறது. ஆப்கானிஸ்தான் மற்றும் ஈராக் மீதான போரை தரிசித்த உலகத்திற்கு ரஷ்யாவின் நகர்வு நிதானமாகவே தெரிகிறது. பெரும் ஆக்ரோசமான போராக அமையாமை பற்றிய உரையாடல்கள் பல தளத்தில் அதிக சந்தேகங்களை உருவாக்க ஆரம்பித்துள்ளது. விளாடிமிர் புடின் போரை மேற்கொள்வது பற்றி நீயூயோர்க் ரைம்ஸ் குறிப்பிடுவதை அவதானிப்பது அவசியமானது. ரஷ்யா இப்போரின் மூலம் பலமான கட்டமைப்புக்களை ஈரோசியன் பிராந்தியத்தில் விருத்தி செய்வதில் முனைப்புக் கொள்கிறது. அதன் அடுத்த படி பூகோள அரசியலாகவே தெரிகிறது. அது புவிசார் அரசியலாக மட்டுமல்லாது இராணுவ ரீதியிலும் அதன் இருப்பியல்வாத அணுகுமுறையை விருத்தி செய்வதுடன் அதில் தனது வெளிப்பாட்டை அடையாளப்படுத்த முனைகிறது. அது மட்டுமன்றி அத்தகைய இருப்பியல்வாதம் அல்லது யதார்த்தவாதமானது நடைமுறைசார் நிலையை மட்டும் உள்ளடக்கியதல்ல. அது அடிப்படைவாதத்தையும் புரட்சிகரமான மாற்றத்தின் வரலாற்றையும் பிரதிபலிக்கக் கூடியது என இவ்விதழ் குறிப்பிடுகிறது.

இரண்டாவது, ரஷ்யா போரையும் சமாதான முயற்சியையும் ஒரே நேரத்தில் பிரயோகப்படுத்திவருகிறது. ஆரம்பத்தில் பெலாரஸ்ல் மூன்று சுற்றுப் பேச்சுக்களை நிகழ்த்திய இரு நாடுகளும் தற்போது முதலாவது கட்டப் பேச்சுவார்த்தையை துருக்கியில் நிகழ்த்தியுள்ளன. அனைத்துப் பேச்சுக்களும் தோல்வியில் முடிந்த போதும் ரஷ்யா அதனை ஒரு இராஜதந்திர நகர்வாக மேற்கொண்டுள்ளது. அதற்கான காரணங்கள் எதுவாக அமைந்தாலும் மேற்குலகத்தின் செய்முறையை கையாளும் உத்தியாகவே பார்க்கப்படுகிறது. இதனூடாக இப்போரின் அதீத நெருக்கடியை உலகளாவிய ரீதியில் ஏற்படுத்துவதை தவிர்க்க முடியும் எனக் கருதுகிற நிலை ஏற்பட்டுள்ளது.

மூன்றாவது, ரஷ்யா மீதும் ரஷ்ய அதிகாரவர்க்கம் மீதும் அமெரிக்கா தலைமையிலான மேற்குலகம் மேற்கொண்டுவரும் பொருளாதாரத் தடைகள் ரஷ்யாவை பாதிப்பதாகவே உள்ளது. அதேநேரம் மறுபக்கத்தில் ரஷ்யாவினது ஐரோப்பா நோக்கிய பெற்றோலிய எரிவாயு ஏற்றுமதிகள் மற்றும் ஆயுத தளபாடங்களுக்கான மூலப்பொருட்கள் ஏற்றுமதி என்பன ஐரோப்பாவையும் இதர நாடுகளையும் பாதிக்கும் ஒன்றாக மாறியுள்ளது. உலகளாவிய பெற்றோலிய உற்பத்தியில் மூன்றாவது நிலையை கொண்ட ரஷ்யாவின் ஏற்றுமதி ஐரோப்பாவை பாதிப்பதற்கான உபாயத்தை ரஷ்யா கொண்டிருக்கிறதென்பதை போர் வெளிப்படுத்துகிறது. இப்போரை காலநீடிப்பு செய்வதன் மூலம் ஐரோப்பாவை அமெரிக்காவிடமிருந்து பிரிக்க முடியுமா என்பதை ரஷ்யா பரிசீலிக்க முயலுகிறது. அமெரிக்காவிடம் பெற்றோலியம் காணப்பட்டாலும் ரஷ்யாவுக்கு நிகரானதாக இல்லை என்பதுவும் அரபுலகத்தில் தங்கியிருக்கும் போது மேற்குக்கு அதிக பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளதையும் புரிந்து கொள்வது அவசியமானது. அரபு உலகத்தின் பெற்றோலிய வளமுள்ள நாடுகளிலும் ரஷ்யாவின் செல்வாக்கு வளர்ந்துள்ளது என்பதையும் நிராகரித்துவிட முடியாது.

நான்காவது, போரின் நீடிப்புக்கு மேற்குலகம் குறிப்பிடும் காரணங்களை விட ரஷ்யர்கள் திட்டமிட்டுள்ள காரணம் தனித்துவமானது. உக்ரைன் என்பது ரஷ்யாவின் அயல் நாடு மட்டுமல்ல பண்பாட்டு உறவும் வளமும் உடைய தேசமாகும். அதனை வெற்றி கொள்வதென்பது அமெரிக்கா ஆப்கானிஸ்தானையோ ஈராக்கையோ கைப்பற்றியது போலல்ல. அது எதிரியை அழித்து விட்டு ஆதிக்கத்தை நிலைப்படுத்திய போர். உக்ரைன் மீதான போர் அப்படியானதல்ல. உக்ரைனியர்கள் ரஷ்யர்களின் மொழிவளத் தொடர்பும் கலாசார நெருக்கமும் கொண்ட மக்கள் கூட்டமாகும். அது மட்டுமன்றி உக்ரைனில் இருக்கும் ரஷ்ய மக்களையும் அவர்களது வாழ்வியலையும் போர் கவனத்தில் கொள்கிறது. உக்ரைனின் புதிய ஆட்சி அல்லது ரஷ்யாவுக்கு எதிரான ஆட்சி அல்லது மேற்குலகத்திற்கு விசுவாசமான ஆட்சி உக்ரைனில் வாழ்ந்த ரஷ்யர்களையும் அவர்களது வாழ்வையும் அழித்தொழிப்பதில் கடந்த காலம் முழுவதையும் பயன்படுத்தியுள்ளது. உக்ரைனிலுள்ள ரஷ்ய மக்கள் அழிக்கப்பட்டதுடன் அவர்களது அடையாளத்தை இல்லாமல் செய்வதற்கான நகர்வுகளை உக்ரைன் ஆட்சியாளர்கள் மேற்கொண்டுள்ளனர். கனடா உட்பட மேற்கு நாடுகள் உக்ரைனிய இராணுவத்தை ரஷ்யாவுக்கு எதிராக வளர்ப்பதில் கவனம்செலுத்தியுள்ளன. போர் தொடங்கிய போதே கனடிய இராணுவப் பயிற்சியாளர்கள் உக்ரைனை விட்டு வெளியேறியதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டமை குறிப்பிடத்தக்கதாகும். எனவே தான் ரஷ்ய படையெடுப்பின் அவசியமும் அதன் நிதானிப்பும் காணப்படுகிறது.

ஐந்தாவது, மேற்கு ஊடகங்களது பிரதான பிரசாரத்தில் ஒன்றாக அமைந்திருப்பது உக்ரைனை அடுத்து முன்னாள் சோவியத் குடியரசுகளை நோக்கியதாக ரஷ்யப் போர் அமையும் என்பதாகும். அதனால் ஏனைய முன்னாள் குடியரசுகளை மேற்குடன் இணைத்துக்கொள்ள முடியுமென மேற்கு திட்டமிடுகிறது. அது மட்டுமன்றி ரஷ்ய ஜனாதிபதி ஒரு சர்வாதிகாரி என்பதை நிறுவுவதில் கவனம் கொண்டிருந்தது. அதனைக் கவனித்த ரஷ்யா போரில் ஏற்படக்கூடிய இழப்புக்களை கட்டுப்படுத்துவது பிரதான உத்தியாக அமைந்துள்ளது. அதனால் கொல்லப்படும் உக்ரேனியரது எண்ணிக்கையை மட்டுப்படுத்துவதுடன் மேற்குலகம் குறிப்பிடுவது போல் ரஷ்யா போரை கொடூரமானதாக நிகழ்த்தவில்லை என்பதுவும் முன்னாள் குடியரசுகள் இலக்கல்ல என்பதையும் தெளிவுபடுத்துகிறது. அத்துடன் இப்போர் உலகளாவிய போர் அல்ல என்பதையும் ரஷ்யா நிறுவ முயலுகிறது.

ஆறாவது, போரில் முழுமையாக உக்ரைனை கைப்பற்றுவதை விட ரஷ்யாவுக்கு ஆதரவான சக்திகளிடம் உக்ரைனை ஒப்படைப்பதற்கான கைப்பற்றலையே பிரதான நோக்கமாக ரஷ்யா கொண்டுள்ளது. அதற்கு அமைவாகவே போரை ரஷ்யா மேற்கொள்கிறது. உக்ரைன் மக்களும் ரஷ்ய மக்களும் ரஷ்யாவுக்கு ஆதரவானவர்களாக இருக்கும் ஆட்சியுமே ரஷ்யாவின் பாதுகாப்புக்கும் எதிர்காலத்திற்கும் அவசியமானதாக உள்ளது என்பதை போரின் நகர்வு தெளிவுபடுத்துகிறது. எனவே போரின் இழப்பீடுகளை மட்டுப்படுத்த வேண்டுமாயின் அதன் வேகத்தை மட்டுப்படுத்துவது அவசியமானது என்பதை ரஷ்யா வெளிப்படுத்துகிறது. குறிப்பாக கீவ் நகரத்திற்கு 60 கீ.மீ. அப்பால் ரஷ்யாவின் கவச வாகனங்களும் அதன் படையணிகளும் நான்கு நாட்கள் வீதியோரத்தில் காணப்பட்டதாகவும் செய்தியொன்று வெளியாகியிருந்தது. அப்போது எந்த விமானத் தாக்குதலோ அல்லது பீரங்கித் தாக்குதலோ நிகழ்ந்ததாக தகவல் இல்லை என்பதையும் அவ்வாறே ரஷ்ய பீரங்கிகள் எந்த தாக்குதலையும் மேற்கொள்ளவில்லை என்பதையும் அச் செய்திச்சேவை வெளிப்படுத்தியுள்ளது.

ஏழாவது, ரஷ்யா போரை தாமதப்படுத்துவதன் மூலம் உக்ரைன் தற்போதைய ஜனாதிபதியை மேற்குலகத்திற்கு தப்பியோட வைக்க திட்டமிடுகிறதைக் காணமுடிகிறது. காரணம் ரஷ்யாவுக்கு ஒரு ஆட்சி மாற்றமே தேவைப்படுகிறது. அதனை ஒரு புரட்சியினூடாக சாத்தியப்படுத்தியிருக்க முடியுமென யாரும் வாதிக்கலாம். ஆனால் அதற்கான சூழலை மேற்கு வழங்காத நிலையை உருவாக்கியிருந்தது. காரணம் உக்ரைன் நேட்டோவுக்குள் சேருமாயின் ரஷ்யாவின் பாதுகாப்பும் இருப்பும் மேற்கினால் அழிக்கப்படுவது இலகுவான தாக அமைந்திருக்கும். ரஷ்யா உலகத்தின் இருதய நிலம் என்பதை ரஷ்யர்கள் மட்டுமல்ல மேற்குலகம் தற்போது ஏற்றுக் கொண்டுள்ளது. அதனாலேயே ரஷ்யாவை நோக்கி நகர்வதில் மேற்குலகம் கரிசனை கொண்டுள்ளது.

எனவே ரஷ்யா போரை தனது திட்மிடலுக்குள் வைத்து நகர்த்துகிறது. உலக நாடுகளது பொருளாதாரத் தடைகளையும் விமானப் போக்குவரத்து தடைகளையும் ஏற்றுமதி இறக்குமதி தடைகளையும் கடந்து நிதானமாக நகர்த்துகிறது. எந்த நெருக்கடியும் இன்றி போர் கையாளப்படுகிறது.

தற்போது உக்ரைனுக்கு ரஷ்ய நட்பு நாடான சீனா மனிதாபிமான உதவி செய்ய முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். போரில் மேற்கு ரஷ்யாவிடம் தோற்பது என்பதை விட ரஷ்ய போரியல் தந்திரத்தற்குள் தோற்கிறதாகவே விமர்சனங்கள் எழுந்துள்ளன.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

சர்வதேச மகளிர் தினத்தன்று பதுளையில் இடம்பெற்ற நெஞ்சை உருக்கும் சோக சம்பவம்

- கொலை செய்யப்பட்டது ஹாலிஎல மாணவியாகும்.
- கொலையாளி கொலை செய்யப்பட்ட மாணவியின் வீட்டுக்கு அண்மையில் வசிப்பவராகும்.
- இருவருக்கும் இடையில் சில காலமாக இருந்தே மனமுறுகல்

சர்வதேச மகளிர் தினம் கடந்த மார்ச் 08ம் திகதி அனுஷ்டிக்கப்பட்டது. அன்றைய தினத்தில் ஏற்பாடு செய்யப் படும் விழாக்கள், வைபவங்களில் பெண்களின் உரிமைகள், சமூக ரீதியில் அவர்கள் முகங்கொ டுக்கும் பிரச்சினைகள் உள்ளிட்ட அனேக விட யங்கள் அதிகமாக பேசப்படும்.

அவ்வாறு மகளிர் தினம் அனுஷ்டிக்கப்படும் சந்தர்ப்பத்தில் இளம் பருவத்தில் காலடி எடுத்து வைத்திருந்த பதுளை மாவட்டத்தின் ஹாலிஎல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட, உடுவர தோட்டத்தின் கீழ் பிரிவில் வசிக்கும் இளம் யுவதி ஒருவர் கோட ரியால் குத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்.

இவ்வாறு படுகொலை செய்யப்பட்டவர் 18 வயதையுடைய தர்மராஜா லிதியா என்ற மாண வியாகும். தெமோதர, ஏழாம் கட்டை, உடுவர தோட்டத்தின் கீழ் பிரிவில் உள்ள லைன் வீட்டுத் தொகுதியில் வசித்த லிதியா, ஹாலிஎலவில் 12ம் தரத்தில் கல்வி கற்றுக் கொண்டிருந்த துள்ளார். இம்மாணவி சர்வதேச மகளிர் தினத் தன்றே கொடூரமான முறையில் கொலை செய் யப்பட்டிருந்தார். லிதியாவை படுகொலை செய்த கொலையாளி அவளது வீட்டுக்கு இரண்டு வீடுக ளுக்கு அப்பால் அமைந்துள்ள வீட்டில் வசிக்கும் 32 வயதுடைய ராமைய்யா திவாகரன் என்பவ னாகும். இச்சந்தேக நபர் லிதியாவைக் காத லிக்க முயற்சித்த போதும் அதற்கு லிதியாவும், அவளது குடும்பத்தினரும் கடும் எதிர்ப்பை தெரி வித்தனர். காரணம் லிதியா பாடசாலை மாணவி என்பதாலாகும்.

லிதியாவின் தாய் முத்துராஜ் மலராகும். தந்தை 56 வயதுடைய கருப் பைய்யா தர்மராஜா என்ப ராகும். அவர்கள் இருவரும் உடுவர தோட்டத்தின் தேயிலை தோட்டம் ஒன்றில் தொழிலாளர்க ளாக பணியாற்றி வருபவர்களா கும். லிதியாவுக்கு மூத்த சகோ தரர் ஒருவரும் உள்ளார். அவர் பதுளை நகரில் அமைந்துள்ள ஹோட்டல் ஒன்றில் பணியாற்றி வருகிறார். லிதியா படிப்பில் மிகுந்த ஆர்வம் காட்டுபவராகும். அத்துடன் லிதியா தனது பாடசா லையில் மகளிர் மாணவர் கே டேட் குழுவினைப் பிரதிநிதித்து வப் படுத்தினார். 12ம் தரத்தில் கற்றுக் கொண்டிருந்த லிதியா அடுத்த வருடம் உயர் தரப் பரீட் சைக்குத் தோற்றுவதற்கும் ஆயத்தமாக இருந் துள்ளார். அவளது ஒரே எதிர்பார்ப்பாக இருந்தது உயர் தரத்தில் சித்தியடைந்து பல்கலைக்கழ கம் செல்வதாகும். பாடசாலை மாணவியாக இருந்த போதிலும் லிதியா அழகிய தோற்றத் தைக் யுவதியாகும்.

உயர் கல்வியைத் தொடராத ராமைய்யா திவாகரன் 32 வயதுடைய இளைஞராகும். லிதியாவின் வீட்டுக்கு இரண்டு வீடுகளுக்கு அப்பால் அமைந்துள்ள வீட்டில் வசிக்கும் திவா கரன், ஹாலிஎல 7ம் கட்டையில் அமைந்துள்ள ஹோட்டல் ஒன்றில் தொழிலாளியாக பணி யாற்றி வந்துள்ளார். அவனது பெற்றோரும் தேயிலைத் தோட்டத்தில் பணியாற்றும் தொழி லாளர்களாகும். அத்துடன் திவாகரனுக்கு இளம் சகோதரர் ஒருவருமுள்ளார்.

அழகிய தோற்றத்தைக் கொண்ட லிதியா வைக் காணும் போதெல்லாம் லிதியாவை எப் படியாவது காதலிக்க வேண்டும் என்பதே திவா கரனின் எண்ணம். இதற்காக கடந்த ஒரு வருட காலமாக இருந்தே திவாகரன் எடுக்காத முயற் சிகளே இல்லை. இருவருக்குமிடையிலான 15 வருட வயது வித்தியாசத்தை திவாகரன் நினைத் துப் பார்க்கவில்லை. எனினும் லிதியா சாத காமாக பதில் அளிக்கவில்லை. லிதியா திவாகர னுக்கு எவ்வித விருப்பத்தையும் காட்டவில்லை.

பெற்றோர்

திவாகரன் தன்னைக் காதலிக்குமாறு கட்டா யப்படுத்துவதாக ஒருநாள் லிதியா பெற்றோரிடம் முறையிட்டுள்ளார்.

“அம்மா.... என்னால் திவாகரனிடமிருந்து தப்ப முடியாதுள்ளது. நான் போகும் எல்லா இடத்திற்கும் என் பின்னாலேயே வருகிறான்.... எனக்கு வெட்கமாக உள்ளது.... சில நாட்களில் பாடசாலைக்கும் வருகின்றான்...”

அதனையடுத்து லிதியாவின் பெற்றோரும் திவாகரனுக்கு கடும் எதிர்ப்பைக் காட்டினார். முக்கியமாக லிதியா இன்னமும் கல்வி கற்கும் பிள்ளையாக இருப்பதால் அந்த எதிர்ப்பு மென் மேலும் தீவிரமடைந்தது.

அழுது அரற்றும் தாயார்

2021 ஆகஸ்ட் மாதத்தில் ஒரு நாள் லிதி யாவின் பெற்றோருக்கும் திவாகரனுக்கும் இடையில் பிரச்சினை ஏற்பட்டிருந்தது. அது திவாகரன் லிதியாவின் பின்னால் சென்றதன் விளைவாகவாகும். அன்றைய தினம் திவாக ரன் லிதியாவின் தந்தைக்கும், சகோதரனுக்கும் கத்தியால் குத்தியிருந்தான். இது தொடர்பில் ஹாலிஎல பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடும் செய்யப்பட்டது. அந்த முறைப்பாடு தொடர்பில் ஹாலிஎல பொலிஸாரால் பதுளை நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பித்து வழக்கு விசாரணைகளும் இடம்பெற்றன.

அந்த வழக்கு விசாரணைகளுக்குப் பின்னர் ஹாலிஎல இணக்க சபைக்கு அவ்வழக்கு மாற் றப்பட்டு இணக்க சபையால் இரு தரப்பாரையும் சமாதானப் படுத்தி 50 ஆயிரம் ரூபாய் இழப் பீட்டை லிதியாவின் தந்தைக்கும் சகோதரனுக் கும் செலுத்துவதற்கும் திவாகரனுக்கு உத்தர விடப்பட்டது. அப்பணத்தை இரு தவணைகளாக வழங்கவும் உத்தரவிடப்பட்டது. அதன் முதலா வது தவணைப் பணம் மார்ச் 13ம் திகதி ஞாயிற் றுக் கிழமை செலுத்தப்பட வேண்டியிருந்தது

இதற்கிடையே லிதியா பாடசாலை நண்பர் ஒருவரைக் காதலிப்பதாக திவாகரன் சந்தேகம் கொண்டான். அந்த காதல் தொடர்பே திவா கரனுக்கு லிதியாவைக் காதலிக்க பெரும் தடையாக இருப்பதாக அவன் நினைத்தான்.

அது கடந்த 8ம் திகதி அதிகாலை 6.30 மணியளவில் லிதியா வீட்டிலிருந்து புறப் பட்டது வீட்டிலிருந்து ஆறு கிலோ மீற்றர் தொலைவில் ஹாலிஎல நகர மத்தியில் அமைந்துள்ள பாடசாலைக்குச் செல்வதற்கா கும். பகல் 1.30 மணியளவில் பாடசாலை முடிவடைந்து லிதியா பதுளை பண்டாரவளை பஸ்ஸில் ஏறினார். லிதியா வழமை போன்று பஸ்ஸிலிருந்து உடுவர தோட்டத்தின், ஏழாம் கட்டை பஸ் தரிப்பிடத்தில் இறங்கினார்.

பின்னர் லிதியா தனது வீட்டை நோக்கிச் செல் வதற்காக இருக்கும் தோட்ட வீதியான வலஸ் பெத்த வீதியில் கால்ந டையாக நடக்க ஆரம் பித்தார். பஸ்ஸிலிருந்து இறங்கி வீட்டுக்கு சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரம் நடக்க வேண்டும். அன்றைய தினம் துரதிர்ஷ்டவசமாக அவ் வீதியில் லிதியா மாத்திரமே நடந்து சென்று கொண்டிருந்துள்ளார். வீதியின் இரு புறத்திலும் தேயிலைச் செடிகளால் நிறைந்த தேயிலைத் தோட்டம் உள்ளது. லிதியா 400 மீற்றர் தூரம் மாத்திரமே பய ணிக்க வேண்டும்.

லிதியாவைக் கொல்வதற்கு கொலையாளி வீதியில் காத்துக் கொண்டி ருந்துள்ளான். தேயிலைச் செடிகளுக்குள் மறைந்திருந்த கொலையாளி வேறு யாரு மில்லை, திவாகரன்தான். அவன் லிதியா எதிர்பார்க்காதவாறு திடீரென கையில் கோடரி ஒன்றுடன் லிதியாவின் முன்னால் பாய்ந்துள்ளான். அந்நேரம் இருவருக்குமி டையில் வாய்த்தர்க்கமும் ஏற்பட்டுள்ளது. அந்த வாய்த்தர்க்கம் முற்றிப் போனதைத் தொடர்ந்து திவாகரன் கையிலிருந்த கூரிய ஆயுதத்தினால் லிதியாவின் தலையில் பல மாகத் தாக்கியுள்ளான். பாடசாலைச் சீருடை யில் இருந்த லிதியா சிறு வயது முதல் தான் சென்று பழகிய வீதியில் இரத்த வெள்ளத்தில் வீழ்ந்தார். இருவருக்குமிடையில் இடம்பெற்ற வாய்த்தர்க்கத்தின் போது லிதியாவின் புத்தகப் பையும் வீதியில் வீழ்ந்துள்ளது. லிதியாவின் கழுத்திலும் தலையிலும் கடுமையாகத் தாக்கிய கொலையாளி கொலைக்குப் பயன்படுத்திய கூரிய ஆயுதத்தை தேயிலைத் தோட்டத்தினுள் வீசிவிட்டு அங்கிருந்து தப்பியோடியுள்ளான்.

மாலை 2.30 மணியளவில் உடுவர தோட் டத்தின் 13ம் இலக்க லயத்தின் கங்காணியான வேலு பெரியசாமி என்பவர் அவ்விடத்தால் பகல் உணவுக்காகச் சென்று கொண்டிருந்துள் ளார். அவர் கண்ட காட்சி அவரை அதிர்ச்சிக்குள் ளாக்கியது. இரத்த வெள்ளத்தில் மிதந்த லதி யாவுக்கு அருகில் சென்ற பெரியசாமியால் அது லதியா என்பதை இனங்கண்டு கொள்வதற்கு நீண்ட நேரம் எடுக்கவில்லை. அந் த ள வு க் கு லிதியா உடுவர தே தோ ட் ட த் தி ல் அனைவர் மனதி லும் நன்மதிப்பை பெற்றிருந்த பாடசாலை மாணவியாக பிரபலமாகி யிருந்தாள்.

கொலை ஆயுதம்

“ஐயோ கடவுளே..... இது கருப்பையாவின் மக ளாச்சே.....” அவரின் வாயிலிருந்து வந்தது இந்த வாத்தைகள் மாத்திரமே. பெரியசாமி உடனே லிதி யாவின் மரணத்தைப் பற்றி லிதியாவின் தந்தை கருப்பையாவுடன் வேலை செய்யும் கருப்பையா வின் நண்பரிடத்தில் கூறியுள்ளார்.

உடுவர தோட்டத்தின் கீழ் பிரிவு வீதியில் பாடசாலை மாணவியான லிதியா, பாடசாலை சீருடையுடனேயே படுகொலை செய்யப்பட்டுள்ள விடயம் காட்டுத் தீ போல ஒரு நிமிடத்திலேயே ஊர் முழுதும் பரவியது. ஒரு சில நிமி டங்களுக்குள் லிதியாவின் சடலம் காணப்பட்ட இடத்தில் உடுவர தோட்டத்து மக்கள் மாத்திரமின்றி, பக்கத்துக் கிராமங்களையும் சேர்ந்த நூற்றுக்கணக்கான மக்கள் ஒன்று கூடி “ஐயையோ.....” என கத்தினர்.

மாணவியின் கைப்பை

இதற்குள் 119 என்ற பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கத் தின் ஊடாக ஹாலிஎல பொலிஸ் நிலையத்திற்கு லிதியாவின் படுகொலை தொடர்பான செய்தி கிடைத்தது. அந்த தகவல் கிடைத்த உடனேயே ஹாலிஎல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் றுவன் குணதிலகவின் வழிநடாத்தலில் பொலிஸ் நிலைய குற்ற விசா ரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி ட்ப்ளிவ். எம். தயானந்த தலைமையிலான பொலிஸ் குழுவி னர் அவ்விடத்திற்கு விரைந்து விசாரணைகளை ஆரம்பித்தனர். ஹாலிஎல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் றுவன் குணதிலகவினால் பதுளை பிரிவுக்குப் பொறுப் பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுஜித் வெதமுல்லவுக்கும் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டு அவரது ஆலோசனையின் பிரகாரம் கொலையாளி யைத் தேடிக் கைது செய்வதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்ட அதேநேரம், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சரினால் லிதியாவின் கொலை தொடர்பான விசாரணைகளுக்காக சொகோ அதிகாரிகள் உள்ளிட்ட விசாரணைக் குழுக்கள் சிலவற்றையும் ஈடுபடுத்து வதற்கான உத்தரவு வழங்கப்பட்டது. லிதியாவின் கொலை திவாகரனினால் மேற்கொள்ளப்பட்டுள்ள விடயம் பொலிஸாரினால் ஊர்ஜிதப்படுத்தப்பட் டதைத் தொடர்ந்து அவன் தலைமறைவாகியிருந்த இடத்தைத் தேடி பொலிஸ் குழுக்கள் விரிவான நட வடிக்கைகளை ஆரம்பித்தனர்.

இதனிடையே படுகொலைச் சம்பவம் இடம் பெற்ற மறுநாள் அதாவது 9ம் திகதி காலையில் கொலையாளி பதுளை கொழும்பு புகையி ரத வீதியில் நடந்து சென்று கொண்டிருப்ப தாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது. அவனைக் கைது செய்வதற்கு பொலிஸ் குழு ஒன்று ஆயத்தமான அதேவேளை ஹாலிஎல பொலிஸ் நிலையத்திற்கு வந்துள்ள லிதியாவைக் கொலை செய்த கொலையாளி தன்னால் இனி தப்பிக் கொள்ள முடியாது என்ப தைப் புரிந்து கொண்டு பொலிசா ரிடம் சரணடைந்தான்.

“நான் தண்டவாளத்தில் தலையை வைக்க ஆயத்தமா னேன் சேர்..... எனினும் பொலிஸில் சென்று சரணடைவோம் என பின்னர் யோசித்தேன்....” என அவன் பொலிஸா ரிடம் தெரிவித்துள்ளான்.

லிதியாவைக் கொலை செய்த கொலையாளி பொலிஸாரிடம் சரணடைந்த போதே அவன் பொலிஸாரிடம் மேற்கண்டவாறு தெரிவித்துள் ளான். ஹாலிஎல பொலிஸாரினால் கைது செய் யப்பட்ட திவாகரனிடம் பொலிஸார் தொடர்ச்சியாக விசாரணைகளை மேற்கொண்டனர்.

“சேர்.... நான் அவளை ஒருதலைப்பட்சமாகக் காதலித்தேன்.... இதனை அவளிடம் பல தடவை கள் தெரியப்படுத்தி காதலை ஏற்றுக் கொள்ளு மாறு கூறினேன்..... எனினும் லிதியா விருப்பம் தெரிவிக்கவில்லை..... அவள் என்னை விரும் பாததால் நான் கடந்த காலங்களில் பைத்தியம் பிடித்தவனைப் போல இருந்தேன் சேர்.... அவள் எனக்கு கிடைக்காமல் போவதை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.... அதுனால் தான் சேர் இது நடந்தது....”

லிதியாவின் கொலையுடன் தொடர்புடைய திவாகரன் கைது செய்யப்பட்ட தினமே அவனை பதுளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கு ஹாலிஎல பொலிஸார் நடவடிக்கை மேற்கொண் டனர். இவ்வாறு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட சந்தேக நபரை அடையாள அணிவகுப்புக்கு உட்ப டுத்தும் வரை இம்மாதம் 18ம் திகதி வரைக்கும் விளக்க மறியலில் வைக்குமாறு பதுளை பதில் நீதவான் சட்டத்தரணி ரொனாலி அபேவிக்ரமவி னால் உத்தரவிடப்பட்டுள்ளது.

தனது எதிர்காலத்தை வெற்றி கொள்வதற்கான முயற்சியில் கல்வியைக் கடுமையாக கற்றுக் கொண்டிருந்த லிதியாவின் விதிப் பயணம் சர் வதேச மகளிர் தினம் கொண்டாடப்படும் தினத் தில் மிகவும் சோகமான முறையில் முடிவடைந் திருக்கின்றது. மனித சமூகத்தில் இவ்வாறான பாவிகளின் காரணமாக இளம் பராயத்தினருக்கு ஏற்படும் பரிதாபகரமான முடிவு மிகவும் துயர் மிக் கதாகும். எனவே சமூகத்தில் மேலும் இவ்வாறான குற்றங்கள் தொடர்பான செய்திகளைக் கேட்ப தற்கோ அல்லது பார்ப்பதற்கோ இடம் வாய்க்காத வகையில் இவ்வாறான பாவிகளுக்கு சட்டத்தி னால் வழங்கப்படக் கூடிய அதிகூடிய தண்டனை வழங்கப்பட வேண்டும்.

இது தொடர்பில் பதுளை பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுஜித் வெதமுல்ல கேவின் ஆலோசனையின் பிரகாரம் ஹாலிஎல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பொலிஸ் பரி சோதகர் றுவன் குணதிலகவின் வழிநடாத்தலில், ஹாலிஎல பொலிஸ் நிலையத்தின் குற்ற விசார ணைப் பிரிவின் பொறுப்பதிகாரி ட்ப்ளிவ். எம். தயா னந்த தலைமையில் பொலிஸ் சார்ஜன்ட்களான ஜயசிங்க (1477), ரத்னபால (19803), ஜயபி ரகாஷ் (59200), கவீர் (54262), பொலிஸ் கான்ஸ்டபில்களான எதிரிசிங்க (40922), ஏகநா யக்கா (74708) மற்றும் ராஜபக்ஷ (78779) ஆகியோர் கொண்ட குழுவினரால் மேலதிக விசா ரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அமில மலவிகூரிய...✍
தமிழில் : எம். எஸ். முஸப்பிர்
(புத்தளம் விசேட நிருபர்)

பேருவளை, ஜாமிஆ நளீமிய்யா கலாபீடத்தின் முன்னாள் பணிப்பாளர் கலாநிதி மர்ஹூம் **எம்.ஏ.எம். சுக்ரி** மரணமடைவதற்கு முன்னர் இறுதியாக எழுதிய கட்டுரை இது'.

எம்.எம்.நஹியாவின் இலங்கையில் முஸ்லிம் கல்வி; ஷாபி மரிக்கார் சிந்தனையும் பங்களிப்பும்

நூலாய்வு

'இலங்கையில் முஸ்லிம் கல்வி ஷாபி மரிக்கார் சிந்தனையும் பங்களிப் பும்' என்னும் பெயர் தாங்கிய எனது நண்பர் ஏ. எம். நஹியாவின் நூலுக்கு மதிப் புரை வழங்குவதில் பெரு மகிழ்ச்சி அடைகி றேன். ஏ.எம். நஹியா பன்னூலாசிரியர் மிகச் சிறந்த ஆய்வாளர். 'அஸிஸ்ம் தமிழும்', முஸ்லிம் நேசர் சுவாமி விபுலானந்தர், இலங் கையில் முஸ்லிம் கல்வி, யாமறிந்த பேராசான் கார்த்திகேசு சிவத்தம்பி போன்ற அவரின் ஆக் கங்களும் அவர் எழுதிக் குவித்த ஆய்வுக் கட் டுரைகளும் நஹியாவின் சிறந்த வாசிப்பு, பகுப்பாய்வு, தர்க்கரீதியான அணுகுமுறை என் பனவற்றைப் பிரதிபலிக்கின்றன.

நஹியாவின அறிவு, ஆய்வுப் பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில் அண்மையில் சிறந்த புலமைத்துவ மற்றும் ஆய்வுசார் படைப்பிற் கான 2018 ஆம் ஆண்டின் அரச சாஹித்திய விருது வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

'இலங்கையின் முஸ்லிம் கல்வி ஷாபிம ரிக்கார் சிந்தனையும் பங்களிப்பும்' என்னும் தலைப்பிலான நூல் இலங்கை முஸ்லிம் சமூகத்தில் ஆராவராமின்றி, அமைதியாக ஆனால், ஆக்கபூர்வமாக கல்விப் பணிபுரிந்த ஸாஹிரா கல்லூரியின் முன்னை நாள் அதிபர் ஷாபிமரிக்காரின் கல்விப் பணிகளை 21 அத் தியாயங்களில் விரிவாக விளக்குகின்றது. இந் நூலைப் படித்து முடிக்கும் எவரும் ஷாபிமரிக் கார் வெறும் ஓர் அதிபர் மட்டுமல்ல. அவர் தூர நோக்கும் ஆழமான சிந்தனையும் கொண்ட ஒரு சிறந்த கல்வியாளர் என்ற உணர்வைப் பெற்ற வர்.

ஷாபிமரிக்கார் அதிபராகப் பணிபுரிந்த காலப் பிரிவில் ஸாஹிராவில் ஆசிரியராக நஹியா இணைந்தார். ஸாஹிராவின் ஆசிரியர் குழாத் தில் ஒருவர் என்ற வகையிலும், ஷாபிமரிக்கார் தலைவராகப் பணிபுரிந்த இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டின் துணைச் செயலாளராக பணிபுரிந்தவர் என்ற வகையிலும் ஷாபிமரிக் காரின் ஆளுமை சிந்தனைப் பாங்கு, கல்விக் கொள்கை பற்றிய பரிச்சயத்தை நஹியா பெற் றிருந்தார். இந்த வகையில் ஷாபிமரிக்கார் என்ற ஆளுமையின் இதுவரை தெரியப்படாத பல பக் கங்களையும் அவரின் பணிகளில் அறியப்படாத பல விடயங்களையும் இந்நூல் கோடிட்டுக் காட் டுகின்றது.

சமூகப் பணிகள் மூலம் தங்கள் சமூக நீரோட் டத்தோடு இணைத்துக்கொண்டு சங்கமமாகிய வர்கள் அதன் வரலாற்றில் பிரிக்க முடியாத ஓர் அங்கமாக மாறிவிடுகிறார்கள். நண்பர் நஹியா ஷாபிமரிக்காரின் கல்விப் பணிகளை விளக்கும் வகையில் ஷாபிமரிக்கார் ஆளுமையின் இந்த அம்சத்தை மிகச் சிறப்பாக விளக்கியுள்ளார். 'ஒரு தனிப்பட்ட பெருந்தகையின் கல்விப் பணியின் ஊடாக அவர் சார்ந்த சமூகத்தின் வரலாற்றை எவ்வாறு கட்டமைக்கலாம் என்பதற்கு இந்நூலை உதாரணமாக்கியிருக்கின்றேன்' என நூலாசிரியர் நஹியா குறிப்பிடுகின்றார்.

கலாநிதி எம் ஏ. எம் சுக்ரி...✍

சித்திலெப்பை தொடக்கம் ஷாபிமரிக்கார் வரை ஸாஹிறாவில் நிலைகொண்டிருந்த கல்விப் பாரம்பரியத்தின் இறுதி வாரிசாக ஷாபிமரிக்காரை நஹியா நோக்குகின்றார். இந்த வகையில் அரை நூற்றாண்டுக்கு மேலாக முஸ்லிம் சமூகத் தில் கல்வி மேம்பாட்டிற்குத் தன்னை முழுமை யாக அர்ப்பணித்த ஷாபிமரிக்காரின் குடும்பப் பாரம்பரியம், கல்விப் பின்னணி, கல்விப் பங்களிப்பு, சமூகப் பணிகள் என்பன இந்நூலில் மிக விரிவாக ஆராயப்பட்டுள்ளன. யூனானி வைத்தியப் பாரம்பரியம், இஸ்லாமிய இலக்கியப் பாரம்பரியம் ஆகிய இரண்டும் ஷாபி மரிக்காரின் குடும்பப் பாரம்பரியத்தில் இணைகின்றன.



ஷாபிமரிக்கார் ஜாயாவின் கால ஸாஹிராவில் கல்வி கற்ற பின்னர் கொழும்பு ஸாஹிராவின் கிளைப் பாடசாலையாக நிறுவப்பட்ட அளுத் கம ஸாஹிராவில் ஏறக்குறைய 14 வருடங்கள் அதிபராகப் பணி புரிந்தார். பட்டப்படிப்பை முடித் துக்கொண்டு சட்டக் கல்லூரியில் சேர்ந்து சட்டக் கற்கையை ஆரம் பித்த நிலையில் ஜாயாவின் வேண்டுகோளின் பேரில் சட்டக் கல்வியை இடைநிறுத்திவிட்டு தர்காநகர் ஸாஹிராக் கல்லூரி யின் அதிபராகப் பதவியேற்ற ஷாபிமரிக்காரின் காலப் பிரிவில் (01.07.1948 31.12.1961) அக்கல்லூரி கல்வித் துறையிலும் விளையாட் டுத் துறையிலும் கணிசமான வளர்ச்சியைக் கண்டது. ஷாபிமரிக்கார் 01.01.1967 இல் கொழும்பு ஸாஹிராவின் அதிபராகப் பதவி யேற்றார். கொழும்பு ஸாஹிரா கல்வித் துறை யிலும் பரிபாலனத் துறையிலும் பல்வேறு சவால்களை எதிர்கொண்ட காலப் பிரிவில் ஷாபிமரிக்கார் கொழும்பு ஸாஹிராவின் அதி பராகப் பதவியேற்ற காலப்பிரி வில் அதன் பின்னடைவு நிலை, அதற்கான வரலாற்றுப் பின்னணி பற்றி நஹியா மிக விரிவாக விளக் கியுள்ளார். 01.01.1967 முதல் 30.06.1982 வரையிலான ஷாபிமரிக்கார் ஸாஹிராவின் அதி பராகப் பணிபுரிந்த காலப்பிரிவில் ஸாஹிராவை மீளக் கட்டி எழுப்ப தற்கு அவர் மேற்கொண்ட அபார முயற்சியை நஹியா விளக்குகின் றார். ஷாபிமரிக்காரின் முயற்சியினால் கல்வித் துறையிலும் விளையாட்டுத் துறையிலும் ஸாஹிரா மிகக் காத்திரமான வளர்ச்சி களைக் கண்டது. பல்கலைக்கழகத்திற்குக் கணி சமான மாணவர்கள் பிரவேசம் பெற்றனர்.

(04ஆம் பக்கம் பார்க்க)

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

அவ்வளவுதான்

ஷஹ்னா ஸப்வான், தர்கா நகர்

தூக்கி எறிந்தவர்கள் முன்னாடி;
ஒரு தூணாக இருக்க வேண்டும் அவ்வளவுதான்...

தட்டிக்கழித்தவர்கள் முன்னாடி;
தலைநிமிர்ந்து நிற்க வேண்டும் அவ்வளவுதான்...

உன்னால் முடியுமா என்றோர் முன்னாடி;
அவர்களுக்கே உரமாக இருக்க வேண்டும் அவ்வளவுதான்...

இதை நிறுத்து என்றவர்கள் முன்னாடி;
தொடர்ந்து நிற்க வேண்டும் அவ்வளவுதான்...

முடியாது நிறுத்து என்றோர் முன்னாடி;
எதிர்நீச்சலில் அவர்கள் முன் நிற்கணும் அவ்வளவுதான்...

விழிப்புணர்வுகள் போதும் என்றோர் முன்னாடி;
அவர் விழி பிதுங்கி நிற்பதை பார்க்கணும் அவ்வளவுதான்...

முடக்க நினைத்தவர்கள் முன்னாடி;
முள்ளாக இருக்க வேண்டும் அவ்வளவுதான்...

தடுக்க வந்தவர்கள் முன்னாடி;
அவர்களை தடுமாறச் செய்யணும் அவ்வளவுதான்...

வெறுப்பைத் தந்தோர் முன்னாடி;
வைராக்கியமாக இருக்க வேண்டும் அவ்வளவுதான்...

கவலைகளைத் தந்தோர் முன்னாடி;
கலகலப்பாக இருக்கணும் அவ்வளவுதான்...

கஷ்டத்தை தந்தோர முன்னாடி;
கம்பீரமாக இருக்கணும் அவ்வளவுதான்...

தனிமையை தந்தோர் முன்னாடி;
தன்மானம் காக்க வேண்டும் அவ்வளவுதான்...

நம்பிக்கையூட்டியோர் முன்னாடி;
நம்பகரமாக வேண்டும் அவ்வளவுதான்...

இது நீயா என்று கேட்டோர் முன்னாடி;
நான் நானாகவே இருப்பேன் அவ்வளவுதான்...

இத்தொலையாத துயரங்களை
தூரமாக வீச வேண்டும் அவ்வளவுதான்...

இதயக் கொதிப்பை அடக்க பழக வேண்டும் அவ்வளவுதான்...

இவற்றை தாண்டி
ஆசுவாசமாக நிகழ்கால வாழ்க்கையைக் கடந்து,
எதிர்காலத்தில் சிறப்பாக வாழ வேண்டும் அவ்வளவுதான்...

பலரின் கேள்விக்கு விடையாகவும்,
சிலருக்கு விடைக்கு கேள்வியாகவும்
இருக்க வேண்டும் அவ்வளவுதான்!!!..

தாவணி சிறகுகள்

பெரியமடு நிஹ்ரி

பெண்ணே தமிழில் உனக்கு
ஒத்த கருத்துக்கள் அதிகம்
ஆனால் இந்த சமூகத்தில் உனக்கு
ஒவ்வாத கருத்துக்கள் அதிகம்
உயிர் கொடுப்பவள் நீ
உணவளிப்பவள் நீ
தாய்மை கொண்ட உன் பெருமை
தரணி எல்லாம் அறியும்
பக்கம் இருக்கும் சொர்க்கம் நீ – உண்மைப்
பாசம் கொண்ட சொந்தம் நீ
மகளாகத்
தங்கையாக
மனைவியாக
அக்காவாக
அன்னையாக
பருவத்துக்கு ஏற்ப நீ
கொள்ளும் பரிணாமம் வியப்பானது
மண்ணோடு உன்னை ஒப்பிடுவது
மகா தவறு
உன்போல எதுவுமில்லை என்று
உணர்கிறது எனது மனது
ஐந்து பூதங்களும் உனக்குள்ளே
அடங்கி இருக்கிறது
அன்பு ஒன்றிலே உனது உலகின்
இயக்கம் இருக்கிறது
விருந்தும் ஊட்டுகிறாய்
விமானமும் ஓட்டுகிறாய்
விண்ணோடு ஆய்வுகள் செய்யும்
விந்தையும் நீதான் நிலைநாட்டுகிறாய்
கூட்டுப் புழுவாய்
வீட்டுக்குள் இருப்பதுதான் பெண்மை என
தீட்டாக உனைக் கருதியவரைத்
திரும்பிப் பார்க்க வைத்தவள்
வெற்றி மாலைகள் உன் கழுத்தில்
வெளிப்பட்டு நின்றாலும்
வெட்கத் திரை கிழிக்காத
வெள்ளி நிலாவே
ஆலமரமாய் நிழல் பரப்பி
குடும்பத்தை
ஆளுவதோ உன் திறமை
ஓய்வில்லா இயந்திரத்தை
வருடத்தில்
ஒருமுறை ஞாபகம் செய்வதா
எதிர்பார்ப்பு இல்லாத
எளிமைக் குணம் கொண்டாய்
அதில்தானே உனக்கொரு
ஆறுதலும் நீ கண்டாய்
உனை வாழ்த்துவதற்கு
உள்ள வார்த்தைகள் போதாது
நீடுபுகழ் கொண்டவளே
உனக்கிங்கே ஈடேது

மௌனம்

என். பாரத், மானிப்பாய்

உன்னோடு
பேசுகின்ற
ஒவ்வொரு நிமிஷமும்
என் தாய்மொழியை
நான் மறந்து விட்டேன்
ஆனால்
உன் தாய்மொழியான
மௌனத்தை
கற்றுக்கொண்டேன்
இதுதான் காதலா

விடிவு வரும்

கவிக்கிறுக்கன், இணுவில்

விடிவு வரும்
என்ற நம்பிக்கையில்
விடாது போர் புரிந்தோம்
நாளை சூரியன்
உதிப்பதற்குள் நாங்கள்
வீழ்ந்தாலும் இன்னும்
ஆயிரம் சூரியன்கள்
உதிக்கத்தான் போகின்றன

இயற்கை நியதி

குப்பிளான் குமரன்

கவலை உனக்கு வரும்போது
யாவருக்கும் கவலை வருமாயின்
உணர மாட்டாய் நீ
கவலை என்ற ஒன்றை
வாழ்வின் நியதி இது என
தேற்றிக் கொள்வோம் நாமே நம்மை

இருக்காது இங்கு உலக இயக்கம்
இயற்கை விதித்தது வேறுபாடுகளை
உலகம் இயங்குவதற்காக
இரண்டு பக்கங்கள்
எல்லாவற்றுக்கும் உண்டு
நன்மை தீமை இன்பம் துன்பம்

இறப்பு பிறப்பு இரவு பகல்
எல்லாவற்றிலும் காண்பாய் நீ
இரு பக்கங்களை

உணர்ந்துகொள் நீ
இது இயற்கை நியதியென

நன்மையை நீ உணர்வதற்கு
அவசியமாகின்றது
இன்னொரு தீமை
நன்மையால் இன்று
மகிழ்வுறும் நீ தீமையால்
நாளை துன்பமடைவாய்
தீமையால் இன்று
துன்புறும் நீ நன்மையால்
நாளை மகிழ்வுறுவாய்

விளங்கிக் கொள் நீ
இயற்கையின் நியதியை
சமநிலையை என்றும்
மனதில் உணர்ந்துகொள்
சமநிலைப்படுத்து உன் மனதை
வாழ்வாங்கு வாழ்வாய்
என்றும் நீ சுகமாக

கறுப்பு நிலா

இக்பால் அலி

இருளைத் தீண்டி
விசத்தை ஏற்றி
வெறித்தனத்துடன்
வாக்கு வேட்டையாடி
வெற்றி வாகை சூடிய
கறுப்பு நிலா
பட்டினியால் வாடுகிறது

சுழலும் சூழலின் மேனியில்
கரி நிற மையை அப்பி
புகையையும் பீச்சி
ஊர்வலமாய்
நகர்ந்து செல்லும் வண்டிகள்
கடும் வயிற்று வலியால்
நீரின்றி
இடையில் தரித்து நிற்கின்றன

நெற் கதிர்கள்
கொலை வெறியாட்டத்திற்கு அஞ்சி
குடலையிலேயே
துவண்டு படுத்து
வெயிலில் வெம்பி வெதும்பி
கருகி செத்துக் கிடக்கிறது

கடலில்
கைவிடப்பட்ட மீன்கள்
ஆயுள் கைதியாக
நங்கூரமிட்டு நிற்கின்றன

நோன்பு இருப்போம்
சாவில்லை
மனிதர் வாழும் உலகில்
மிருகங்கள்; வாழ்ந்தால் போதும்
ரொபோக்களாய் மாறுவோம்
யாரும் தேவையில்லை
மண்ணை வெட்டி புறட்டி
தங்கம் செய்வோம்
பயிர் பச்சை தேவையில்லை

வேதம் ஓதி
கடதாசியில் நின்று
விண்ணைத் தொடுவோம்
வா எனக் கூவி
மார்தட்டி
குறி சொன்ன
அடையாளங்களெல்லாம்
ஒரு
கொரோனாக் காற்றுக்கு
அழிந்து போய் கிடக்கிறது

பிடித்த தோசம் நீங்கிட
மடைகளை வைத்து
பிறப்பெடுத்துள்ள பேய் பிசாசுகளை
கட்டிப் போட்டு மந்திரம் ஓத
மனித குணமுள்ள
பிசாசிகளை காவல் காரனாய்
ஆக்க மந்திரம் ஓதுவோம் வாருங்கள்

அது ஒரு கனாக் காலம்

நடராஜா மலர்வேந்தன்

கறுப்பு வெள்ளை
தொலைக்காட்சி பெட்டியும்
கறுப்பு நிற மின்கல பெட்டியும்
கறுப்பாயி அக்கா வீட்டிலும்
மூக்கன் தாத்தா
வீட்டிலுமே காண கிடைக்கும்
அது ஓர் கனாக்காலம்

ஞாயிற்றுக்கிழமை
மதியம் இரண்டு மணிக்கு முன்பாக
மூக்கன் தாத்தா லயத்து வீட்டின்
இஸ்தோப் அறைக்குள்
இளையோர் நாம் இன்முகத்துடன்
லயித்திருப்போமே!

இடையிடையே ஒலியொளியில்
மின்னும் அம்பிகா ஜூவல்லரி
விளம்பரத்தில் ஒலிக்கும்
காந்தக்குரலோன்களின்
குரலோசையும் எம்மை வசப்படுத்தும்
நான்கோ ஐந்தோ தமிழ்ப்பாடல்கள்
எம்மை பரவசப்படுத்தும்

செந்தாழம்பூவில் வந்தாடும் தென்றல்
தென்மதுரை வைகை நதி
குழலூதும் கண்ணனுக்கு
குயில புடிச்சு கூட்டிலடைச்சு
கல்யாண மாலை கொண்டாடும் பெண்ணே...
அதிசய ராகம் ஆனந்தராகம்
இப்படி சில இடைக்காலப் பாடல்கள்
எம்மை இதப்படுத்தும்

இளையோர் கூடி மகிழும்
பொன்மாலைப் பொழுதை

இன்றைய தலைமுறை
அனுபவிக்க வாய்ப்பில்லை

பொலச்சி பாட்டி வீட்டி மாமரத்தின்
வடு மாங்காயுடன் உப்பும் மிளகாய் பொடியும்
தந்திடுமே அமிர்த ருசியை

இத்தனை இன்பம் கண்ட
இளையோர் நாம்
வளர்ந்து வாலிபம் கடந்து
இன்று இப்பாதை வழியே
கடந்து செல்கின்றோம்

மூக்கன் தாத்தாவும்
பொலச்சி பாட்டியும்
மாமரமும் பலாமரமும்
இங்கில்லை

மகிழ்வு தந்த கறுப்பு வெள்ளை
தொலைக்காட்சி பெட்டியுமில்லை
ஒன்றுகூடும் இளையோரும் இங்குமில்லையே!

மாறாத அந்தநாளின்
பொன்மாலைப் பொழுதில்
அனுபவித்த நினைவலைகள்
இன்றும்எம் மனதில் நின்று சுகம்
தருமே நித்தமும்

தனிமை

அகீலா ஜவுபர்
ஏத்தாளை புத்தளம்

தனித்திருந்த காலம்
தனிமை என்னை அழைக்க
தனியே நானும் சென்றேன்
தயங்காமல் என்னை
தன்மடியில் வாங்கி கொண்டது
அந்த தனிமை

தனக்கென ஓர் உறவு
தன்வசமானதை அடுத்து
தற்பெறுமை கொண்டேன் நானும்

கோடி உறவுகள்
கூடி இருந்தாலும்
தனிமை போல் ஓர் உறவு
கிடைப்பது வரம்

படைத்தவனோடு
பேசும் போது
துணை நிற்பதும் தனிமைதான்

விழி நிறைந்து
வழியும் போது
ஆறுதல் அளிப்பதும்
தனிமைதான்

ஆழ்ந்த சிந்தனை
சூழ்ந்திருந்தாலும்
என்னை சுற்றி இருப்பதும்
தனிமைதான்

மனங்கவரும் காட்சியினை
இரசித்து பார்க்கும் போது
என்னருகில் இருப்பதும்
தனிமைதான்

என் புன்முறுவலின்
பின் ஒழிந்திருப்பதும்
தனிமைதான்

என் கவலையின் பின்
துணை நிற்பதும்
தனிமைதான்

மொத்தத்தில் நானே
ஒரு தனிமைதான்

தனிமையான காதல் பூக்கள்

ஒத்தப் பூ
நித்தம் உன்
நினைப்பு

உன்தன் நினைப்பு
என் தவிப்பு
கவலை தீராத
திகைப்பு காலம்
கடந்து வரப்போகுது

மாலை போட
நினைத்த மனம்
இவ் வேளை
எப்போது என
கிட்டும் என
கிடக்கு

மறந்தும் இழந்தும்
நினைத்தும் அழுதபடி
உன் நினைப்பும்

பொத்துவில் அஜ்மல்கான்

நம் பிணைப்பும்
காலம் மறைந்தாலும்
நம் காதல்
மறையாதிருக்க
பேசிப் போகுகிறது
இந்த தவிப்பு

வலிமை

இணுவில் வாகீசன்

வலிமை மனம் கொண்டு – தம்
வலிமை உணர்ந்தவர்கள்
வலிகளை சாதனையாக்கினர்
வலிகளை வழிகளாக்கினர்

இணைய உலகினில் இன்னல்கள் பல
இணைந்த கரங்கள் கொண்டு
இனியொரு விதி செய்யவென
இன்னல்கள் விலக்கினர் மகளிர்

பாலின சமத்துவத்தில் சமமானார்
பாராளும் மன்ற உறுப்பினரானார்
பாவையின் மாண்பினை கூறிடவே
பாரெல்லாம் அணி திரட்டினர்

மகத்துவமிக்க மங்கை

பதுளையூர் ப்ரியவதனா

பாரதி பக்குவமாய்
சொல்லி வைத்த பால பாடம்
வேண்டும் மகளிருக்கு
சுதந்திரம் என்பதும்
அதை தூண்டும் துணிவும்

இன்று உலகம் வரைப்பின்னலுக் கூடாக
வளைத்துப் போடப்பட்டுள்ளது
இங்கு மகளிர் மகத்துவம்
மலைக்க வைக்கிறது

பூமி வெளி தொடங்கி அண்ட வெளிவரை
அவள் தாண்டாத துறை இல்லை
தீண்டாத கருவி இல்லை

அற்பமாக அன்று எண்ணப்பட்டவள்
நுட்பமாக இன்று நுழைவதைப் பார்த்து
பிரமிப்பு இழையோடுகிறது

பெண்ணியம் பேசுபவர்கள் எல்லாம்
பெண்கள் தனித்து நிற்பதாக
பச்சதாபப்படுகிறார்கள்

அன்னை திரேசா அப்படி எண்ணியிருந்தால்
பின்னை நாளில் அவர் வெறும்
திண்ணைத் தூங்கியாக
மட்டுமே இருந்திருப்பார்
அவரை சுற்றி ஆரோகணித்திருந்த

அப்பாவி சீவன்களுக்கு ஆதரவு இல்லாமல்
போயிருக்கும்
பெண்களை பெருமை படுத்துவதாக
என்னி ஆற்றல்களை சிதறடிக்க வேண்டாம்

அவர்களின் அறிவியல் வேட்கையை
அலட்சிய படுத்த வேண்டாம்

பாரதி சொன்னது போல்
பெண்என்றும் சுடர்தான்
முடிந்தால் தூண்டி விடுங்கள்
முடியா விட்டால் தாண்டி நில்லுங்கள்
வெறும் விமர்சனங்களுக்குள் மட்டும்
வைத்து பெண்ணை
வீணடித்து விடாதீர்கள்
வருடம் தோறும் வரும்
மகளிர் தினம்
ஒவ்வொரு வீட்டுக்குள்ளும்
மகத்துவம் மிக்க மாதர்கள் இருப்பதை
மறக்காமல் இருந்தால் இதுவே
நன்றி மிக்க குணம்

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை

விலைமனு அழைத்தல்

Tender Document for Supply of Microsoft Software to the National Medicines Regulatory Authority (NMRA)

1. தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபைக்கு Microsoft Software ஐ வழங்குவதற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் அல்லது வழங்குநர்களிடமிருந்து தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் தலைவர் அழைக்கின்றார்.
2. விலைமனுக்கள், தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக் கோரும் முறைமையினடிப்படையில் (NCB) மேற்கொள்ளப்படும்.
3. தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் தலைவரின் பெயரில் இலங்கை வங்கி ரீஜண்ட் வீதி கிளையின் கணக்கு இலக்கம் 78088835 இற்கு, மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா 3,500.00 இற்கான தொகையைச் செலுத்தி எழுத்துருவ விண்ணப்பமொன்றையும் சமர்ப்பித்து 2022.03.14 முதல் 2022.04.01 வரை, வார வேலை நாட்களில் மு.ப. 09.30 பி.ப. 03.00 வரை, கொழும்பு 02. W.A.D. ராமநாயக்க மாவத்தை, இலக்கம் 47, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் கணக்குப் பிரிவில் இதற்காக ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள முழுமையான விலைமனுப் படிவத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்து கொள்ளலாம்.
4. விலைமனுக்கள் 60 நாட்களுக்குச் செல்லுபடியாகுதல் வேண்டும்.
5. இதற்காக ஆர்வமும் தகுதியும் பெற்றுள்ள விலைமனுதாரர்கள், கொழும்பு 02 W.A.D. ராமநாயக்க மாவத்தை, இலக்கம் 47 இலுள்ள தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் கணக்காளரிடம், வார வேலை நாட்களில் மு.ப. 9.00 மற்றும் பி.ப. 3.30 - இற்கிடைப்பட்ட காலத்தில் தொ.பே. இலக்கம் 0112303157 மூலம் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
6. விலைமனுக்கள், முத்திரையிடப்பட்ட உறைகளில் சேர்த்து, அதன் இடது பக்க மேல் மூலையில் 'Supply of Microsoft Software' எனத் தெளிவாகக் குறிப்பிட்டு, கொழும்பு -02 W.A.D. ராமநாயக்க மாவத்தை, இலக்கம் 47, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை, பிரதான நிறைவேற்று அலுவலர்' என்ற முகவரிக்கு 2022.04.04 அன்று பி.ப. 2.00 இற்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு, தபாலில் சேர்த்தல் அல்லது அதே முகவரியின் கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்த்தல் வேண்டும்.
7. அனைத்து விலைமனுக்களுடனும், 60 நாட்கள் செல்லுபடியாகும், இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட, இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் வணிக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட இலங்கை ரூபா 100,000.00 இற்கான விலைமனுப்பிணையமொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
8. தாமதமாகக் கிடைக்கப் பெறும் கேள்விகள் நிராகரிக்கப்படும். 2022.04.04 அன்று பி.ப. 2.00 இற்கு கணக்குப் பிரிவில் விலைமனுக்கள் மூடப்பட்டு உடனடியாக அவை திறக்கப்படும் அவ்வேளையில் விலைமனுதாரர் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் அழைக்கப்படுவார்.

தலைவர்,
தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை,
இல. 47, W.A.D. ராமநாயக்க மாவத்தை,
கொழும்பு 02

எல்பிட்டிய பெருந்தோட்டங்கள் PLC

விலைமனு அறிவித்தல்

கீழ்க்காணப்படும் உபயோகித்த மோட்டார் வாகனத்தை விற்பனை செய்வதற்காக முத்திரையிட்ட விலைமனுக்களை பெறுகைக்குழுவானது அழைக்கின்றது.

பெயர் மற்றும் முகவரி	தொலைபேசி இலக்கம்	வர்த்தக நாமம்	வாகனத்தின் இலக்கம்
தலைமை அலுவலகம்	011-4693000	KIA Sorento Jeep (டீசல்)	WP KS-4XXX

அனைத்து விலைமனுக்களும் 2022 மார்ச் 25 அன்று பி.ப. 3.30 இற்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு முத்திரையிடப்பட்ட உறைகளில் சேர்த்து அவற்றின் இடது பக்க மேல் மூலையில் **'உபயோகித்த வாகனங்களின் விற்பனை'** எனக்குறிப்பிட்டு பிரதான நிறைவேற்று அலுவலர் எல்பிட்டிய பெருந்தோட்டங்கள் PLVCக்குக் கிடைக்கக் கூடியவாறு சமர்ப்பித்தல் வேண்டும்.

மீளளிக்கப்படாத 1,000/- மற்றும் மீளளிக்கப்பட்டும் ரூபா 5,000/- இற்கான தொகையை வைப்புச் செய்து 2022 மார்ச் 25 வரை தலைமை அலுவலகத்தில் மு.ப. 8.30 முதல் பி.ப. 3.30 வரை வார வேலை நாட்களில் இதற்கான விலைமனுப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

தலைமை அலுவலக பொது முகாமையாளர் (நிருவாகம்/ சட்டம்) உடன் வார வேலை நாட்களில் மு.ப. 8.30 முதல் பி.ப. 3.30 வரை முன்னேற்பாடு செய்து கொண்டு மேற்படி வாகனத்தைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

விலைமனுக்கள் கொழும்பு 2 வொக்ஷோல் வீதி, 1,315, அயிட்கன் ஸ்பென்ஸ் கோபுரம், 9ஆம் மாடி, எல்பிட்டிய பெருந்தோட்டங்கள் PLCயின் தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியில் சேர்க்கப்படலாம் அல்லது பதிவுத்தபாலில் அனுப்பப்படலாம்.

விலமனுக்களை ஏற்றுக் கொள்ளும் அல்லது ஏதாவது அல்லது அனைத்து விலைமனுக்களையும் காரணம் எதுவும் முன்வைக்காமல் நிராகரிக்கும் உரிமை எல்பிட்டிய பெருந்தோட்டங்கள் PLCக்கு உரித்தாகும்.

பிரதம நிறைவேற்று அலுவலர்,
எல்பிட்டிய பெருந்தோட்டங்கள் PLC
9ஆம் மாடி, அயிட்கன் ஸ்பென்ஸ் டவர் 01,
315, வொக்ஷோல் வீதி,
கொழும்பு -02.
தொ.பே. 011-4 693000.

அறிவித்தல்

மதிப்புக்குரிய வாடிக்கையாளர்களே,

இல. 5 ஆர் ஏ. டி. மெல் மாவத்தை, கொழும்பு 4 இல் அமைந்துள்ள ஸ்வர்ணமஹால் நிதிச் சேவைகள் நிறுவனம் 01/03/2022 முதல் கொழும்பு 7, இல. 69/ஏ, ஆர். ஜி. சேனாநாயக்க மாவத்தைக்கு (கிறகரி மாவத்தை), எனும் முகவரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை உங்களுக்கு அரியத்தருகிறோம். இதனால் ஏற்படக்கூடிய சிரமத்திற்கு நாங்கள் வருந்துகிறோம்.

0117534800

Prime wish Garment (Pvt) Ltd

(கீள்ஸ் இற்கு அண்மையில்
மட்டக்குளிய, கொழும்பு-15)

ஆடைத் தொழிற்சாலை வேலை வாய்ப்புக்கள்

ஜுகி ஒப்பரேட்டர்ஸ் - ஆண்/ பெண்
கொலிட்டி செக்கர்ஸ் (QC) ஆண்/ பெண்
மெக்கானிக்/ டெக்னீஷியன்ஸ் கட்டர்ஸ்

மாஸ்க்/பெக்டரி வேலைவாய்ப்புக்கள்

மெஷின் ஒப்பரேட்டர்ஸ், மெக்கானிக்/
டெக்னீஷியன்ஸ் ஸ்டோகீப்பர்,
தொழிலாளர்கள் சாரதிகள்

457, ∴பர்கஸன் வீதி, கொழும்பு - 15
தொ.பே. 0771666919, 0767935537
Email: hr@primewish.com

කෘෂි නවීකරණ ව්‍යාපෘතිය
விவசாய நவீனமயமாக்கல் திட்டம்
Agriculture Modernization Project

THE WORLD BANK
IBRD • IDA | WORLD BANK GROUP

කෘෂිකර්ම අමාත්‍යාංශය
கமத்தொழில் அமைச்சு
Ministry of Agriculture

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்றிட்டம் – கமத்தொழில் அமைச்சு

IDA Credit No.: 5873 LK

பெறுகை அறிவித்தல்

பதுளை மற்றும் அம்பாறை மாவட்டங்களின் உலர்ந்த மிளகாய் உற்பத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கு பொலித்தீன் மறைப்புகள் (Polythene Mulch) மற்றும் கல்வனைஸ்ட் இரும்புக் குழாய்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்

1. கமத்தொழில் அமைச்சின் விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட (ASMP) கிரயச் செலவிற்காக 58.63 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலருக்கு நிகரான தொகையை பலவிதமான பணத்தொகைகளில் கடனொன்றை சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (IDA) இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது பெற்றுள்ளதுடன் இக்கடனின் பெறுகைகளின் பகுதியொன்றை பதுளை மற்றும் அம்பாறை மாவட்டங்களின் உலர்ந்த மிளகாய் உற்பத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கு பொலித்தீன் மறைப்புகள் மற்றும் கல்வனைஸ்ட் இரும்புக் குழாய்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல் என்பவற்றிற்கு ஒப்பந்தத்தின் கீழுள்ள தகுதியுள்ள பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிடுவதற்கு உத்தேசித்துள்ளது.

2. பதுளை மற்றும் அம்பாறை மாவட்டங்களின் உலர்ந்த மிளகாய் உற்பத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கு பொலித்தீன் மறைப்புகள் மற்றும் கல்வனைஸ்ட் இரும்புக் குழாய்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல் எனும் பெறுகைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறியிடப்பட்ட விலைமனுக்களை கமத்தொழில் அமைச்சின் விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டத்தின், செயற்றிட்ட பெறுகைக்குழுவின் தலைவர் அழைக்கிறார்.

விபரங்கள்	ஒப்பந்த இலக்கம்	எண்ணிக்கை	விலைமனுப் பிணை முறியின் பெறுமதி (ரூபா)	மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா)
பதுளை மாவட்ட மிளகாய் திட்டத்திற்கு GI குழாய்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்	LK-MOA- PMU-274156-GO-RFB	11,400 Nos	1,162,800.00	20,000.00
அம்பாறை மாவட்ட மிளகாய் திட்டத்திற்கு GI குழாய்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்	LK-MOA- PMU-273417-GO-RFB	5700 Nos	580,000.00	15,000.00
அம்பாறை மாவட்ட மிளகாய் திட்டத்திற்கு பொலித்தீன் மறைப்புகளை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்	LKA-MOA-PMU-273418-GO-RFB	480,000 L.M	260,000.00	7,500.00
கிளிநொச்சி மாவட்ட மிளகாய் திட்டத்திற்கு பொலித்தீன் மறைப்புகளை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்	LKA-MOA- PMU-273694-GO-RFB	480,000 L.M	260,000.00	7,500.00
முல்லைத்தீவு மாவட்ட மிளகாய் திட்டத்திற்கு பொலித்தீன் மறைப்புகளை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்	LKA-MOA- PMU-277230-GO-RFB	360,000 L.M	200,000.00	5,000.00
பதுளை மாவட்ட மிளகாய் திட்டத்திற்கு பொலித்தீன் மறைப்புகளை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்	LKA-MOA- PMU-274157-GO-RFB	506,000 L.M	270,000.00	7,500.00

3. விலைமனுக்கோரலானது உலக வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
4. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கமத்தொழில் அமைச்சு, விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட, பெறுகைத் திணைக்களத்தின் பெறுகைப் பிரிவிலிருந்து 0777419521 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக பெற்றுக்கொள்ளலாம் மற்றும் 2022-03-14ஆம் திகதியிலிருந்து 2022-04-04ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 2.00 மணி வரையில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர், பின்வரும் முகவரிக்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். பணக்கொடுப்பனவானது செயற்றிட்டத்தின் நிதியிடல் முகாமையாளருக்கு ரொக்கப் பணத்தில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
6. 2022-04-04ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். இலத்திரனியல் விலைமனுக்கள் அனுமதிக்கப்படமாட்டாது. தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
7. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை இரு பிரதிகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என்பன தனித்தனியான உறைகளில் இடப்பட்டு 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதி' என தபாலுறைகளில் குறிக்கப்படல் வேண்டும். அதன் பின்னர் இவ்விரண்டு தபாலுறைகளும் வேறொரு தபாலுறையில் இட்டு முத்திரைக்குறி பொறித்து அதன் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்த இலக்கம் மற்றும் ''பதுளை மற்றும் அம்பாறை மாவட்டங்களின் உலர்ந்த மிளகாய் உற்பத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கு பொலித்தீன் மறைப்புகள் மற்றும் கல்வனைஸ்ட் இரும்புக் குழாய்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
8. மேற்குறிப்பிடப்பட்ட முகவரியானது:

தலைவர்,
செயற்றிட்ட பெறுகைக்குழு,
விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்,
இல. 123/2, பன்னிபிட்டிய வீதி,
பத்தரமுல்ல.

தொலைபேசி: 0112696086 அல்லது 0777419521
திகதி: 2022-03-13.

කෘෂි නවීකරණ ව්‍යාපෘතිය
விவசாய நவீனமயமாக்கல் திட்டம்
Agriculture Modernization Project

THE WORLD BANK
IBRD • IDA | WORLD BANK GROUP

කෘෂිකර්ම අමාත්‍යාංශය
கமத்தொழில் அமைச்சு
Ministry of Agriculture

Funded by
The European Union

பெறுகை அறிவித்தல்

சர்வதேச அபிவிருத்தி சம்மேளனத்தினால் நிறுவப்பட்டது - CREDIT NO.
CR 5873 LK PROJECT ID NO. P156019

ஓர் ஆண்டு காலத்திற்காக ASMP முன்னோடி செயற்திட்டங்களுக்கான விவசாய நிறுவனங்களை நிறுவுதல் மற்றும் செயற்படுத்துவதற்கு சேவை வழங்குநர் ஒருவரை பணியமர்த்தல்

பெறுகை இல. LK-MOA-PMU-277937-NC-RFB

விவசாயத் துறையை நவீனப்படுத்தும் திட்டத்திற்காக (ASMP) சர்வதேச அபிவிருத்தி சம்மேளனத்திடம் (IDA) இருந்து 125.00 மில்லியன் டொலருக்கு நிகரான பல்வேறு நாணயங்களில் இலங்கை சனநாயக சோஷலிச குடியரசுக்கு கடன் ஒன்று கிடைக்கப்பெற்றிருப்பதோடு, அதில் 58.63 மில்லியன் டொலர் கமத்தொழில் அமைச்சுக்கு (MOA) ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த 58.63 மில்லியன் டொலரில் தோராயமாக 6.20 மில்லியன் டொலர் விவசாய பயிற்சி மற்றும் திறனை கட்டியெழுப்புவதற்கான முதலீடுகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஓர் ஆண்டு காலத்திற்காக ASMP முன்னோடி செயற்திட்டங்களுக்கான விவசாய நிறுவனங்களை நிறுவுதல் மற்றும் செயற்படுத்துவதற்கு தேசிய அளவில் குறுகியகால சேவை வழங்குநர் ஒருவரை பணியமர்த்துவதற்கு இந்த கடனில் ஒரு பகுதியை செயற்படுத்த கமத்தொழில் அமைச்சு உத்தேசித்துள்ளது.

1. ஓர் ஆண்டு காலத்திற்காக ASMP முன்னோடி செயற்திட்டங்களுக்கான விவசாய நிறுவனங்களை நிறுவுதல் மற்றும் செயற்படுத்துவதற்கு பொருத்தமான மற்றும் திறன் கொண்ட குறுகியகால சேவை வழங்குநர் ஒருவரை ASMP-MOA தேடுகிறது. https://www.asmp.lk/advertisement/ என்ற இணையதள முகவரியில் தரப்பட்டுள்ள குறிப்பு விதிமுறைகளை (TOR) பார்க்கவும்.
2. ஓர் ஆண்டு காலத்திற்காக ASMP முன்னோடி செயற்திட்டங்களுக்கான விவசாய நிறுவனங்களை நிறுவுதல் மற்றும் செயற்படுத்துவதற்கு குறுகியகால சேவை வழங்குநர் ஒருவரை பணியமர்த்துவதற்கு பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து கமத்தொழில் அமைச்சு, விவசாயத் துறையை நவீனப்படுத்தும் திட்டம், திட்ட பெறுகைக் குழுவின் தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.

விபரம்	விலைமனு பிணையின் பெறுமதி (ரூபா)
ஓர் ஆண்டு காலத்திற்காக ASMP முன்னோடி செயற்திட்டங்களுக்கான விவசாய நிறுவனங்களை நிறுவுதல் மற்றும் செயற்படுத்துவதற்கு குறுகியகால சேவை வழங்குநர் ஒருவரை பணியமர்த்தல்	1,200,000.00

3. உலக வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB) நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
4. ஆர்வம் கொண்ட தகுதியுடைய விலைமனுதாரர்கள் கமத்தொழில் அமைச்சு, விவசாயத் துறையை நவீனப்படுத்தும் திட்டம், பெறுகை நிபுணரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு 2022.03.14 ஆம் திகதி தொடக்கம் 2022.04.04 ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 2.00 வரை கீழுள்ள முகவரியில் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க மற்றும் வாங்கலாம்.
5. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு விவசாயத் துறையை நவீனப்படுத்தும் திட்டத்தின் திட்ட அதிகாரியின் அலுவலகம், 123/2, பன்னிப்பிட்டிய வீதி, பத்தரமுல்லை என்ற முகவரியில் 2022 மார்ச் 24 ஆம் திகதி மு.ப. 11.00க்கு இடம்பெறும். சேவை வழங்குநரின் தகைமை மற்றும் அனுபவம்:
   - சிறந்த பயிற்சி முகாமைத்துவ பதிவு ஒன்றுடன் விவசாய தொழில்நுட்பம், சந்தை இணைப்புகள் மற்றும் தொழில்முயற்சி மேம்பாட்டு பயிற்சிகளுடன் தொடர்புபட்ட பகுதிகளில் தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவ சேவைகளை வழங்கியதில் குறைந்தது 10 ஆண்டுகள் அனுபவம்
   - நிறுனங்களை உருவாக்குதல் மற்றும் அவைகளை முகாமைத்துவம் செய்தலில் அனுபவத்துடன் விவசாயத்தில் தொழில்நுட்ப பரிமாற்ற திட்டங்கள் மற்றும் சந்தை இணைப்புகளை நிறுவுதலின் பரந்த அளவிலான அனுபவம்
   - நிபுணத்துவத்தின் தொடர்புடைய பகுதிகளில் நல்ல அனுபவம் பெற்ற தொழில்முறையாளர்களின் குழு ஒன்றை பணியமர்த்தக்கூடிய நிலையில் சேவை வழங்குநர் இருத்தல் வேண்டும்.
   - தொடர்புடைய துறையில் அரச நிர்வாகத்தினால் வழங்கப்பட்ட வர்த்தகப் பதிவின் சான்றிதழை விலைமனுதாரர் செயற்படுத்தல் வேண்டும்.
   - கடந்த ஐந்து ஆண்டுகளுக்கான சராசரி ஆண்டு புரள்வு 50 மில். ரூபா இருத்தல் வேண்டும்.

B. தேர்வு அளவுகோல்:

i. விவசாய தொழில்நுட்பம், சந்தை இணைப்பு மற்றும் தொழில்முயற்சி மேம்பாட்டு பயிற்சிகள் தொடர்பிலான பகுதிகளில் தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவ சேவைகளை வழங்கியதில் அனுபவம் - ஆண்டுகளின் எண்ணிக்கை
ii. ஒப்படையை செயற்படுத்துவதன் வேலைத்திட்டம் மற்றும் முறை
iii. முக்கிய ஊழியர்களின் திறன்கள் மற்றும் தகுதிகள்
iv. வாடிக்கையாளர் குறிப்பு – வாடிக்கையாளர் தொடர்பு விபரங்களுடன் மேற்கொள்ளப்பட்ட பணி (ஆதார ஆவணங்கள் மூலம் அனுபவங்கள் வழங்கப்படல் வேண்டும்)

C. திட்டத்தின் சிறாப்பருக்கு ரொக்கப்பணமாக 20,000 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி கீழ் தரப்பட்டுள்ள முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம்.

D. விலைமனுக்களை 2022 ஏப்ரல் 04 ஆம் திகதி பி.ப. 2.00 அல்லது அதற்கு முன்னர் கீழுள்ள முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். மின்னணு விலைமனுவுக்கு அனுமதி இல்லை. தாமதிக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. நேரடியாக பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் 2022.04.04ஆம் திகதி பி.ப. 2.00 க்கு கீழுள்ள முகவரியில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

முறையாக பூர்த்தி செய்யப்பட்ட ஆவணங்களை அசல் மற்றும் நகல் என இரு தொகுதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும். அவை இரண்டும் இரு கடித உறைகளில் வெவ்வேறாக மூடப்படுதல் வேண்டும் என்பதோடு முறையே அசல் மற்றும் நகல் என குறிப்பிடுதல் வேண்டும். அந்த இரு கடித உறைகளும் ஒற்றை கடித உறையில் இட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் LK- MOA-PMU-277937-NC-RFB என்ற ஒப்பந்த இலக்கத்தை குறிப்பிடுதல் வேண்டும். மேல் குறிப்பிடப்பட்ட முகவரியானது:

தலைவர்
திட்ட பெறுகைக்குழு
விவசாயத் துறையை நவீனப்படுத்தும் திட்டம்
கமத்தொழில் அமைச்சு, இல.: 122/2,
பன்னிப்பிட்டிய வீதி,
பத்தரமுல்லை.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

SPMC

மருந்தாக்கல், விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சு

அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம் (SPMC)

குமிழ் பொதியிடல் (Blister Packing) பொருட்களுக்காக வழங்குநர்களைப் பதிவு செய்தல்

அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்திலுள்ள ACG BP-102, HOONGA HM400P, IMA ROTOVAC 210 PLUS இயந்திரங்களுக்கு இணங்கக்கூடிய Aluminum Foil, PVC foil, PVDC foil மற்றும் Alu/Alu foil என்பவற்றை வழங்குவதற்காக தம்மைப் பதிவு செய்து கொள்ள விரும்பும் சாத்தியமான உற்பத்தியாளர்கள்/வழங்குநர்கள்/உள்நாட்டு முகவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.
கீழே தரப்பட்டுள்ள மாதிரிக்கமைவாக சகல விண்ணப்பங்களும் தயாரிக்கப்படல் வேண்டும்.

மாதிரிப் படிவம்

குமிழ் பொதியிடல் (Blister Packing) பொருட்களுக்காக வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பம்

01. **வியாபாரத்தின் பெயர் மற்றும் முகவரி :**
02. **பதிவிலக்கம் மற்றும் திகதி :**
03. **வழங்குநர் / உள்நாட்டு முகவரின் பெயர் மற்றும் முகவரி :**
04. **தொலைபேசி, தொலைநகல் இலக்கங்கள் மற்றும் மின்னஞ்சல் முகவரி :**
05. **தயாரிப்புகள் (உற்பத்தியாக்கல் / வழங்கல்) :**
06. **கொள்வனவாளர்களின் பட்டியல் (சர்வதேசம் மற்றும் உள்நாடு) :**

திகதி:..... கையொப்பம்: ..... பதவி:.....

சகல விண்ணப்பங்களையும் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''குமிழ் பொதியிடல் **(Blister Packing)** பொருட்களுக்காக வழங்குநர்களைப் பதிவு செய்தல்'' எனக் குறிப்பிட்டு 2022 மார்ச் 31ஆம் திகதி அல்லது அதற்கு முன் பதிவுத் தபாலில் தலைவருக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

விண்ணப்பங்களுடன் மேற்குறிப்பிடப்பட்ட தகவல்களை உறுதி செய்வதற்கான அடிப்படை ஆவணங்கள் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் கிடைக்கப்பெற்றுள்ள விண்ணப்பங்களை மீளாய்வு செய்வதற்கு அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தினால் வேண்டப்படும் போது மாதிரிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களை 2623298/ 2637574/ 2635353 எனும் தொலைபேசி இலக்கங்களின் ஊடாக பிரதிப் பொது முகாமையாளர் - திட்டமிடல் மற்றும் பெறுகைகள் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்,
அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம்,
இல. 11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, கந்தவல தோட்டம்,
இரத்மலானை.

ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான வேண்டுகோள்

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

நீர்ப்பாசன அமைச்சு

வாரி சௌபாக்கிய நீர்ப்பாசன செழுமை

ஒருங்கிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ செயற்றிட்டம் (IWWRMP)

செயற்றிட்ட முகாமைத்துவ பணிமனை

(கடன் இல. : IDA-66210)

IWWRMP செயற்றிட்டத்திற்கு முகாமைத்துவ தகவல் முறைமையைத் (MIS) தயாரிப்பதற்கான ஆலோசனைச் சேவை

ஒப்பந்த இலக்கம் : LK-MOMDE-121717-CS-CQS

1.0 இலங்கை சனநாயக, சோஷலிசக் குடியரசானது உலக வங்கியிடமிருந்து ஒருங்கிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ செயற்திட்டத்திற்கான கிரயச் செலவுகளுக்கான நிதி வசதியைப் பெற்றுள்ளது. இதன் ஒரு பகுதியை ஆலோசனை சேவைகளுக்காக செலவு செய்வதற்கு உத்தேசித்துள்ளது.

2.0 IWWRMP திட்டத்திற்கான முகாமைத் தகவல் முறைமையை தயாரிப்பதே ஆலோசனைச் சேவையின் நோக்கமாகும். மதிப்பீடு செய்யப்பட்ட செயற்படுத்தல் காலம் மூன்று (03) மாதங்கள் என்பதுடன் எதிர்பார்க்கப்படும் பணியின் தொடக்க காலம் 2022 மே மாதமாகும். இந்த சேவையின் மேலதிக விவரங்கள் குறிப்பு விதிமுறைகளில் (TOR) விவரிக்கப்பட்டுள்ளன.

3.0 பணிக்கான குறிப்பு விதிமுறைகளை www.iwwrmp.lk/advertisements எனும் இணையதளத்தில் பார்வையிடலாம்.

4.0 ஒருங்கிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவத் திட்டம் இப்போது சேவைகளை வழங்குவதில் ஆர்வம்காட்ட தகுதியான ஆலோசனை நிறுவனங்களை அழைக்கிறது. ஆர்வமுள்ள ஆலோசனை நிறுவனங்கள் சேவைகளைச் செய்வதற்குத் தேவையான தகுதிகள் மற்றும் பொருத்தமான ஆலோசனை நிறுவனங்கள் அனுபவம் இருப்பதை நிரூபிக்கும் தகவலை வழங்க வேண்டும்.

5.0 ஆர்வமுள்ள ஆலோசகர்கள், சேவைகளைச் செய்வதற்குத் தேவையான தகுதி மற்றும் பொருத்தமான அனுபவத்தைப் பெற்றிருப்பதை நிரூபிப்பதற்கான தகவல்களை வழங்குதல் வேண்டும் மற்றும் சமர்ப்பித்தல் வேண்டும். (அ) ஆலோசனை நிறுவனத்தின் சுயவிபரம், நிறுவனத்தின் முக்கியப் பணியாளர்களின் பெயர்கள் மற்றும் அவர்களின் கடந்த கால அனுபவத்தை உள்ளடக்கிய குறுகிய சுய தரவுகள் (CV) (தயவுசெய்து காலம் முழுவதும் முக்கிய ஊழியர்கள் இருப்பதை உறுதிசெய்க), பிரசுரங்கள் மற்றும் பல, (ஆ) கடந்த 5 ஆண்டுகளில் வெளிநாட்டு நிதியுதவி திட்டங்களில் நிறைவேற்றப்பட்ட ஒப்பந்தப் பணிகளின் பட்டியல், மனித மாதத்தின் இணைந்த ஆலோசனை ஒப்பந்தங்களின் அளவு மற்றும் அமெரிக்க டொலர்களுக்கு இணையான ஒப்பந்தகால அளவு (வாடிக்கையாளரைத் தொடர்புகொள்ளும் விபரங்கள் சகிதம்) (இ) கடந்த ஐந்து வருடங்களுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கைகள், (ஈ) கிடைக்கத்தக்க ஏனைய வளங்கள் மற்றும் புதிய தொழில்நுட்ப உத்திகள்.

6.0 ஆலோசகர்கள் தங்கள் தகுதிகளை மேம்படுத்த ஏனைய நிறுவனங்களுடன் கூட்டாக முயற்சிக்கலாம். ஆனால் மேற்படி முயற்சி ஒரு கூட்டு மற்றும் / அல்லது உப-ஆலோசனையின் வடிவத்தில் உள்ளதா என்பதை தெளிவாகக் குறிப்பிட வேண்டும். ஒரு கூட்டு முயற்சியைப் பொறுத்தவரை, கூட்டு நிறுவனத்தில் உள்ள அனைத்து பங்காளர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டால், முழு ஒப்பந்தத்திற்கும் கூட்டாகவும் தனித்தனியாகவும் பொறுப்பானவர்களாவர். ஒரு நிறுவனம் / அமைப்பு ஒரு தனி ஆலோசகரை கூட்டு முயற்சியின் பங்காளர் அல்லது துணை ஆலோசகராக ஒரு திட்டத்தில் மட்டுமே பங்கேற்க அனுமதிக்கின்றது என்பதை தயவு செய்து கவனத்திற் கொள்ளவும்.

7.0 2016 ஜுலை மாதம் திகதியிடப்பட்ட 2017 நவம்வர் மற்றும் 2018 ஆகஸ்ட் மாதங்களில் திருத்தப்பட்ட உலக வங்கியின் ''IPF கடன் வாங்குபவர்களுக்கான பெறுகை விதிமுறைகள்'' பிரிவு III, பத்திகள், 3.14, 3.16 மற்றும் 3.17 மற்றும் உலக வங்கியின் ஆர்வ முரண்பாட்டுக் கொள்கை என்பவற்றை ஆர்வமுள்ள ஆலோசகர்களின் கவனத்திற்கு முன்வைக்கின்றது.

8.0 2016 ஜுலை மாதம் திகதியிடப்பட்ட 2017 நவம்பர் மற்றும் 2018 ஆகஸ்ட் மாதங்களில் திருத்தப்பட்ட உலக வங்கியின் **"IPF கடன் வாங்குபவர்களுக்கான பெறுகை விதிமுறைகள்"** வழிகாட்டியின் பிரகாரம் ஆலோசகரின் தகுதித் தேர்வு (CQS) முறைக்கு ஏற்ப பெறுகை ஒழுங்குவிதிகளின் பிரகாரம் ஒரு ஆலோசகர் தெரிவு செய்யப்படுவார்.

9.0 ஆர்வமுள்ள ஆலோசகர்கள் மேலதிக தகவல்களை சிரேஷ்ட செயற்றிட்ட நிபுணர் (பெறுகைகள் மற்றும் ஒப்பந்தங்கள்) அவர்களிடமிருந்து பின்வரும் முகவரியில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் (+94 112691163) தொலைநகல்: 0094-11-2691163 மின்னஞ்சல்: iwwrmp@sltnet.lk மூலம் வேலை நாட்களில் மட்டும் பெற்றுக்கொள்ளலாம்.

10.0 ஆர்வ வெளிப்பாடுகளை எழுத்து வடிவில் நகல் பிரதியுடன் பின்வரும் முகவரிக்கு 2022 ஏப்ரல் 4ஆம் திகதி பி.ப. 2.00 மணி (உள்ளூர் நேரம்) அல்லது அதற்கு முன் ஒப்படைத்தல் வேண்டும்.

செயற்றிட்டப் பணிப்பாளர்,
ஒருங்கிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ செயற்றிட்டம்,
2 வது மாடி, மகாவலி நிலையம்,
இல. 96, ஆனந்த குமாரசாமி மாவத்தை,கொழும்பு 07, இலங்கை.
தொலைபேசி : + 94-112691163
தொலைநகல் : + 94-112691163
மின்னஞ்சல் : iwwrmp@sltnet.lk

it's what you want
www.adz.lk
Hotline: 0112 429 369 | Email: adzsuo@gmail.com

Hotline: 0112 429 369 | Email: adzsuo@gmail.com
PLACE YOUR AD ON ADZ MAGAZINE & GET FREE AD ON WEBSITE

வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம்

புதிய மாணவர்களை சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பக்கோரல்

புதிய மாணவர்களை சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதுடன் அது தொடர்பான பத்திரிகை விளம்பரமானது 2022 மார்ச் மாதம் 13 ம் திகதி (Sunday observer) சன்டே ஒப்சேர்வர் பத்திரிகையில் பிரசுரமாகவுள்ளது. மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள பல்கலைக்கழகத்தின் இணையத்தளத்தினை பார்வையிடவும்.

www.uovt.ac.lk

துணைவேந்தர்
வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம்,
இல.100, கந்தவல,
இரத்மலானை.

தொலைபேசி : 011-2630777

மின்னியலாளர்கள் / தொழிலாளர்கள் தேவை

உங்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பு உள்ளது...

மின்சாரத் தொழிற்துறையில் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழ்களுடன், குறைந்தபட்சம் ஒரு வருட அனுபவம் சிறப்புத் தகுதியாகக் கருதப்படும். 35 வயதுக்கு குறைந்தவர்களாக இருக்க வேண்டும். திறமை வாய்ந்த / திறமையற்ற தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு தொடர்பான முழுமையான பயிற்சி வழங்கப்படும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படலாம். தங்குமிட வசதி வழங்கப்படும்.

நோடெக்ஸ் தனியார் நிறுவனம்
இல. 332, காலி வீதி, கொழும்பு 04.
தொலைபேசி 0715337786

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

விலை மனுக்கோரல்

1. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பிரதான வளாகம் மற்றும் கொழும்பு பிராந்திய நிலையம்/ கற்கை நிலையங்களில் எலிக் கட்டுப்படுத்தல்
2. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பிரதான வளாகம் மற்றும் கொழும்பு பிராந்திய நிலையம்/ கற்கை நிலையங்களில் பூச்சிக் கட்டுப்படுத்தல்
3. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பிரதான வளாகம் மற்றும் கொழும்பு பிராந்திய நிலையம்/ கற்கை நிலையங்களில் கறையான் கட்டுப்படுத்தல்

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் சார்பாக தலைவர், திணைக்கள பெறுகை குழு அவர்கள் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பிரதான வளாகம் மற்றும் கொழும்பு பிராந்திய நிலையம் அல்லது கற்கை நிலையங்களுக்கு மேற்குறித்த சேவை வழங்குவதற்காக புகழ்பூத்த நிறுவனங்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை தற்போது அழைக்கின்றார்.

இல	ஒப்பந்தத்தின் பெயர்	மீளச்செலுத்தமுடியாத கேள்வித் தொகை (ரூ.)	விலைமனு பிணை
01.	இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பிரதான வளாகம் மற்றும் கொழும்பு பிராந்திய நிலையம் / கற்கை நிலையங்களில் எலிக் கட்டுப்படுத்தல்	1,000.00	25,000.00
02.	இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பிரதான வளாகம் மற்றும் கொழும்பு பிராந்திய நிலையம் / கற்கை நிலையங்களில் பூச்சிக் கட்டுப்படுத்தல்	1,000.00	25,000.00
03.	இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பிரதான வளாகம் மற்றும் கொழும்பு பிராந்திய நிலையம் / கற்கை நிலையங்களில் கறையான் கட்டுப்படுத்தல்	1,000.00	25,000.00

ஆர்வமுள்ள மனுதாரர்கள் எழுத்து மூலமான விண்ணப்பப் படிவத்தினை சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/ பொது நிர்வாகப் பிரிவு, இலங்கை திறந்த பல்கலைக்கழகம் எனும் முகவரியில் சமர்ப்பிப்பதன் மூலம் **14 மார்ச் 2022 முதல் 04 ஏப்ரல் 2022 வரையிலான வேலைநாட்களில் மு.ப.9.00 மணியிலிருந்து பி.ப.3.00 மணிவரை, மீளச்செலுத்தமுடியாத வைப்புத் தொகையான ரூ.1000.00 இனை** பல்கலைக்கழக காசாளரிடம் செலுத்தி ஆங்கில மொழியில் காணப்படும் விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியினைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும். அனைத்து விலைமனு ஆவணங்களும் 120 நாட்களுக்கு (02 ஒகஸ்ட் 2022 வரை) செல்லுபடியாகக்கூடிய ரூ. 25, 000.00 பெறுமதியான வங்கிப் பிணைகளை கொண்டிருத்தல் வேண்டும். வங்கிப் பிணை இலங்கை மத்திய வங்கியின்கீழ் பதிவுசெய்யப்பட்டிருக்கும் வணிக வங்கியொன்றில் இருந்து தலைவர், திணைக்கள பெறுகைக் குழு இலங்கை திறந்த பல்கலைக்கழகம் எனும் பெயரிற்கு வைப்புச் செய்வதன் மூலம் அல்லது பல்கலைக்கழக காசாளரிற்கு பணமாக செலுத்துவதன் மூலம் பெறப்பட்டிருத்தல் வேண்டும்.

முழுமையாகப் பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்களை "மூலம்" மற்றும் "பிரதி" எனக் குறிப்பிட்டு அவற்றினை முத்திரையிடப்பட்ட இரண்டு தனித்தனி கடித உறைகளில் இட்டு பின்னர் ஒரேகடித உறைகளில் இட்டு அக்கடித உறையில் முத்திரையிடப்பட்டு கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் ஒப்பந்தகாரரின் பெயரினைக் குறிப்பிட்டு 05 ஏப்ரல் 2022 அன்று **1400 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு** கீழே கொடுக்கப்பட்டிருக்கும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும் அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழக பொது நிர்வாக பிரிவில் வைக்கப்பட்டிருக்கும் விலைமனுக்கோரல் பெட்டியில் இடப்படல்வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் எக்காரணத்திற்காகவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

05 ஏப்ரல் 2022 பி.ப. 02.00 மணிக்கு மனுதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் வருகையுடன் இலங்கை திறந்த பல்கலைக்கழக பதிவாளர் அலுவலகத்தின் சபாமண்டபத்தில் கேள்விகள் திறக்கப்படும்.

மேலதிக விபரங்களை சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/ பொது நிர்வாகப் பிரிவு (தொலைபேசி இலக்கம். 0112881209) மற்றும் பொது சுகாதார பரிசோதகர் (தொலைபேசி இலக்கம். 0112881381) இலங்கை திறந்த பல்கலைக்கழகம் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

தலைவர்,
திணைக்கள பெறுகை குழு,
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்,
நாவல, நுகேகொட.
13, மார்ச் 2022

Trusted Marketplace of Classified Advertisers...
Green Light for Online Transfer
Lake House Branch Acc. No. 000000377
Classified
SUNDAY OBSERVER
Inquiries :- Ramani - 077 7 278 948/ 011 2 429 347 | Piyumi - 011 2 429 383 | Gayani - 011 2 429 342/ 343
077 7 270 067
E-mail - classified@lakehouse.lk

Promotional Rates for a Classified Advertisements (Only 15 Words)
Any Single Newspaper Rs. 500/- (Except Thinakaran Vaaramanjari)
Two Newspapers Rs. 700/- (Except Thinakaran Vaaramanjari)
Three Newspapers Rs. 850/-

Hand over your Classified Advertisements to Our nearest Branch Office
Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 38 910
Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291 / Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335
Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 2225361 FAX : 021 22 25 361

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

இலங்கை வந்து தமிழர்களுடன் பேசிப் பழகியது சந்தோஷம் தருகிறது. அவர்களிடம் நல்ல திறமை இருக்கிறது என இந்திய திரைப்பட நடன இயக்குனரும், மானாட மயிலாட நிகழ்ச்சி நடுவருமான கலா மாஸ்டர் தெரிவித்துள்ளார். தினகரன் வாரமஞ்சரிக்கு வழங்கிய விசேட பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தெரிவித்த கருத்துக்கள் முழுமையாக...

நான் எப்போதும் இலங்கை தமிழர்களுக்கு ஆதரவானவள்

இலங்கை தமிழர்கள் குறித்து மனம் திறந்து பேசிய தமிழக திரைப்பட நடன இயக்குன் கலா மாஸ்ரர்

நேர்காணல்
கி.வசந்தரூபன்
(வவுனியா விசேட நிருபர்)

கேள்வி: சினிமாத்துறையில் உங்கள் அனுபவம் பற்றி நீங்கள் சொல்ல விரும்புவது என்ன?

பதில்: நான் 12 வயதில் இருந்து சினிமாவில் இருக்கின்றேன். 40 வருடம் இதில் இருக்கின்றேன். கிட்டத்தட்ட 4000 பாடல்களுக்கு நடன அமைப்புச் செய்துள்ளேன்.. தேசிய விருது, மாநில விருது, பிலிம் பெயார் விருது என்பவற்றை பெற்றுள்ளேன். மானாட மயிலாட நிகழ்வை தயாரித்து நடுவராக இருந்துள்ளேன்.

மானாட மயிலாட நிகழ்வை 10 சீசன் வரை செய்து கின்னஸ் விருதும் வாங்கியிருக்கின்றேன். சினிமா துறையில் பாடியிருக்கின்றேன். தொலைக்காட்சியில் பல நிகழ்ச்சிகள் செய்துள்ளேன். தற்போது சினிமாவிலும் நடித்து வருகின்றேன். விஜய் சேதுபதி, நயன்தாரா, சமந்தா படத்தில் இணைந்து நடிக்கும் காத்து வாக்கில் ரெண்டு காதல் படத்தில் நடித்தி வருகின்றேன். எனக்கு எல்லா துறையிலும் நிறைய சாதிக்க வேண்டும் என்ற ஆசை. பல நிகழ்ச்சிகளை வழங்கியுள்ளேன்.

கேள்வி: இலங்கைக்கு வந்துள்ளீர்கள். இலங்கை எவ்வாறு உள்ளது?

பதில்: ரொம்ப சந்தோசமாக இருக்கிறது. கனடாவில் உள்ள அம்பிகா ஜ்வலறி உரிமையாளர்களின் வேண்டுதலின் பேரிலேயே இலங்கை வந்து வவுனியா உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கு சென்றுள்ளேன். நிறைய இடங்களை பார்த்துள்ளேன். இராமர், இராவணன் இருந்த இடங்கள், தமிழர்களுடைய கடவுள் முருகன் வள்ளி வாழ்ந்த இடம் என பல இடங்கள் இலங்கையில் உள்ளன. அவற்றை எல்லாம் நான் பார்க்க வேண்டும். படப்பிடிப்புக்காக வரும்போது படப்பிடிப்பு முடிந்ததும் நாங்கள் இந்தியா போய் விடுவோம். நல்ல கதையுள்ள இடங்களை பார்க்கவில்லை. இராமர் வாழ்ந்த இடங்கள் பார்க்க வேண்டும். அத்துடன் இலங்கை தமிழர்களையும் பார்த்து பழக கிடைத்திருக்கிறது. இங்கு வந்து இவ்வாறு பழகுவது நல்ல சந்தோசத்தை தந்துள்ளது.

கேள்வி: இலங்கையில் தமிழர்களுடைய கலை ஆர்வம் எவ்வாறு உள்ளது?

பதில்: இலங்கை தமிழர்களிடம் நிறைய திறமை இருக்கிறது. நடனம், பாடல் என பல திறமைகள் உண்டு. அவர்களை முன்னுக்கு கொண்டு வரவேண்டும். கனடாவில் உள்ள பெண் ஒருவர் உலக அழகிப் போட்டிக்காகத் தன்னை தயார்ப் படுத்தி வருகின்றார். அவருக்கு நான் நடன வகுப்பு எடுத்துள்ளேன். அது மகிழ்ச்சி. இலங்கை தமிழர்களிடம் நிறைய திறமைகள் உள்ளன. லொஸ்லியா எல்லாம் இலங்கையில் இருந்து வந்து இந்தியாவில் பிரபல்யமாக உள்ளார். இலங்கை தமிழர்களின் திறமைகளை வெளிக்கொண்டு வர களங்களும், ஆட்களும் இல்லை. இலங்கையில் இருந்து பலர் நடனக் கலையை ஒன் லைனில் கற்கிறார்கள். எதிர்காலத்தில் இலங்கையிலும் நடனம், யோகா என்பவற்றை கற்பிக்கும் திட்டம் என்னிடம் உள்ளது.

கேள்வி: அண்மைக்காலமாக இந்தியாவின் சின்னத்திரை மற்றும் சினிமா துறையில் இலங்கை கலைஞர்கள் பங்கு பற்றும் ஆர்வம் அதிகரித்துள்ளது. இது எதிர்காலத்தில் எவ்வாறு அமையும் என எதிர்பார்க்கிறீர்கள்?

பதில்: தற்போது கொஞ்சம் கொஞ்சமாக வந்திருக்கிறார்கள். இதனை நிரந்தரமாக மாற்ற வேண்டும். அவர்களுடைய திறமையை முழுமையாக கொண்டு வருவதற்கு முயற்சி செய்ய வேண்டியுள்ளது. அது தான் என்னுடைய மனத்தில் உள்ளது. கனடா, லண்டன், அமெரிக்கா, அவுஸ்ரேலியா போன்ற நாடுகளின் எனது நடன வகுப்புக்களில் அதிகமாக இலங்கை தமிழர்களே பங்குபற்றுகிறார்கள்.

அவர்களிடம் நிறைய திறமை இருக்கிறது. அவர்கள் நிச்சயமாக முன்னுக்கு வருவார்கள்.

கேள்வி: நீங்கள் ஒரு பெண்ணாக இருந்து சினிமா துறையில் சாதித்துள்ளீர்கள். பெண்களின் நிலை குறித்து உங்கள் கருத்து என்ன?

பதில்: நடன கலைஞர்களில் பெண்களுக்கு எது கடினம் எனில் குடும்ப ஆதரவு இருக்காது. திறமை வெற்றியடையும் வரை குடும்பத்தினர் ஆதரவைக் கொடுக்கமாட்டார்கள். அதையும் மீறி நாங்கள் வெற்றியடைவது தான் பெண்களின் திறமை. ஏனெனில் நடனத்துக்கு தேவையான ஒழுக்கம், நேர்மை, திறமையை வெளிப்படுத்தினாலே நமக்கு வெற்றி நிச்சயம். அவ்வாறு சாதித்து தான் நான் இந்த நிலையை அடைந்தேன். பெண்கள் வீட்டுக்குள் மட்டும் தான் நடனம் ஆடுவேன். வெளியில் ஆடினால் நிறையபேர் பார்ப் பார்கள் என்று வெட்கப்படுவார்கள். இதனை மீறி வெளியில் வாருங்கள் பெண்களால் சாதிக்க முடியாது என எதுவுமில்லை. எதையும் சாதிக்கலாம். நடன கலைஞர்களுக்கு எனது சிறிய அறிவுரை மனதைரியம் வேண்டும். எந்த தடையையும் தகர்த்து வெளியில் வந்து வெற்றியடைவது தான் பெண்களின் திறமை. எல்லாப் பெண்களுக்கும் நான் கூற வேண்டியது என்னவெனில் நாம் தைரியமாக இருக்க வேண்டும். எங்களால் முடியாதது எதுவுமே இல்லை. எதையும் சாதிக்க முடியும். ஆரம்பத்தில் பெண்கள் முன்வருவது குறைவாக இருந்தது. தற்போது ஆண்களுக்கு சரிநிகராக பெண்கள் முன்வருகின்றார்கள். எமது சினிமா துறையில் ஆரம்பத்தில் ஓரிருவர் தான் பெண்கள். ஆனால் தற்போது 50 வீதம் பெண்கள் இருக்கிறார்கள். சாதிக்க வேண்டும் என நினைக்கும் பெண்கள் சாதித்து காட்டுங்கள். உங்கள் இலக்குகளில் வெற்றியடையுங்கள். வாழ்க்கை என்பது ஒரு முறைதான் அதில் நாம் வெற்றியடைந்து நிமிர்ந்து நின்று நாம் யார் என்பதை காண்பிக்க வேண்டும்.

கணவர் மற்றும் மகனுடன்

கேள்வி: இலங்கை விஜயத்தில் வடக்கு - கிழக்கு சென்ற அனுபவம் பற்றி சொல்லுங்கள்?

பதில்: எனக்கு வடக்கு கிழக்கு என்ற வேறுபாடு இல்லை. இலங்கை தமிழர்களுக்கு என்ன செய்யலாம் என்பதே நோக்கம். என்னை அழைத்தமையால் இங்கு வந்தேன். நிறைய மாணவர்களை சந்தித்தேன். யாழ்ப்பாணம் கூட சென்று வந்தேன். தமிழர்களுக்காகவே இதனை செய்கின்றேன்.

கேள்வி: இலங்கையின் நிலைமைகள் தற்போது எப்படி உள்ளது?

பதில்: நிறைய பேர் எங்கு போறீர்கள் எனக் கேட்டார்கள். கொழும்பு போய் வடக்கிற்கு போறேன் என்றேன். வவுனியா, யாழ்ப்பாணம் என்றால் போக பயமில்லையா என்றார்கள். வடக்கு கிழக்கு தொடர்பில் தப்பான எண்ணம் எல்லோர் மனதிலும் உள்ளது. ஆனால் அவர்கள் நினைப்பது போல் இங்கு போய் வர எந்தப் பிரச்சினையும் இல்லை. எல்லோரும் வர முடியும். அவர்கள் வந்து பல இடங்களை பார்க்கலாம். இங்குள்ள தமிழ் மக்களுடன் பேசலாம். பார்க்க வேண்டிய நல்ல இடங்கள் உள்ளன. முருகன் வள்ளியை சந்தித்த இடமும் இலங்கையில் உள்ளது. இராமர், இராணவர் வாழ்ந்த இடம் என எல்லாவற்றையும் பார்க்க முடியும். இங்கைக்கு வரும் போது மனசு மிகவும் மகிழ்ச்சியாகவுள்ளது. எனது சொந்த ஊருக்கு போன மாதிரி ஒரு மகிழ்ச்சி இருக்கிறது. வட இந்தியாவில் இருந்து வந்தால் கூட இங்கு பல இடங்களை அவர்கள் பார்க்க முடியும். அவர்களுக்கும் இராமர் பக்தி இருக்கிறது. சென்னையில் உள்ள பலர் சிறிலங்கா வந்து பல இடங்களை பார்க்க வேண்டும் என்ற அவாவில் உள்ளார்கள்.

கேள்வி: வடக்கு - கிழக்கு மக்கள் யுத்தத்தால் பாதிப்படைந்துள்ளார்கள். அவர்களது பாதிப்பு தொடர்பில் உங்கள் கருத்து என்ன?

பதில்: யுத்தம் காரணமாக இலங்கை தமிழர்கள் பாதிக்கப்பட்டமை பற்றி எனக்கு நிறைய கதைகள் தெரியும். அவற்றை கேட்டு நான் வேதனையடைந்து இருக்கின்றேன். நேரில் பார்க்கும் போது கவலையாக இருந்தது. சில இடங்களில் நான் கண்ணீர் விட்டு அழுது கூட இருக்கின்றேன். இந்த உலகத்தில் எல்லோருக்கும் சுதந்திரம் உண்டு. யாரும் யாருக்கும் அடிமை கிடையாது. கனடா, லண்டன் என பல நாடுகளில் தமிழர்கள் கோடீஸ்வரர்களாக இருக்கிறார்கள். அந்த நாடுகள் அதற்கு உரிமை கொடுத்துள்ளது. நான் எப்போதும் இலங்கை தமிழர்களுக்கு ஆதரவாக இருப்பேன்.

எல்ல ஓடிசி-சுற்றுலாவுக்கு ஒரு மகிழ்ச்சி ரயில்

நாராயணசாமி ஜெயரட்னம்
களுத்துறை சுழற்சி நிருபர்

இலங்கையில் சுற்றுலா துறையை ஊக்குவித்து மேம்படுத்தும் வகையில் குறிப்பாக வெளிநாட்டு உல்லாசப் பயணிகளை இலக்காக கொண்டு இலங்கை புகையிரத திணைக்களத்தின் ஏற்பாட்டில் மத்திய மலைநாட்டின் வரலாற்று புகழ் பெற்ற கண்டி மாநகரில் இருந்து அந்நியர் ஆட்சிக்கு எதிராக பல புரட்சிகளை மேற்கொண்டு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஊவா (வெல்லஸ்ஸ) மாகாணத்தில் அமைந்துள்ள தெமோதரை வரையிலான "எல்ல ஒடிசி" (The Ella Odyssey, நீண்ட வரலாறு சாகச பயணம்) என்ற கருப்பொருளில் குளிரூட்டப்பட்ட நாளாந்த அதி சொகுசு சுற்றுலா புகையிரத சேவை கடந்த பெப்ரவரி மாதம் ஐந்தாம் திகதி காலை 7 மணியளவில் கண்டி புகையிரத நிலையத்தில் இருந்து போக்குவரத்து அமைச்சர் திலும் அமுணுகம தலைமையில் தனது கன்னிப் பயணத்தை ஆரம்பித்தது ஆங்காங்கே பெரும் வரவேற்பு ஆரவாரங்களுக்கு மத்தியில் தெமோதரை புகையிரத நிலையத்தை வெற்றிகரமாக சென்றடைந்தது.

கண்டி புகையிரத நிலையம் ஆங்கிலேயர் காலத்தில் இற்றைக்கு 155 வருடங்களுக்கு முன் அதாவது 1867ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி முதல் முறையாக பெருந்தோட்ட உற்பத்தி பொருட்களை கொழும்புக்கு கொண்டு செல்லவும் அதே ஆண்டில் ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதலாவது பயணிகள் போக்குவரத்து சேவையும் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.

தெமோதரை புகையிரத நிலையம் 1923ஆம் ஆண்டில் பெப்ரவரி மாதம் 5ஆம் திகதியில் இருந்து தனது போக்குவரத்து நடவடிக்கைகளை மேற்கொண்டு கடந்த பெப்ரவரி மாதத்துடன் 99 ஆண்டுகளை பூர்த்தி செய்துள்ளது. தற்போது நூறாவது ஆண்டில் கால் பதிந்து இலங்கை போக்குவரத்து துறையில் மாபெரும் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது.

அதேபோல் கண்டி புகையிரத நிலையம் நவீன விக்டோரியன் கலை வடிவில்

நிர்மாணிக்கப் பட்டுள்ளதுடன் தெமோதரை புகையிரத நிலையமும் சில சிறப்பம்சங்களை கொண்டுள்ளது எனலாம். உதாரணமாக எல்ல (Ella) பகுதியில் இருந்து பதுளை நோக்கி பயணிக்கும் புகையிரதமானது குறித்த புகையிரத நிலையத்தில் தரித்து மீண்டும் பயணத்தை ஆரம்பிக்கும் போது ஒரு சிறிய மலைக் குன்றை சுற்றி வந்து மீண்டும் புகையிரத நிலையத்திற்கு கீழ் தளத்தில் அமைந்துள்ள சுரங்கப் பாதையின் ஊடாக வெளியேறும்போது சுரங்கத்திற்கு வெகு அருகாமையில் வானவில் வடிவிலான வளைவு பாலம் ஒன்றும் அமைந்துள்ளது. இதனூடாக புகையிரதம் செல்லும் போது தலைப்பாகை கட்டுவது போன்ற வடிவமைப்பை கொண்டுள்ளதை காணலாம்.

காலை ஏழு மணிக்கு கண்டி புகையிரத நிலையத்தில் இருந்து இரு "பவர் செட்" S14 எஞ்சின்களுடன் கூடிய இலக்கம் 1041 புகையிரதம் நான்கு முதலாம் வகுப்பு பெட்டிகளையும் மூன்று இரண்டாம் வகுப்பு பெட்டிகளையும் ஒரு உணவு வண்டியையும் இணைத்துக் கொண்டு தனது பயணத்தை ஆரம்பிக்கும் "எல்ல ஒடிசி" சுற்றுலா புகையிரதம் பேராதெனிய சந்தி 7.15, கெலிஓயா 7.28, நாவலப்பிட்டி 8.05, ஹட்டன் 9.12, கிரேட் வெஸ்டர்ன் 10.18, நானுஓயா 10.40, பட்டிபொல, ஒஹிய, இதல்கஸ்ஹின்ன 12.40, ஹப்புதளை 12.45 மற்றும் எல்ல 2.10 போன்ற பிரதான புகையிரத

நிலையங்களில் தரித்து நின்ற பின்னர் இறுதியில் பிற்பகல் 2.45 மணியளவில் தெமோதரை புகையிரத நிலையத்தைச் சென்றடையும். இதனிடையே இப் புகையிரத நிலையங்களை தவிர புகையிரத நிலையங்கள் அல்லாத ஹொஸ்டேல் நீர்வீழ்ச்சி, சிவனொளி பாதமலை, சென் கிளேயர் நீர்வீழ்ச்சி, எல்ஜின் நீர்வீழ்ச்சி, இலங்கையின் புகையிரத வீதியில் 6228அடி உயரத்தில் அமைந்துள்ள சமிட் சமவெளி, 18ஆம் இலக்க சுரங்கம், இதல்கஸ்ஹின்ன மற்றும்

ஹப்புத்தளைக்கு இடையிலான கவாய், கிதல் நீர்வீழ்ச்சி மற்றும் மரபுரிமை தெமோதரை ஒன்பது வளைவு பாலம், தெமோதரை கருப்பு பாலம் மற்றும் சுரங்கம் போன்ற சுற்றுலா பயணிகளை கவர்ந்திழுக்கும் பிரசித்தி பெற்ற சுற்றுலா தலங்களை கண்டுகளிக்க கூடிய வகையிலும் புகைப்படங்கள் எடுத்துக் கொள்ளக் கூடிய வகையிலும் 2 தொடக்கம் 15 நிமிடங்கள் வரை நிறுத்தி வைக்கப் படும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு தெமோதரையைச் சென்றடைந்த 1041 புகையிரதமானது பிற்பகல் 3.40 மணியளவில் 1042 இலக்க புகையிரதமாக மீண்டும் கண்டியை நோக்கி பயணிக்கும் இதன் போது எல்ல 3.56, பண்டாரவளை 4.30, இதல்கஸ்ஹின்ன 5.20, நானுஓயா 6.30, ஹட்டன் 7.20, நாவலப்பிட்டி 8.45, பேராதனைச் சந்தி 9.25 போன்ற பிரதான புகையிரத நிலையங்களில் மட்டும் நிறுத்தப்படுவதுடன் அதே தினம் இரவு 9.35 மணிக்கு கண்டியை வந்தடையும் வகையில் நேரசூசி வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதற்கான சகல ஆசனங்களும் முன்கூட்டியே பதிவு செய்து கொள்வதுடன் அதற்கான முதலாம் வகுப்பு பதிவு கட்டணமாக கண்டியில் இருந்து எல்ல மற்றும் தெமோதரை வரையிலான பயணத்திற்கு 5000 ரூபாயும், நானுஓயாவில் இருந்து எல்ல தெமோதரை வரையிலான பயணத்திற்கு 4000 ரூபாயும், கண்டியில் இருந்து நானுஓயா வரையிலான பயணத்திற்கு 2000 ரூபாயும் அறவிடப்படுகின்றது.

மேலும் இரண்டாம் வகுப்பு பதிவு கட்டணமாக கண்டியில் இருந்து எல்ல தெமோதரை வரையிலான பயணத்திற்கு 4000 ரூபாயும், நானுஓயா எல்ல மற்றும் தெமோதரை வரையிலான பயணத்திற்கு 3000 ரூபாயும், கண்டிக்கும் நானுஓயாவுக்கும் இடையிலான பயணத்திற்கு 1000 ரூபாயும் அறவிடப்படும் எனினும் இக் கட்டணங்கள் தொடர்பில் பயணிகளிடையே பல்வேறு கருத்து வேறுபாடுகள் நிலவிவரும் காரணத்தினால் எதிர்வரும் காலப்பகுதியில் புகையிரத திணைக்களம் இக் கட்டணங்கள் மற்றும் நேரங்களில் தொடர்பில் சில மாற்றங்களை மேற்கொள்ளலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

இலங்கையில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் DFCC வங்கியின் பங்கு

தேசிய மின்சார விநியோகத்தில் இலங்கையின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையானது, வருடாந்த மின்சார உற்பத்தியில் சுமார் 35-40% பங்களிப்பை வழங்குகின்றது. மரபுசாரா புதுப்பிக்கத்தக்க எரிசக்தி (NCRE) என கருதப்படும் சக்தி மூலங்கள் மினி ஹைட்ரோ, காற்று, உயிரியல், சூரியசக்தி மற்றும் விவசாய மற்றும் தொழில்துறை கழிவுகள் உட்பட எரிசக்தி திட்டங்கள் தேசிய விநியோகத்தில் 10% பங்களிப்பை வழங்குகின்றது.

இத்துறையின் முன்னோடி நிதியாளரான DFCC வங்கி, குறிப்பாக கடந்த 25 ஆண்டுகளாக தனியார் துறையில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதில் முன்னணியில் உள்ளது. "பசுமை நிதிக்கான வங்கி" என்பது அதன் நிலைத்தன்மைக்கான உத்தியின் கீழ் வங்கியின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும்.

எனவே, எதிர்காலத்திலும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறைக்கு தொடர்ந்து ஆதரவளிப்பதில் DFCC முக்கிய பங்கு வகிக்க ஆர்வமாக உள்ளது.

DFCC இந்த முக்கியமான மைல்கல்லைக் கொண்டாடும் வேளையில், கடந்த 25 வருடங்களாக இத்துறைக்கு நிறுவனம் ஆற்றிய பங்களிப்பு குறித்து னுகுஊஊ வங்கியின் மூத்த துணைத் தலைவர் மற்றும் கூட்டாண்மை வங்கியியலின் தலைவரான சொஹந்த விஜேசிங்கவிடம் பேசினோம்...

DFCC நிதியளித்த முதல் தனியார் துறை மின் திட்டம் எது?

DFCC ஆனது புதுப்பிக்கத்தக்க சக்திக்கான நிதியுதவி வழங்கலை 1988ஆம் ஆண்டு சூரிய PV மாட்யூல் அசெம்பிளி ஆலைக்கு நிதியளித்துதன் மூலம் ஆரம்பித்தது. புதுப்பிக்கத்தக்க எரிசக்தி தொடர்பான முயற்சிகளுக்கு நிதியளிப்பதில் ஈடுபட்டுள்ள அதே வேளையில், எங்களது முக்கிய ஈடுபாட்டை 'Hydrotech Lanka Dick மூலம் மின்னுற்பத்திக்கு 0.96 MW இணைக்கப்பட்டதன் மூலம் காண்பித்தோம். இதற்கான நிதி மற்றும் பங்கு மூலதனத்தையும் வழங்கினோம். இந்த திட்டம் 1996 இல் வெற்றிகரமாக ஆரம்பிக்கப்பட்டது. இது இலங்கையின் முதலாவது பயன்பாட்டு அளவிலான தேசிய மின்திட்டத்துடன் இணைக்கப்பட்ட தனியார் துறையின் சிறியளவிலான நீர் மின் திட்டமாக ஆனது.

இந்த திட்டத்தில் DFCC இன் பங்கு கடன் வழங்குவதோடு மட்டுப்படுத்தப்பட்டதல்ல. கொள்கை மற்றும் ஒழுங்குமுறை நடவடிக்கைகளை உருவாக்க இந்த நிறுவனங்களுடன் நெருக்கமாக ஒத்துழைப்பதன் மூலம், தேசிய பயன்பாடு மற்றும் பிற தொடர்புடைய அரசு நிறுவனங்களுக்கு இந்த அற்புதமான திட்டத்தை மேம்படுத்த உதவினோம். இந்த முன்னோடி முயற்சிகள் 1997 இல் தரப்படுத்தப்பட்ட மின் கொள்முதல் ஒப்பந்தங்களை அறிமுகப்படுத்த வழிவகுத்தது, இது புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் தனியார் முதலீட்டை எளிதாக்குவதற்கான முக்கிய காரணியாகும்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில் DFCCக்கான ஏனைய பணிகள் எவை?

DFCC இலங்கையின் முதல் தனியார் துறை காற்றாலை மின்சாரம், சூரிய சக்தி மற்றும் கழிவுகளிலிருந்து சக்தி திட்டங்களுக்கு இணை நிதியளித்தது. 10 மெகாவாட் செனோக் காற்றாலை மின் திட்டம் 2010 இல் தொடங்கப்பட்டது மற்றும் 10 மெகாவாட் சாகா சோலார் பவர் திட்டம் 2017 இல் தொடங்கப்பட்டது. நகரசபை கழிவு மூலமாக 10 மெகாவாட எரிசக்தி திட்டம், வெஸ்டர்ன் பவர் கம்பெனியால் 2021இல் தொடங்கப்பட்டது. சூர்யதனவி லிமிடெட்டின் தேசிய மின்னிணைப்புக்கு இணைக்கப்பட்ட முதல் கட்ட 11.4MW அளவிலான கூரை சூரிய மின்சக்தித் திட்டத்துக்கும் DFCC நிதியளித்தது. 2017 இல் ஆரம்பிக்கப்பட்ட இலங்கையின் முதல் உயிரியல் அடிப்படையிலான 4MW ஒருங்கிணைந்த வெப்பம் மற்றும் சக்தித் திட்டத்துக்கும் வங்கி நிதியளித்தது.

2007 ஆம் ஆண்டு இலங்கையின் முதலாவது நீர் மின் விசையாழி உற்பத்தி நிலையமான VS Turbo (Pvt) Ltd க்கு நிதியளித்து, இலங்கையில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பெறுமதிச் சங்கிலியை வலுப்படுத்தவும் உதவியுள்ளது. இந்த இலங்கை ஜேர்மன் கூட்டிணைவானது, மின் பொறியியல் உபகரணங்களை ஆபிரிக்காவிற்கும் ஏற்றுமதி செய்கிறது. DFCC ஆனது 2006 இல் சக்தி உற்பத்தியாளரான Vallibel Power Erathna PLC இன் முதல் ஆரம்ப பொது வழங்கலை (IPO) இணைந்து நிர்வகித்தது.

கிராம நீர்மின் திட்டங்களுக்கு நிதியளிப்பதில் DFCC ஈடுபட்டுள்ளது, இது தேசிய வழங்கலில் இல்லாத சமூகங்களுக்கு நீர்மின்சாரத்தை வழங்கியது மற்றும் சூரியசக்தி வீட்டு அமைப்புகளின் வாடிக்கையாளர்களுக்கு கடன் வழங்குவதற்காக மைக்ரோ.்.பைனான்ஸ் நிறுவனங்களுக்கு செயல்பாட்டு மூலதன வசதிகளை வழங்கியது.

இலங்கையில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையானது ஒரு முன்மாதிரித் தொழிலாக அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அறிவு மற்றும் அனுபவப் பகிர்வுக்காக கம்போடியா, கானா, இந்தியா, மொசாம்பிக், நேபாளம், பிலிப்பைன்ஸ் மற்றும் உகாண்டா உள்ளிட்ட நாடுகளில் இருந்து ஏராளமான ஆய்வுக் குழுக்களை DFCC அழைத்து வந்துள்ளது. DFCC ஊழியர்கள் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டில் தங்கள் அனுபவத்தை சர்வதேச மன்றங்களில் வழங்க அழைக்கப்பட்டுள்ளனர் உகாண்டா மற்றும் நேபாளம் உட்பட வெளிநாடுகளில் புதுப்பிக்கத்தக்க சக்தி ஆலோசனைப் பணிகளுக்காகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

உலக வங்கியின் நிதியுதவியின் கீழ் உகாண்டாவில் உள்ள நுண்நிதி நிறுவனங்களுக்கு ஏற்ற சூரியக் கடன் வசதிகளை வழங்க உகாண்டா எரிசக்தி கடன் மூலதன நிறுவனத்திற்கு (UECCC) அதன் நிபுணத்துவத்தை வழங்குகிறது.

புதுப்பிக்கத்தக்க சக்தியை ஊக்குவிக்கும் பல்வேறு நிதி நிறுவனங்களுடனான DFCC யின் தொடர்பை விளக்க முடியுமா?

இந்தத் துறையில் எங்களின் நீண்டகால ஈடுபாடும் நிபுணத்துவமும், நாட்டிற்கான புதுப்பிக்கத்தக்க எரிசக்தி கடன் வரிகளுக்கான DFI இன் விருப்பமான பங்காளியாக எங்களை நிலைநிறுத்தியுள்ளது. 1997இல், உலக வங்கி மற்றும் உலகளாவிய சுற்றுச்சூழல் வசதி (GEF) மூலம் நிதியளிக்கப்பட்ட எரிசக்தி சேவைகள் விநியோகத் திட்டத்தை நிர்வகிப்பதற்கு இலங்கை அரசாங்கத்தால் DFCC நியமிக்கப்பட்டது. உலக வங்கியால் "மிகவும் வெற்றிகரமானது" என அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தின் செயல்படுத்தல், கிராமப்புற பொருளாதார மேம்பாட்டுக்கான புதுப்பிக்கத்தக்க எரிசக்தி (RERED) திட்டம் மற்றும் அதன் கூடுதல் நிதி கூறு (2002-11) ஆகியவற்றை நிர்வகிப்பதற்கு DFCC நியமிக்கப்பட்டது.

இந்த இரண்டு திட்டங்களும் இலங்கையில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நிலைமைகளை மாற்றியமைத்ததுடன், நாட்டில் மின் உற்பத்திக்கான சாத்தியமான நிலைமையை உறுதியாக நிறுவியது.

2013 இல், ஐரோப்பிய முதலீட்டு வங்கி (EIB) நிதியுதவியுடன் SME & Green Energy க்கான யூரோ 90 மில்லியன் கடன் உதவியை செயல்படுத்த DFCC வங்கி நியமிக்கப்பட்டது.

2018ஆம் ஆண்டில், DFCC ஆலோசனைப் பிரிவு - DFCC கன்சல்டிங் (பிரைவேட்) லிமிடெட், ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் கூடிய மேற்கூரை சூரிய மின் உற்பத்திக் கடனுக்கான (RSPGLOC) தொழில்நுட்ப ஆதரவை வழங்குவதற்கான திட்ட அமலாக்கப் பிரிவை அமைத்து நிர்வகித்தது. மேலதிகமாக DFCC ஆனது RSPGLOC இன் கீழ் 261 துணைத் திட்டங்களுக்கு நிதியளித்தது, சிறிய அளவிலான குடியிருப்பு மற்றும் வணிக கூரைத் திட்டங்களில் இருந்து 5 மெகாவாட் திறனைக் மின்சாரத்தை மின்விநியோகத்தில் இணைத்தது

இந்த செயல்பாடுகளை நிறைவேற்றுவதில், DFCC வங்கி இலங்கை அரசாங்கத்திற்கான சர்வதேச அபிவிருத்தி முகவர் கடன் திட்டங்களின் மிகவும் திறமையான மற்றும் வெற்றிகரமான நிர்வாகியாக நற்பெயரைப் பெற்றுள்ளது.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையின் எதிர்காலம் என்ன?

2030ஆம் ஆண்டளவில் இலங்கை தனது மின்சார உற்பத்தித் தேவையை 70% புதுப்பிக்கத்தக்க மூலங்கள் மூலம் நிவரத்தி செய்ய உறுதியளித்துள்ளது. தற்போதைய எரிபொருள் நெருக்கடியானது, உள்நாட்டு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களில் அதிக நம்பிக்கையுடன் சுயாதீனமாக இருப்பதன் முக்கியத்துவத்தை மேலும் எடுத்துக்காட்டுகிறது. இது சந்தேகத்திற்கு இடமின்றி மிகப்பெரிய சவாலாக இருந்தாலும், நாட்டில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையை ஊக்குவிப்பதில் அரசாங்கத்தின் அர்ப்பணிப்பைக் கருத்தில் கொண்டு, தொழில்துறைக்கான வாய்ப்புகள் குறித்து நாங்கள் நம்பிக்கையுடன் இருக்கிறோம்.

#upa rf;jp fl;likg;ig nghUj;Jtjw;F Kd; gpd;gw;w Ntz;ba topfhl;b

தேசிய மின்சார கட்டமைப்பில் இருந்து வீட்டுக்கு கிடைக்கும் மின்சார அலகுகளின் அளவு மற்றும் சூரிய சக்தி கட்டமைப்பினால் மீளளிக்கப்படும் மின்சார அலகுகளின் அளவை கணக்கிடும் டிஜிட்டல் தொழில்நுட்பத்தைக் கொண்ட மீட்டர்

சூரிய பனல் மூலம் சூரிய ஒளி, நேர் மின்னோட்ட (DC) மின்சாரமாக மாற்றுகிறது.

இன்வர்டர் மூலம் நேர் மின்னோட்டம் (DC) மாறுதிசை மின்னோட்டமாக (AC) மாற்றப்படுகிறது.

சூரிய சக்திக் கட்டமைப்பு மூலம் உற்பத்தி செய்யப்படுகின்ற மேலதிக மின்சாரத்தை அகற்றுவது மீட்டர் ஊடாக தேசிய கட்டமைப்புக்கு இணைந்து குறித்த பெறுமதி வாடிக்கையாளரின் கணக்கிற்கு சேர்த்தல்.

தேசிய மின்சார கட்டமைப்பு

இவ்வாறான கட்டமைப்பை ஆரம்பிப்பது எவ்வாறு? தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக ஏதேனும் அரச நிறுவனம் ஒன்று உள்ளதா?

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை, மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சுடன் தொடர்புபட்ட புதுப்பிக்கத்தக்க வலுசக்தியை மேம்படுத்துவதற்கு பொறுப்பான அரச நிறுவனமாகும். எமது அதிகாரசபை பொழும்பு 7, இலக்கம் 72, ஆனந்த குமாரசாமி மாவத்தையில் அமைந்துள்ளது. மேலதிக விபரங்களுக்கு 011 2575203 ஊடாக எம்மை அழையுங்கள். www.energy.gov.lk என்ற எமது இணையதள பக்கத்திற்கு பிரவேசித்து மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

கூரை மீது பொருத்துகின்ற சூரிய சக்தி கட்டமைப்புக்காக இயலுமை ஆய்வுக்கு சரியான தகவல்களை பெற்றுக்கொள்வது எவ்வாறு?

மாதாந்த வருமானம், செலவு, மீளளிப்பதற்கு பெற்றுத் தந்துள்ள காலம், சூரிய சக்தி கட்டமைப்பு வகைகள் போன்ற தகவல்களை நீங்கள் சேவை வழங்கும் நிறுவனங்களால் பெற்றுக்கொள்ளுங்கள்.

இந்த தகவல்களை ஆய்வு செய்வதற்காக இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை இணையதளத்தின் சூரியசக்தி சமர் இணையப் பக்கத்தை பார்க்கவும்.

சூர்ய சக்தி கட்டமைப்பை வழங்குபவர்களின் நம்பிக்கையை பரீட்சிப்பது

- இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை, மொரட்டுவை பல்கலைக்கழகம், வேறு தொழில்முறை நிறுவனங்கள், உபகரணங்களை வழங்கும் வேறு நிறுவனங்கள் ஆகிய நிறுவனங்கள் மூலம் சூரிய சக்தி கட்டமைப்பை பொருத்துவதற்காக அந்த நிறுவனத்தின் பணிக் குழு பெற்றிருக்கும் அனுபவம்.
- நிறுவப்பட்டுள்ள ஒட்டுமொத்த திறன் (kWp) எவ்வளவு?
- வர்த்தகச் செயற்பாடுகளில் எவ்வளவு காலம் ஈடுபட்டுள்ளனர்?
- கட்டமைப்பை பொருத்தும் ஆட்கள் காப்புறுதி பெற்றுள்ளனர் என்பது பற்றி.
- சூரியப் பனல் கட்டமைப்பை நிறுவிய இடங்களில் தகவல்களை தெரிந்துகொள்ளல்.
- ஆட்கள் வெளியிடும் தகவல்களில் ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளல்.
- உபகரணங்களை பெற்றுக்கொள்ளும் நிறுவனங்கள் பெற்றிருக்கும் அதிகாரம் பெற்ற சான்றிதழ்கள்.
- மேற்கொண்ட திட்டங்கள் தொடர்பில் தேடிப் பார்த்தல்.
- சூரியப் பனல் கட்டமைப்பை பொருத்தியுள்ள வீடுகளின் எண்ணிக்கை.

கட்டமைப்பு தொடர்பில் விலையை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு குறைந்தது மூன்று நிறுவனங்களிடம் இருந்து விபரங்களை பெற்றுக்கொள்ளுங்கள்.

உங்களது முடிவுக்கு குறைந்த விலையில் வழங்கும் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களில் தங்கி இருங்கள். அதற்காக கீழுள்ள சில ஆலோசனைகளை பின்பற்றுங்கள்:

- பதிவு செய்யப்பட்ட சூரிய சக்தி கட்டமைப்புகளை வழங்குகின்ற அலுவலகம் மற்றும் வர்த்தக முகவரியை சோதிக்கவும்.

19 பக்கம் பார்க்க...

அன்றும். இன்றும். என்றும்.
இலங்கையின் மீள்பிறப்பாக்க சக்தி தேவைக்கு வலுவூட்டிடும்

DFCC வங்கி, கடந்த 25 ஆண்டுகளாக தேசத்தின் சக்தியாக செயற்பட்டு, மீள்பிறப்பாக்க சக்தி செயற்திட்டங்களுக்கான பங்காளராக விளங்கி வருவதில் பெருமை கொள்வதோடு, உலக தரத்திலான நிபுணத்துவம் மற்றும் பொருத்தமான தீர்வுகளை என்றென்றும் வழங்கிட உறுதுபூண்டுள்ளது.

1996 — HYDROTECH LANKA DICK OYA PROJECT - 0.96 MW
இலங்கையின் முதன்முறையாக பயன்பாட்டு அளவிலான மின்அமைப்பு தனியார் துறை சிறிய அளவிலான நீர்மின் திட்டத்திற்கு நிதியளித்தது

1997
இலங்கை அரசாங்கம்/ உலக வங்கி/ உலக சுற்றாடல் அமைப்பின் நிதியுதவியில் மேற்கொள்ளப்பட்ட சக்தி சேவை விநியோக (ESD) திட்டத்திற்கான நிர்வாக அங்கமாக நியமிக்கப்பட்டது

2003
இலங்கை அரசாங்கம்/ உலக வங்கி/ உலக சுற்றாடல் அமைப்பின் நிதியுதவியுடன் கிராமிய பொருளாதார முன்னேற்றத்துக்கான மீள்பிறப்பாக்கச் சக்தி திட்டத்திற்கான (RERED) நிர்வாக அங்கமாக நியமிக்கப்பட்டது

2006 — VALLIBEL POWER ERATHNA PLC
மீள்பிறப்பாக்க சக்தி உற்பத்தியாளர்களுக்கான இலங்கையில் முதன்முறையான ஆரம்ப பொது வழங்கல் (IPO) உடன் இணைந்து நிர்வகிக்கப்பட்டது

2017 — SAGASOLAR (PVT) LTD - 10 MW
இலங்கையில் முதன்முறையாக மின்அமைப்பில் இணைத்துக்கொள்ளப்பட்ட சூரிய மின் உற்பத்தி நிலையத்திற்கான இணை நிதியுதவி

2013
இலங்கை அரசாங்கம் மற்றும் ஐரோப்பிய முதலீட்டு வங்கியின் 90 மில்லியன் யூரோ பெறுமதியான நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்ட SME மற்றும் மீள்பிறப்பாக்க திட்டத்தை செயற்படுத்துவதற்காக நியமிக்கப்பட்டது

2010 — SENOK WIND POWER (PVT) LTD - 10 MW
இலங்கையின் முதலாவது தனியார் துறை காற்றாலை மின் திட்டத்திற்கு இணை நிதியுதவி

2007 — VS TURBO (PVT) LTD
இலங்கையில் மெகாவாட் அளவிலான நீர்மின் விசையாழி உற்பத்தி நிறுவனத்திற்கு நிதியளித்தது

2017
இலங்கையில் முதன்முறையாக ஒருங்கிணைந்த உயிர்த்திரள் வெப்ப மற்றும் மின் உற்பத்தி நிலையத்தை அமைப்பதற்கான இணை நிதியதவி

2018 — SURYADHANAVI (PVT) LTD - 11.4 MW
சூரிய மின்சக்தி திட்டங்களுக்காக பெரிய அளவிலான வாடகை கூரை மாதிரியை நிறுவுதல் மற்றும் நிதியுதவியளித்தல்

2018
இலங்கை அரசாங்கம்/ ADB இன் நிதியுதவியில் மேற்கூரை மூலமான சூரிய மின் உற்பத்திக்கான கடன் திட்டத்தை நிறைவேற்றும் பணிகளுக்கு பொறுப்பாக DFCC Consulting (Pvt) Ltd நியமிக்கப்பட்டது

2021 — WESTERN POWER COMPANY (PVT) LTD
இலங்கையில் முதன்முறையாக தனியார் துறையால் ஆரம்பிக்கப்பட்ட கழிவுகளிலிருந்து எரிசக்தி பெற்றுக்கொள்ளும் திட்டத்திற்கு இணை நிதியுதவி



0112 350000 www.dfcc.lk

ICRA வங்கா ரேட்டிங் [SL] AA- (எதிரம்), ;பிச் ரேட்டிங் A+ (lka) எதிரமான தரப்படுத்தலைப் பெற்ற, CBSL உரிமம் பெற்ற வர்த்தக வங்கியாகும்.

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

#upa rf;jp fl;likg;ig nghUj;Jtjw;F... 18ஆம் பக்க தொடர்ச்சி...

பதிவு செய்யப்பட்ட சூரிய சக்தி கட்டமைப்புகளை வழங்குகின்ற நிறுவனங்களுக்கான தாய் நிறுவனம் ஒன்று இருத்தல் வேண்டும்.

- பிரதான உபகரணங்களில் உள்ள தரம் தொடர்பில் தேடிப்பாருங்கள். உதாரணமாக சூரிய பனல் கட்டமைப்புகள் மற்றும் இன்வர்டர்களின் சர்வதேச தரச்சான்றிதழ் ஒன்றான ஐநுஊ சான்றிதழை பெற்றிருத்தல் வேண்டும் என்பதோடு அந்த ஆவணங்களை நிறுவனத்தின் மூலம் பெற்றுக்கொள்ளுங்கள்.
- சூரிய பனல் கட்டமைப்புக்காக எவ்வளவு காலம் உத்தரவாதம் இருக்கும்? கோளாறற்ற சூரிய பனல் உபகரணங்களுக்கான உத்தரவாதக் காலம் 10 ஆண்டுகளாகும். பனல் செயற்பாட்டுக்கு அமைய 25 ஆண்டுகள் நீடிப்பதோடு 25 ஆண்டுகள் முடிவில் செயல்திறன் 20% அளவுக்குக் குறைந்து செல்லலாம். கோளாறற்ற இன்வர்டருக்கான உத்தரவாதக் காலம் 5 - 10 ஆண்டாகும்.
- ஒட்டுமொத்த கட்டமைப்புக்கான உத்தரவாதக் காலம் எவ்வளவு? குறைந்தது மூன்று ஆண்டு காலம் என்பதோடு பெரும்பாலும் சேவை வழங்குநருடன் பேசிய பின் இதனை மாற்றிக்கொள்ள முடியும்.



- மாதாந்தம் மற்றும் வருடாந்த அடிப்படையில் உங்களது சூரிய பனல் கட்டமைப்பு மூலம் எதிர்பார்க்கப்படும் ஆற்றல் உருவாக்கத்தை மாத்திரம் கேளுங்கள். ஆற்றல் உருவாக்கத்தை அளவிடுவது kWh அலகுகளிலாகும். காலநிலை அடிப்படையில் உருவாக்கப்படும் அலகுகளின் அளவு மாறுபட முடியும்.
- இலவசமாக குறைந்தது மூன்று ஆண்டுகள் விற்பனைக்கு பின் சேவையை பெறுங்கள்.
- மதிப்பிடப்பட்ட மாதாந்தம் கிடைக்க வேண்டிய மதிப்பிடப்பட்ட பெறுமதி ஒன்றை பரீட்சிக்கவும்.
- உபகரணங்கள் தொடர்பான உத்தரவாத சான்றிதழை பெற்றுக்கொள்ளுங்கள்.

தவறாக வழிநடத்தும் தகவல்கள் தொடர்பில் அவதானத்துடன் இருங்கள்

விற்பனையாளர் மூலம் தவறாக வழிநடத்தும் தகவல்களை தர முடியும். உதாரணமாக,

- கட்டமைப்புக்கு அதிக நன்மை மற்றும் அதிக வாக்குறுதிகளை பெற்றுத்தருதல்.
- சந்தை விலையை விடவும் குறைந்த விலை முன்வைத்தல்.
- சூரிய பனல் கட்டமைப்புக்காக எப்போதும் பராமரிப்பு சேவை ஒன்று தேவையில்லை. குறிப்பிட்ட கால எல்லைக்கு பாராமரிப்பு செய்வதே அவசியமாகும். நாம் பரிந்துரைப்பது ஒட்டுமொத்த கட்டமைப்பினதும் செயல்திறனை அதிகரிப்பதையாகும். படிந்து நிற்கும் தூசி சூரிய பனலின் மேற்பரப்பில் இருப்பதாயின் மற்றும் நிழல் படுவதாயின் அவ்வாறான தடங்கல்களை அகற்ற வேண்டும்.
- எப்போதும் நிழல் படுகின்ற இடம் ஒன்று இருப்பதாயின் சூரிய சக்தி கட்டமைப்பை பொருத்துவதற்கு பொருத்தமாக இருக்காது.

இந்த செயற்பாட்டுக்காக இணைவது எவ்வாறு?

- இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கை மின்சார தனியார் நிறுவனத்தின் பிராந்திய பொறியியலாளர் அலுவலகத்தில் விண்ணப்பப் படிவத்தை பெற்றுக்கொள்ள முடியும். இது உங்களது சேவை வழங்குநர் அடிப்படையில் தங்கியுள்ளது. அவர்களுக்கு முறையான தகவல்களுடன் விண்ணப்பத்தை சமர்ப்பிக்கவும். மேலதிக விபரங்களுக்கு இலங்கை மின்சார சபை அல்லது இலங்கை மின்சார தனியார் நிறுவனத்தின் இணையதளப் பக்கத்திற்கு பிரவேசிக்கவும்.

சூரிய சக்தி கட்டமைப்பை பொருத்துவதற்கு எவ்வளவு காலம் எடுத்துக்கொள்ளும்?

- காலநிலை அடிப்படையில் 1-2 வாரங்கள் அளவு எடுத்துக்கொள்ளலாம். (கொள்திறன் அடிப்படையில் இது மாற்றமடையும்)

கட்டமைப்புக்கான ஆயுள் காலம் எவ்வளவு?

- சூரிய பனல் கட்டமைப்புக்காக 25 - 30 ஆண்டுகளும், இன்வர்டருக்கு 8 - 12 ஆண்டுகளும் இருக்கும்.

ஒப்பந்தம் மற்றும் கொடுப்பனவு

- வடிக்கையாளர்களுக்கு ஒதுக்கப்பட்ட ஒப்பந்த வரைவு ஒன்றை பெற்றுக்கொள்ளுங்கள். அதன்படி ஒப்பந்தம் ஒன்றுக்கு வாருங்கள்.
- பதிவு செய்யப்பட்ட சூரிய பனல் வழங்குநர்களிடமே ஒப்பந்தம் கைச்சாத்திடல் வேண்டும் என்பதோடு தனியார் விற்பனை முகவர்கள் அல்லது தனி நபர்களுடன் ஒப்பந்தங்கள் செய்து கொள்வதை தவிர்த்துக்கொள்ளுங்கள்.
- உங்களது சேவை வழங்குநருடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கு முன் அதில் உள்ள விடயங்களில் அவதானம் செலுத்த வேண்டும். ஏதேனும் மாற்றம் செய்வதாயின் இரு தரப்பு ஒப்புதலுடன் மேற்கொள்ளுங்கள். முக்கியம் - எந்த ஒரு கொடுப்பனவையும் பணமாக விற்பனையாளருக்கு வழங்க வேண்டாம். கொடுப்பனவுக்காக வங்கி மூலம் (காசோலை அல்லது வேறு முறைகள் மூலம்) நேரடியாக குறித்த நிறுவனத்திற்கு செலுத்துங்கள்.

நிறுவும்போது முன்னேற்றம் தொடர்பில் கண்காணிக்கவும்.

- நிறுவுவதன் முன்னேற்றம் மற்றும் சூரிய பனல் கட்டமைப்பின் தரத்தை பரீட்சிக்கவும்.
- உங்களது நிறுவப்பட்ட கட்டமைப்பு வழங்கப்பட்டுள்ள தரச்சான்றிதழுக்கு உட்பட்டதாக என்பது, செய்ய வேண்டியவை, தொடக்கூடாதவை போன்ற முக்கியமான விபரங்களை பெற்றுக்கொள்ளல், ஒற்றை வரி வரைபடம் (single line diagram) மற்றும் செயற்பாடு மற்றும் பராமரிப்பு செயற்பாடுகள் நிறுவப்பட்ட இறுதியில் கையேட்டை உங்களிடம் ஒப்படைத்தல் வேண்டும்.
- நிறுவும்போது இலங்கை தரநிர்ணய கட்டளைகள் நிறுவனத்தின் SLS:1522 தர வரைவுக்கு உட்பட்டு இருத்தல் வேண்டும்.
- அனைத்து கட்டமைப்புகளும் பட்டய மின் பொறியியலாளர் ஒருவரினால் உறுதி செய்தல் வேண்டும்.

இறுதிக் கொடுப்பனவு மற்றும் இறுதியாக சோதனை

- இறுதிக் கொடுப்பனவை விடுவிப்பதற்கு முன், முழுமையான சேவை பற்றி நீங்கள் திருப்தி அடைவது பற்றி உறுதி செய்துகொள்ளுங்கள். உங்களது அடிப்படை அறிவுக்கு உட்பட்டு கட்டமைப்பு நிறுவப்பட்டுள்ளதா என்பதை பரீட்சித்துப் பாருங்கள். (குறிப்பு: உங்களால் பராமரிப்பதற்கு செய்ய வேண்டியது? உங்களது கட்டமைப்பு எதிர்பார்த்த வகையில் செயற்படாவிட்டால் அல்லது கொடுப்பனவில் தாமதம் ஏற்பட்டிருந்தால் அது தொடர்பில் தொடர்புகொள்ள வேண்டியவர்கள் யார்? போன்ற விபரங்கள் இங்கு முக்கியமானது.)

உங்களது ஒப்பந்தம் அல்லது கட்டமைப்பை நிறுவும் ஆவணங்களை காணாமலாக்க வேண்டாம்.

- ஒதுக்கப்பட்ட ஆவணங்களை இதற்காக பயன்படுத்தவும். இங்கு இரு தரப்பில் ஒருமித்த ஒப்பந்தம். எழுதப்பட்ட மாற்றங்கள், கட்டணச் சீட்டு மற்றும் பொருட்களின் ஆவணம், கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டுகள் மற்றும் சூரிய பனல் வழங்குநரின் ஆவணங்கள் உள்ளடங்கும். மேலும் இங்கு நிறுவனப்பட்ட கட்டமைப்பில் புகைப்படங்கள் மற்றும் நிறுவுவதன் முன்னேற்ற அறிக்கை உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

சேவை வழங்குநர்கள் மூலம் சூரிய சக்தியை நிறுவுவதற்கு உங்களுக்குத் தேவையான உதவி மற்றும் நிதி தேவைகளை பூர்த்தி செய்ய முடியுமான வகையில் உதவிகள் வழங்கப்படும். அதனால் சூரிய சக்தி கட்டமைப்பை நிறுவுவதற்கு முன்னர் பொருத்துகின்ற நிறுவனங்கள் சிலதுடன் நிறுவல் முறை மற்றும் விலையை ஒப்பிடுங்கள். இது தவிர குறித்த உபகரணங்களின் தயாரிப்பு நிறுவனங்களின் இணையதளம் ஊடாக தகவல்களை தேடிப் பாருங்கள். அதன் மூலம் உங்களுக்கு மிகவும் உயர் தரத்திலான சூரிய சக்தி கட்டமைப்பு ஒன்றை பெற்றுக்கொள்ள முடியுமாகும். சூரிய சக்திச் சமரின் முன்னேற்றகரமான திருப்பத்திற்கு நீங்கள் இன்றே இணையுங்கள்.

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை
இல. 72, ஆனந்த குமாரசாமி மாவத்தை,
கொழும்பு 07.
011 2575203, www.energy.gov.lk 011 2575283

சோலார் கூரைகள்: தேசிய மின்சார விநியோகத்தில் வலிமையான சக்தி

`u;\ tpf;fpukrpq;f> miog;ghsu;> kpd; mstPl;L jpl;lj;ij epfu fzf;fpay; jpl;lkhf Nkk;gLj;Jtjw;fhd FO ,yq;if epiyahd vuprf;jp mjpfhurig (gpd;D}l;lk; harsha@energy.gov.lk)

அப்போட்டியில் முதலாவது இனிங்ஸில் குரு சிங்க, அர்ஜுன, களுவிதாரண ஆகியோரின் அதிரடிக்கு ஆளான ஷேன்வோர்ன் முதல் இன்னிங்சில் 22 ஓவர்கள் பந்து வீசி 107 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து விக்கெட் எதனையும் கைப்பற்றியிருக்கவில்லை. ஆனால் போட்டியின் இறுதி நாளில் இலங்கை அணிக்கு 176 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயித்திருந்த நிலையில், இறுதியில் இலங்கை அணிக்கு வெற்றி பெற இன்னும் 34 ஓட்டங்களே தேவையாகவிருந்தது. அச்சமயத்தில் தலைவர் அலன் போடர் பந்து வீச புதிய வீரர் ஷேன் வோர்னை அழைத்தார். அதுவரை வெற்றியின் விளிம்பிலிருந்த இலங்கை அணியை 16 ஓட்டங்களால் தோல்வியடைய ஷேன் வோர்னின் பந்து வீச்சே காரணமாயமைந்தது. மீண்டும் அவ்வருட இறுதியில் மேற்கிற்தியத் தீவுக்கு எதிராக நடைபெற்ற தொடர் அவருக்கு திருப்புமுனையாக அமைந்தது. அவர் அங்கு நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியில் 52 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 7 விக்கெட்டைக் கைப்பற்றினார். அதுமுதல் ஷேன் வோர்னின் பந்து வீச்சு ஏறுமுகமாகவே இருந்தது.

அதுமுதல் அவர் ஓய்வுபெறும் வரை உலகில் உள்ள அனைத்து வீரர்களுக்கும் சவாலாகவே விளங்கினார். 2007 ஜனவரி 2ம் திகதி இங்கிலாந்து அணிக்கு எதிரான போட்டியே அவரது கடைசிப் போட்டியாக அமைந்தது. அதுவரை அவர் 145 போட்டிகளில் விளையாடி 40,705 பந்துகளை வீசி, 17995 ஓட்டங்களைக் கொடுத்து 708 விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ளார். இதன் சராசரி 25.41 ஆகும். அவரது சிறந்த பந்துவீச்சாக இங்கிலாந்துக்கு எதிராக 81 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுகளையும், ஒரு போட்டியில் சிறந்த பந்து வீச்சாக இங்கிலாந்துக்கு எதிராக 128 ஓட்டங்களுக்கு 12 விக்கெட்டுகளையும் கைப்பற்றியுள்ளார். ஒரு இன்னிங்ஸில் 37 முறை 5 விக்கெட்டுக்கு மேல் கைப்பற்றியுள்ளதுடன், ஒரு போட்டியில் 10 விக்கெட்டுக்கு மேல் 10 முறை கைப்பற்றியுள்ளார். இவர் டெஸ்ட் போட்டிகளில் சில சமயங்களில் துடுப்பாட்டத்தில் அவுஸ்திரேலிய அணியின் வெற்றிக்கும் கைகொடுத்துள்ளார். மொத்தம் 199 இன்னிங்ஸ்களில் 12 அரைச்சதங்களுடன் 3154 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். ஒரு இன்னிங்ஸில் கூடிய ஓட்டங்களாக 81 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். மொத்தமாக 125 பிடிகளை எடுத்து களத்தடுப்பிலும் அவுஸ்திரேலிய அணிக்கு முக்கிய பங்காற்றியுள்ளார். உலகின் 700 விக்கெட் என்ற மைல்கல்லை முதன் முதலில் கடந்த வீரராகவும் ஷேன் வோர்ன் சாதனை படைத்துள்ளார்.

ஒரு நாள் போட்டிகளில் 1993ம் ஆண்டு மார்ச் 24ம்திகதி நியூசிலாந்து அணிக்கு எதிராக வெளிங்டனில் அறிமுகமானார். 2005 ஜனவரி மாதம் 10 திகதி மெல்போர்ன் நகரில் ஆசியன் லெவன் அணிக்கு எதிராக நடைபெற்ற அவரது ஓய்வுப் போட்டிவரை 194 சர்வதேச ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ள அவர் மொத்தமாக 25.73 என்ற சராசரியுடன் 293 விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ளார். சிறந்த பந்து வீச்சாக 33 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ளார். 4 விக்கெட்டுக்கு மேல் 13 முறை கைப்பற்றியுள்ளார். ஒரு ஓவருக்கு 4.25 வீதம் ஓட்டங்களை வழங்கியுள்ளார். ஒரு நாள் போட்டி துடுப்பாட்டத்தில் 107 இன்னிங்ஸில் 29 முறை ஆட்டமிழக்காமல் 13.04 சராசரியுடன் 1018 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். கூடிய ஓட்டங்களாக 55 ஓட்டங்களைக் பெற்றுள்ளார். 80 பிடிகளை எடுத்து களத்தடுப்பிலும் சிறந்து விளங்கியுள்ளார். சர்வதேச அரங்கில் இரு வீரர்களே சர்வதேச போட்டிகளில் 1000 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளனர். ஷேன் வோர்னும் அதில் ஒருவர்.

இவர் ஓய்வு பெற்ற காலங்களிலேயே ரி/20 போட்டிகள் அறிமுகமானது. எனவே ரி/20 போட்டிகளில் பெரிதாக ஈடுபாடு இல்லாவிட்டாலும், இந்தியாவில் 2008 ஆம் ஆண்டு ஆரம்பமான ஐ. பி. எல். ரி/20 தொடரில் ராஜஸ்தான் ரோயல் அணிக்குத் தலைவராகவும், பயிற்சியாளராகவும் பொறுப்பேற்று அவ்வணி கிண்ணம் பெற தனது பங்களிப்பை உச்சளவில் வழங்கினார்.

வலது கை 'லெக் ஸ்பின்' பந்துவிச்சாளரான இவர்

துடுப்பாட்ட வீரர்கள் எதிர்பாராத விதமாக பந்தை வீசி, சரியாக விக்கெட்டுக்கு பந்தை சுழல விடுவதில் வல்லவராகத் திகழ்ந்தவர். அவ்வாறான பந்துகளை துடுப்பாட்ட மட்டையால் தடுக்க்காமல் விடுவது தற்கொலை செய்து கொள்வதற்கு சமம் என்று கிரிக்கெட் வர்ணனையாளர்கள் கூறுமளவுக்கு அவரது மாயஜால பந்து வீச்சு அமைந்தது. இங்கிலாந்து வீரர் அண்ட்ரு ஸ்ட்ரோஸ், மைக் கெடிங், பாகிஸ்தான் வீரர் பாசித் அலி, மேற்கிந்தியத் தீவுகளின் சந்தர்போல் இப்படியாக பல முறை ஆட்டமிழந்துள்ளனர்.

பழுப்பு நிறத்தினாலான சிகை அலங்காரம், காதில் அணியும் கடுக்கன், தங்கமாலை போன்ற அலங்காரங்களால் அதிக பெண் ரசிகர்களிடம் பிரசித்தி பெற்ற ஷேன்வோர்ன், ஆடுகளத்தில் எதிரணி வீரர்களுடன் முட்டி மோதிவதிலும் பிரபலம் பெற்றிருந்தார். இதனால் பல சர்ச்சைகளில் சிக்கியிருந்த ஷேன் வோர்ன் பல முறை போட்டித் தடைகளுக்கும் உள்ளாகியிருந்தார். அதில் அவரது வாழ்க்கையைப் புரட்டிப் போட்ட பல சந்தர்ப்பங்களும் உள்ளன.

2003ம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடர் ஆரம்பமாகவிருந்த சமயத்தில் அவரது உடற்தகுதி போட்டிக்கு உகந்ததாக இல்லை என்ற சர்ச்சை அப்போது எழுந்ததால் அவரை உலகக் கிண்ண அணியிலிருந்து நீக்கப்பட வாய்ப்பு அதிகமாக இருந்தது. அந்த சமயத்தில் உடலைக் கட்டுக்கோப்பாக வைத்திருக்க சில தடை செய்யப்பட்ட ஊக்கமருந்துகளை எடுத்துக்கொண்டார். இந்த உண்மை தெரியவந்ததும் ஒருவருட தடைக்குள்ளானார். என்றாலும் சளைக்காத ஷேன் வோர்ன் அந்த ஒரு வருடத்தையும் கிரிக்கெட் வர்ணனையாளராக தன்னை புடம் போட்டுக்கொண்டார். பின்னாளில் ஓய்வின் பின் முழுநேர வர்ணனையாளராக மிளிர இது உதவியதாக அவர் ஒரு பேட்டியின்போது கூறியிருந்தார்.

அவுஸ்திரேலிய அணியில் தவிர்க்க முடியாத வீரராக இருந்து 1999ஆம் ஆண்டு காலகட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட போது அணித் தலைவர் ஸ்டீவ் வோவுடன் ஏற்பட்ட பிரச்சினையால் நீக்கப்பட்டார்.

இவர் அந்நாளில் பல பெண்களுடன் தொடர்பு கொண்டு சல்லாபங்களிலும் ஈடுபட்டதாலும் சர்ச்சையில் சிக்கியுள்ளார். அவர் மீது 2000ஆம் ஆண்டு இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த தாதி ஒருவர் தனக்கு குறுஞ்செய்திகளில் பாலியல் ரீதியாக செய்திகளைத் தொடர்ந்து அனுப்பிக் கொண்டிருக்கிறார் என்ற குற்றச்சாட்டை முறையான ஆதாரத்துடன் வெளியிட்டு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தார். இது பற்றி வோன் கூறுகையில்: போதையில் இருந்த போது அப்படி அனுப்பியிருக்கலாம் என்று தெரிவித்தார். இதனால் அதிருப்தியடைந்து அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் உப தலைவர் பதவியைப் பறித்தது அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை.

அரவிந்த டி சில்வா, ஜயசூரிய, களுவிதாரண போன்ற இலங்கை அணி வீரர்கள் இவரின் பந்து வீச்சை அடித்தாடுவதில் வல்லவர்கள். இதனால் கோபப்படும் ஷேன்வோர்ன் இலங்கை அணியினருடனும், முக்கியமாக தனது பந்து வீச்சுப் போட்டியாளரான முரளியுடனும் ஆடுகளத்தில் பலமுறை மோதலில் ஈடுபட்டுள்ளார். ஆனால் ஆடுகளத்துக்கு வெளியே எல்லோருடனும் சுமுகமாகப் பழக்கூடியவர். 2006ஆம் ஆண்டு சுனாமியால் பாதிக்கப்பட்ட சமயத்தில் இலங்கைக்கு விஜயம் செய்து பாதிக்கப்பட்டோருக்கு ஆறுதலும், ஆதரவும் அளித்து சமூக சேவையில் ஈடுபட்ட முதல் கிரிக்கெட் வீரர் இவராவார்.

கிரிக்கெட் உலகில் பல சாதனைகளைப் புரிந்த சிறந்த வீரராக ஷேன் வோர்ன் இருந்தாலும் அவரது சல்லாப நடத்தை காரணமாக பலமுறை போட்டித் தடைக்குள்ளானார்.

எம்.எஸ்.எம்.ஹில்மி...

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 மார்ச் மாதம் 13ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

வாழ்வாதாரமா சேதாரமா 215

மின்வெட்டும் மின்சாரமற்ற அன்றைய பொழுதுகளும்...

சிக்கனமாக வாழ்வது இன்றைய முக்கிய தேவையாகும். அதைப்பற்றித்தான் இன்றைய அரசாங்கமும் பலப்பல திணைக்களங்களும் வற்புறுத்திக் கொண்டிருக்கின்றன. முக்கியமாக மின்சாரம். இன்றைய மின்வெட்டுகள் எமக்கு கட்டாய ஓய்வை வழங்கிக் கொண்டிருக்கின்றன.

எந்த வேலைக்கும் மின்சாரம் இல்லாமல் ஆகாது என்று பழகியிருக்கிறோம். எப்படி பொலித்தீன் இல்லாமல் வாழ்க்கை அமையாதோ அதேபோல மின்சாரம் இல்லாமலும் முடியாது. தினசரி ஒரு சாதாரண குடிமகனின் வீடு காலை எட்டுமணிக்கு மின்சாரம் போய்விட்டது. சரி தோட்ட வேலையைப் பார்ப் போம் என்றால் நீர் பாச்ச மோட்டார் போட வேண்டும் எனவே அது இயலாது. சரி சமையலையாவது நேரத்துக்கு ஆரம்பிப்போம் என்றால் ரைஸ் குக்கர் போடவோ 'இன்டக்ஸன் அடுப்பை' பற்ற வைக்கவோ முடியாது சரி மிக்ஸி இல்லாமல் எதையும் அரைக்க முடியாது. அம்மி குழவி உரல் உலக்கை என்பன எப்போதோ காணாமல் போய் விட்டன. சரி ஏதாவது படம் பார்க்கலாம் என்றால் கணனியோ தொலைக் காட்சியோ இயங்காது. சரி போனில் பார்க்கலாம் என்றால் டேற்றா காட் இல்லாமல் ரவுட்டரை மட்டும் நம்பியிருந்ததால் அதுவும் இல்லை அதைவிட்டா லும் போன் சார்ஜ் ஆக வேண்டுமே.

நிம்மதியாக கொஞ்சம் படுத்திருக்கலாம் என்றால் வெயில் புழுக்கம் சக்கை போடு போடுகிறது. எனவே விசிறி சுற்றாமல் வீட்டுக்குள் இருப்பது கஷ்டம் முன் பென்றால் மாமர நிழலும் வேப்பமரத்து நிழலும் இருக்கும். இப்போது வீடுதான் பெரிதாக வேண்டும் என்ற எண்ணத்தில் மரங்களை மட்டுமா தறித் தோம். கூடவே வேலியில் கூட பச்சை தெரியக்கூடாது என்று மதில்களை கட்டி வைத்திருக்கிறோம். சில வீடுகளுக்கு முற்றத்திலும் கல் பதித்து புல் முளைப் பதை தடுத்து விட்டனர். அவர்கள் சுவாசிக்கும் காற்றே செயற்கையாக செய்வதுதான். அதையும் கெடுத்து 'எயார் கொண்டிஷ'னும். வாழ்க்கையை எப்படி மாற்றியிருக்கிறோம். இப்போது மின்வெட்டு எப்படி வாழ்வது.

அண்மையில் ஒரு வைத்தியசாலைக்குச் சென் றிருந்தேன். அது ஒரு சின்ன வைத்தியசாலை தான். ஆனால் நோயாளர்கள் தங்க விடுதிகள் கொண்டுள்ளது. வெளிநோயாளர் பகுதியில் நான்கு மின் விசிறிகள் சுழன்று கொண்டிருந் தன. மின்விளக்குகளும் பட்டப்பகலில் ஒளிர்ந்து கொண்டிருந்தன. ஆனால் அங்கு மனிதர்கள் யாரும் இல்லை. வேலை நேரமுமில்லை. கடந்து போனால் வைத்தியசாலையின் அனைத்து அறைக ளிலும் இதே நிலை. பன்னிரண்டு கட்டில்கள் உள்ள விடுதியில் ஒரேயொரு நோயாளி இருந்தார். அவ ருக்காக நான்கு மின் விசிறிகளும் மூன்று மின் விளக்குகளும் இயங்கிக் கொண்டிருந்தன. ஒரு பராமரிப்பாளர் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டி ருந்தார். இதில் வேடிக்கை என்னவென்றால் அன்று வைத்தியர்கள் வேலை நிறுத்தத்தில் இருந்தனர்.

சகல அரச அலுவலகங்களிலும் இருபத்து நான்கு மணித்தியாலங்களும் மின்வெட்டினை தவிர்த்து சகல மின் சாதனங்களும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஏசி உட்பட. ஆட்களே இல்லாத கூட்ட அரங்கங்களில் மின்விசிறிகள் யாருக்காக. உதாரணமாக கிளிநொச்சியில் சில செயலகங்கள் மாடி அலுவலகம் குளத்துநீரையும் மரங்களையும் தடவி வரும் குளிர் காற்று. யன்னலோர இருக்கை கள். எப்படி இருக்கும். ஆனால் அங்கே கதவுகள் அனைத்தையும் அடைத்துவிட்டு உள்ளே குளிர்ப தன வசதிகளை எற்படுத்தி அதற்குள்தான் வேலை செய்ய முடிகிறது.

இந்த நிலை அலுவலகங்கள் வைத்திசாலைகள் என எங்கும் நடக்கிறது காரணம் அங்கு வேலை செய்யும் எவரும் தமது சொந்தப்பணத்தில் மின் கட்டணம் கட்டப் போவதில்லை. ஆத்தில போற தண்ணி அண்ணைகுடி தம்பி குடி என்று போகிறது.

தெருவில் முக்கியமான இடங்களுக்கு மின் விளக்குகள் பொருத்தப்படவில்லை. ஆனால் கடை வைத்திய நிலையம் போன்ற நிறுவன விளம்பரங் கள். இரவும் பகலும் ஒளிர்ந்து கொண்டிருக்கின்றன.

முக்கியமாக மின் தேவையுள்ள இடங்களில் சூரிய சக்தியில் இயங்கும் மின்கலங்கள் உள்ளன. குறிப்பாக சில வங்கிகளின் கூரைகள் இந்த மின் தட்டிகளால் நிரம்பியிருப்பதை காண முடிகிறது. மின்சாரம் இல்லாத காலத்தில் வன்னியில் பெரும் பாலான மக்களிடம் இந்த சோலார் இருந்தது. முள்ளிவாய்க்கால் நிலத்தையோ பொக்கணை கடற்கரையையே உழுது கிளறினால் இத்துப் போன சோலார்களையும் இன்னும் பல யந்திரங் களையும் காணலாம். புதைக்க முடியாத பெரும் யந்திரங்களே வெளியில் விடப்பட்டன.

மின்சாரமே இல்லாத மூன்று தசாப்தங்களை கடந்த வந்தவர்கள் நாங்கள். அப்போது எங்களி டம் தொலைக்காட்சிப் பெட்டிகள் இல்லை மிக்ஸி கிரைண்டர் இல்லை மின் விசிறிகள் இல்லை. நீர் இறைக்க பம்பிகளே இருந்தன. வாகனங்களுக்கு எரிபொருளாக மண்ணெண்ணையே இருந்தது. மின்சாதனங்கள் இயங்காத போது மின்பிறப்பாக் கிகள் பரவலாக வீடுகளில் இருந்தன. தனியே அவை திரைப்படங்கள் பார்க்க மட்டுமே பயன் பட்டன. ஒவ்வொரு பொருளின் உற்பத்திக்கும் தனித்தனி தேவைகள் இருந்த போதுதான் அவை கண்டு பிடிக்கப்பட்டன. ஆனால் அவை பயன்பாட் டுக்கு வந்தபோது...? உதாரணமாக வீடியோக் கருவி எவ்வளவு சரித்திர முக்கியத்துவம் கருதி தயாரிக்கப்பட்டது. இப்போது நடைமுறையில் அது எவ்வளதூரம் தன்னை மாற்றிக் கொண்டு கலியாணம் பூப்புனித நீராட்டு பிறந்த நாட்கள் என்று வேலை செய்யும்படி மாறிவிட்டது. அதற் கும் இப்போது மின்சாரம்தான் தேவை.

தொழிற்சாலைகளில் சிரட்டைக்கரி கொண்டு மின்சாரம் உருவாக்கப்பட்டது. ஒரு அரை 'பெரலில்'' அரிக்கன்லாம்பு ஒன்றை வைத்துக் கொண்டு கோழி முட்டைகளில் குஞ்சுகளை பொரிக்கவைத்தார் எமது உள்ளூர் விவசாயி. மண்ணெண்ணையை வைத்துப் பெற்றோலுக்கு நிகரான எரிபொருளை தயாரித்தனர். அதற்கு வடி என்று பெயர். இயந்திரங்களை இயக்க, தொடங்க சொட்டுப் பெற்றோலே தேவை. அதை சின்ன சிங்கர் வெற்று ஒயில்டப்பாவில் வைத்திருந்து நோயாளர்களுக்கு சேலைன் ஏற்றிய கழிவு வயர் ஊடாக நேரடியாக இரண்டு மூன்று துளிகளை அதில் விட்டு வாயால் ஊதி காபரேட்டருக்குள் செலுத்தி இயங்கத் தொடங்க அதை ஏமாற்றி மெதுவாக மண்ணெண்ணைக்கு மாற்றிவிட அதுவும் பேசாமல் ஓடியது.

முப்பது ஆண்டுகள் தனித்துவ வாழ்க்கை வாழ்ந்த நாம் மின்சாரத்தை கண்டதும் 'காஞ் சமாடு கம்பில விழுந்தது'போல மின்சாதனங் களை வாங்கிக் குவித்து விட்டோம். வசதியாகவும் வாழ்ந்து பழகி விட்டோம். இனி நாம் பழைய வாழ்க்கைக்கு திரும்ப முடியாது.

முடியவே முடியாது. இருக்கிற மின்சாரத்தை கச்சிதமாக சிக்கனமாக பாவித்தாக வேண்டும் நமக்கு எதிரில் மின்சாரத்தை தேவையற்று செல வழிப்பவரை சற்றே அறிவுறுத்தி எச்சரிப்பது தவ றல்ல எலிகளுக்கு பாசாணம் இருக்கு மின்சாரம் தேவையில்லை. அரச அலுவலகங்கள் வழிகாட்டி யாக இருக்க வேண்டும். அதை நிச்சயம் மக்கள் பின்பற்றுவார்கள். 'மிளகு போற இடம் தெரியாது கடுகு பேற இடம் கண்டு பிடிக்கிறிங்க' என்று நீங்கள் அலுத்துக் கொள்வது கேட்கிறது. நாம் அனுபவிக்கும் துயரங்களுக் கெல்லாம் நாமே காரணம். அதை ஒரு போதும் மறுக்க முடியாது. 'தீதும் நன்றும் பிறர் தர வாரா' தேவைதான் கண்டு பிடிப்புகளுக்கு காரணம்.

கோபுர தரிசனம்: சீரடிசாயி இராஜகோபுரம்

கோபுர தரிசனம் கோடி புண்ணியம். அதிலும் சீரடி சாயி இராஜ கோபுர தரிசனம் பலகோடி புண்ணியம். சாதாரணமாக கோவில் இராஜ கோபுரங்களின் அமைப்பு பல தளங்களையும், எண்கோண வடிவங்களையும் கொண்டது. ஆனால் சீரடிசாயி இராஜ கோபுரத் தின் அமைப்பு சற்று வித்தியாசமானது. அதிலும் இங்கு அமைந்துள்ள இராஜகோபுரம் ஒரு புது மையாக, வியக்கத்தக்கதாக அமைந்துவிட்டது. அதாவது நான்கு திசைகளுக்கு அதிபதியாக, நான்கு சிறிய கோபுரங்கள் பக்கவாட்டில் இருக் கத்தக்கதாக தரையிலிருந்து 45 அடி உயரத் தில் நிறுவப்பட்டுள்ளது. சீரடி சாயி பாபாவுக்கும் 'ஒன்பது' என்ற எண்கணக்கிற்கும் நிறைய ஒற் றுமையுண்டு. அவரது சரிதத்தைப் படித்தவர் களுக்கு இது புரியும். பொதுவாக இராஜகோபு ரத்தை 'ஸ்தலலிங்கம்' என்று கூட கூறுவார்கள். இங்குள்ள சாயிமந்திர் மூலஸ்தானத்தில் துவா ரகாமாயி தோற்றத்தில், சற்குருநாதர் காலை மடித்திருக்கும் காட்சிகூட, சிவலிங்கத்தைப் பிரதி பலிப்பதாக இயற்கையாகவே அமைந்துவிட்டது.

இங்குள்ள கோபுரத்தினூள்ளே வாஸ்து சாஸ் திரம் பார்க்கப்பட்டு, சீரடியந்திர செப்புத்தகடு, ஒன்பது நாணயங்கள்,சீரடி திருவுருவம், நவதா னியம், செப்புத்தகட்டில் பதியப்பட்ட சீரடி வேத மந் திரயந்திரம், உதி, விலையுயர் பொருட்கள் என்பன பிரதிட்சை செய்யப்பட்டுள்ளன. கிழக்கில் உதிக்கும் கதிரவனின் முதல் ஒளிக்கதிர், இந்தக்கோபுரத்தில் பதியப்பட்ட கண்ணாடித் துவாரத்தினூடாக, மேல்கு றிப்பிட்ட வைடூரிய பொக்கிஷங்களில் பட்டுத்தெ றித்து வெளியுலகிற்கு பாபாவின் சக்தியைப் பரப் புகிறது. சீரடிசாயியின் கூர்மையாக கோபுரத்தின் தத்துவமே இதுதான். எந்தப் பொருளும் வைத்தா லும் பழுதடையமுடியாத கோட்பாட்டைக் கொண்ட, கிரேக்கநாட்டு பிரமீட் அமைப்பையும் ஒத்துநிற் கிறது.

கோபுரம் உயர்ந்திருப்பதால், நெடுந்தூரத்திற்கு

அப்பால் இருந்து கோபுரத்தை வணங்குபவர்கள், சீரடிசாயியை தெய்வ சொரூபமாக எண்ணி வணங் குவார்கள். தூரத்திலிருப்பவர்களுக்கு சீரடிசாயியின் பார்வைபடரவே இராஜகோபுரம் அமைக்கப்பெற் றது. ஒரு இராஜகோபுரத்தின் தத்துவம் நாட்டிற்கு அரசன் ஒருவன் முதன்மையானவனாக இருக்கி றானோ, அதேபோல ஒர் ஆலயத்துக்கு கோபுரம் இன்றியமையாததாக அமைகிறது.

'சீரடி சாயிபாபா மத்தியநிலையம் ஸ்ரீ லங்கா' என்ற சாயி ஸ்தாபனம், சாயிநிலையமாக 1966ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு, 55 வருடங்களைக் கடந்துள்ளது, இங்கு நிறுவப்பட்டுள்ள சீரடிசாயி இராஜகோபுரம், இலங்கைத் திருநாட்டிலேயே உய ரமானதாகும். தலைநகரில் அமையப்பட்டுள்ள இந்தக்கோபுரம், தென் இந்தியா பூம்புகார் சிற் பக்கலைஞர் பிரசித்திபெற்ற ஸ்தபதி; பாவாடை செல்வராசுகுழுவினர் கைவண்ணத்தில், கட் டிடக் கலைஞர் திருமதி சுபாஸினி கௌசிகன் அவர்களின் வழிகாட்டலில், ஆர்.சிவகுமா ரின் கட்டிடநிறுவனமான CIVZCONN(PVT) LTD இனால் எழுப்பப்பட்டுள்ளது. வடஇந் தியா சீரடிசமஸ்தான தலைவர் Sri. Kanhuraj Bagate, தென்னிந்தியா மைலாப்பூர் அகில இந்திய சாயிசமாஜம் தலைவர் கே.தங்கரா ஜின் ஆலோசனையுடன், அவரது தலைமை யில் சீரடி இராஜகோபுர மஹாகும்பாபிஷேகம், மார்ச் மாதம் பங்குனி உத்திர தினமான 18ம் திகதி, வெள்ளிக்கிழமை காலை 10 மணிமுதல் 10.41 வரையுள்ள சுபநேரத்தில், ஸ்ரீ சாயி விஷ்ணு கோவில் ஆதீனகர்த்தா பிரதமகுரு பிரதிஷ்டாவித்தகர், கிரியாக்ரமஜோதி, ப்ரம்மஸ்ரீ இலஷ்மீகாந்த் ஜெகதீசக்குருக்கள் தலைமை யில், இலங்கைத் திருநாட்டில் பிரபலமான சீரடிசாயி சிவாச்சாரியார்கள் சகிதம், முதல் முறையாக முக்கிய பிரமுகர்களாக கஜமுக பிரவேசமாக யானை இராஜகோபுர வாசலைத் திறந்து வைக்க, கோமாதா தரிசனமாக பசுமாடு கன்றுடன் வரவுள்ளது.

முன்னோட்டமாக முதல்முறையாக 'சீரடி சாயிதீப விளக்குபூஜை' சுமங்கலிப் பெண்களால், 17.3.22 வியாழக்கிழமை, பௌணமிதினத்தன்று மாலை நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. மார்ச் 19ம் திகதி தொடக்கம் 27ம் திகதி வரை ஒன்பது நாட்கள் மண்டலாபூஜை இடம்பெறும். காலையும் மாலையும் யாகம், அபிஷேகம், சாயிபஜன். நான்கு காலஆராத்திகள், பல்லக்கு பவனி என்பன நடைபெறும். 48வது நாள் (5.5.2022) சிறப்பு பூஜையாக சங்காபிஷேகம், சித்திரத்தேர் போன்ற நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள் ளது.

எஸ். என். உதயநாயகம் ...✍
சீரடி சாயி மத்திய நிலையம் இலங்கை.

காணாமல்போன பசு

மண்ணெண்ணெய் விளக்கில் இருந்து எழும் புகையும் நாற்றமும் அறை முழுக்கச் சுற்றி வந்தது; காற்றில் எப்படி வாசம் நிரம்பி இருந்தாலும் ஆழ்ந்த நித்திரையில் எதுவும் தெரிவதில்லை. உம்மா சிமிழி விளக்கின் ஒளி அளவைக் குறைத்து வைக்கும்போது வாப்பா கால்களை நீட்டிச் சுவரில் தலை சாய்த்து அண்ணார்ந்து விட்டத்தைப் பார்த்துக் கொண்டிருப்பார்...

"ஏன் தூக்கம் வரலியா? "எங்க கண்ண மூட முடியுது? பசு காணத்து ஆறு நாள்; இண்டைக்கும் வரலேன்னா..", வாப்பா பேசி நிறுத்துவற்குள் உம்மா தலையை உயர்த்தி, "நரி கொண்டு போயிருக் குமா?", என்பார்; இருவரும் ஒவ்வொரு நாளும் தூங்கப் போகும்முன், தீவிர மாக யோசிப்பார்கள்; ஆனால் எந்த முடிவும் எடுக்க முடியாமல் உறங்கிப் போவார் கள்..

எங்கள் வளவில் ஐந்து பசு மாடுகள் இருந்தன; மடி நிறைந்து கிடந்த பசுக் கள் பாத்திரம் நிரம்பி வழியப் பால் தரும்; அந்த ஐந்து பசுக்க ளையும் குளிப்பாட்டு வதிலிருந்து தீவனம் வைப்பது, தொழுவத் தைச் சுத்தம் செய்வது சாணம் அள்ளி வேறு

ஒரு மூலையில் ஒரே இடத்தில் குவித்து வைப்பது பட்டிக்கார மாமாதான்; அவர் அன்றாட வாழ்க்கை மாடுகளோடு இருந் தது; பால், சாணம், கோமியம் எல்லாம் கலந்த ஒருவித வாசம் அவர் உடம்பில் எப்போதுமிருக்கும்..

பட்டிக்கார மாமா வாப்பாவின் தூரத் துச் சொந்தக்காரர்தான்; கொஞ்ச வருச மாக எங்கள் வளவில்தான் பசு வளர்த் தார்; கறுப்புக்கு அதிக இடமில்லாமல் பழுப்பு, வெள்ளை, செவலை என்று வண்ணங்களாய் நடமாடிய பசுக்களில் வெள்ளையில் கறுப்பு மறை போட்ட பசுதான் காணாமல் போனது; வாப் பாவின் முதலீட்டில் வாங்கப்பட்டது; அவர் செல்லமும் அதுதான்; சந்தை யிலிருந்து வரும்போது, சைக்கிள் கூடையின் பக்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டு நிற்கும்; அதற்கென்று தரம் வாய்ந்த கிராமத்து இலை வகைகள் தேடித் தேடி வாங்கியிருப்பார்; பூனைக் கண்கள், செம்பழுப்பு நிற ரோமங் கள் படர்ந்திருக்கும் "ஜேசு" என்ற நம் நாட்டு மாடு; கேப்பை மாடு என்பது "ஜேசு" மாடுகளுக்குச் சம்பந்தமில்லாத பாம் மாடுகள்; பணி என்றால் பணியும்; நட என்றால் நடக்கும்; சொல்லுப்படி கேட்கும்; முக்கியமாகப் பாலுக்காகவே இவைகளை வளர்ப்பார்கள்; ஊர்ப் பசுக் கள் அப்படியல்ல அதன் சாம்பல் கழுத் தில் தன் நீண்ட நாக்கினால் அடிக்கடி நீவிக் கொள்ளும்...

இருள் பிரிவதற்கு முன்னமே, எரு மைகளுக்கு வைக்கோலும் பசுக்களுக்கு தவிட்டுப் புண்ணாக்கும் வைத்துப் பிணங்கிய மாடுகளை அடித்தும் சுணங் கிய மாடுகளை அதட்டியும் அனைத்தை யும் தன் விசைக்குள் அடக்கி ஆற்றுப்படு கைக்குச் சாய்த்துச் செல்லும் பட்டிக்காரர் அவர் வேகத்துக்கு மாடுகள் விரைவது தாமதிப்பின் "ஹோவ்..ஹோவ்.. ஆவ்.. ஆவ்.." சத்தம் போடுவார்; வராத மாட்டின் கயிற்றைத் தரதரவென்று இழுத்துக் கொண்டு போக இன்னோ ருவர் பின் தொடர்ந்து சென்று கயிற் றின் பிடியைப் பற்ற முனைவார்; கன்று துள்ளிக் குடைந்து கொண்டிருக்கும்...

பண்ணை வீடுகளில் மனிதர்கள் போலவே மிருகங்களும் பறவைகளும் இயக்கத்தில் தானாகத் திரியும்; மாலை ஆறு மணிக்கு எல்லாப் பகுதிகளிலும் இருக்கும் விளக்குகளைப் போடுவார் கள்; கட்டப்பட்டிருக்கும் நாய்களை அவிழ்த்து விடுவார்கள்; அந்த நாய்கள் ஒன்றுக்கும் பிரயோசனம் இல்லா தவை; ஏதாவது ஒரு திசையைப் பார்த்துத் தலையை உயர்த்திக் குரைத் துக் கொண்டுருக்கும்; கிளை விட்ட பெரிய மரங்களில் ஆந்தைகள் மெல்லத் தொடங்கிப் படிப்படியாகக் குரல் எழுப்புவது, கிள்ளி வைத்தால் குழந்தை விம்மி விம்மி அழுமே அது மாதிரித்தான், தனியாக ஆந்தை இருப் பதில்லை; எப்போதும் ஒன்றுக்கு மேற்பட்டவை சேர்ந்து தானிருக்கும்; எந்தப் பண்ணையிலும் மரங்களின் கீழ் கிளையில் பசுக்கள் தங்குமானால் மேல் கிளையில் பறவைகள் வருவ தில்லை; இரவில் பசு விழித்திருப்பது பறவைகள் சந்தோசம் கேட்டு விடுவ தாக நம்புகின்றன...

இரவு முழுக்கப் பண்ணைகளைச் சுற்றி வரும் காவலர்கள் கைகளில் டோச்லைட் வைத்திருப்பார்கள். பக் கத்தில் மாட்டுக் குடில்; பால்க் காரர் கள், காய் கறிச் சந்தை வியாபாரிகள் கூடும் நேரங்கள் தவிரப் புது மனிதர் களை அங்கு பார்க்கவும் பழகவும் வாய்ப்பே இல்லை; சுற்றிவர மண் பாதைகள்; நுழைவாயில் காட்டுக் கம் புகளால் வரிந்த பெரிய இரு தட்டிகள் தான். மேற்குப் பக்கம் எட்டு மட்டும் தெரிந்த வயல் வெளிகளைப் பார்த்தால் கரும் பச்சை போர்த்திய உளுந்துச் செடிகள் அறுவடைக்குப் பின்னர் ஒட்டு கள் விட்டிருக்கும்; "இங்க மேய்கிற பசு மாடுகள், ஈத்துக்கு ரெண்டு போடும்; கறந்தா ஏழு லீடடர்தான்; பச்சப் புள்ள கூடக் கறக்கலாம்; மடி இறுக்காது.." இப்படிச் சொல்லும்போது அவர் ஒரு புற மீசை கீழ் நோக்கித் தாழ்ந் தும் மறு புறம் முறுக்கி மேல் நோக் கியும் அசையும்; என் விரலைப் பற்றி அங்கு அழைத்துவந்த மாமா குழப்ப மும் மகிழ்ச்சியும் கொண்டவராகச் சில நிமிடங்கள் ஸ்தம்பித்து நிற்பார், தோளில் தொங்கிய ஈர வேட்டியை இடுப்பில் கட்டிக் கொண்டு கீற்றுக் கொட்டகைக்கருகில் நின்ற பசுவின் முதுகில் செல்லமாகத் தட்டி விடுவார்; பசு தானாகக் கால்களில் ஒன்றை மடக்கித் தன் பேருடலை வளைத்துக் கொடுக்கும்; அப்போது, கையிலுள்ள செம்புக் குடத்தை வைத்து மடியை வருடிப் பால் கறக்கும் அழகை ஓரக் கண்ணால் ரசித்து நிற்பேன்...

கொல்லைப் புறம் தாண்டி இறங் கும் தொழுவத்தில் சோகையாய் எரிந்து கொண்டிருக்கும் சிமிழி விளக் குக் காற்றில் ஆடியது; தன் உடம்போடு அச்சாய் பதிந்துபோன பாயின் அடை யாளம் பட்டிக்கார மாமா திரும்பி முதுகைக் காட்டி எழுந்திருக்கும்போது தெரிந்தது; பசுவின் தினமான கதறல் தாங்க முடியாததாயிருந்தது; கால் மாறி நின்று மேய முடியாமல் எழும் குரல்தான் அதுவென்று உம்மா சத்தம் போடவும் பட் டிகாரர் பறந்து போனார்; அவர் கைகள் பசுவின் வயிற்றைத் தடவிப் பார்த்தன; விடிவதற்குள் கன்று ஈன்றுவிடும் என்று வைத்தியரை அழைத்துவர வேகமாக அங்கிருந்து விலகினார்...

பசு மூத்திரம் பெய்வதும் சாணம் இடு வதுமாய் உழன்றது; "நிறை மாதக் குட் டித்தாச்சி குளிர் தாங்காது" இப்படிச் சொல்லிச் சொல்லியே குதிரைவாலி எண்ணெய்யை ஒரு பெரியகரண்டியில் ஊற்றி எடுத்துக்கொண்டு ஒரு மிடரா வது பருக்கி விடலாமென்று பிரயத்த னம் செய்தார்; முடியவில்லை; பசுவின் சுவாசம் உரத்துக் கேட்டது; நான் கையில் மீதி எண்ணெய் போத்தலுடன் தூர நின்றிருதேன்; களைப்பு மேலிட உறக்கம் கண்களை இழுத்தது...

அதிகாலைப் பறவைகள் கூட்டமாக வானில் பறந்து சென்ற ஓசை குறைவ துபோலவே அது நிகழ்ந்தது; வழுக்கிக் கொண்டு வெளியே விழுந்த பசுவை பட் டிக்கார மாமா கையில் ஏந்தி மெல்லப் பூமியில் இறக்கினார்; கன்றின் பிசு பிசுப் பும் மணமும் காற்றில் ஒட்டிக் கலந்தது; இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்த எனக்கு பசுக்கன்றின் சுருங்கிய ரோமங் கள் மீது விருப்பம் ஏறியது; அதன் பால் நகங்கள் நெஞ்சில் அப்படியே பதிந்து விட்டன; கண்களை மூடினால் பல நாட்கள் வரை ஞாபகம் இருந்தது.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

இலங்கையின் கட்டுமானத் துறையின் மறுமலர்ச்சிக்கு வித்திட்டுள்ள லங்வா

இரும்பு உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் இலங்கையின் முன்னணியாளராகத் திகழும் சிலோன் ஸ்டீல் கோப்ரேஷன் லிமிடட் (லங்வா) நிறுவனம் மிரிஜ்ஜவில ஏற்றுமதி செயற்பாட்டு வலயத்தில் உள்ள லங்வா சன்ஸ்தா தொழிற்துறை வளாகத்தில்; இரும்பு மற்றும் கூரைத்தகடுகளை உற்பத்தி செய்வதற்கான இரு அதிநவீன உற்பத்தி வசதிகளுக்கு அண்மையில் அடிக்கல் நாட்டியிருந்தது. தொற்றுநோய்க்குப் பின்னரான சூழலில் மூலப்பொருட்களைக் கிடைக்கச் செய்து உள்நாட்டு கட்டுமானத் துறையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ஏனைய அமைச்சுப் பிரதிநிதிகளின் பங்களிப்புடன் இந்தப் புதிய இரும்பு உற்பத்தி வசதிக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

இறக்குமதி செய்யப்பட்ட விலையுயர்ந்த இரும்பு உலோகக் குற்றிகளைப் பயன்படுத்தும் வழக்கத்திலிருந்து விலகி இரும்புத் துண்டுகள் கம்பிகள் மற்றும் கம்பி தயாரிப்பதற்கான முதன்மை மூலப்பொருட்களைப் பயன்படுத்தி

புத்திசாலித்தனத்தை இலங்கைக்குக் கொண்டுவரும் இரும்புத் தொழிற்சாலையாக இது விளங்கும். இந்தப் பின்தங்கிய ஒருங்கிணைப்பானது தற்போதைய நேரத்தில் பில்லியன் கணக்கான டொலர்களை உள்நாட்டுக் பொருளாதாரத்துக்கு சேமிப்பதாக அமையும்.

சுற்றாடல் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் உள்நாட்டு மற்றும் சர்வதேச நடைமுறைகள், வழிமுறைகளைப் பின்பற்றுவதால் இந்த உற்பத்தி வசதியானது நீடித்து நிலைப்பதாக இருக்கும். இதன் உற்பத்திச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டதும் 600,000 வருடமொன்றுக்கு மெற்றிக்தொன், இருப்புத் துண்டுகள் உலோக உருளைகள் மற்றும் இரும்பு வயர்கள் உற்பத்தி செய்யப்படும். இது எதிர்காலத்தில் இலங்கையைத் தன்னிறைவடையச் செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலதிகமான உற்பத்திகள் ஹம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகத்தின் ஊடாக ஏற்றுமதி செய்யப்படும்.

சாதனை படைத்துள்ள ஆடை ஏற்றுமதி

2022 ஜனவரி மாதத்தில் இலங்கையின் ஆடை ஏற்றுமதி கடந்த ஐந்து வருடங்களில் அந்த மாதத்திற்கான அதிகூடிய எல்லையை எட்டியுள்ளது. இந்த செயல்திறன் கடந்த இரண்டு ஆண்டுகளில் தொற்றுநோயினால் ஏற்பட்ட தாக்கத்தில் இருந்து நீண்டகால விளைவுகளிலிருந்து மீண்டு வரும் நிலையில், தொழில்துறையின் அடிப்படை வலிமையை இது நிரூபிக்கிறது.

இலங்கையின் ஆடை ஏற்றுமதி வருமானம் 2022 ஜனவரியில் 487.6 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது, இது தொற்றுநோய்க்கு முன்னர் 2019 ஜனவரியில் பதிவு செய்யப்பட்ட 452 மில்லியன் அமெரிக்க டொலர்களை 8%ஆல் அதிகரித்துள்ளது. இதன்படி ஜனவரி 2021 ஏற்றுமதி வருவாய் 23% அதிகரிப்பாகும்.

"குறிப்பிடத்தக்க குழப்பகரமான சூழ்நிலைகளுக்கு மத்தியில், இந்த வலுவான செயல்திறன் இலங்கையின் ஆடைத் தொழிற்துறையின் பின்னடைவுக்கு சான்றாகும், மேலும் 2025ஆம் ஆண்டிற்கான அதன் இலக்குகளை அடைவதற்கான தொழில்துறையின் முன்னேற்றத்திற்கு இது நல்லதொரு சான்றாகும்" என, ஒன்றிணைந்த ஆடை சங்கங்களின் மன்றத்தின் (JAAF) செயலாளர் நாயகம் யொஹான் லோரன்ஸ் தெரிவித்தார்.

தொழில்துறையின் 2030 தொலைநோக்கு அந்த வருடத்திற்குள் இலங்கையை உலகளாவிய ஆடை மையமாக மாற்றுவது; 2025ஆம் ஆண்டிற்குள் ஆடையிலிருந்து வருடாந்த ஏற்றுமதி வருவாயை 8 பில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரிப்பதே இடைநிலை இலக்காகும்.

"அனைத்து முக்கிய பங்குதாரர்களுக்கிடையிலான நெருக்கமான ஒத்துழைப்பின் மூலம், தேசியப் பொருளாதாரத்தில் ஏற்கனவே உள்ள வலுவான பங்களிப்பை, அந்நியச் செலாவணி மற்றும் உயர்தர வேலைவாய்ப்பின் முக்கிய உற்பத்தியாளராக, ஆடைத் தொழில்துறை மேலும் அதிகரிக்க முடியும்" என லோரன்ஸ் மேலும் கூறினார்.

தொழில்துறையின் ஜனவரி 2022 செயல்திறன், ஊழியர்களிடையே தொற்றுநோய் பரவுவதை நன்றாகக் குறைக்க, சுகாதார அதிகாரிகளுடன் நெருக்கமான ஒத்துழைப்புடன், துறையால் பின்பற்றப்பட்ட கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகளின் வெற்றியைப் பிரதிபலிக்கிறது. மேலும், தேசிய தடுப்பூசி செயற்பாட்டுடன், இலங்கையின் ஆடைத் துறையில் 65% ஊழியர்கள் இப்போது இரு தடுப்பூசிகள் மற்றும் பூஸ்டர் ஆகிய இரண்டையும் பெற்றுள்ளனர், அதே நேரத்தில் 95% ஊழியர்கள் குறைந்தது இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுள்ளனர். Omicron தொற்று இலங்கைக்கு வருவதற்கு முன்னரே, ஆடை ஏற்றுமதியாளர்கள் கூடுதலான பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

Brandix பற்றிய குறும்படம் தயாரிப்பு

மட்டக்களப்பிலுள்ள Brandix ஆடை உற்பத்தித் தொழிற்சாலை பற்றிய குறும்படம் ஒன்றை BBC StoryWorks கொமர்ஷல் புரொடக்ஷன்ஸ் முன்னெடுத்திருந்தது. 'Enriching the fabric of community' எனும் தலைப்பில் அமைந்த இந்த குறும்படம், World Green Building Council இன் 'Building a Better Future' தொடரின் ஒரு அங்கமாக

அமைந்துள்ளது. இது மக்களின் வாழ்க்கை தரத்தில் கட்டடங்கள் கொண்டிருக்கும் தாக்கங்களை விளக்குவதாகவும், காலநிலை மாற்றத்தில் சூழலுக்கு நட்பான கட்டட நகர்வுகள் ஆற்றும் பங்களிப்புகள் தொடர்பிலும் விளக்கமளிப்பதாக அமைந்துள்ளது.

2019 ஆம் ஆண்டில் உலகின் முதலாவது Net Zero Carbon சான்றளிக்கப்பட்ட ஆடை உற்பத்தி வசதி எனும் நிலையை Brandix Essentials மட்டக்களப்பு எய்தியிருந்தது. தொழிற்சாலையினால் சூழலில் மாசடைந்த வாயுக்களின் வெளியேற்றத்தைக் குறைத்து அதனூடாக ஏற்படக்கூடிய எதிர்மறையான தாக்கத்தை குறைத்துக் கொள்வதில் பெருமளவு பங்களிப்பை ஆற்றியிருந்ததுடன், காலநிலை மாற்றத்துக்கு சவால் விடுப்பது என்பதிலும் முக்கிய பங்காற்றியிருந்தது. U.S. Green Building Council (USGBC) இன் Leadership in Energy and Environmental Design (LEED) சூழலுக்கு நட்பான கட்டட தரப்படுத்தல் கட்டமைப்பில் இந்த தொழிற்சாலை பிளாட்டினம் தரப்படுத்தலைப் பெற்றுள்ளமையும் விசேட அம்சமாகும்.

சூழலை பாதுகாக்க வேண்டிய தேவை மட்டுமன்றி, ஆடைத் தொழிற்சாலைத் துறையில் உண்மையில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய சூழல் நிலைபேறாண்மை என்பதிலும் Brandix கவனம் செலுத்துகின்றது. ஊழியர்கள் மற்றும் சமூகத்தைச் சேர்ந்த இதர அங்கத்தவர்களுக்கு ஆரோக்கியமான வாழ்க்கையை முன்னெடுப்பதற்கு பங்களிப்பு வழங்கும் வகையில், தூய குடிநீர் வசதியை ஏற்படுத்திக் கொடுக்கும் பல 'Care for Our Own' திட்டங்களையும் நிறுவனம் முன்னெடுத்திருந்தது. தற்போது சுமார் 4500 க்கும் அதிகமான குடும்பங்களுடன், பாடசாலைகள் மற்றும் வைத்தியசாலைகளும் இந்த தூய குடிநீர் விநியோகத் திட்டத்தினூடாக அனுகூலம் பெறுகின்றன.

சிறந்த கைத்தொழிலுக்கான தங்கப் பதக்கத்தை வென்ற பிரிட்டிஷ் கொஸ்மெட்டிக்ஸ் நிறுவனம்

அழகுக்கலை சாதனங்களை உற்பத்திசெய்து விற்பனை செய்வதில் சர்வதேச அங்கீகாரத்தை வென்ற இலங்கை நாமமாக விளங்கும் பிரிட்டிஷ் கொஸ்மெட்டிக்ஸ் தனியார் நிறுவனம், கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் (IDB) ஏற்பாடு செய்யப்பட்ட சிறந்த கைத்தொழில்களுக்கான விருது வழங்கும் விழாவில் அழகுகலைத் துறை மற்றும் அதுசார்ந்த உற்பத்திப் பிரிவின் தங்கப்பதக்க விருதை வென்றுள்ளது.

மேற்படி விருது வழங்கும் விழா அண்மையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்ச ஆகியோரின் தலைமையில் ஷோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் வெகுவிமரிசையாக நடைபெற்றது.

இது குறித்து கருத்து தெரிவித்த நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரி திருமதி நிரோஷா ஜாகொட ஆராச்சி நாம் எப்பொழுதும் உயர் தரத்திலான பொருட்களை உற்பத்தி செய்வதோடு அவற்றை வாடிக்கையாளர்களுக்கு இலகுவில் கொண்டு சேர்ப்பதற்கான சிறந்த சந்தைப்படுத்தல் வேலைத் திட்டமொன்றையும் நடைமுறைப்படுத்துகின்றோம். இந்த வெற்றி தருணத்தில் எமது பெறுமதிமிக்க வாடிக்கையாளர் பெருமக்களுக்கும் ஊழியர்களுக்கும் நாடெங்கிலுமுள்ள எமது விற்பனை முகவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன் என்றார்.

இவர் Career & Professional Woman Awards 2019 விருது விழாவில் சிறந்த 50 பெண்களில் ஒருவராகவும் தெரிவு செய்யப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. 1993ஆம் ஆண்டில் மிகச் சிறியளவில் தொடங்கப்பட்ட பிரிட்டிஷ் கொஸ்மெட்டிக்ஸ் நிறுவனம் தற்பொழுது சுமார் 300 ஊழியர்கள் பணியாற்றுகின்ற பெரும் நிறுவனமாக வளர்ச்சியடைந்துள்ளது.

தொழில் வாய்ப்பை அதிகரிப்பதற்கு Virtusa உடன் Saegis கம்பஸ் புரிந்துணர்வு உடன்படிக்கை

கொழும்பு நகரின் மையத்தில் நவீன வசதிகளைக் கொண்ட, நாட்டிலுள்ள முன்னணி உயர் கல்வி நிலையங்களில் ஒன்றான Saegis கம்பஸ், டிஜிட்டல் புத்தாக்க பொறியியல் முன்னோடியான Virtusa பிரைவட் லிமிடெட் உடன் அண்மையில் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டிருந்தது. அதனூடாக, பட்டதாரிகளுக்கு எதிர்காலத்தில் பரந்தளவு தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இலங்கையின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் என்பது பெருமளவு வளர்ச்சியைப் பதிவு செய்த வண்ணமுள்ளதுடன், இந்த ஆண்டின் இறுதியின் துறையின் வருமானம் 1.8 பில்லியன் அமெரிக்க டொலர்களை எய்தும் என JLL ஸ்ரீ லங்கா மற்றும் ICTA ஆகியன எதிர்வுகூரியுள்ளன. 2024 ஆம் ஆண்டளவில் இந்தப் பெறுமதி 3 பில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரிக்கும் எனவும் எதிர்பார்ப்பதாக தெரிவித்துள்ளன. 2021 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் இந்தத் துறை 7 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்திருந்ததுடன், 150,000 க்கும் அதிகமான ஊழியர்களைக் கொண்டிருந்ததாக இலங்கை ITBPM தொழிற்துறை அறிக்கை தெரிவித்துள்ளது.

அதிகரித்துச் செல்லும் இன்றைய தொழில்நுட்ப உலகில் தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு பட்டதாரிகளுக்கு உதவும் வகையில் Saegis கம்பஸ் அமைந்திருப்பதுடன், திறன்களில் காணப்படும் இடைவெளியை நிவர்த்தி செய்து கொள்ள உதவுவதுடன், ஒன்றிணைந்து துறையை மேம்படுத்தும் பணிகளை முன்னெடுத்து, உலகளாவிய ரீதியில் தகவல் தொழில்நுட்பத் துறைக்கு அதிகளவில் நாடும் பகுதியாக திகழச் செய்யும் முயற்சிகளை மேற்கொள்கின்றது. Saegis கம்பஸ் உப வேந்தர் பேராசிரியர் நாலக ஜயகொடி, Virtusa சிரேஷ்ட பணிப்பாளர் சம்பத் திரிமாவிதான இடையே இந்த புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

BSc (Hons) in Computer Science, BSc (Hons) in Software Engineering, BSc (Hons) in Information Technology மற்றும் Bachelor of Information Technology

போன்ற கற்கைகளை Saegis கம்பஸ் வழங்குகின்றது. இவற்றை கல்வி அமைச்சு அனுமதியளித்துள்ளதுடன், பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தையும் பெற்றுள்ளன.

SLIM விருது விழாவில் விருதுகளை அள்ளிக்குவித்த 'DSI Tyres'

DSI Tyres நிறுவனம், SLIM Brand Excellence 2021 விருது விழாவில் கைத்தொழில் மற்றும் இதர பலதுறைகளைச் சார்ந்த முன்னணி நிறுவனங்களுடன் போட்டியிட்டு Local Brand of The Year வெள்ளிப்பதக்க விருதையும் Product Brand of The Year வெங்கலப் பதக்கவிருதையும் SLIM DIGIs 2021 விருது விழாவில் Best SEO/ SEMCampaign வெள்ளிப்பதக்க விருதையும் Best digital marketing campaignin Auto motive/ Industrial Manufacturing வெங்கலப் பதக்க விருதையும் வென்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.

SLIM Brand Excellence மற்றும் SLIM DIGIs விருது விழாக்கள் இலங்கையில் நடாத்தப்படுகின்ற அதீத வரவேற்பையும் போட்டித்தன்மையும் கொண்ட வர்த்தகநாம விருது விழாக்களாக கருதப்படுகின்றது.

கொழும்பு மொனார்ச் இம்பீரியல் ஹோட்டலில் அண்மையில் நடைபெற்ற கோலாகல விருது விழாவில் DSI Tyres நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் காவிந்த ராஜபக்ச விருதுகளை பெற்றுக்கொண்டார்.

DSI Tyres வாடிக்கையாளர்களின் தேவைகளை சரியாக புரிந்துக் கொண்டு நவீன தொழில்நுட்பத்தின் துணையுடன் தொடர்ச்சியான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள் ஊடாக சூழல் நேயமிக்க முறையில் தமது வர்த்தக நாமத்தை ஊக்குவிக்கும் முன்னணி டயர் உற்பத்தி நிறுவனமாக விளங்குவதே அதன் தொடர் வெற்றிக்கு காரணமாகும்.

"DSI Tyres நிறுவனம் வர்த்தகநாமத்தின் தரம் தொடர்பாகவும் டிஜிட்டல் மயம் தொடர்பாகவும் தீவிர கவனம் செலுத்துமொரு நிறுவனமாகும். நவீன தொழில்நுட்பம் மற்றும் நவீன சந்தைப்படுத்தல் எண்ணக்கருவிற்கமைய செயற்படுவதும் தேசிய மற்றும் சர்வதேச சந்தைகளை வெல்வதற்கு ஏதுவாக அமைந்துள்ளது என முகாமைத்துவப் பணிப்பாளர் காவிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

ஜோன் கீல்ஸ் அறிமுகப்படுத்தும் 'சன்நாப் திட்டம்'

ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பிஎல்சி (ஜேகேஎச்) ஜோன் கீல்ஸ் குழுமத்தின் அனைத்து பெண் ஊழியர்களுக்கும் 'ஃபெம்ஸ் அவள்' சானிட்டரி நாப்கின்களை இலவசமாக வழங்குவதற்கான ஒப்பந்தத்தில் 2022 மார்ச் 9 ஆம் திகதி ஹேமாஸ் நுகர்வோர் தரவகைகளுடன் கையெழுத்திட்டது. மாதவிடாய் ஆரோக்கியம் என்பது மிகவும் இழிவுபடுத்தப்பட்ட தலைப்பாகும், மேலும் மாதவிடாய் ஆரோக்கியம் குறித்த கல்வியின் பற்றாக்குறை மற்றும் அத்தியாவசிய சுகாதாரத்திற்கான வரையறுக்கப்பட்ட அணுகல் ஆகியவை தனிநபர்களின் உடல் மற்றும் மன நலனில் மட்டுமல்ல, பெண் பணியாளர்களின் உற்பத்தித்திறனிலும் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். குழுவின் பன்முகத்தன்மை, சமபங்கு மற்றும் உள்ளடக்கம் (டிஈஐ) முன்முயற்சிகளுக்கு ஏற்ப, 'வன் ஜேகேஎச்' என்ற தரவகையின் கீழ் இந்த வசதி தொடங்கப்பட்டுள்ளது. இந்த கூட்டாண்மை, மாதவிடாய் தொடர்பான உடல்நல அபாயங்கள் மற்றும் பதட்டங்களை குறைக்கும் நோக்கத்துடன் ஹேமாஸ் மூலம் மாதவிடாய் ஆரோக்கியம் குறித்த தொடர்ச்சியான விழிப்புணர்வு அமர்வுகளை வழங்குகிறது.

ஜோன் கீல்ஸ் குழுமத்தின் தலைவர் கிருஷான் பாலேந்திரா கூறுகையில், 'எங்கள் வன் ஜேகேஎச் முயற்சியின் ஒரு பகுதியாக, இந்த சன்நாப் நிகழ்ச்சியானது, மாதவிடாய் ஆரோக்கியத்தை முன்னுரிமைப்படுத்துவதுடன் மாதவிடாய் சம்பந்தமான இழிவுபடுத்தலை அகற்றுவதை ஆதரிப்பதோடு மட்டுமல்லாமல், இது அனைத்து பெண்களுக்கும் அடிப்படைத் தேவை என்பதை அங்கீகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. சன்நாப் திட்டத்தின் முதல் கட்டம் எங்கள் பணியாளர்கள் உட்பட, அனைத்து பெண் ஊழியர்களுக்கும் சானிட்டரி நாப்கின்களை இலவசமாக வழங்கும் அதே வேளையில், இரண்டாவது கட்டத்தில் தங்கள் குடும்பத்தில் ஒரு பெண் உறுப்பினருக்கு தங்கள் ஒதுக்கீட்டை வழங்க விரும்பும் அனைத்து ஊழியர்களுக்கும் இந்த வசதியை விரிவுபடுத்துகிறது. இதன் மூலம் மேலும் விழிப்புணர்வை அதிகரித்து, ஜோன் கீல்ஸ் குடும்பத்தினரை சார்ந்தவர்களுக்கும் ஆதரவளிக்கிறது.

இந்நிகழ்வில் ஹேமாஸ் நுகர்வோர் தரவகைகளின் முகாமைத்துவப் பணிப்பாளர் சிரியான் டி சில்வா விஜயரத்ன கருத்துத் தெரிவிக்கையில், 'ஒரு வருடத்திற்கு முன்னர் ஃபெம்ஸ் அவள் ஊடாக ஹேமாஸ் நுகர்வோர் இலங்கையில் முதன்முறையாக பலபங்குதாரர் முயற்சியை ஆரம்பித்ததுடன், இலங்கை முழுவதும் உள்ள பெண்களுக்கு மாதவிடாய் குறித்து பயிற்றுவிப்பதற்கும் பயிற்சியளிப்பதற்கும் உடல்நலம் மற்றும் சுகாதாரம் மற்றும் மலிவு விலையில் சானிட்டரி நாப்கினைப் பெறுவதற்கான அணுகலை வழங்குவதற்கும் முன்வந்தது. இந்த திட்டம் ஏற்கனவே ஆயிரக்கணக்கானவர்களை தொட்டுள்ளது

ASIA PACIFIC ICT விருதுகளில் UTECH – IoT பிரகாசிப்பு!

இலங்கையின் முன்னணி Industrial 4.0 மாற்றத்தை நடைமுறைப்படுத்துகின்ற மற்றும் தொழில்துறை தன்னியக்க (Industrial Automation) தீர்வுகளின் வழங்குநருமான UTECH Technologies (Pvt) Ltd. ஆனது, National Best Quality Software Awards (NBQSA) 2021 (சிறந்த தேசிய தரம் வாய்ந்த மென்பொருள் விருதுகள்) விழாவில், தங்களது புதுமையான வன்பொருள் மற்றும் மென்பொருளுக்காக 2 தங்க விருதுகளை வென்றுள்ளது.

இந்த தேசிய ICT விருதுகளை வென்றதன் மூலம், UTECH ஆனது, ஆசியா பசுபிக் ICT சங்க விருதுகள் 2020/21 இல் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரிய வாய்ப்பையும் பெற்றுள்ளது. அத்துடன் 'Internet of Things' ஆண்டின் தொழில்நுட்பத்திற்கான ஒட்டுமொத்த தங்க விருதை வென்றுள்ளதன் மூலம் இலங்கைக்கு பெருமையை கொண்டு வந்ததில் நிறுவனம் பெருமை கொள்கிறது. தொழில்நுட்பத்தில் முன்னோடியான சீனா, அவுஸ்திரேலியா, சிங்கப்பூர் உள்ளிட்ட பல்வேறு ஆசிய பசிபிக் நாடுகளுடன் போட்டியிட்டு வருடத்திற்கான தொழில்நுட்ப விருதுகளை அது வென்றுள்ளது.

வன்பொருள் மற்றும் மென்பொருள் உள்ளிட்ட அனைத்து IoT சார்ந்த தொகுதிகளையும் வடிவமைத்து, மேம்படுத்தி, உற்பத்தி செய்யும் இலங்கையில் உள்ள ஒரே தொழில்நுட்ப நிறுவனமாக UTECH திகழ்கின்றது. இது வாடிக்கையாளர்கள் தங்களுக்கு அவசியமான பிரத்தியேக தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் தனிப்பயனாக்கக்கூடிய பாதுகாப்பாக ஒரு முனையிலிருந்து மறு முனைக்கு இறுதித் தீர்வை வழங்குகிறது.

UTECH இன் காப்புரிமை பெற்ற தொழில்நுட்பமான Blackbox உள்ளிட்ட ஏனைய புத்தாக்கமான தயாரிப்புகளான Smartnode, Coollink மற்றும் Smart Energy Meter ஆகியன தனிப்பயனாக்கக்கூடிய மற்றும் செலவு குறைந்த telematic gateways (தொலைதூர இயக்கத்திற்கான பாதைகள்) ஆகும். அவை பரந்த அளவிலான தொழில்துறை தன்னியக்கம் மற்றும் பிரதான, துணை தொழில்துறை இயந்திரங்களின் உற்பத்தித்திறனைக் கண்காணிக்கும்.

UTECH வழங்கும் தீர்வின் தனித்துவமான அம்சம் யாதெனில், இயந்திர சென்சர்கள், இயந்திரக் கட்டுப்படுத்திகள் அல்லது இயந்திரத்தின் PLCக்களில் நேரடியாக தொடுவதன் மூலம் இயந்திரங்களில் தடையற்ற ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதாகும்.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

ஐஸ்வர்யா ராஜேஷ் நடிக்கும் புதிய படம்

தமிழ் திரையுலகின் முன்னணி நடிகையாக வலம் வரும் ஐஸ்வர்யா ராஜேஷ் புதிய பட மொன்றில் நடிக்க ஒப்பந்தமாகியுள் ளார்.

ஐஸ்வர்யா ராஜேஷ் காக்கா முட்டை படத்தில் தனது நடிப்புத் திறமை யின் மூலம் அனைவரையும் ஈர்த் தவர் நடிகை ஐஸ்வர்யா ராஜேஷ். தொடர்ந்து வடசென்னை, கனா, நம்ம வீட்டு பிள்ளை, தர்மதுரை, செக்க சிவந்த வானம், வானம் கொட்டட் டும், கா/பெ ரணசிங்கம் போன்ற படங்களில் வித்தியாசமான கதாபாத் திரங்களை ஏற்று நடித்து முன்னணி நடிகையாக உயர்ந்தார்.

கோலிவுட்டில் பிசியான நடிகை யாக வலம்வரும் இவர், துருவ நட் சத்திரம், டிரைவர் ஜமுனா, தி கிரேட் இந்தியன் கிச்சன் ரீமேக், மோகன் தாஸ் போன்ற படங்களை கைவசம் வைத்துள்ளார்.

இவர் தற்போது புதிய படமொன் றில் ஒப்பந்தமாகியுள்ளார். இதனை லாக்கப் படத்தை இயக்கிய எஸ். ஜி.சார்லஸ் இயக்கவுள்ளார்.

ஐஸ்வர்யா ராஜேஷுடன் இணைந்து லட்சுமி பிரியா, சுனில் ரெட்டி, கருணாகரன், மைம் கோபி, தீபா ஷங்கர், கிங்ஸ்லி உள்ளிட்ட பலர் நடிக்கிறார்கள். இப்ப டத்தை ஹியூபாக்ஸ் ஸ்டுடியோஸ் மற்றும் ஹம்சினி என்டர்டைன்மென்ட் என்ற பட நிறுவனங்கள் இணைந்து 'புரொ டக்ஷன் நம்பர் 1' என்ற பெயரில் தயா ரிக்கின்றனர்.

இப்படத்தின் படப்பிடிப்பு சென் னையில் பூஜையுடன் துவங்கியுள் ளது.

படத்தில் பணியாற்றும் பிற நடிகர்கள் மற்றும் தொழில்நுட்ப கலைஞர்கள் பற்றிய அதிகாரபூர்வ மாக அறிவிப்பு விரைவில் வெளி யாகும் என்று அறிவிக்கப்பட் டுள்ளது.

மீண்டும் சுதா கொங்கரா இயக்கத்தில் சூர்யா

சூரரைப்போற்று படத்தின் வெற்றிக்கு பிறகு சுதா கொங்கரா இயக்கத்தில் சூர்யா நடிக்க இருப்பதாக இசையமைப்பாளர் ஜி.வி.பிரகாஷ் தெரிவித்துள்ளார்.

சூர்யா சுதா கொங்கரா சூர்யா நடித்த ஜெய்பீம் படத் தின் வெற்றியை தொடர்ந்து தற்போது வெளிவரவி ருக்கும் படம் எதற்கும் துணிந்தவன். பாண்டிராஜ் இயக்கிருக்கும் இப்படம் வரும் 10ஆம் திகதி திரைய ரங்குகளில் வெளியாக இருக்கிறது. அதன் பின் பாலா மற்றும் வெற்றிமாறன் ஆகியோரின் படங்களில் நடிக்க வுள்ளார். இதனை தொடர்ந்து மீண்டும் சுதா கொங்கரா வுடன் சூர்யா இணையவுள்ளதாக இசையமைப்பாளர் ஜி.வி பிரகாஷ் தெரிவித்துள்ளார்.

ஏப்ரல் 1ஆம் திகதி வெளியாகவிருக்கும் 'செல்ஃபீ' படத்தில் கௌதம் மேனன் மற்றும் ஜி.வி பிரகாஷ் இரு வரும் இணைந்து நடித்துள்ளனர்.

இப்படம் குறித்து சமூக வலைத்தள பக்கத்தில் ரசி கர்களுடன் ஜி.வி பிரகாஷ் கலந்துரையாடினார். அப்போது ரசிகர் ஒருவர் சூர்யாசுதா கொங்கரா இருவரின் அடுத்த படம் குறித்து கேள்வி எழுப்பினார். இதற்கு பதிலளித்த ஜி.வி பிரகாஷ், "கண்டிப்பாக இருவரும் இணை கிறார்கள், இந்தாண்டின் இறுதியில் இப்படத்திற்கான அறிவிப்பு வரலாம், அதற்கான வேலைகள் நடந்து வருகி றது" எனத் தெரிவித்துள்ளார். இது சூர்யா ரசிகர்களின் மத்தியில் வைரலாக பரவிவருகி றது.

அஜித்துக்கு ஜோடியாகும் 2 பாலிவுட் ஹீரோயின்..

அஜித்தின் நடிப்பில் வெளிவந்த வலிமை திரைப்படம் தற்போது திரையரங்குகளில் வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கிறது. இதையடுத்து மீண்டும் வலிமை பட கூட்டணி அடுத்த படத்தில் இணைகிறார்கள். இந்த படத்தின் பூஜை ஆரம்பமாக இருக்கிறது.

போனி கபூர் தயாரிப்பில் வினோத் இயக்கும் இந்த திரைப்படத் தில் அஜித்திற்கு ஜோடியாக யார் நடிப்பார்கள் என்ற எதிர்பார்ப்பு அனைவருக்கும் இருந்தது. அஜித்தின் கடந்த சில படங்களில் பாலிவுட் நடிகைகள் அவருக்கு ஜோடியாக நடித்து வந்தனர். அதனால் இந்த திரைப்படத்திலும் பாலிவுட் ஹீரோயின் தான் நடிப்பார் என்ற ஒரு பேச்சு இருந்தது.

மேலும் அஜித்துடன் கண்டுகொண்டேன் கண்டுகொண் டேன் திரைப்படத்தில் நடித்த நடிகை தபு மீண்டும் இந்த படத்தின் மூலம் இணைகிறார் என்ற ஒரு தகவலும் வெளிவந்தது. இந்நிலையில் தற்போது அஜித்துக்கு ஜோடியாக நடிகை அதிதி ராவ் நடிக்க இருப்பதாக செய்திகள் கிடைத்துள்ளது.

சமீபகாலமாக அஜித்தின் படங்களை போனிக பூர் தயாரிப்பதால் இந்தி நடிகைகளை தான் அவர் ஹீரோயினாக நடிக்க வைக்க ஆர்வம் காட்டி வருகிறார். அந்த வரிசையில் இந்த திரைப்படத் திலும் அதிதி ராவ் உட்பட மற்றொரு பாலிவுட் ஹீரோயினும் இருக்கிறார்.

ஆனால் இன்னும் அந்த பாலிவுட் நடிகை யார் என்று முடிவாகவில்லை அநேகமாக நடிகை தபு அந்த கேரக்டரில் நடிக்கலாம் என்று எதிர்பார்க் கப்படுகிறது. இது தவிர நடிகர் பிரகாஷ்ராஜ் உட்பட சில முக்கிய நட்சத்திரங்களும் இந்த படத்தில் இணைய இருக்கின்றனர். மேலும் இந்தப்படத்தில் அஜித் மங்காத்தா திரைப்ப டத்தில் வந்தது போல ஒரு நெகட்டிவ் ரோலில் நடிக்க இருப்பதாக வினோத் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தார். இந் நிலையில் இந்தப் படத்தில் இரண்டு பாலிவுட் ஹீரோயின்களும் இருப்ப தால் படத்தின் மீதான எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது

அஜித்தின் அடுத்த படம்

வலிமை படத்திற்கு பிறகு அஜித் நடிக்கவிருக்கும் அடுத்த படத்தின் தலைப்பு வைரலாகி வருகிறது.

அஜித் நடித்த 'வலிமை' படத்திற்கு ரசிகர்கள் பலத்த வரவேற்பைக் கொடுத்திருந்தாலும் சிலர் கடுமையாக விமர்ச னத்தை வைத்திருந்தார் கள். படத்தின் நீளம் அதிகமாக இருக்கிறதென்று கருத்து முன் வைக்கப்பட்டது. இதனால் படம் வெளியான இரண்டாம் நாளே இருபது நிமிடங்கள் குறைக்கப்பட்டது. நல்ல வசூல் செய் திருந்தபோதும் படத்தைப் பற்றி எதிர்மறையான கருத்து ஏன் வரு கிறது என்று அஜித் கண்காணிக்க ஆரம்பித்தார். அதன் குறைகள் எடுத்து வைக்கப்பட்டது.

இந்நிலையில் தனது அடுத்த படத்தை போனி கபூர் நிறுவனத்திற்கே நடிக்க இருக்கிறார். அந்தப் படத்தை வினோத் இயக்குகிறார். இதற்கான பணிகள் வேகமாக நடந்து வருகிறது. ஆந்திராவில் இருக் கும் ராமோஜிராவ் பிலிம் சிட்டியில் சென்னை அண்ணாசாலை போல் பிரமாண்ட செட் போடப்பட்டிருக்கிறது. இந்தப் படத்தில் கதாநாயகனாகவும் வில்லனாகவும் அஜித் இரட்டை வேடத்தில் நடிக்க இருக்கி றார். படத்திற்குப் பாரதியாரின் கவி தைகளிலிருந்து 'வல்லமை' என்ற சொல்லை தேர்ந்தெடுத்திருக் கிறார்கள். இந்த ஆண்டே 'வல்லமை' படம் வெளி யாகும் என்று அஜித் தரப்பில் கூறப்படு கிறது.

சம்பளத்தை அதிரடியாக உயர்த்திய நயன்தாரா..

தென்னிந்தியாவின் லேடி சூப்பர் ஸ்டார் என்ற பட்டத்துடன் முன்னணி நடிகையாக வலம் வருபவர் நடிகை நயன்தாரா.

இவர் தற்போது தமிழ், ஹிந்தி உள்ளிட்ட பல மொழிகளில் படு பிஸியாக நடித்து வருகிறார். இவரின் நடிப்பில் அடுத்தடுத்து திரைப்படங்கள் வெளியாக இருக்கிறது.

மேலும் பிரபல நடிகைகளில் அதிக பட்சமாக சம் பளம் வாங்கும் நடிகையாக இவர் இருக்கிறார். ஹீரோ வுக்கு இணையாக சம்பளம் வாங்கும் இவரைப் பார்த்து மற்ற நடிகைகள் அனைவரும் பொறாமைபட்டு வருகின்றனர். இந்நிலையில் இவர் தன்னு டைய சம்பளத்தை இன்னும் அதிகமாக உயர்த்தி இருக்கிறார்.

இயக்குனர் ரவிச்சந்திரன் அடுத்து நயன்தாராவை வைக்க ஒரு திரைப்ப டத்தை இயக்க இருக்கிறார். அந்தப்படம் பெண்களை மையப்படுத்தி எடுக் கப்படும் ஒரு சமூக கருத்து திரைப்படமாகும். இந்த மாதிரி கதைகளில் நடிப்பதில் நயன்தாரா திறமையானவர்.

ஏற்கனவே அவர் இதுபோன்று கதையின் நாயகியாக பல திரைப்ப டங்களில் நடித்து பாராட்டுக்களை பெற்றிருக்கிறார். அதனால் இந்த படத்திற்கும் அவர் நடிப்பதற்கு சம்மதம் தெரிவித்திருக்கிறார். ஆனால் இந்த படத்தில் நடிப்பதற்கு அவர் அதிகபட்ச சம்பளமாக 10 கோடி கேட்டு இருக்கிறார்.

ரவிச்சந்திரன் இயக்குனர் அட்லிக்கு மிகவும் நெருக்கமானவர். அந்த வகையில் நயன்தாராவுக்கும் இவர் பழக்கம் தான். அந்த நட்பின் அடிப்படையில் தான் இவர் நயன்தாராவை வைத்து படத்தை இயக்க திட்டமிட்டு இருக்கிறார். ஆனால் இவர் ஒரேய டியாக தன்னுடைய சம்பளத்தை அதிகப்படுத்தி இருப்பது அவ ருக்கு சற்று அதிர்ச்சியை கொடுத்திருக்கிறது.

ஏற்கனவே நயன்தாரா கோலிவுட், பாலிவுட் என்று கைவசம் ஏராளமான திரைப்படங்களை வைத்துக்கொண்டு அதிக லாபம் பார்த்து வருகிறார். இதுதவிர தயாரிப்பிலும் ஈடுபட்டு வருகிறார். இந்நிலையில் இவ்வளவு காசு வாங்கி அவர் என்ன செய்வார் என்று ரசிகர்கள் அவரை கலாய்த்து வருகின்றனர்.

சிவகார்த்திகேயனை பாராட்டிய விஜய்

நடிகர் சிவகார்த்திகேயனை அரபிக் குத்து பாடலுக் காக விஜய் பாராட்டியதாக சமீபத்திய நிகழ்ச்சியில் பகிர்ந்துள் ளார்.

சிவகார்த்திகேயன் விஜய் நடிப்பில் நெல்சன் இயக்கியுள்ள திரைப்ப டம் பீஸ்ட். இப்படத்தில் விஜய்யுடன் இணைந்து செல்வராகவன், பூஜா ஹெக்டே, யோகி பாபு, கிங்ஸ்லி உள் ளிட்ட பலர் நடித்து வருகின்றனர். படத் தின் பணிகள் விறுவிறுப்பாக நடந்து வருகிறது. பீஸ்ட் படம் ஏப்ரல் 14ம் திகதி வெளியாகவுள்ளது.

பீஸ்ட் படத்தில் இடம்பெற்ற 'அரபிக்குத்து' பாடல் அனைவ ரையும் கவர்ந்து பல சாதனை களை முறியடித்தது. வித்யாச மான வரிகள் இடம்பெற்ற இந்த பாடலை நடிகர் சிவகார்த்திகேயன் எழுத்தியுள்ளார். இப்பாடலுக்கு திரை துறையினர், ரசிகர்கள் என பலரும் நடனமாடி பதிவிட்டு வருகின்றனர்.

இந்நிலையில் சமீபத்தில் நடந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட சிவகார்த்திகேயன் இப்பாடல் குறித்தும் விஜய் குறித்தும் சில விஷயங்களை பகிர்ந்துள்ளார். இப்பாடலை கேட்டு விஜய் சார் உங்களிடம் என்ன சொன்னார் என்ற கேள்விக்கு, இந்த பாடலை முன்பே படமாக்கி விட்டார்கள். அதனால் விஜய் சார் இந்த பாடல் குறித்து என்ன நினைத்தார் என்று தெரியவில்லை, சமீபத்தில் தான் இதன் புரோமோ வீடியோ ஷூட் செய்தோம். அப்போது தான் விஜய் சார் தொலைபே சியில் "சூப்பர் பா. எழுதிக் கொடுத்ததிற்கு ரொம்ப தேங்க்ஸ் பா. அரபிக் எல்லாம் பயங்கரமா எழுது றியே" என்று கூறினார்.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

மீன் எண்ணெய் தரும் பலன்கள்

அழகிற்காக ஆயிரம் சிகிச்சைகள் மேற்கொள்வதை விட சில மாதங்கள் தொடர்ந்து மீன் எண்ணெய் மாத்திரை எடுத்து வந்தால் உங்கள் சருமம் பொலிவு பெறும். பொதுவாக மீன்களை உணவில் அதிகமாக சேர்த்து கொள்பவர்களுக்கு முகம் பொலிவாகவும் மாசு மரு அற்றும் இருப்பதை பார்த்திருப்பீர்கள். ஆகவே மீன்களிடம் சருமத்தை பொலிவாக வைத்திருக் கும் தன்மை இருக்கிறது என்பதை உணர்ந்திருப்பீர்கள்.

மீன் எண்ணெயில் இருக்கும் ஒமேகா 3 உங்கள் இதயத்தை பாதுகாக்கி றது. ஜப்பான் மக்களுக்கு இதய நோய்கள் வராமல் இருப்பதற்கான காரணம் அவர்கள் உணவில் மீன் அதிக அளவில் இருப்பதுதான் என ஆய்வுகளால் கண்டறியப்பட்டுள்ளது. ஆகவே, தினம் ஒரு மீன் எண்ணெய் மாத்திரை உங்கள் வாழ்வை அதிகரிக்கும்.

மீன் எண்ணெயில் இருக்கும் விட்டமின் டி சத்துக்கள் உங்கள் மன அழுத் தங்களை கட்டுக்குள் கொண்டு வருகிறது. மூளையில் செரோட்டனின் அளவு குறைவாக இருப்பதாலேயே மன அழுத்தங்கள் உருவாகின்றன. இதனை மீன் எண்ணெய் மாத்திரை சரி செய்கிறது. மீன் எண்ணெய் மாத் திரையில் உள்ள ஒமேகா 3 கொழுப்பு அமிலங்கள், விட்டமின் டி சத்து மூளையில் செரட்டோனின் ஹோமோன்களின் உற்பத்தியை அதிகரித்து மன அழுத்தத்தை கு றைக்கிறது. நரம்புகளில் உண்டாகும் பாதிப்புகளை போக்கி மனதை அமைதியாக்கி படபடப்பு தன்மையை குறைப்பதாக ஆய் வுகள் தெரிவிக்கின்றன.

குழந்தைகளுக்கு எலும்புகள் சம்பந்தமாக ஏற்படும் நோயான ரிக்கெட்ஸ் நோயை போக்க மருத்துவர்கள் மீன் எண்ணெய் மாத்திரையை பரிந்துரை செய்கின்றனர். மேலும் மருத்துவர்கள் பரிந்துரையோடு குழந்தைகளுக்கு மீன் எண்ணெய் மாத்திரை கொடுத்து வந்தால் மூளை வளர்ச்சி மேம்படும். இதில் உள்ள நன்மை தரும் கொழுப்புகள் இரத்தத்தை தடையின்றி உடல் முழுதும் ஓட செய்கிறது. இதனால் மூளை சோர்வடையாமல் காக்கிறது. எப்போதும் சுறுசுறுப்பை தக்க வைக்கிறது.

கண்பார்வை குறைபாடு உள்ளவர்கள் மீன் எண்ணெய் மாத்திரை உட் கொள்வது மிக நன்மை தரும். ஊட்டச்சத்து குறைபாட்டின் காரணமாகவே கண்பார்வை திறன் குறைகிறது.இதில் உள்ள வைட்டமின் ஏ கண்களில் திசு வளர்ச்சியை கட்டுப்படுத்தி கண்பார்வையை பாதுகாக்கிறது. நரம்புக ளின் அழுத்தங்களால் ஏற்படும் கண் அழுத்த நோயையும் தொடர்ந்து மீன் எண்ணெய் மாத்திரை சாப்பிடுவதால் போக்கி விட முடியும்.

அல்சர் எனப்படும் வயிறு அழற்சியை சரி செய்ய மீன் எண்ணெய் மாத் திரைகள் உதவுகின்றன. ஆரம்பத்தில் வயிறு எரிச்சலுடன் காணப்படும் அல்சர் நோய் போக போக வாந்தி உணவே உண்ண முடியாத நிலைமை வரை கொண்டு சென்று விடு கிறது. தொடர்ந்து மீன் எண்ணெய் மாத்திரை உட்கொண்டால் உங்கள் வயிற்றில் உள்ள நாள் பட்ட புண்களை ஆற்றி உங்களுக்கு உணவின் சுவையை அறியும் தன்மையையும் அதிகரிக் கிறது.

இத்தனை நன்மைகள் கொண்ட மீன் எண்ணெய் மாத்திரைகளை மருத்துவர் அனு மதியுடன் கூறப்பட்ட அளவுகளில் எடுத்துக் கொள்ளுங்கள்.

முகத்தில் கருமையை நீக்கும் தேங்காய்ப்பால்

தேங்காய் பால் தேவையான அளவு எடுத்துக் கொண்டு, அதில் பாதி அளவு கடலை மாவு கலந்து கொள்ளவும்.

இவை இரண்டையும் பேஸ்ட் போல் தயாரித்து மிகத்தில் பூசி அந்த பேஸ்ட் காயும் வரை காத்திருக்கவும். பின்பு தண் ணீரால் கழுவ இதேபோல் வாரத்திற்கு இருமுறை செய்து வந்தால் முகத்தில் கருமை நீங்கிவிடும்.

Henna எவ்வாறு பயன்படுத்துவது?

இன்றைய தலைமுறையினர் பலர் இளம் வயதிலேயே நரைமுடி பிரச்சி னையை சந்திக்கிறார்கள். இந்த நரைமு டியை மறைக்க சிலர் கெமிக்கல் கலந்த டை பயன்படுத்தினாலும், தலைமுடி பிரச்சி னைகள் வரும் என்பதால் சிலர் தங்களின் தலைமுடிக்கு ஹென்னாவை பயன்படுத்துகி றார்கள். ஆனால் பலருக்கு அதை சரியான வழியில் பயன்படுத்த தெரிவதில்லை. இதனால் தலைக்கு ஹென்னா போட்டும், அதை அலசிய பின் பலரது தலைமுடி மேலும் நரைத்து தான் காணப்படுகின்றன. இதற்கு காரணம், ஹென்னா பயன்படுத் தும் போது நாம் செய்யும் சிறு தவறுகள் தான்.

தலைக்கு ஹென்னா போடும் போது, அதில் ஏதாவது கலந்தால் இன்னும் நல்ல பலன் கிடைக்கும் என்று பலர் நினைப்பதுண்டு. அதனால் சில சம யங்களில் ஹென்னாவை ஊற வைக்கும் போது, அதில் சிலர் தயிரை சேர்த்துக் கொள்கிறார் கள். இப்படி தயிரை சேர்ப் பதால், அது எதிர்பார்க் கும் பலனைத் தராது. ஏனெனில் ஹென் னாவுடன் தயிரை சே ர் க் கு ம் போ து , அ தி ல் உள்ள புரோட்டீன்களுடன் ஒரு பிணைப்பை உருவாக்கி, அதன் காரணமாக முடிக்கு புரோட்டீன் கிடைக்காது. ஆகவே இத்தவறை செய்யாதீர்கள்.

★ஹென்னாவை நீரில் கலந்த பின் அதை போதுமான அளவு ஊற வைக்க வேண்டும். அப்படி ஊற வைத்தால் தான் அது தலைமு டிக்கு நல்ல நிறத்தைக் கொடுக்கும். அவசர அவசரமாக நீரில் கலந்து, தலைக்கு பயன் படுத்தினால், ஹென்னாவின் நிறம் முடியில் சேராது. எனவே ஹென்னாவை நீரில் கலந்த பின் சுமார் 10 முதல் 12 மணிநேரம் ஊற வைத்து, பின்னர் பயன்படுத்துங்கள்.

★பெரும்பாலான மக்கள் ஹென்னா பயன்படுத்தவதற்கு முன் தலைமுடிக்கு எண்ணெய் தடவிக் கொள்வார்கள். ஆனால் இப்படி எண்ணெய் தடவுவதால், தலைமுடி யில் ஒரு லேயரை எண்ணெய் உருவாக்கு கிறது. இதன் காரணமாக ஹென்னாவின் நிறம் முடியில் ஒட்டாமல் இருக்கும். ஆகவே உங்கள் முடியின் நிறம் மாற வேண்டு மென்று நினைத்தால், எண்ணெய் தடவு வதை நிறுத்துங்கள்.

★ஹென்னாவை சாதாரண நீரில் பயன் படுத்தினாலும் தலைமுடியில் நிறம் ஒட்டு வதில்லை என்று பலர் கூறுவதுண்டு. அப் படிப்பட்டவர்கள் சாதாரண நீருக்கு பதிலாக தேயிலைச் சாற்றைப் பயன்படுத்தலாம். அதுவும் டீ தூளை நீரில் போட்டு கொதிக்க வைத்து இறக்கி குளிர வைத்து, வடிகட்டி அந்நீரால் ஹென்னாவை பேஸ்ட் செய்து ஊற வைக்க வேண்டும்.

மங்கையர் முற்றம்

சைக்கிளிங்

வெகுதூரத்துக்கு செல்ல மேடு பள் ளங்களைக் கடக்க மிகவும் சுலபமாக நமக்கு தோள் கொடுத்த சைக்கிள் தான் இன்று நம் உடல் ஆ ரோ க் கி ய த் தை யும் காக்கும் உற்ற நண்பனாக கைகொடுக்கிறது என்பதை பல்வேறு ஆய்வுகளும் நிரூபித்து வருகின்றன.

உடற்பயிற்சியைத் தொடர்ந் துசெய்தால் தான் உடலை ஆரோக்கியமாக வைத்தி ருக்க முடியும். ஆனால் தினமும் சைக்கிள் ஓட் டினாலே போதும் உடல் ஆரோக்கியம் பெறும். ஜிம் மிற்கு சென்று மணிக்கணக்கில் பயிற்சி செய்வதை விட சில மணிநேரங்கள் சைக்கிள் ஓட்டி னால் ஃபிட்னஸ் உடலை விரும்பியபடி பெறலாம்.

சைக்கிள் ஓட்டினால் கால் பாதம் மட்டும் அல்ல. உடலின் அத்தனை உறுப்புகளையும் இயங்க வைக்கும். அரை மணிநே ரம் சைக்கிள் ஓட்டினால் 300 கலோரி கொழுப்பு எரிக்கப்படு கிறது. சைக்கிள் ஓட்ட தொடங்கிய முதல் 10 நிமிடங்களில் உடலில் இருக்கும் கெட்ட நீர் வெளியேறுகிறது. அடுத்த 20 நிமிடங்கள் தொடரும் போது குளுக்கோஸ் எரிக்கப்படுகிறது. 30 நிமிடங்களில் உடலில் இருக்கும் கெட்ட கொழுப்புகள் குறையத்தொடங்குகிறது.

உடற்பயிற்சியை எத்தனை மணி நேரம் தொடர்ந்து செய்தா லும் அவை மொத்த உறுப்பையும் இயங்க வைக்காது. குறிப் பிட்ட பயிற்சிகள் குறிப்பிட்ட தசைகளை மட்டுமே அசைய வைக்கும். உதாரணத்துக்கு நடை பயிற்சி கால் தசைகள் மட்டுமே வலுப்பெறும்.

நீட்டி மடக்கும் உடலுக்கான பயிற்சிகள் மூட்டுகள் அதை சுற்றியுள்ள தசைநார்களை வலுவாக்கும். ஆனால் சைக்கிள் ஓட்டுவதன் மூலம் அனைத்து பயிற்சிகளையும் செய்த பலனை பெற்றுவிடலாம்.

"அது ஒண்டுமில்ல waterboard ல வேலை செய்ற ஒராள்ட மச்சானுக்கு maths இல்லையாக்கும் அப்ப அதான்"

" என்ன குதிரையா?? "

" செ குதிரை எண்டில்ல.. ஒரு ஹெல்ப்.. இனி.. இப்டித்தானே.."

"அது இரிக்கட்டு அந்தாள எப்டித் தெரியும் ஒனக்கு"

"சும்மா தெரியும் எப்டி பழகின எண்டு தெரியா...இனி இத செஞ்சா தொழில் ஒண்டு எடுத்தாறன் எண்டு செல்லிரிக்கார்.. அப்ப அதான்.. நாம இரிக்கிர நெலமைக்கு வேற வழியில்ல"

" தொழிலா!! என்ன மாதிரி? "

" meter reader"

"meter reader" ஆ என்று ஏளனமாக பார்த்த மில்ஹானை நோக்கி

"meter reader ஆ எண்டு மொகஞ்சுளிக்கேலே அதுற சம்பளம் தெரியுமா.. மாசம் கொறையாம எண்பது எடுக்கலாம்.."

"உண்மையாவா.. அப்ப என்ன பிரச்சின, ஆனா காசி வேண்டாம எப்டி எடுத்தாற எண்டு சென்னான்"

"காசி எண்டா இனி கனக்க இல்ல.. அது மட்டுமில்லாம அவரும் கனக்க ஆக்களோட இந்த O/l விசயத்துக்கு மெனெக்கட்டிரிக்கார் போல ஒத்தரும் அணையல.. இனி கடைசியாத் தான் நமக்கிட்ட வந்தார்.. எப்டியும் அடுத்த வரிசம் ஜனவரி மட்டுல "க்காடர்" கோல் பண்ணுவானுகளாம்... தொழில் எடுத்தார sure எண்டு செல்லிரிக்கார்.. பாப்பமே"

" ஹ்ம் அப்ப சரி.."

மீண்டும் மௌனம் குடியேறியது....

மில்ஹானின் மனதில் தானும் ஏதாவது வழி பார்த்தே ஆக வேண்டும் இல்லையென்றால் நிலைமை மோசமாகி விடும் என்று எண்ணி.. தனக்குத் தெரிந்த உயர் பதவியில் இருக்கும் நபர்களை பட்டியலிட்டுக் கொண்டிருந்தான்.

அச்சமயம் அடிக்கடி சல சலக்கும் ஓசை கேட்டுக்கொண்டிருந்தது.. மில்ஹானும் மாஜித்தும் ஒருவருக்கொருவர் முகம் பார்த்த பின் சத்தம் வந்த திசையை நோக்கிப் பார்த்தார்கள் எதுவும் இல்லை.

திடீர் என்று நாலைந்து பெரிய உருவ நிழல்கள் தங்களை நோக்கி வேகமாக வருவது கண்டு எழுந்து திரும்புவதற்கிடையில் மாஜித்தின் கழுத்தை பிடித்து சுவரில் சாய்த்து விட்டு...

"இந்த இருட்டுக்குள்ள என்னடா பத்து றேல்.. கஞ்சா அடிக்க நல்ல எடம் கெடச் சிரிக்கி இவனுகளுக்கு... தேவன் , அவன check பண்ணுங்கோ"

என்ற பொலிஸ் அதிகாரிகள் நான்கு பேர் இருவரையும் சுற்றி வளைத்தனர்..

பதற்றத்தாலும் பயத்தாலும் மாஜித்தும் மில்ஹானும் நடுங்கிக் கொண்டிருந்தனர்.. இருவருக்கும் வியர்வை தாறுமாறாக வழிந்தோடியது...

ஒரு பொலிஸ் அதிகாரி மில்ஹானை சுவரில் சாய்த்து வைத்து அவனது பைகளை "எங்கடா கஞ்சா"என்று கூறிக்கொண்டே check செய்தார்..

பதற்றமான குரலில் மாஜித், "சேர் சேர் கஞ்சா ஒண்டும் அடிக்கல சேர், சிக்ரட் தான் சேர் பத்தின.. அது அண்ணா கெடக்கு" என்று சிக்ரட் விழுந்த இடத்தை கண்களால் காட்டினான்..

இருவரையும் check செய்து எதுவும் இல்லை என்று தெரிந்த பின் அவர்களை பிடியிலிருந்து விட்டனர்.. அதன் பின் அந்த நான்கு போலீஸில் வந்த பெரிய அதிகாரி..

" இந்த டைம்ல ஒனக்கு இஞ்சால என்ன வேல.. எத்துன வயசிரா ஒங்களுக்கு.. நாக்கு ளுப்புழுக்கனக்கா சைஸ் ஆனா செய்ர வேல மட்டும்.." என்று கோபமாய் முறைத்தார்

"இனி இஞ்சால பக்கம் வாற வேல வைக்கப்போடா.. போங்கடா நாய்காள்" என்று இருவருக்கும் தலையில் அறைந்து விரட்டி அடித்தனர்.. இரண்டு சிக்ரட்டின் முழுமைச் சாம்பலிற்குள் குடியிருந்த அமுக்க மௌனம், படார் படார் என்று இரண்டு நிமிடங்களிற்கு வெடித்தது.. இருவரும் பேய் அறைந்தாற் போல் நடுங்கி நடுங்கி ஒருவருக்கொருவர் ஏசிக் கொண்டே சைக்கிளை முறுக்கினர். இந்த இருபத்தொரு வயது வரை காணாத அனுபவம் தூக்கத்தில் இருந்து விழித்தவுடன் அறை வாங்கிய அதிர்ச்சி போலிருந்தது ஒரு

சில மணி நேரங்களுக்கு..

அந்த பதற்றத்தில் முறுக்கிய சைக்கிள் பீச் பள்ளி அடியேதான் வந்து நின்றது.. இருவரும் பள்ளி வளவிற்குள் சென்று முகம் கை கால்களை சுத்தப்படுத்தி பயத்தினால் உடல் முழுதும் பரவிய அனலினை பதப்படுத்தினர்.. இருவரும் முகத்தில் இருந்த ஈரத்தை தனது சேர்ட்டினால் துடைத்து அமைதியாக ஒரு சில நிமிடங்களுக்கு சைக்கிளின் மேல் இருந்தார்கள்... தண்ணீர் முகத்தில் படிந்ததும் பயம் பதற்றம் எல்லாம் படிப்படியே குறைந்தது.. மாஜித் தனது போனை எடுத்து நேரம் பார்த்தான் இரவு 8.30.. நடந்ததை அத்தனையும் மறந்து மில்ஹானை நோக்கி,

"வா பாலப்பம் சாப்டுவம் சாப்டுபொட்டு ஊட்ட போவம்" என்று கூற அவனும் தலையசைத்து பள்ளி முன்பாய் இருந்த பாலப்ப வண்டிலில் ஆளுக்கு இரண்டு பாலப்பம் வேண்டினர்.. தன்னால் தான் இந்த நிலைமை என்று தெரிந்த மாஜித் அந்த அசௌகரிய நிலையினை குலைப்பதற்காக கதை தொடங்கினான்..

"யார்ரா அது"

" OIC இல்ல கொஞ்ச நாளா ஊருக்க கடுமைய குடு புடி படுது அதுக்காக போட்டம் எண்டு நெனைக்கன்.. ஆனா இவன் கொஞ்சம் பெரியவன் போலத்தான் வெளங்குது.." என்று மிக மெதுவாக கோபத்தை அடக்கிக் கொண்டு பதிலளித்தான்...

"ஆஹா அப்டி என" என்று ஒரு வகையாக சமாளித்த மாஜித், நேரம் பார்த்தான் மணி ஒன்பதை தாண்டியிருந்தது.

" சரி வா வீட்ட போவம் டைம் பெய்த்து" என்று கூறி இருவரும் வாய்க்குள்ளே ஆளுக்கொரு ஹெக்ஸ் டொபியை உமிழ்ந்து கொண்டு வீடு சேர்ந்தார்கள்.

அடுத்த நாள் விடிந்தது. மில்ஹானின் உம்மா அவனது படுக்கை அறைக் கதவை தம்மட்டம் அடிப்பது போல் இடைவிடாது அடித்துக் கொண்டே கத்தத் தொடங்கினார்..

"நேரம் பத்து மணியாகுது சுபஹும் இல்ல அசரும் இல்ல.. சும்மா தூங்க மட்டுந் தெரியும்.. மில்ஹான்!!! மில்ஹான்!!! ஒழும்பு டக்கன.. முர்ஸலீன் மாமா ஒன்ன வயலுக்க போக வரச்சென்னலா.. ஒழும்பு"

அவசரப்பட்டு எழுந்து விட்டோமே என்று அலுத்துக்கொண்டான் மில்ஹான். தனது உம்மாவின் மேல் எரிச்சலை ஏற்படுத்தியவன்.. அடுத்து அசர் வரைக்கும் என்ன செய்வதென்று யோசித்துக்கொண்டிருந்தான். காலையில் சாப்பிட்ட இடியாப்பமும் நேற்றைய இறைச்சிக்கறியும் அவனை மப்பும் மந்தாரமுமாக்கியது. இறைச்சிக் கறியின் உறைப்பு நாக்கில் தொங்கிக் கொண்டே இருந்தது.

அவனுக்கு ஆகப் பிடித்தமான கறி இறைச்சிதான் பொதுவாக இறைச்சிக் கறி சாப்பிட்ட பின் கை கழுவும் போது மிக லேசாகத்தான் அலசிக் கழுவுவான். காரணம் இறைச்சிக் கறியின் மணம் மிக நெடு நேரமாய் அந்தக் கையில் படிந்திருப்பதற்காகும். அதை அடிக் கடி முகர்ந்து பார்ப்பதில் அவனுக்கு ஒரு சந்தோஷம்.

இப்படி ஒரு மாதிரியாக நேரம் கடத்தியவன் அசர் நேரம் வந்ததும் மாமாவிற்கு அவனே அழைப்பை ஏற்படுத்தி அவரின் வரவுக்காகக் காத்துக் கொண்டிருந்தான். ஒரு பத்து நிமிடம் கழித்து மில்ஹானின் மாமா வந்தார்.

மண்வெட்டி, பெரிய டோர்ச் லைட், இரண்டு போத்தலில் பெற்றோல், ஒரு அளவான கெரியரில் கறி என்று அவரது சைக்கிள் முழுதும் பொருட்களால் கட்டி தொங்கவிடப்பட்டும் நிரம்பியிருந்தது. நேரம் ஒரு 4.30 இருக்கும் வழமை போல் இல்லாமல் சூரியன் மிக வேகமாய் கடலிற்குள் மூழ்கிக்கொண்டிருந்தது. மில்ஹானும் அவனது மாமாவும் சைக்கிளை முறுக்கினார்கள் பொத்தானைக்கு.

கை வைத்துக் கொண்டிருந்தார்கள்.

பொத்தானை வீதிக்கு இறங்கி ஒரு பதினைந்து நிமிட ஓட்டத்தின் பின் முர்ஸலீன் மாமாவின் பூமிக்கு வந்து நின்றது அந்த சைக்கிள். இருவரும் சைக்கிளில் இறங்கி ஒவ்வொரு பொருட்களாக கட்டை அவிழ்த்தார்கள். அவர்கள் கட்டை அவிழ்த்துக் கொண்டிருக்கும் போது யாரோ ஒருவர் அவர்கள் இருவரையும் நோக்கி டோர்ச் லைட் அடித்துக்கொண்டு அருகில் வந்தார், "என்ன முர்சலீன்.... தம்பி ஆரு? "

"நம்முட மருமகன் தான்... அது கெடெக் கெட்டும்..நீங்க இண்டக்கி வாரல்ல எண்டு சென்னலா... கோவில்ல ஒரு விஷேசம் எண்டு சென்ன என... பொறகு இதுக்குள்ள என்ன டோர்ச்சும் கையுமா நிக்கிர"

"ஓவ் அத கேக்காத அய்யா , எல்லாத்தயும் ஆயத்தப்படுத்தி எடுக்க.. என்ற மருமவளுக்கு வயித்தப்புடிச்சி பொறகு எளுவட்டானைக்கு ஏத்தின, பிறகு கோயிலும் அலஞ்சி பயணமும் குளஞ்சி.... அப்போ!!!! அது பெரிய கதயப்பா! "

எப்படியோ மூன்று பேரும் பொரைக்கு வந்தடைந்தார்கள். அந்தப் பொரை மில்ஹானின் மாமாவின் பத்து ஏக்கர் பூமிக்கு நடுவில் இருந்தது, அந்த பொரைக்கு நிழல் தர ஒரு" மருத மரம்" அந்த மருத மரத்தை ஒட்டி ஒரு பெரிய வாய்க்கால் ஓடிக்கொண்டே இருந்தது.

இப்படி இருக்க சின்னத்தம்பி மாமா தனது சாறனை மடித்து முழங்கால் வரை ஏற்றிக்கட்டி அவர் உடுத்திருந்த "சைக்கிள் ஜெக்கட்டை" கழற்றி பழைய பெனியனை உடுத்தார். பொரைக்குள் சென்று மீன் வலை எடுத்து வெளியே வந்ததை பார்த்த மில்ஹான்,

"என்ன மாமா மீன் புடிக்கயா? "

"ஓம்டா தம்பி, இரு பிடிச்சிட்டு வாறன்"

"சரி மாமா சரி"

" மாமா.. ஒங்களுக்கு தெரிஞ்ச ஆக்கள் ஒத்தரும் இல்லையா.. "

இந்தக் கேள்வியின் உள் அர்த்தம் விளங்காத அவர் கொள்ளியை குவித்துக்கொண்டே ஒரு புரியாத பார்வையை அவன் மீது செலுத்தினார்.

"தெரிஞ்ச ஆக்கள் எண்டா என்னத்த கேக்கேல் மருமகன்.. தெளிவா சுத்தி வளைக்காம வளக்கத்த செல்லுங்கோ"

அவன் சிரித்துக்கொண்டே..

" இல்ல மாமா.. தொழில் ஒண்டில்லாம பெரிய பாடா இரிக்கி.. ஊட்டயும் மதிப்பில்ல.. என்ட கூட்டாளி தெரியும் தானே ஒங்களுக்கு? "

"ஆரு மருமகன்? .. நீங்க ஆரக் கண்டு காட்டினாலும் அவன் கூட்டாளி எண்டுதானே செல்றேல் "

" இல்ல மாமா.. எனக்கி கூட எப்பயும் உலாத்துவானே. மாஜித்.... சரிப்டீன்ட மகன்"

" ஓ ஓ"

" அவன் எப்டியோ தொழில் எடுத்துருவான் போலான் இரிக்கி.. ஆள் யாரயோ பாத்து புடிச்சிட்டான்.. நாமளும் இனி சும்மா இருந்தா நல்லதுக்கில்ல போலான் வெளங்குது..அதான் கேக்கன் ஒங்களுக்கு தெரிஞ்ச யாரும் இல்லையா எண்டு"

" ஆஹா.. அப்டியா மருமகன்.. மாமாக்கும் தெரிஞ்ச ஆக்கள் இரிக்கானுகள் தான்.. ஆனா எவனுக்கிட்டையும் காச உசுப்பாம காரியம் நடக்காதே மருமகன்.. அதுக்கு என்ன செய்ர"

" ஓம் மாமா அத நானும் யோசிச்ச... உம் மாட்ட கதைப்பம் எண்டிருக்கன் பாப்பம்.. வாப் பாவோட கதைக்கிறதும் இல்ல.. நீங்களும் கொஞ்சம் ஹெல்ப் பண்ணணும்

" மருமகன் ஹெல்ப் பண்ற பிரச்சினல்ல.. ஒங்களுக்கு பண்றதுலான் பிரச்சின.. பொறுப்புள்ள பிள்ள எண்டா எப்பயோ பண்ணிரிக்கலாம்.. நீங்க பாக்குற வேலைக்கி என்ன மருமகன் செய்ர.. "

மில்ஹான் அவமானத்தால் அசிங்கப்பட்டு தலை குனிந்தான்.. பேச்சை நிறுத்தியும் விட்டான்..

இந்த உரையாடலுக்கிடையில் மில்ஹானின் மாமா அடிக்கடி வயல் வேலியை பார்த்தார்.. அங்கே ஏதோ அடிக்கடி அசைவதை அவதானித்தார்.. அடுப்பு மூட்டுவதை நிறுத்தி விட்டு.. எழுந்தார்

" எங்க போறேல் மாமா.."

"வாங்கோ அவடத்த என்னமோ அசையிராப்போல இருக்கி அது என்ன எண்டு பாத்துப் பொட்டு வருவம்" என்று கூறி அவனையும் கூட்டிக்கொண்டு கையில் ஒரு தடியுடன் சென்றார்..

அந்த இருட்டில் பெரிய டோர்ச் வெளிச்சத்தை பரப்பி.. அந்த குறிப்பிட்ட இடத்தை நோக்கி அடித்தார்..

(33ம் பக்கம் பார்க்க)

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல: 14

01		02	03		04		05
		06					
07	08				09	10	
	11			12		13	
14				15	16		
			17				
18		19					20
21					22		

திரு/திருமதி.செல்வி .....
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)
முகவரி .....
.....
.....
....
திகதி கையொப்பம்

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி
போட்டி இல. 14
த.பெ.இல.834. கொழும்பு

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல :14

இடமிருந்து வலம்

(01) ஆண்.
(04) நீண்ட மேலுடையை இப்படிச் சொல்வர்.
(06) உணவு கிடைக்காத நிலை. (குழம்பியுள்ளது)
(07) உரைநடை.திரைப்படத்திற்காகவும் இது எழுதப்படுகிறது. (திரும்பியுள்ளது)
(09) அலைகள் எழும் பெரும் நீர்ப்பரப்பு. (குழம்பியுள்ளது)
(11) சாலைப் போக்குவரத்துக்கு பயன்படுவது. (குழம்பியுள்ளது)
(13) அம்பு எய்துவதற்கு இது தேவை.
(14) பயிர்களின் வளர்ச்சிக்கு பயன்படுத்தப்படும் ஊட்டச் சத்து.
(15) கனமான பருத்த முறுக்குக் கயிறு. (குழம்பியுள்ளது)
(17) துளை.
(19) களவாகக் காய்ச்சப்படும் சாராயத்தை இப்படிச் சொல்வர். (திரும்பியுள்ளது)
(21) வெண்ணெய், இறைச்சியிலிருந்து கிடைக்கும் ஓர் ஊட்டச்சத்து. (குழம்பியுள்ளது)
(22) மன உணர்வு.

மேலிருந்து கீழ்

(01) மேல் மட்டத்திலிருந்து அடிமட்டம் வரையிலான அளவு.
(02) தீய உள்நோக்கம்.
(03) தேவையற்ற பிரச்சினை அல்லது தகராறு ஏற்படுத்துவதற்கு காரணமானவன். (குழம்பியுள்ளது)
(04) போலி அல்லாதது, உண்மையானது.
(05) கேலி அல்லது அவமதிப்பு செய்யும் வகையில் நகைச்சுவையாகப் பேசுவது.
(08) குரங்கு குழம்பிவிட்டதோ.
(10) நகைச்சுவை. (குழம்பியுள்ளது)
(12) காட்டில் வாழுபவர். (குழம்பியுள்ளது)
(16) மலை உச்சி கவிழ்ந்துவிட்டது.
(17) குற்றவாளியைக் கண்டுபிடிப்பதற்கு உதவும் தடயம் அல்லது தகவல்.
(18) ஒருவரை உயிரிழக்கச் செய்யும் வன்முறைச் செயல்.
(19) பழுதடைந்த, காய்கறிகளில் காணப்படும் சிறு உயிரினம்.
(20) மயானத்தில் சடலத்தை எரிப்பதற்கு பயன்படுத்தப்படும் விறகுகளால் அடுக்கப்பட்ட அமைப்பு.

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 13

விடைகள்

இடமிருந்து வலம்

01. வருமானம் 05. பகை 07. சினம்
08. சயனம் 09. பரிதி 10.மான்
12. மேதை 13. தம்பி 15. சீனி
17. தோணி 18. சகா 20. கரை
22. ஊக்குவிப்பு 24. புகை 25. வித்து

மேலிருந்து கீழ்

01. வனப்பு 02. ருசி 03. மாம்பழம்
04. மேதினம் 05. பயன் 06. கைம்மாறு
12. சீதை 13. தணிக்கை 14, பிசகு
16. கனி 17. தோப்பு 19.காவி
21. துவரை 23. புவி

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 12

பரிசு பெறுவோர்

முதலாம் பரிசு

எஸ். தனலக்ஷ்மி,
211/17, கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

இரண்டாம் பரிசு

பி. ரதிமலர்,
209, மார்க்கண்டு வீதி,
பாண்டிருப்பு 01, கல்முனை.

மூன்றாம் பரிசு

சி. லவனார்த்தன்,
241/15, ரொக்ஹில்,
பதுளை.

பாராட்டு பெறுவோர்

1 கஸ்தூரி களியபெருமாள்,
2/27A, வெளிக்கந்தை,
கண்டி

2. ஆ. நபீலா,
286, தெற்கு வீதி,
நிந்தவூர் 05.

3. மங்கையற்கரசி மனோகரன்,
53A,
லேடிமனிங் டிரைவ்,
மட்டக்களப்பு.

4. கனகசபை நாகேந்திரன்,
113/1,
நெல்சன் பிளேஸ்,
வெள்ளவத்தை,
கொழும்பு 06.

5. ஆர். ஜயந்திமாலா,
இல. 17, பண்டாரநாயக்க பெதஸ்ஸ,
புஸ்லாவை.

6. எஸ். தவநாயகி,
24/41, செல்வநாயகம் வீதி,
முதலாம் குறுக்குத்தெரு,
மட்டக்களப்பு.

7. யுஸ்ரியா அஹமட்,
236/1, குமாரதுங்க மாவத்தை,
மாத்தறை.

8. தக்கியா நூரி,
174/1, அல் முனவ்வறா வீதி,
அக்கரைப்பற்று 4.

✦✦✦

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

18 கொழும்பின் கதை

என். சரவணன்

கொழும்பு ஸ்ரீ பொன்னம்பலவானேஸ்வரர் கோவில்

கொழும்பு ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் கோவில் கொழும்பின் அடையாளங்களில் ஒன்று. கொச்சிக்கடை சிவன் கோவில் என்றும் பலரால் அறியப்படுகிற இக்கோவில் வரலாற்று சிறப்பையும், கட்டிடக் கலைச் சிறப்புகளையும் கொண்ட பெரிய கோவில்.

கொழும்புக்கு வரும் இந்து சமயத்தினர் நிச்சயம் ஒரு முறையாவது இக்கோவிலுக்கு செல்லாமல் இருந்திருக்க மாட்டார்கள். கொழும்பு நகரில் சரித்திரப் புகழ்வாய்ந்த கோயில்களுள் ஒன்றாகவும் முக்கிய ஈழத்து சிவாலயங்களில் ஒன்றாகவும் இருப்பதுடன் இக்கோவிலின் திராவிடச் சிற்பக் கலை இன்றும் வியப்பாக பார்க்கப்படுகிறது.

தென்னிந்தியாவிலுள்ள பிரமாண்டமான கருங்கல் ஆலயங்கள் யாவும் மூவேந்தராலும், நாயக்க, பல்லவ மன்னர்களாலுமே கட்டப்பட்டன. அதே மாதிரியான அமைப்பில் இலங்கையில் முற்றிலும் கருங்கற்களில் பொளியப்பட்ட சிற்ப

வேலைப்பாடுகள் நிறைந்த அழகிய கலைக் கோவிலைத் தம் சொந்தப் பணத்தில் கட்டினார் பொன்னம்பல முதலியார்.

இக் கட்டிடம், விஜயநகர கட்டிடக் கலையைத் தழுவியதாக கட்டப்பட்டிருக்கின்றது. இவ்வாலயத்தின் தூண்கள், சிற்பங்கள் கூரையும் கூட , கருங்கற்களால் செதுக்கப்பட்டுக் கட்டப்பட்டிருக்கின்றன. இக் கோயிலின் கட்டட வேலைகளுக்கு வேண்டிய கற்பாறைகளில் சிலவற்றை இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்டுள்ளன.

இக்கோயிலைக் கட்டியவர் அருணாச்சலம் பொன்னம்பல முதலியார் (1814 1887).

பருத்தித்துறையைச் சேர்ந்த கேட் முதலியார் ஆறுமுகம் பிள்ளை குமாரசுவாமி (Arumugampillai Coomaraswamy) 1783இல் பிறந்தவர். சகோதரனின் அழைப்பின் பேரில் கொழும்பில் குடியேறி இங்கேயே கற்று பின்னர் ஆங்கிலய ஆளுநரின் பிரதான மொழிபெயர்ப்பாளராக நியமனம் பெற்றார். 1815 ஆம் ஆண்டில் கண்டி அரசன் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் பிரித்தானியரால் சிறைபிடிக்கப்பட்ட போது குமாரசுவாமி பிரித்தானியர்களின் மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்றியிருந்தார். பின்னர் 1833இல் சட்ட நிரூபன சபைக்கு நியமிக்கப்பட்டார். அவருக்கு முத்துக்குமாரசுவாமி, செல்லாச்சி ஆகிய இரு பிள்ளைகள், செல்லாச்சிக்கும் பொன்னம்பலம் முதலியாருக்கும் பிறந்தவர்கள் தான் இராமநாதன் சகோதரர்கள் என்று அழைக்கப்பட்ட, குமாரசுவாமி, இராமநாதன், அருணாச்சலம்.

08.09.1854இல் செல்லாச்சி இறந்துபோனதும் பொன்னம்பலம் முதலியார் தனது பணியில் இருந்து இராஜினாமா செய்தார். அதன் பின்னர் கருங்கல்லாலான கோவிலைக் கட்டிமுடிப்பதே அவரின் இலட்சியமாக இருந்தது. ஏற்கெனவே அவர் தென்னிந்திய திருத்தலங்களுக்கு அடிக்கடி யாத்திரை செய்து கோவில்களின் அமைப்புகளால் வசீகரிக்கப்பட்ட வர். சோழ, பாண்டிய கோவில்களின் அமைப்பில் தனது கோவிலை அமைக்க அவர் விரும்பினார்.

அவரின் சொந்த வீட்டில் பால யந்திர பூஜை நடத்தி வந்த தவர் அவர். அவர் வீட்டில் வைத்திருந்த சிவகாமி அம்மன் சிலையை இப்போதும் சிவன் கோவிலில் காணலாம்.

பொன்னம்பலம் முதலியாருக்கு கொழும்பிலும், மலையகத் தோட்டப் பகுதிகளிலும் சொத்துக்கள் இருந்தன. அது மட்டுமன்றி செட்டியார் தெருவில் வசித்து வந்த அவர், செட்டியார் தெருவில் முத்து விநாயகர் ஆலயத்தையும், ஜிந்துப்பிட்டி கதிரேசன் கோவிலையும் அமைத்தார்.

கொழும்புக் கொச்சிக்கடைப் பகுதியில் ஐந்து ஏக்கர் காணியை பொன்னம்பலவானேஸ்வரர் ஆலயத்தைக் கட்டுவதற்காக 05.07.1856 இல் ஆங்கிலேய கப்டன் ஜோன் போல்ஸ்டனிடம் (Captain John Foulstone Ceylon Rifle Regiment) இருந்து வாங்கினார். இந்தக் காணியில் ஏற்கெனவே மிகப் பழமையான காலி கோவில் ஒன்று இருந்தது.

தென் இந்தியாவிலிருந்து கோயில் கட்டடக் கலைஞர்களை வரவழைத்து இரண்டு வருடங்கள் இரவு பகலாக உழைத்துத் திருப்பணி வேலைகளை நிறைவு செய்து 1857ம் ஆண்டு மார்கழி மாதம் 12 ஆம் திகதி மகாகும்பாபிஷேகத்தை சிறப்பாக நடாத்தினார். மூல மூர்த்தியாக 22அங்குல உயரங் கொண்ட சிவலிங்கத்தையும், போக சக்தியையும் மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்வித்தார். தன் வீட்டில் வைத்துப் பூசித்து வந்த பாலயந்திரத்தை 32 அங்குல உயரங் கொண்ட சிவகாமி அம்பாளின் பீடத்திற்கு அடியில் வைத்தும் ஸ்ரீசக்கரத்தை அதன் அருகில் வைத்தும் பிரதிஷ்டை செய்வித்து பொது மக்கள் வழிபடுவதற்கு ஒழுங்கு செய்தார்.

இக்கோவிலை தொடர்ந்து பராமரித்து பூசைகளையும் விழாக்களையும் எதுவித தடங்கலுமின்றி தன் சந்ததியினர் செய்வதற்கான நிதி வருமான ஏற்பாட்டுக்காக நாத்தாண்டியாவில் ஒரு ஆயிரம் ஏக்கர் தென்னந் தோட்டத்தையும் கொழும்பு மாநகரில் தொடர் கடைகளையும் கட்டி ஆலயப்பராமரிப்புக்கு அவற்றிலிருந்து பணத்தைப் பெற வழிவகுத்தார். இந்தியாவிலிருந்து வரும் யாத்திரிகர்களும், ரிஷிகளும் உணவுண்டு தங்குவதற்கேற்ற முறையில் அன்னதான மடத்தையும் கட்டினார். தினமும் அங்கு வரும் ஏழைகளுக்கும் யாத்திரிகர்களுக்கும் உணவும், உடையும்அளித்தார். இக்கோவிலை தொடர்ந்து நடாத்துவதற்கு தன் சந்

ததியில் வரும் மூத்த ஆண்வம் சத்திற்கு அதிகாரத்தை சாசன மூலம் வழங்கினார்.

1887 ஆம் ஆண்டு பொன்னம்பலம் முதலியாரின் மறைவின் பின்னர் மூத்த மகன் பொன். குமாரசுவாமி பொறுப்பேற்று 1905ம் ஆண்டு அவர் மறையும் வரை ஆலயத்தை நிர்வகித்து வந்தார். இலங்கை சைவ பரிபாலன சபையின் ஆரம்பகர்த்தாக்களில் ஒருவர் குமாரசுவாமியின் மகன். அச்சபையின் இங்கே தான் ஆரம்பத்தில் தலைமையகமும் இயங்கியது. குமாரசுவாமி 1889இல் அதன் தலைவராகவும் இருந்தார்.

குமார சுவாமி காலமானதும் பொன்னம்பலம் முதலியாரின் இரண்டாம் மகனானசேர். பொன், இராமநாதன் நிர்வாகப் பொறுப்பை ஏற்றார். தந்தையாரால் கல்லாலும், சுங்கட்டியாலும் சுண்ணாம்புச் சாந்தாலும் கட்டிய கோவிலுக்குப் பதிலாக தற்போது உள்ள நிலையிலிருக்கும் கருங்கற் கோவிலை புதிதாகக்கட்ட 1907ஆம் ஆண்டு ஆரம்பித்தார். தென் இந்தியாவிலிருந்து சிறந்த கோயில் கட்டடஸ்தபதியையும், சிற்பிகளையும் வரவழைத்தார். வேயங்கொடையிலிருந்து கருங்கற்களை வருவித்தார். நூறு வருடங்களுக்கு முன்னரே இராமநாதனுக்கு இரண்டு லட்ச ரூபாய் செலவழிந்தது.

1907 இல் ஆரம்பித்து 1912 ஆம் ஆண்டு நவம்பர் 21 ஆம் திகதி குடமுழுக்கு செய்வித்தார். இக்கோயிலின் கட்டிடம் விஜயநகரக் கட்டடக்கலையைத் தழுவிக் கட்டப்பட்டது. 21.11.1912ம் ஆண்டுமுதற் கும்பாபிஷேகம் நடத்தப்பட



டது. இதன் தூண்கள், சிற்பங்கள், கூரைகள் அனைத்தும் கருங்கற்களால் செதுக்கப்பட்டுக் கட்டப்பட்டன. இக்கோயிலின் கட்டட வேலைகளுக்கு வேண்டிய கற்பாறைகள் சில இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்டுள்ளன. இக்கட்டடத்தின் தூண்கள் ஒரே கல்லில் செதுக்கி எடுக்கப்பட்டன. 25 அடி நீளமும் 5 அடி அகலமும் 1 அடி கனமும் கொண்ட உள்ள கற்பாறைத் தகடுகளே கூரை வேய்தலுக்கு பயன்படுத்தப்பட்டன.

இக்கோயிலின் இராசகோபுரம் கட்டி முடிக்கப்படுவதற்கு முன்ன ரேயே சேர் பொன். இராமநாதன் காலமாகிவிட்டார். அவர் இறந்து பல ஆண்டுகளாகியும் இராசகோபுரம் மொட்டையாகவே இருந்தது. பின்னர் இராசகோபுரத்தை மீள நிர்மாணிக்கும் பணிகள் 1965 ஆம் ஆண்டளவில் அவரது சந்ததியினரால் மேற்கொள்ளப்பட்டன. ஆனாலும் இராசகோபுரத்தை கருங்கற்களால் அவர்களால் அமைக்க முடியவில்லை. பதிலாக சீமெந்தினால் கட்டி முடிக்கப்பட்டது. கிழக்கு வாசலில் 65 அடி உயரங்கொண்ட ஐந்து நிலைக் கோபுரத்தைக் கொண்ட இராசகோபுரத்தில் 162 விக்கிரகங்கள் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு சிற்பமும் ஒவ்வொரு கதையைச் சொல்லுகின்றது.இந்த ராசகோபுரம் வண்ணம் தீட்டப்படாது, கருங்கற்களால் செதுக்கிய கட்டிடம் போன்று அமைக்கப்பட்டது. தெற்கு வாசலில் 35 அடி உயரங்கொண்ட மூன்று தளங்களைக் கொண்ட கோபுரமும் உள்ளது. இந்த ராஜகோபுரத்திற்கு வண்ணம் தீட்டாது, அதை, கருங்கற்களால் செதுக்கிய கட்டடம் போலவே இன்றும் பேணப்பட்டு வருவதும் ஒரு சிறப்பு. கட்டடத்தின் உள் வேலைகள் எல்லாம் கருங்கற்களால் அமைந்திருப்பதனால் ராஜகோபுரமும் கருங்கற்களால் தான் அமைந்திருக்க



வேண்டும். ஆனால், அது அப்போது சாத்தியமற்றதாக இருந்ததினால்,கல்லைப் போல் தோற்றம் அளிக்கும் வகையில் செய்து முடிக்கப்பட்டிருக்கிறது. வர்ணம் தீட்டினால் அது மங்கி அவலட்சனமாகி விடும் என்றும், அதன் இயல்பை பேணினால் போதுமானது என்று அன்றைய நிர்வாகம் கருதியது.

இந்தப் பொன்னம்பலவானேஸ்வார் ஆலயத்தின் ராஜ கோபுரத்தை இன்னும் உயரமாகக்கட்டி எழுப்பி இருக்கலாமே என்கிற விமர்சனங்களும் உண்டு. கோபுரத்தின் உயர அகலம், கோயிலின் கர்ப்பக்கிரகம், சபா மண்டபம் ஆகியவற்றின் நீள அகலத்தில் இருந்தே கணிக்கப்பட வேண் டும் என்பதே ஆலய சாஸ்திர விதி. ஆகவே, குறிப்பிட்ட உயரத்துக்கு மேல் எழுப்புவது ஆலய சாஸ்திர விதியை மீறும் என்கிற ஐதீகம் உண்டு.

கோபுர உச்சியிலும், கண்களுக்கே தெரியாத இடங்களிலும் சிற்பங்கள் அமைக்கப்பட்டமைக்கு அன்றே விளக்கம் அளிக்கப்பட்டிருந்தது. அதனை வடித்த சிற்பிகள்; தங்கள் கலைத்திறன் கடவுளுக்கே சொந்தம் என்றும் கடவுள் காணாத இடமே கிடையாது என்பதால் சிற்பங்களை மனிதன் காணமுடியாத இடங்களிலும் செதுக்கப்பட்டன என்றும் பிரபல அறிஞர் கலாயோகி ஆனந்த குமாரசாமி விளக்கியிருக்கிறார்.

ஆலயத்தின் அமைப்பு, காலத்திற்குக் காலம் வேறுபட்டு வளர்ந்திருக்கிறது. மேற்கு நுழைவாயில் அருகில் பசுமடம் உள்ளது. கோவில் காணிக்குள் நுழையும் இரு பிரதான வாயில்களில் ஒன்று கொழும்புத் துறை முகம் அமைந்திருக்கிற கடற்கரை பக்கமாக இருக்கின்ற "இராமநாதன் வீதி" யில் மேற்கு நுழைவாயில் உள்ளது. கிழக்கு வாயிலருகில் உயரமான தேர் மண்டபம் உள்ளது. அந்த வாயில் ஜெம்பட்டா ஒழுங்கையின் பக்கமாக அமைந்திருக்கிறது.

சேர் பொன் இராமநாதன் இலங்கையின் பிரம்ம ஞான சங்கத்தின் செயற்பாடுகளில் ஈடுபட்டவர். இலங்கை முழுவதும் சுதேசிய பாடசாலைகளை நிறுவ இராமநாதன் பெருமளவு நிதிகளையும் அச்சங்கத்துக்கு வழங்கியிருக்கிறார். ஆனால் அப்பணம் சிங்கள பௌத்தப் பாடசாலைகளை மட்டும் நிறுவ பயன்படுத்தப்படுவதைக் கண்ட அவர் கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் சைவத் தமிழ்ப் பாடசாலைகளை ஆரம்பித்தார். 1909ஆம் ஆண்டு அவர் பொன்னம்பலவானேஸ்வரர் தமிழ் பாடசாலை என்கிற ஒன்றையும் கோவிலோடு சேர்த்து ஆரம்பித்திருக்கிறார். ஆனால் அது ஒரு சில ஆண்டுகளில் மூடப்பட்டுவிட்டது.

27.11.1957 ஆம் ஆண்டு பொன்னம்பலம் முதலியாரின் பேரன் அருணாச்சலம் மகாதேவாவும் அவரின் மகன் சோம சுந்தரம் மகாதேவாவும் அறங்காவலர் சபையில் இருந்தபடி கோவிலின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடினர்.

ஆண்டுதோறும் சிவராத்திரியன்று பெருமளவில் மக்கள் இங்கு கூடுவது வழக்கம். இரவிரவாக நிகழ்த்தப்படும் நிகழ்ச்சிகளைக் காண்பதற்காக ஏராளமானோர் கூடுவார்கள்.

ஒன்றரை நூற்றாண்டுக்கும் மேற்பட்ட கால வரலாற்றைக் கொண்ட இந்த சிவன் கோவில் கொழும்பின் அடையாளங்களில் ஒன்றெனக் கூற முடியும்.

பன்றியாய் பிணமாய்... (32ஆம் பக்கத் தொடர்)

நெற் கதிர்கள் அந்த இடத்திற்கு வெளிச்சத்தை பரப்பாமல் பிடித்து வைத்திருந்தது.. இப்படி மெல்ல மெல்ல அந்த இடத்தை வந்து அடைந்தார்கள்.. வயல் பூமிக்கு எல்லையில் வைத்த கம்பி வேலியில் கட்டப்பட்ட "மந்தில்" சிக்குப்பட்ட இரண்டு பன்றிகள் வேலியை அங்குமிங்குமாக உசுப்பி அந்த சிக்கிலிருந்து விடுவிக்க முயன்று கொண்டிருந்தன.. அதைக் கண்ட மில்ஹானின் மாமா.. மில்ஹானைப் பார்த்து..

"டக்கன ஓடிப்போய் பொரைல என்ட போன எடுத்துக்கு வாங்கோ" என்றார்.. மில்ஹான் அவசர அவசரமாக வரம்பின் வழியே பொரையை நோக்கி ஓடினான்.. அவன் பொரைக்கு வந்து போனை. எடுத்து வெளியில் வர. சின்னத்தம்பி மாமா மீன் பிடித்து விட்டு திரும்பியிருந்தார்..

"என்ன தம்பி இப்டி மூச்சிமுக்க ஓடியாறேல்"

" பண்டி ரெண்டு மாட்டிரிக்கி.. மாமாதான் போன எடுத்து வரட்டாமென்டார் அதான்.." என்று நடந்து கொண்டே விடையளித்தான்.

"பண்டியா!" என்று வியந்த அவர் வலையையும் மீனையும் வைத்து விட்டு மில்ஹானின் பின்னால் அவரும் ஓடினார்..

ஓடிவந்த மில்ஹான் மாமவின் கையில் போனை கொடுத்தான் அவசர அவசரமாய் போன் வேண்டிய அவர் சடபுடவென்று ஒரு அழைப்பை விடுத்து.. சிங்களத்தில் பேசினார்..

இதை அவதானித்த மில்ஹான் சின்னத்தம்பியை பார்த்து,

"ஆரோட இப்டி அவசரமா கதைக்கார்"

"நான் நெனைக்கன் பண்டாரயோட எண்டு.."

"பண்டாரயா? ஆரது"

"Forest officer"

" forest officer ஆ? ஏன் என்ன விஷயம்"

"அவன்தான் இந்த ஏரியாக்கு Forest officer.. அவன் ஒங்க மாமாவோட நல்ல பழக்கம், அடிக்கடி அவன் வேட்டைக்கி போற.. இந்த வேலில " மந்து" வச்சதும் அவன்தான்.. ஒரு நாளும் பண்டி மாட்டின பாடில்ல.. அவனுக்கு பண்டி எண்டா பேய் போல.. இவருக்கிட்டயும் அடிக்கடி செல்லிரிக்கார் இப்டி பண்டி அம்புட்டா செல்லச் செல்லி அதான் எண்டு நெனைக்கன்"

எப்படியோ அந்தப் பெரிய பன்றியை அறுத்து உரித்து முடிவதற்குள் இங்கே சின்னத்தம்பி மீனை அறுத்து சொதி காய்ச்சி சோற்றையும் இறக்கி வைத்து விட்டார்.. பன்றி அறுத்தவர்கள் இறைச்சி அனைத்தையும் சாக்கில் போட்டுவிட்டு.. கழிவுகளை புதைக்க பெரிய குழி தோண்டினார்கள்.. ஒரு மாதிரியாக நிலவு வெளிச்சத்திலும் குளிர்ந்த காற்றிலும் இரத்த வாடை வீச வீச எல்லா வேலைகளும் முடிந்தன.. பண்டாரயும் வண்டி ஏறினான்...

அடுத்த நாள் விடிந்தது... மில்ஹான் எழுந்து மாமாவை தேடி பொரையை விட்டு வெளியே வந்தான்.. மில்ஹானின் மாமா வயலை வளைத்து நடந்து கொண்டிருந்தார்.. மில்ஹானைக் கண்டதும் கை அசைவால் கூப்பிட்டார்.. முகம் கழுவி இலேசாய் வாய் கொப்பளித்து விட்டு.. மாமாவை. நோக்கி நடந்தான்...

"என்ன மாமா"

"எனக்கி தெரிஞ்ச ஒறாள் இரிக்கார் இப்டி விசயம் சென்னன் ஒங்களப்பத்தி.. பாப்பம் எண்டிரிக்கான்.

இன்டக்கி வெள்ளிக்கெழமைதானே! அவன் வாங்காமத்துல இரிக்கிர அவண்ட வளவுளான் இரிப்பான் போய் சந்திங்கோ" என்றார்.

ரிப்பிள் ஏ றியாஸின் கதையை கேட்ட பின் மில்ஹானும் முர்ஸலீன் மாமாவும் பொரைக்கு நடந்தார்கள்.. மீதமிருந்த மீன் சொதியையும் சோற்றையும் இருவரும் உண்டார்கள்.. இப்படி இருக்க சின்னத்தம்பியும் அவர்களோடு இணைந்தார்.. சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போதே முர்ஸலீன் மில்ஹானை பார்த்து..

"போரத்துக்கு முந்தி ஸிஹாரத்துக்கு போவம்" என்று கூறினார்.. மில்ஹானும் அவரும் சாப்பிட்டு முடித்து பொரைக்குள் இருந்த பெரிய ரங்குப் பெட்டியை திறந்து சாம்புராணி எடுத்து இருவரும் வீடு செல்ல முந்தி "ஆராச்சிர புட்டி" யில் இருக்கும் ஸிஹாரத்துக்கு சென்றனர். அங்கு சென்று சாம் புராணி கொழுத்தி காணிக்கை செலுத்தி ஜும்ஆ தொடங்குவதற்கிடையில் வீடு வந்து சேர்ந்தார்கள்..

ஜும்ஆ முடிந்து பகல் உணவும் கழுத்து வரை உண்டு நேற்றைய நுளம்புக் கடியில் தூங்காத தூக்கத்தையெல்லாம் சேர்த்து தூங்கினான் மில்ஹான்.. 4.00 மணிக்கு அலாரம் வைத்தவன் அது அடித்து எழுந்து குளித்து மாஜித்திற்கு அழைப்பு விடுத்தான் றியாஸை சந்திக்க செல்ல. அழைப்பு விடுத்த அரை மணி நேரத்திற்குள் மாஜித் அவன் சைக்கிளில் வந்தான். மில்ஹானும் ஏறினான் சைக்கிள் வீதி மிதித்து உருண்டது. இப்படி இருக்க மாஜித் கேட்டான்

"எங்கடா போக?"

"ஒறாள சந்திக்கணும் அதான்"

"எங்க"

"வாங்காமத்துல"

"வாங்காமத்துலயா? அங்க ஆர்ர சந்திக்க போறாய்.. என்ன? ஆட்டு பிஸ்னஸ் ஏதாச்சுமா?"

"செஹ் இல்ல இல்ல.. பிஸினஸ் விஷயமாத்தான் பட் செல்ப் பிஸினஸ்"

"கொளப்பாம ஒழுங்கா செல்லு"

"நேத்து நீ தொழில் பத்தி கதச்சத்தில இருந்து நானும் ஒரு வழிய பாக்கனும் என்டு யோசிச்ச.. நேத்து முர்ஸலீன் மாமாட்ட அத பத்தி கதச்ச அப்ப அவர்தான்.. யாரோ றிப்பிள் ஏ றியாஸாம் கடும் பவர் இரிக்கிர ஆளாம் போய் சந்திக்கட்டாம் எண்டார் அதான்."

" ஆஹா.. "

" எல்லாம் செரி "ஜுஸ்லாக்கு" கொஞ்சம் எடு மஸ்கத் வேண்டிக்கு போவம்.. அந்தாளுக்கு மஸ்கத் விருப்பமாம்"

" றைட் றைட்"

ஜுஸ்லாதான் அக்கரைப்பற்றில் மிகவும் famous ஆன பழக்கடை. அங்கே பெரும் பாலன இனிப்பு பண்டங்கள், பழ வகை, ஜுஸ் என்று அனைத்தும் இருக்கும். மாஜித்தும் மில்ஹானும் கடைக்குள்ளே சென்று மஸ்கத் 1/2 கிலோ கேட்டுவிட்டு அது வரும் வரை காத்துக் கொண்டிருந்தார்கள். இப்படி இருக்க மாஜித்,

"பொத்துவிலான் மஸ்கத்துக்கு என்ன செல்ற என்டு தெரியுமா?"

மில்ஹான் இல்லை என்று தலையாட்டினான்.

"புதுக் புதுக்"

"என்னடா? புதுக் புதுக்கா?" என்று கேட்டுவிட்டு இருவரும் சிரித்தார்கள்.

"ஆனா உண்மை என்ன எண்டா.. அவனுகள் அப்டி செல்றல்ல.. நம்ட ஊரான் அறப்படிச்சவன் தானே இவனுகள் சும்மா அந்த கதய கட்டுட்டானுகள்"..

இப்படி இருக்க கடைக்காரன் மஸ்கத்தை கொண்டு வந்த தர இருவரும் வண்டி முறுக்கினார்கள் வாங்காமத்திற்கு!

"நேரம் 5.00 மணி இருக்கும்.. எப்படியோ கடை சியாக றியாஸின் வளவிற்குள் வந்தடைந்தார்கள்.

அது ஒரு நீளமான வளவு.. வளவின் எல்லைப் புறங்களில் நீளும் மதில்கள்.. மாட்டுப்பண்ணை , புறாப் பண்ணை, கோழி, முயல்கள், தென்னைமரம், மாமரம் என்று பல்வேறு வகையான மிருகங்கள் பறவைகள் மரங்கள் என்று அந்தப் பிரம்மாண்டமான வளவு நீண்டிருந்தது. அந்த வளவின் ஒரு ஓரத்தில் ஒரு சிறிய பழைய வீட்டின் விறாந்தாவில் றியாஸும் சில நபர்களும் கதைத்துக் கொண்டிருந்தார்கள்.. மில்ஹானும் மாஜித்தும் அந்த சிறிய வீட்டை நோக்கி நடந்து வந்தார்கள். அந்த வீட்டிற்கு அருகே வர ஒருவர் வேகமாக ஓடி வந்து..

"எங்க தம்பி போறேல் நாய் உளுபட்டாப்போல.. நாங்க இவடத்த இரிக்கம்.. ஏதாச்சும் கேப்பம் என்டு வெளங்குறல்லயா?"

மில்ஹான் நினைத்து வைத்த கற்பனை உருவத்திற்கு நேர்மாறாக றியாஸ் இருந்தான். பெனியன், மெரினா பெல்ட், கிப்லா சாறன், மூன்று விரல்களில் மோதிரம் என்று ஒரு வகையாக இருந்தான்.. இப்படி இருக்க றியாஸ்,

"சொல்லுங்க தம்பி, முர்ஸலீன்ட மருமகன் தானே.. என்ன விஷயம்"

"இல்ல காக்கா, தொழில் ஒண்டு கடும் தேவை.. அதான் மாமாவோட கதச்சன்.. ஒங்கள சந்திக்க சென்னார்.."

"தொழில் ஆருக்குத்தான் தேவெல்ல தம்பி.. ஹும்ம்.. ஏ எல் இரிக்கா?"

"இல்ல காக்கா"

"ஏ எல் இல்ல..ஹ்ம்ம்ம்.. ஓ எல் இரிக்கா? "

" ஓம் காக்கா, 3A 2b மிச்சது C"

"சரி என்ன மாரி தொழில் வேணும்.. அதுக்கு ஏத்தாப்போலான் நாம பேசி கனக்க பாக்கனும்.."

"MC ல இல்லாட்டி water board, CEB , RDA என்னத்துல எண்டாலும் பிரச்சினல்ல.. கொறஞ்சது மாசம் ஐம்பது வாறாப்போல இருந்தா நல்லம்.."

"ஏ எல் இல்ல.. ஆன அம்பது வாறாப்போல தொழில்மட்டும் வேணும் என.." என்று இன்பாஸை பார்த்து றியாஸ் சிரித்தான்.. அவனும் சிரித்தான்.. அவமானத்தால் உருகினான் மில்ஹான்..

" தொழில் சும்மா எடுக்க ஏலா தம்பி.. இப்டித்தான்.. மொதல்ல க்காடர் கோள் பன்னனும்.. அதுக்கு அப்ளை பண்ணனும் அத சோர்ட் லிஸ்ட் பண்ணி.. இன்டர்வியூ பண்ணி கடைசியாத்தான் தொழில் எடுக்கலாம்.. ஏ எல் இல்லாம ஒண்டும் செய்ய ஏலா.. ஓ எல் றிசல்ட்டுக்கு செக்குரிட்டி கார்டாகையும் போக ஏலா.. அப்ப ஒங்கள எல்லாத்துல இருந்தும் தப்பி மேல இழுத்து எடுக்கனும் எண்டா எல்லாருக்கும் காச. வைக்கனும்.. "

மில்ஹான் இழுத்து தயக்கத்துடன்..

" எவ்வளவு வரும் காக்கா" என்று கேட்க

" எவ்வளவு என... ஒரு பத்து பதினஞ்சி செலவழிச்சாகனும் தம்பி"

" பத்து பதினஞ்சா"

" இல்லாட்டி காரியம் நடக்காது.. இதான் விசயம் பெஸ்ட்டா.. காசி ஒரு அஞ்சி லெட்சத்த கொண்டு வாங்கோ.. பொறகு மத்தத கதைப்பம்" என்று கூறிவிட்டு றியாஸ் எழுந்து வீட்டிற்குள் சென்றுவிட்டான்.. மில்ஹானையும் மாஜித்தையும் இன்பாஸ் சைகை காட்டி போகச் சொன்னான்.. மில்ஹான் வாங்கி வந்த மஸ்கத்தை இன்பாஸிடம் கொடுக்க

" என்ன இது"

" மஸ்கத் காக்கா.. றியாஸ் காக்காக்கு விருப்பமாம் எண்டு கேள்விப்பட்டன் அதான்"

"இஞ்சப்பாரு... பெஸ்ட்டா இந்த றியாஸ் காக்கா எண்டு செல்றத நிப்பாட்டு.. கூப்புர்ர எண்டா றியாஸ் சேர் எண்டு கூப்புடனும் அப்டி இல்லையா இனி இஞ்சால வரப்போடா.. ரெண்டாவது, இந்த சாமான் அள்ளிக்கு வாற வேல வைக்கப்போடா.. ஒங்கூட்ட யாராச்சும் கொண்டு வந்தத்துர மிச்சத்த அள்ளிக்கி இஞ்ச வந்து அறப்படிச்ச வேல பாக்க வரப்போடா.. வெளங்குதா? "

" இல்ல காக்கா நான் இப்பான் வேண்டிக்கி வாறன்"

" இன்னா.. இவடத்தான் நமக்கு கோவம் வாற.. ஒன்னோட என்ன சென்ன இப்ப.. சரி கனக்க கதைக்காம.. ஆள் மாறு.. பெஸ்ட்டா காச எடுத்துக்கு வா.. பொறகு கதைப்பம்.. " என்று கத்தி ஏசி மில்ஹானையும் மாஜித்தையும் அனுப்பி விட்டான். அவமானத்தால் மில்ஹானின் முகம் இருண்டு போய் இருந்தது.. இருவரும் சைக்கிளில் ஏறி வீடு சென்றார்கள்..

வீட்டிற்கு வந்த மில்ஹான் நடந்த அவமானத்தையெல்லாம் மறக்கடிக்க முயற்சி செய்து கொண்டே காசை திரட்டுவதற்கான வழிகளை யோசித்தான்....

"சீட்டு கட்டுற எண்டா கைல காசிம் இல்ல அவசரத்துக்கும் எடுக்க ஒன்னா.. கடன் வேண்டுற என்டாலும் நம்மள நம்பி ஆரு தரப்போரா? உம்மாட்ட நகைய விக்க கேட்டா.. அந்தாள் உடுமா எண்டும் தெரியா... நேத்து முர்ஸலீன் மாமாட கதைலயும் நம்மள ஒரு மாதிரியாத்தான் நெனச்சி வச்சிரிக்கார் எண்டு வெளங்குது.. என்ன செய்ர"

என்று இப்படி பல கேள்வி அலைகள் அவன் மனதில் சுற்றிக் கொண்டே இருந்தது.. இப்படி யோசித்துக்கொண்டே தூங்கி விட்டான்..

அடுத்தநாள் மின்ஹான் மாமா வீடு சென்றான்

மில்ஹான் மெதுவாக " மாமா.. மாமா" என்று கூப்பிட.. அரைத்தூக்கத்தில் இருந்த அவர் முழித்து மில்ஹானைக் கண்டதும் சாய்ந்தவர் எழுந்து இருந்தார். மில்ஹான் அந்த சாய்மனைக்கு அருகில் கிடந்த கதிரை ஒன்றை இழுத்து இருந்து கதையை தொடங்கினான்.."நேத்து றியாஸ போய் சந்திச்ச மாமா.. அவர் சென்னார் தொழில் எப்டி எடுத்து கொடுக்குற.. க்காடர் வளக்கம் எல்லாம் சென்னார்.. பொறகு எவ்வளவு சம்பளம் எதிர்பாக்குர எண்டு கேட்டார்.. நான் ஒரு அம்பது வாராப் போல எண்டு சென்னன்.. எல்லாத்தையும் யோசிச் சிப்பொட்டு பத்து செலவழிக்கனும் எண்டார்.. பெஸ்ட்டா அஞ்சி லெட்சம் கொண்டுவரட்டாம் என்டார்.. அதான் மாமா யோசினையா இரிக்கி"

நித்திரை படிந்திருந்த கண்ணை கசக்கிக் கொண்டே.." அப்டித்தான் மருமகன் தொழில் எடுக்கனும் எண்டா காசக் காட்டனும்...சரி இப்ப என்ன முடிவெடுத்திரிக்கேல்"

" அதான் மாமா நானும் யோசிக்கன்.. எனக் கெண்டு வாப்பா ஒண்டும் வைக்கயும் இல்ல.. அப்டி வெக்கிர அளவுக்கு நான் நடக்கல்ல அது வேற வழக்கம்... உம்மாட்டா கதைப்பம் என்டிரிக்கன்.. நகையத்தான் விக்கனும். ஆனா அந்த காசிம் அஞ்சி லெட்சத்துக்கு காணா மாமா... "

" அப்ப மிச்சத்துக்கு என்ன செய்யப்போறேல் மருமகன்"

" அதான் மாமா யோசிக்கன்... ஒங்கள்ட்டான் கேக்கலாம் நான்.. எனக்கி வேற ஒத்தரும் இல்ல"

" சரி.. இனி. நானும் ஒங்களுக்கு மாமா எண்டு ஒண்டும் செய்யல்ல.. இத ஒரு உதவியாச் செய்ரன்.. என்னால மூணு லெட்சம் தான் தரலாம்.. ஆனா ஒண்டு.. பெஸ்ட்டா உம்மாட நகைய விக்கப்பொறேல் எண்டேல்.. நகைய வித்தோ எப்டியோ எனக்கிட்ட காச கண்ல காட்டுங்கோ.. றியாஸ சந்திச்சி குடுக்குற அண்டு காச தாறன்.. சரிதானே "

மில்ஹான் முர்ஸலீன் மாமா பணம் தர முன் வந்ததை எண்ணி மிகவும் மகிழ்ச்சியடைந்தான்.. மாமா கூறிய கட்டளைக்கு ஒப்புக்கொண்டு வீடு திரும்பினான். இப்படி ஒரு வகையாக நாட்கள் மாதங்கள் என்று கடந்தன... மில்ஹான் ஒரு வகையாக உம்மாவுடன் பேசி சம்மதிக்க வைத்து வாப்பாவிற்கு தெரியாமல் உம்மாவின் நகைகளை விற்று.. அதே வடிவத்தை ஒத்த தங்க நிறம் கொண்ட போலி நகைகளை வாங்கி வாப்பாவிற்கு சந்தேகம் வராமல் இருக்க உம்மாவை அணியச் சொன

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

மேஷம்

உங்கள் ராசிக்கு 3,6 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். சகோதர சகாய ஸ்தானம் மற்றும் ருண, ரோக, சத்ரு ஸ்தானத்திற்க்கும் அதிபதியான புதன், மாசி 17ஆம் திகதி (மார்ச் 1) உங்கள் ராசிக்கு லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். உத்தியோக முன்னேற்றம், ஊதிய உயர்வு கிடைக்கலாம், நல்ல நிறுவனங்களில் இருந்து கூடுதல் சம்பளத்துடன் அழைப்புக்கள் வரலாம். கும்ப ராசியில் உள்ள சூரியன் குருவோடு இணைவதால் அரச வழி ஆதாயம் உண்டு. அரசாங்க வேலைக்காக முயற்சி செய்து விண்ணப்பித்தவர்களுக்கு அதுவும் கிடைக்கலாம்.

ரிஷபம்

மாசி மாதம் 17ஆம் திகதி (மார்ச் 1) கும்ப ராசியில் புதன் சஞ்சரிக்கின்றார். உங்கள் ராசிக்கு 2,5 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். தன பஞ்சமாதிபதியான அவர், தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் தொழில் வளம் சிறப்பாக இருக்கும். தொடர்ந்துவரும் வாடிக்கையாளர் கூட்டம் அதிகரிக்கும். புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து சேரும். பூமி வாங்கும் யோகம் உண்டு. உறவினர்கள் உங்கள் முன்னேற்றத்தை கண்டு ஆச்சரியப்படுவார்கள்.பிள்ளைகளின் கல்வி மற்றும் வேலைவாய்ப்பு சம்பந்தமாக எடுத்த முயற்சியில் வெற்றி கிடைக்கும். பூர்வீக சொத்துக்களை பாகப்பிரிவினை செய்துகொள்வதில் இருந்த தடை அகலும்.

மிதுனம்

உங்கள் ராசி நாதனாகவும் சுக ஸ்தானாதிபதியாகவும் விளங்கும் புதன் மாசி 17ஆம் திகதி (மார்ச் 1) கும்ப ராசியில் சஞ்சரிக்கிறார். 9ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் புதனால் ஒரு சில நல்ல வாய்ப்புக்கள் இல்லம் தேடி வரலாம். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு நீண்ட நாட்களாக முயற்சித்தும் கிடைக்காத வேலை இப்போது கிடைக்கும். நிகழ்கால தேவைகள் ஒவ்வொன்றாக பூர்த்தியாகும். தந்தைவழி உறவில் இருந்த பிரச்சினைக்கு தீர்வு காண்பீர்கள்.

கடகம்

மாசி 17ஆம் திகதி (மார்ச் 1) கும்ப ராசியில் புதன் சஞ்சரிக்கின்றார். உங்கள் ராசிக்கு 3,12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் அட்டமத்தில் அடி எடுத்து வைப்பது நன்மைதான். மறைவிடத்துக்கு அதிபதியாக உள்ள கிரகங்கள் ஒவ்வொன்றாக இணையும் பொழுது நிறைவான பலன் கிடைக்கும். விபரீத ராஜயோக அடிப்படையில் இந்த பலன்கள் வந்து சேரும். பொருளாதார நிலை உயரும். தொழில் வெற்றி நடைபோடும். எதிரிகள் பலம் குறையும். புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். பூமி வாங்கும் யோகம் முதல் ஆபரணம் வாங்கும் யோகம் வரை நிறைவேறும்.

சிம்மம்

உங்கள் ராசிக்கு 2,11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். தன லாபாதிபதியான அவர் கும்ப ராசியில் மாசி 17ஆம் திகதி (மார்ச் 1) சஞ்சரிப்பதன் விளைவாக மிதமிஞ்சிய பொருளாதாரம் ஏற்படும். ஒரு சிலருக்கு கிளைத் தொழில் தொடங்கும் வாய்ப்பு உருவாகலாம். தசாபுத்தி பலம் பெற்றிருப்பவர்களுக்கு நடக்கும் தொழிலை விரிவு செய்யும் முயற்சி கைகூடும். புதிய வாகனங்கள் வாங்கும் யோகம் உண்டு. உடன்பிறப்புக்களுடன் இருந்த பகை மறையும்.

கன்னி

மாசி 17ஆம் திகதி (மார்ச் 1) கும்ப ராசியில் புதன் சஞ்சரிக்கிறார். உங்கள் ராசிக்கும்,10ஆம் இடத்திற்கும் அதிபதியாக விளங்கும் புதன்,கேந்திராதிபத்ய தோஷம் பெற்றவர். அவர் 6ல் மறைவது யோகம்தான். எனவே பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும்.புதிய ஒப்பந்தங்கள் வந்துசேரும். எதிர்காலத்தை பற்றிய பயம் அகலும். இல்லம் கட்டி குடியேற வேண்டும் என்ற ஆசை நிறைவேறும். பிள்ளைகளின் சுபகாரிய பேச்சு முடிவாகும்.

துலாம்

மாசி 17ஆம் திகதி (மார்ச்1) கும்ப ராசியில் புதன் சஞ்சரிக்கிறார்.உங்கள் ராசிக்கு 9,12 ஆகிய இடத்திற்கு அதிபதியானவர் புதன். அவர் பஞ்சம ஸ்தானத்துக்கு வரும் பொழுது பிள்ளைகளின் சுப காரிய பேச்சுக்கள் கைகூடலாம். பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரச்சினை அகலும். திட்டமிட்ட காரியங்களை திட்டமிட்டபடி செய்து முடிப்பீர்கள். தொழில் நடத்துபவர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் வந்துசேரும். பிள்ளைகளின் சுப காரியங்களை நடத்த முயற்சிப்பீர்கள். அர்த்தாஷ்டம சனியின் ஆதிக்கம் இருப்பதால் எதையும் யோசித்து ஏற்றுக்கொள்வது நல்லது.

விருச்சிகம்

மாசி 17ஆம் திகதி (மார்ச் 1) கும்ப ராசியில் புதன் சஞ்சாரம் செய்கிறார். உங்கள் ராசிக்கு அஷ்டம லாபாதிபதியாக விளங்குபவர் புதன். அவர் சுக ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது வாகன யோகம் ஏற்படும்.கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். உறவினர்கள் உங்கள் முன்னேற்றத்தை கண்டு ஆச்சரியப்படுவர். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு வெளி நாட்டில் உள்ள நிறுவனங்களில் இருந்து அழைப்புக்கள் வரலாம்.

தனுசு

உங்கள் ராசிக்கு 7,10ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் மாத தொடக்கத்தில் தன ஸ்தானத்தில் சஞ்சாரம் செய்கிறார். மாசி 17ஆம் திகதி (மார்ச் 1) சகாய ஸ்தானத்திற்க்கு வந்து அங்குள்ள சூரியன் குரு ஆகியவற்றோடு இணைந்து சஞ்சரிக்கிறார். உத்தியோகத்தில் உள்ளவர்கள் விருப்ப ஓய்வு பெற்று கொண்டு தொழில் தொடங்கலாமா? அல்லது வேலையில் இருந்தபடியே தொழிலை தொடங்கலாமா? என்று சிந்திப்பீர்கள். வாழ்க்கை துணைக்கு வேலை கிடைத்து, உதிரி வருமானம் வந்து சேரும். சூரியனோடு புதன் இணைந்து புத ஆதித்ய யோகத்தை உருவாக்குவதால் கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும்.

மகரம்

உங்கள் ராசிக்கு 6,9ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் மாசி 17ஆம் திகதி (மார்ச் 1) தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். இக்காலத்தில் இனிய சம்பவங்கள் பல நடைபெறும். பிள்ளைகளின் வேலை வாய்ப்பு கருதி எடுத்த முயற்சி வெற்றிபெறும்.கடன் சுமை இப்போது குறையும். இல்லத்தில் மங்கல ஓசை கேட்க வழி பிறக்கும். தந்தைவழியில் இருந்த விரிசல்கள் அகலும். தனவரவு திருப்தி தரும். எதிரிகளின் தொல்லை குறையும். ஏற்ற இறக்கமான பொருளாதாரத்தை சரி செய்ய எடுத்த முயற்சி கைகூடும்.

கும்பம்

மாசி 17ஆம் திகதி (மார்ச் 1)கும்ப ரிசியில் புதன் சஞ்சரிப்பது யோகம்தான். உங்கள் ராசிக்கு பஞ்சம அஷ்டமாதிபதியாக விளங்குபவர் புதன்.எனவே பிள்ளைகள் வழியில் பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். பூர்வீக சொத்துக்களை பாகப்பிரிவினை செய்துகொள்வதில் தீவிரம் காட்டுவீர்கள்.உத்தியோகத்தில் உள்ள வர்களுக்கு சக பணியாளர்களால் தொல்லை உண்டு. மாமன் மைத்துனர் வழியில் நடைபெறும் மங்கல நிகழ்ச்சியை முன்னின்று நடத்தி வைப்பீர்கள் சேமிப்பு கரையும் நேரம் இது.

மீனம்

மாசி மாதம் 17ஆம் திகதி (மார்ச் 1) கும்ப ராசியில் புதன் சஞ்சாரம் செய்கிறார். உங்கள் ராசிக்கு 4,7ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் 12ல் மறையும் பொழுது நன்மை செய்யும் என்பார்கள். எனவே அந்த அடிப்படையில் தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். துணையாக இருப்பவர்கள் தோள் கொடுத்து உதவுவர். சுப காரியங்கள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படும். கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். புத ஆதித்ய யோகம் செயல்படும் இந்த நேரத்தில் பெரிய மனிதர்களின் சந்திப்பால் சில பிரச்சினைகளில் இருந்து விடுபடுவீர்கள்.

அமரர் மரியசேவியர் அடிகளாரின் நினைவாக மலர்ந்துள்ள கலைமுகம் 72

அடிகளார் காலம் தந்த வரம்

தனது 82ஆவது அகவையில் அமரத்துவம் அடைந்த கலைத்தூதுவர் நீ. மரியசேவியர் அடிகளாரின் (03.12.39_ 01.04 2021) நினைவுகளைப் பகிர்ந்து கொள்ளும் வண்ணம் அடிகளாரின் முன் அட்டைப்படத்துடன் தனது 72ஆவது இதழை மலரச் செய்திருக்கிறது திருமறைக்கலாமன்றம்.

திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபகரும் இயக்குனருமான மரியசேவியர் அடிகளார் 1990 ஜனவரியில் ஆரம்பித்த இதழ்கலைமுகம். அடிகளார் கலைமுகம் காலாண்டிதழின் பிரதம ஆசிரியர். 32 ஆண்டுகள் வெளிவந்த கலைமுகம் 33ஆம் ஆண்டில் கால்பதிக்கும் வேளை பிரதம ஆசிரியரின் மறைவு நிகழ்ந்திருக்கிறது.

அவரை மறக்காமல் மனதில் சுமக்கும் விதத்திலும் அவர் வளர்த்தெடுத்த சமய சமூக, கலை இலக்கிய, பண்பாட்டுப் பணிகள் அவர் வீட்டுச் சென்ற தடங்களிலேயே தடங்கலின்றி தொடரும் என்பதை உறுதி செய்யும் விதத்திலும் மலர்ந்திருக்கிறது இந்த இதழ்.

உலக வரலாற்றில் தமக்கென வாழாது தம் வாழ்வு முழுவதையுமே அடுத்தமனிதர்களின் உயர்வுக்காக, சமூகத்தின் முன்னேற்றத்துக்காக அர்ப்பணித்து வாழ்ந்து மறைந்த உன்னதமான மனிதர்கள் பலரைநாம் கண்டிருக்கின்றோம். இன்றும் அத்தகைய மனிதர்கள் நம்மத்தியில் வாழ்ந்து கொண்டிருப்பதால் தான் நினைத்துக் கூட பார்க்கமுடியாத அழிவுகள் இழப்புகளுக்குப் பின்னரும் உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது எனலாம். இத்தகைய உயர்வான மனிதர்களின் ஒருவராக வாழ்ந்து மறைந்தவர்தான் மரிய சேவியர் அடிகளார்!

'அடிகளாரின் வாழ்விலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டியவை ஏராளம். அவருடன் அவரது நிழலில் பயணித்த மணித்துளிகள் இனி மீளப்பெறமுடியாத உற்சாகம் மிக்க அற்புதமான தருணங்கள்.

இதழின் பிரதம ஆசிரியராகவும் இருந்து வழிகாட்டிய மரியசேவியர் அடிகளாருக்கு கலை முகம் தனது ஆத்மார்த்தமான அஞ்சலிகளை தெரிவித்துக் கொள்கின்றது' என உருகித்தனது தலையங்கத்தை எழுதிச் செல்கின்றார் பொறுப் பாசிரியர் செல்மர் எமில்.

இதழ் வடிவமைப்பும் பொறுப்பாசிரியருடையதே! அழகும் நேர்த்தியும் அமைதியும் மிளிர ஒளிபரப்பும் மெழுகுவர்த்திகளினடியில் 'கலைத்தூது நீ. மரியசேவியர் அடிகள் நினைவுகள்' என்னும் வரிகள் அற்புதமான அஞ்சலிக் குறியீடு.

வழமையான நூறு பக்கங்களில் முதல் நாற்பது பக்கங்கள் அடிகளாரின் நினைவுகளைப் பதிகின்றன. பேராசிரியர் அமுது ஜோசப் சந்திரகாந்தன் 'கலையுணர்வும் தமிழறிவும் கலந்தளித்த ஆசான்' என்னும் தனது கட்டுரையில் 'எங்கள் பலரின் புலமைத்தள வாழ்வில் பாதர் சவரியின் இழப்பு ஏற்படுத்தியுள்ள இடைவெளி இலகுவில் நிரப்பக்கூடியதல்ல. பல கலைஞர்களை உருவாக்கிய கலைக்குரு அவர். கலையே அவரது உணவாக, பானமாக கனவாக, நனவாக, வாழ்வாக, வலிமையாக இருந்தது. இந்தப் பெருங் கலைஞன் பல நூறு ஆண்டுகளுக்கு நின்று நிலைத்திருப்பான் என்றெழுதுகின்றார்.

அடுத்த கட்டுரையைத் தந்திருப்பவர் மு. புஷ்பராஜன். குருமணலாலான கடற்கரையூர் குருநகரைப் பிறப்பிடமாகக் கொண்டவர் மு. புஷ்பராஜன். 90களின் குருநகர் வாழ்புலம் இழந்த துயருடன் லண்டன் வாசியானவர்! குருநகர் புனித யாகப்பர் தேவாலயப் பங்குத் தந்தையாக 70களில் மரிய சேவியர் அடிகள் வந்த நாட்களில் இருந்து அவருடன் இணைந்து நட்புடனும் ஊக்கத்துடனும் செயற் பட்டவர் புஷ்பராஜன்.

பொதுவாகவே சுவாமிமார்கள் கலைசார்ந்த விடயங்களில் ஆர்வம் காட்டுவதில்லை. ஈஸ்டர் நாட்களில் கோவில் முன்றலில் மூத்த தலைமுறையினர் மேடையேற்றும் கத்தோலிக்க வரலாற்று நாடகங்கள், ஊரில் ஆடப்படும் கூத்துக்கள் போன்றவற்றை ஆதரித்து வரவேற்பார்கள். இளைஞர்களின் நாடக முயற்சிகளைக் கண்டுகொள்வதில்லை. புதிதாக வந்த இவரோ ஊரில் உள்ள நாடகமன்ற இளைஞர்களையும் அழைத்து உரையாடினார். இந்த அழைப்பின் மூலம் தான் அவரை நான் சந்தித்தேன்.நாடக மன்றங்கள் இருக்கின்றன. ஆனால் கலையரங்கம் என்று ஒன்று இல்லை. நமக்கான ஒரு கலையரங்கத்தை நாம் கட்டுவோம் என்று கூறினார். என்னிடம் பணம் இல்லைதான். ஊர் மக்களைக் கொண்டே அதை செய்து முடிக்கலாம் என்றார். இளைஞர்கள் பலருடனான நெருக்கமான உறவும் நட்பும் குருநகர் சார்ந்த அவர் முன்னெடுத்த செயற்பாடுகளை சாத்தியமாக்கியது. வியக்கத்தக்க வகையில் இன்று கம்பீரமாக எழுந்து நிற்கும் குருநகர் கலையரங்கம்' அந்த மக்கள் பால் அடிகளார் கொண்டிருந்த நேசத்தின் சாட்சியம்' என்றெழுதிச் செல்கின்றார் மு. புஷ்பராஜன்.

தேசிய கலை இலக்கியப்பேரவையின் முதல்வரும் மூலவருமான நாடகர் சோ. தேவராஜா ஒரு தாய்க்கோழிபோல திருமறைக்கலாமன்றக் கலைஞர்களை தனது சிறகால் மூடிக் காத்தவர். அவர்களின் ஆளுமை விருத்திக்கான சகல வழிகளையும் திறந்து விட்டவர். இலங்கைத்தமிழ் இளைஞர்கள் இலட்சக்கணக்கில் பணம் செலவழித்து புலம்பெயர்ந்து வெளியேறிய நாட்களில் மரிய சேவியர் அடிகளார் 19 கலைப்பயணங்கள் மேற்கொண்டு திருமறைக்கலாமன்றக் கலைஞர்களை மேற்கு நாடுகளெங்கும் கலைத்தூதுவர்களாக அழைத்துச் சென்று ஆற்றுகைகள் பல நிகழ்த்தி மீண்டும் நாட்டுக்கு அழைத்து வந்து தனது கலைப்பயணங்களை தூய்மையாக்கியவர்.

தனிநாயகம் அடிகளார் வரிசையில் நீ. மரியசேவியர் அடிகளாரையும் வாழ்த்தி வணங்கும் சோ. தேவராஜ் கட்டுரைத் தலைப்பு 'சமகாலத்தில் அதிசயங்கள் நிகழ்த்தியவர்? என்பது.

தெளிவத்தை ஜோசப் ...✍

செல்வம் அருளானந்தம் காலம் இலக்கிய இதழின் ஆசிரியர் காலம் 50' சிறப்பிதழில் (ஜனவரி 2017) அடிகளாரை அட்டையிலிட்டும் நேர்காணலை வெளியிட்டும் கௌரவம் செய்தவர்.

'தமிழ்ப்பண்பாட்டுக் கோலங்களை அடையாளம் காட்டியவர்' என்று அமரர் மரியசேவியர் அடிகளாருக்கு புகழாரம் சூட்டுகின்றார் கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன்.

ஞானம் இல்லாத உலகிற்கு ஞான ஒளியை ஏற்படுத்துதல், அறியாமை நிலையிலிருந்து விழிப் புணர்வை அடைதல் என்பதையே தனது கலைத் தொண்டாக சமூகம்சார் இறைதொண்டமாக தொடர்ச்சியாக செயற்படுத்தியவர் அடிகளார். தமிழ்பேசும் சமூகங்களிடையே ஒற்றுமைக்கான தளத்தை பண் பாட்டினூடாக மேற்கொண்டமையின் அடுத்த காலடி தான் கலைக்கூட அமைப்புக்கள் என்றெழுதுகிறார்.

நா. யோகேந்திரநாதன், குயின்ரன் துரைசிங்கம் ஆகியோரும் கலைத்தூது நீ மரிய சேவியர் அடிகளார். அவரமைத்த திருமறைக்கலாமன்றம்:, அவர் வெளியிட்ட கலையிலக்கிய சமூக இதழ் 'கலைமுகம்' போன்ற தங்களது மறக்கவொண்ணா நினைவனுபவங்களை கலைமுகம் வாசகர்களுடன் பகிர்கின்றனர்.

கலைமுகம் இதழ்களின் ஆசிரியத்தலையங்கங்களின் தொகுப்பான 'காலத்தின் தடங்கள்' நூல் பற்றிய தொரு நீண்ட விரிவான சி. விமலனின் ஆய்வுக்கட்டுரையும் (கலைமுகத்தில் 11 பக்கங்கள்) கலைமுகத்தின் அடிகளார் நினைவிதழ் பக்கங்களை ஆழப்படுத்தவே செய்கின்றது!

1990 ஜனவரி முதல் இதழிலிருந்து 2019செப்டம்பர் வரையிலான 68 தலையங்களின் தொகுப்பே காலத்தின் தடங்கள்.'ஒரு பத்திரிகை அல்லது சிற்றிதழின் நோக்கத்தையும் செல்நெறியையும் அறிந்து கொள்வதற்கு அதில் வரும் ஆசிரியர் தலையங்கம் முக்கியமானது. ஒரு இதழாசிரியரின் கருத்து நிலை என்ன. காலப்போக்கில் அவர் எத்தகைய கருத்தியல் ரீதியான மாற்றங்களுக்கு ஆளாகின்றார் என்பதனை தெரிந்து கொள்ள ஆசிரியத்தலையகங்களே துணை புரிகின்றன. அந்த வகையில் மரிய சேவியர் அடிகளாரின் கருத்து நிலைகளைப் புரிந்து கொள்ள ஏதுவாக இந்நூல் அமைகிறது என்று தொடங்கும் சின்னராசா விமலன் பத்துவகைப்படுத்த லூடாக மேற்கொள்ளும் இவ்வாய்வின் முடிவில் காலப்பொருத்தமான கனதியான, சமகாலத்துக்கும் எதிர்காலத்துக்கும் ஏற்றதான வழிகாட்டகளை வழங்குகிறது' என்று எழுதிச் செல்கின்றார்.

அவரெழுதிய நூல்கள், அவரெழுதிய நாடகங்கள், அவரது மறைவின்பின் அட்டைப்படமிட்டுக் கனம் செய்த இதழ்கள் என்று நீ. மரியசேவியர் அடிகளார் பற்றிய தகவல்கள்; புகைப்படங்கள்

மாபெரும் ரைகம் TELE'ES விருது விழா இரட்டைக் கொண்டாட்டம்

எதிர்வரும் 26ஆம் திகதி கொழும்பு ஷங்ரிலா ஹோட்டலில்

இலங்கையின் மிகப்பெரிய வருடாந்த மாபெரும் தொலைக்காட்சி விழாவாக கருதப்படும் TELE'ES 2020 2021 விருதுவிழா இம்மாதம் 26 ஆம் திகதி கொழும்பு சங்ரிலா ஹோட்டலில் ரைகம் நிறுவனத்தின் தலைவர் ரவி லியனகே தலைமையில் நடைபெறவுள்ளது.

தொலைக்காட்சித் துறையில் வருடத்தின் முதல் காலாண்டிலேயே முன்னைய ஆண்டின் நிகழ்ச்சிகள் தொடர்பான விருதுகளை உள்ளூரில் வழங்கும் நிகழ்வாகும். ரைகம் டெலீஸ் விருது விழாவின் நியமன மாலை கடந்த மாதம் 26ஆம் திகதி இரவு வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் இனிதே நடைபெற்றது. இதில் போட்டிக்காக முன்மொழியப்பட்டுள்ளோரின் பெயர் விபரங்கள் அறிவிக்கப்பட்டன.

சிறந்த தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் உருவாக்கம், சிறந்த தொலைக்காட்சி நாடகம், சிறந்த பாடல், சிறந்த தொழில்நுட்பம், சிறந்த கதையம்சம், சிறந்த ஒளிப்பதிவு, சிறந்த இசை, சிறந்த நடிகர் நடிகை, சிறந்த தொடர் நாடகம், சிறந்த தொலைக்காட்சி நிகழ்ச்சி, சிறந்த தொலைக்காட்சி கல்வி நிகழ்ச்சி, சிறந்த வர்ணனை, சிறந்த கேள்வி பதில் நிகழ்ச்சி, மற்றும் சிறந்த செய்தி வாசிப்பாளர் (சிங்களம், தமிழ், ஆங்கிலம்), சிறந்த தொகுப்பாளர் (சிங்களம், தமிழ், ஆங்கிலம்), சிறந்த தொலைக்காட்சி சேவை, வருடத்திற்கான சிறந்த அலைவரிசை என பல விருதுகள் வழங்கப்படவுள்ளன.

தமிழில் சிறந்த செய்தி வாசிப்பாளர் 2020ம் ஆண்டிற்கான போட்டிக்கு முனியாண்டி கவிதா (வசந்தம் டி.வி), வனிதா பரமேஸ்வரன் (சக்தி டி.வி), விஜய் அபிநன்தன் விஸ்வநாதன் (நேத்ரா டி.வி) 2021ம் ஆண்டிற்கான போட்டிக்கு நேத்ரா டி.வி.யின் விஜய் அபிநந்தன் விஸ்வநாதன், இர்ஷாட் ஏ. காதர், ராதிகா வில்சன் ஆகியோரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

தமிழில் சிறந்த தொகுப்பாளர் 2020ம் ஆண்டிற்கான போட்டிக்காக சிறிவேல்ராஜ் ராஜபிரசாந்த் (சக்தி டி.வி) குமாரலிங்கம் சாம்பவி (வசந்தம் டி.வி), ஞானகுமாரன் ஞானதீபன் (சக்தி டி.வி) 2021ம் ஆண்டுக்கான எஸ். ராகேஷ் சர்மா(சக்தி டி.வி) செல்வராஜ் நவநீதன் (ஸ்டார் டி.வி) எஸ். கிறிஸ்டினா (வசந்தம் டி.வி) ஆகியோரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் விருது விழா கலாசாரத்தில் ஒரு புதிய நடைமுறையை விழா ஏற்பாட்டுக் குழுவினர் அறிமுகப்படுத்தியுள்ளனர். அங்கீகரிக்கப்பட்ட அதிக பார்வையாளர்களால் பார்க்கப்பட்ட தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கு (தொலைக்காட்சி நாடகம், ஊடக நிகழ்ச்சிகள் மற்றும் செய்திகள் தொகுப்புகள்). பொதுவாக மிகவும் பிரபலமான நிகழ்ச்சிகள் குறுந்தகவல்கள் வாக்கெடுப்பில் அறிவிக்கப்பட்ட பார்வையாளர்களின் விருப்பத்தின் பேரில் தீர்மானிக்கப்படுகின்றன. ஆனால் தொலைக்காட்சி பார்வையாளர்களிடையே அதிகம் ஊடுருவிய நிகழ்ச்சிகளாக இருக்காது. எனவே வெளியிடப்பட்ட தரவுகளை அறிவியல் முறையில் பகுப்பாய்வு செய்பவர்களை அங்கீகரிக்க புதிய நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

சர்வதேச ரசனையான ஒஸ்கார் விருது விழா வைப்போன்று ரைகம் டெலீஸ் இறுதி விருது விழா விற்கு முன்னதாகவே பரிந்துரைக்கப்பட்டவர்களை அறிவிப்பதற்காக நியமன மாலையை அறிமுகப்படுத்தியுள்ளது.

கலை மதிப்புகள், படைப்பாற்றல் அல்லது நடிப்புத் திறமைகளை மதிப்பிடுவது மிகவும் தரம் வாய்ந்ததாக அமைய வேண்டும் என்பதற்காக பரிந்துரைக்கப்படும் மூவரும் சமமாக மதிக்கப்படுவார்கள். பாரம்பரியமாக ஒரு வேட்பாளர் மட்டுமே வெற்றியாளராகப் பாராட்டப்பட்டதுடன் மற்ற வேட்பாளர்கள் தங்கள் பெயர்களைக் குறிப்பிடுவதைக் கட்டுப்படுத்தினார்.

ரைகம் டெலீஸ் இந்த புதிய பாரம்பரிய நியமனமாலையை அறிமுகப்படுத்தி, நட்சத்திர ஹோட்டலில் நடத்தப்படும் விழாவில் வெற்றிக்காக பரிந்துரைக்கப்பட்ட அனைவரும் பாராட்டப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ரைகம் டெலீஸ் விருது விழாவில் பரிசு பெறுவோர் மற்றும் பாராட்டு பெறுவோருக்கு ஆண்டுக்கு ரூ. 1,000,000/ ஆயுள் காப்பீட்டுத் தொகையையும் மருத்துவமனை காப்பீட்டுத் தொகையாக 100,000/ ரூபாவும் வழங்கப் படும் ஒரேயொரு விருதுவிழா ரைகம் டெலீஸ் என்பது குறிப்பிடத்தக்கது.

அதுமட்டுமல்லாமல் இந்த ஆண்டும் ரைகம் டெலீஸ் போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு ரூ. 500க்கும் அதிகமான 3.0 மில்லியன் ரூபா ரொக்கப் பரிசுகள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாபெரும் விழாவிற்கு சம்பத் வங்கி, மொபிடெல் நிறுவனம் மற்றும் அலியான்ஸ் காப்புறுதி நிறுவனம் ஆகியன அனுசரணை வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

கசப்பு

ஐம்பது அறுபதுகளில் பேனை அறிமுகப்படுத்தி வைத்த இரு ஏறாவூர் மைந்தர்கள் **புரட்சிக்கமால் சாலிஹ், யூ.எல். தாவூத்...** முன்னையவர் நான் வாழ்ந்த தெருவிலேயே வாடகை அறையில்

ஏறாவூர் இலக்கிய முன்னோடி காலஞ்சென்ற யூ.எல். தாவூத்.

முடங்கி சட்டம்பியாகக் கடமை. தாவூத், கொழும்பில் கற்பித்து விட்டு 'ஏரூர் அலிகார்' அரவணைப்பிற்கு ஆளானார்.

இருவரில் தாவூத் மிக நெருக்கும். முக்கிய காரணமாக அமைந்தது அவர், செட்டியார் தெரு 'நவலட்சு'மி புத்தக சாலை, **பி.எம்.எம். முஹிதீன்** அனுசரணையில் இலங்கையின் முதலாவது முஸ்லிம் சிறுகதைத் தொகுப்பு வெளியிட்டதே! நூலின் பெயர் **முஸ்லிம் கதை மலர்கள்**'.

இன்றையக் கசப்பு சிறுகதைப் பிரசவங்களைப் பற்றியதே. 'என், யூ.எல். தாவூத் காலத்தின் பின்னால் ஒரு சிறு கதைத் தொகுப்பு அதாவது, முஸ்லிம் எழுத்தாளர்களை ஒன்றிணைத்து கதைத் தொகுதி ஏரூரிலிருந்து வரவே இல்லை?

சரி, சற்றே தொகுதியை மறந்து விட்டு தனிப்பட்டவர்களின் படைப்புகள் கூட்டு மொத்தமாக ஒரு ஐம்பது ஆண்டுகளில் எத்தனை வந்திருக்கின்றன...? எத்தனை சிறுகதைப் படைப்பாளிகள்?

பயங்கரமான ஒரு மரண, அடி விழுந்திருப்பதாகப் படுகிறதே...

ஒரு பட்டியலை மிகச் சிரமத்தில் கவிஞர் ஏரூர் கே. நௌஷாத் துணை கொண்டு தொகுத்தது இந்த மூத்த பேனை.

காலஞ் சென்றோர்

- புரட்சிக் கமால் சாலிஹ்,
- அதிபர் யூ.எல். தாவூத்,
- எம்.சி உசனார்,
- டி.எல்.எம்.உசனார்,
- அலை வேந்து யூசுப்,
- யூ. எச். முஹம்மத்

வாழ்வோர்,

- ஏறாவூர் தாஹிர்
- எச்.எம். அப்துல் ஹலீம்,
- ஸர்மிலா சைய்யித்,
- சித்தி அப்பாஸியா,
- மருதூர் ஜமால்தீன்,
- ஏ.சி. அப்துல் ரகுமான்,
- ஏரூர் முகைதீன்,
- ஏரூர் ஜிப்ரியா,
- எம்.டி.எம். அன்ஸார்,
- என்.எம். ஆரிஃபா,
- கவித் தென்றல் ராஃபிசுபைர்,
- ஏரூர் யூவன்னா,
- ஆசிரியர் ஸஃப்ரான்,
- ஏரூர் கே. நௌஷாத்,
- ஏரூர்க்கவி எச்.எம்.எம். ரஹீம்,
- ஏரூர் முஆத்,
- உசனார் எம். பஷீர்,
- எம்.ஜ.எம். சுபைர்,
- எம்.என்.எம். சுபைர்,
- முகம்மது நியாஸ்,
- ஏ. றியாஸ்,
- ஏரூர் முகம் அன்சார்,
- சபீர் ஹாஃபிஸ்,
- சேகுதாவூத்,
- அப்துல் ரஸ்ஸாக்,
- அல் ஆஸாத்,
- என்.எல். அம். மன்சூர்,
- எச்.எஸ். றிஃபாஸ்
- மருத்துவர் ஜலீலா முஸ்ஸம்மில்,
- நஸீரா ஆப்தீன்,
- ரீஸா ஹானி,
- இஷா முகம்மத் (ஏரூர் கவிமொழி),
- ஃபாத்திமா அஸ்கியா முகம்மது (ஏரூர் நிலா தோழி),
- ஏரூர் எம். அஷ்றப் (கவித் தென்றல்)
- சீனி முகம்மது ஸாலிஹ்.

கொஞ்சம் மூச்சுவிட்டுக் கொள்ளுங்கள். மொத்தம் 41 பேர். சிலர் தேடலில் அகப்படாமல் தப்பி இருக்கலாம். மன்னிப்பு.

இவர்களில் பலர் எந்தத் துறையில், 'ஓடிவிளையாடுகிறார்கள்' எனப் பார்த்தால் படுகசப்பு கசப்பு!

"அடப்பாவியே" என்போரும் இருப்பீர்கள். பரவாயில்லை.

ஏற்றமிகு ஒரு தேனக ஊரில் இப்படி கவிதைப் பிட்டணியில் மட்டும் கபடி விளையாடலாமா என்பதே பிரச்சினை.

கதை, கட்டுரை, நவீனம், நாடகம், நல்லாய்வு அனைத்தும் பக்கத்து ஓட்டமாவடி, மஜ்மா நகர் மண்ணுக்குள் கொரோனா நோயாளி போல் அடக்கமாகிவிட வேண்டுமா? (அங்கேயும் இடம் இல்லையாமே!)

நாளேடுகள், அதன் இணைப்புகள், மாதச் சிற்றிதழ்கள், ஆகியவற்றில் 'வரிக்குதிரை'ச் சவாரி, ஜோர்! ஜோர்! நாலைந்து பேர்வழிகள் முகநூலில் மட்டும்! கவி மணிகள் கேவலம்.

ஏறாவூரின் இலக்கிய முன்னோடிகள் புரட்சிக்கமால், தாவூத் போன்றோர் கவிதை பாடினாலும், கட்டுரையும் கதையும் பேசியவர்கள் தானே? அவர்கள் வழித்தடத்தில், ஏரூர் யூவன்னா, எச்.எம். ஹலீம், ஏ.சி. அப்துல் ரகுமான், மருதூர் ஜமால்தீன், உசனார் எம். பஷீர், சித்தி அப்பாஸியா ஆறே ஆறுபேரே கண்ணில் படுகிறார்கள். ஏரூர் கே. நௌஷாத் இரண்டு மூன்று சிறுகதைகள் எழுதி போட்டிக்கு அனுப்பி விட்டு "சிறுவர் பாடல்கள்" பாடிக் கொண்டிருக்கிறார்!

ஒரேயொரு பெண்மணி **ஸர்மிலா ஸெய்யித்** மட்டுமே கதை, உளவியல் கட்டுரை, நவீனம் என உலா வந்திருக்கிறார்.

இனி வேண்டவே வேண்டாம் வரிக்கு திரைச் சவாரி ஏரூர் இலக்கிய நெஞ்சங்களே...!

இனிப்பு 2

கடந்த மாதத்தில் தமிழ்நாட்டு இரு பத்தியொரு மாநகராட்சிகளையும்

சென்னையின் 340 ஆண்டு காலத்தில் முதலாவது பெண் மேயராக செல்வி ஆர். பிரியா.

கைப்பற்றி, நகரம், பேரூர்கள் சபைகளில் அதிக இடங்களைப் பிடித்தும் அசர சாதனை புரிந்தவர் கலைஞர் முத்துவேல் கருணாநிதியின் மகனார் ஸ்டாலின்.

தேர்தல் முடிவுகளில் சில பேரதிசயங்கள் நடத்திருப்பதை இரு கிழமைகளுக்கு முன் தெரிவித்திருந்த பேனை சற்று தாமதித்து விவரங்களை இன்று வழங்குகிறது.

கடந்த 08ம் திகதி கொண்டாடப்பட்ட அனைத்துலக மகளிர் தினத்திற்கு மகிமை சேர்க்கும் விதமாக அதற்கு முன்னதாகவே பெண்மணிகள் பலருக்கு சாதி வித்தியாசங்களைக் குப்பையில் போட்டு அதிசயப்படும் வகையில் உயர் பதவிகளை வழங்கியுள்ளார் முதலமைச்சர் ஸ்டாலின். அது மட்டுமல்ல, கீழ் மட்டப் பெண்களுக்கும் பதவிகள்.

தமிழ்நாட்டு உள்ளாட்சிச் சேவை அங்கத்துவப் பதவிகளுக்கு ஐம்பது விழுக்காடு இடம் பெண்களுக்கு ஒதுக்கப்பட்டதால் ஆண்களுக்கு சரி சமமாகப் பெண்கள் போட்டியிட்டு வெற்றி! வெற்றி!

"சிலருக்கு'க் கல்வி அறிவு மிகக் குறைவு. எழுத்துக் கூட்டியே வாசிக்க இயலும், அது தேர்வுக்கு ஒரு பொருட்டாக இருக்கவில்லை! இது எப்படி?

கரூர் (திருச்சிப்பக்கம்) நகரத்தில் போட்டியின்றித் தேர்வான பெண் பதவி ஏற்பில், அழுது கொண்டே இருந்தார்! (ஆனந்தக் கண்ணீர்?)

முதலமைச்சர் ஸ்டாலின் கசப்புத் தமையானர் மு.க. அழகிரி ஆதரவில் மதுரையில் **பானு முபாரக்** அபார வெற்றி!

சென்னையின் 340 ஆண்டு மாநகராட்சி வரலாற்றில் முதன் முறையாக இருபத்தெட்டு வயது இளநங்கை **ஆர். பிரியா** மாநகராதிபதி மேயர்!

இதேபோல், 'நான் மாடக் கூடல்' என்கிற தூங்கா மதுரைமாநகரின் மேயராக **இந்திராணி**.

மதுரை மாநகராட்சி மேயராக இந்திராணி

வேலூரில் ஓர் அங்கத்தவராக **கங்கா நாயக்** என்ற திருநங்கை தேர்வு! இதே ஊரில் 21 வயது **ரேவதி**யும் தேர்வு!

சட்டக்கல்லூரி 03ஆம் ஆண்டு மாணவி யஸ்வினி, (22வயது), பொறியியல் பட்டதாரி சினேகா (இவரும் 22!) சென்னையின் ஒரு பிரிவில் நிலவரசி என்றெல்லாம் பல இளைய தலைமுறைகள்.

இவர்களுடன், குடும்பங்களின் வெற்றி' படுஜோர்!

அதென்ன குடும்பங்களின் வெற்றி? பலதொகுதிகளில் கணவன் மனைவி, மாமி மருமகள், அண்ணன் தங்கை!

"குடும்பப் பொறுப்புகளுடன் ஊர் வளர்ச்சிப் பொறுப்பும் உங்களுக்கே" என்று அறிவுறுத்தி உள்ளார் முதலமைச்சர். இன்னுமொரு இனிப்புடன் இதை நிறுத்த அனுமதியுங்கள். கும்பகோணம் மாநகராட்சியில் மேயர் பதவியை காங்கிரஸ் கட்சிக்கு தி.மு.க. தலைமை ஒதுக்கீடு செய்தது. இதையடுத்து காங்கிரஸ் கட்சியின் சார்பில் வெற்றி பெற்ற ஆட்டோ டிரைவர் சரவணன் (42), மேயர் வேட்பாளராக காங்கிரஸ் கட்சியின் தலைமையால் அறிவிக்கப் பட்டார்.

வேறுயாரும்,

மேயர் பதவிக்கு போட்டியிடாததால், போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டதாக ஆணையர் அறிவித்தார். பின்னர், மேயருக்கான இருக்கையில் அமரவைத்து, அவருக்கு வெள்ளியால் ஆன செங்கோலை வழங்கி வாழ்த்து தெரிவிக்கப்பட்டது. எப்படிப்பட்ட பேரதிசயம், தமிழ் நாட்டில், கும்பகோணத்தில் அறுசுவை உணவுக்குப் புகழ்பெற்ற அந்நகருக்கு இனி ஆட்டோ, சாரதியே மேயர்! ஆஹா!

ஓர் அடிக்குறிப்பு

பல முஸ்லிம் பெண்மணிகளும் முக்கிய இடங்களில் தேர்வு..

18 வந்து விட்டாளே புதிய காதலி பிரியந்தி கொலைகாரி அவளென பரவுகிறதே வதந்தி

முதலில் வந்து நின்ற பிரியாவிடம்தான்,

தனது விசாரணையை ஆரம்பித்தார். இன்ஸ்பெக்டர் ராகவன்.

"ம்... பிரியா... அன்று நான் உங்களிடம் விசாரித்தபோது தீபிகாவை காதலித்த இரண்டு மூன்று பேர் இந்த கெம்பஸில் இருந்தார்கள் என்று நீங்கள் சொன்னது உண்மை தானே...?"

இன்ஸ்பெக்டர் ராகவன் இப்படிக் கேட்டதும்,

கன்னத்தை வருடிய படியே, சிந்தனையுள் மூழ்கினாள் பிரியா.

மீண்டும் இன்ஸ்பெக்டரே பேச ஆரம்பித்தார்.

"இத பாருங்க பிரியா... உங்க மூன்று பேருடைய சொந்த விஷயங்களைப் பற்றியென்றால் நான் ஆராய வரவில்லை... எங்களுக்கு தேவையானதெல்லாம் தீபன் தீபிகா இருவரையும் கொலை செய்தவனை கண்டு பிடிப்பது மட்டும்தான். அதை பொலிசாரினால் தனியாக செய்ய முடியாது. உங்களுடைய ஒத்துழைப்பும் எங்களுக்குத் தேவை. அதனால் உங்களுக்கு தெரிந்த எல்லா உண்மைகளையும் மறைக்காமல் எங்களிடம் சொல்லுங்கள். இதைத்தான் அன்றும் சொன்னேன் இன்றும் சொல்லுகிறேன்.

"ஆகட்டும் இன்ஸ்பெக்டர் தீபிகாவைப்பற்றி எனக்குத் தெரிந்த எல்லா உண்மைகளையும் உங்களிடம் சொல்லி விடுகிறேன்"

"ஆமாம்... அதைத்தான் நாங்களும் எதிர்பார்க்கிறோம்..."

"தீபிகா எவ்வளவு அழகான வளோ அதேபோல் பயங்கர திறமைசாலியும்கூட. தீபிகா கெம்பசுக் வந்த நாளில் இருந்து அவளை எதிர்பார்த்திருந்தவர்கள் இரண்டு மூன்றுபேர் இருந்தார்கள். அது ஒவ்வொரு வருடத்திலும் நடந்தது!"

"இரண்டு மூன்று பேர் என்றால் சரியாக எத்தனை பேர் என்று உங்களால் சொல்ல முடியாதா பிரியா?"

"முடியும் இன்ஸ்பெக்டர் நாலுரே' இருந்தார்கள்!"

"அந்த நாலு பேரும் இப்போதும் இந்த கெம்பஸில் இருக்கிறார்களா பிரியா?"

"மூன்று பேர் இருக்கிறார்கள் ஒருவர் விலகி விட்டார்!"

'அப்படி விலகிச் சென்றவனின் பெயர் என்ன?"

"அவன் பெயர் பிரபாகரன். இப்போது கம்பெனி ஒன்றில் வேலை செய்கிறான்!"

"சரி... மற்ற மூவரைப் பற்றியும் சொல்லுங்கள்?"

"அந்த மூவரில் இரண்டுபேர் எங்களோடு படித்தவர்கள். மற்றவன் ஐந்தாம் வருடம் அவன் பெயர் அமுதன்.

"சரி உங்களோடு படித்த மற்ற இருவரும் யார்?"

"அவர்களில் ஒருவனுடைய பெயர் கமல். மற்றவனுடைய பெயர் விமல்!"

"தீபிகா கொலை செய்யப் படுவரை இவர்களில் யாராவது அவளை எதிர்பார்த்திருந்தார்களா?"

"ஆமாம்... இன்ஸ்பெக்டர் அப்படி எதிர்பார்ப்புடன் இருந்தவன்தான் அமுதன்!... அவன் புதுமையான முறையில் தீபிகா மீது அன்பு வைத்திருந்தான். தீபிகா பள்ளி செல்லும் காலத்தில் இருந்தே தீபன் மீது அன்பு வைத்திருந்த போதிலும் அமுதன் அதை எல்லாம் கண்டுகொள்ளவே இல்லை!

"இத் தொடர்பு சம்பந்தமாக தீபிகா ஏதாவது சொன்னாளா?"

"தீபிகாவால் முடிந்தவரையில் அவனுக்கு எடுத்துச் சொன்னாள் அவள் அதை ஏற்றுக் கொள்ள வில்லை!"

"அப்படீன்னா இறுதி நாட்களில் அவன் தீபிகாவின் மீது கோபத்தில் இருந்தானா?"

"இல்லை.. அப்படி அதுவும் நடக்கவில்லை. ஆனாலும் தீபிகாவை நினைத்து அமுதன் மிகவும் மனமுடைந்து போயிருந்தான்.

"பள்ளி செல்லும் காலத்தில் இருந்தே தீபிகா, தீபன் மீது பாசமாக இருக்கிறாள் என்பதை புரிந்து கொண்ட பின்பும் அமுதன் ஏன் இப்படி நடந்து கொண்டான்?"

"எங்களாலும் அதைத்தான் இன்ஸ்பெக்டர் புரிந்து கொள்ளமுடியாமல் இருக்கிறது. ஆனாலும் மல்லிகாவிடம் அவன் இப்படி ஒரு கதையைச் சொல்லியிருக்கிறான்?"

"அது என்ன கதை?"

இன்ஸ்பெக்டர் இப்படிக் கேட்டதும்,

அமுதன் சொன்ன அந்த கதையை சொல்வதற்கு,

மல்லிகா முன்வந்தாள்.

"தீபிகாவை தொல்லைப் படுத்த வேண்டாமென்று நான் பல தடவைகள் அமுதனிடம் சொல்லியிருக்கிறேன். ஆனாலும் அவன் அதை கேட்கவில்லை. அப்போது நான் அவனிடம் கேட்டேன். அவள்தான் விருப்பம் இல்லை என்று சொல்லுகிறாளே. பலாத்காரமாக ஏன் அவளுடைய அன்பை கேட்கிறாய் என்று?"

"அதற்கு அவன் என்ன சொன்னான்?"

"அவன் புதுமையான கதை ஒன்றைச் சொன்னான். ஆனாலும் அந்தக் கதையை நான் நம்பவில்லை இன்ஸ்பெக்டர்?"

"சொல்லுங்கள் கேட்போம்!"

"தீபிகா காதலிக்கும் தீபன் அவ்வளவு நல்லவன் இல்லை. அவன் கல்லூரியில் படிக்கும் பிரியந்தி என்ற ஒரு பெண்ணைக் காதலிக்கிறான். பிரியந்தி என்பவள். நன்றாக படிக்கக் கூடிய ரதியைப் போன்ற அழகுள்ள ஒரு கோடீஸ்வரனின் மகள் என்று சொன்னான்!"

"ம்... இது கொஞ்சம் வித்தியாசமான கதையாகத்தான் இருக்கிறது!" என்று பெருமூச்சுவிட்டுக் கொண்டார். இன்ஸ்பெக்டர் ராகவன். அடுத்து,

சார்ஜன் வசந்த் பேச ஆரம்பித்தார்.

"இவர்கள் சொல்வதைப் பார்த்தால் தீபிகா இறந்துபோகும். வரையில் கூட அமுதன் அவள் மீது காதலுடன் தான் இருந்திருக்கிறான் என்பது புரிகிறது. இல்லையா சேர்"

"ஆமாம் அப்படித்தான் தெரிகிறது!" என்றார் இன்ஸ்பெக்டர் ராகவன்.

"அதனால் சேர் அமுதனுடன் பேசினால் ஏதாவது புதிய தகவல் கிடைக்கும் என்று நினைக்கிறேன்!"

"ம்... எப்படியும் அமுதனுடன் பேசித்தானாக வேண்டும். ஆனாலும் இன்பராஜ் சேர் எங்களுக்கு இன்னும் அதைப் பற்றிச் சொல்ல வில்லையே...

"அதுவும் உண்மைதான்... சரிசேர் நாம் இப்போது என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார் வசந்.

"சரி... நீங்கள் மூவரும் இப்போது போகலாம். தகவல்கள் கொடுத்தற்கு நன்றி. மீண்டும் தேவை ஏற்பட்டால் உங்களை வந்து சந்திக்கிறோம்.

"ரொம்பவும் நன்றி இன்ஸ்பெக்டர்!" என்று கும்பிட்டு விட்டு அந்த மூன்றுபேரும் விடை பெற்றார்கள்.

அங்கிருந்து இன்ஸ்பெக்டரும் சாஜன் வசந்தவரும் சென்ற போது இரவு எட்டு மணியாகி விட்டது.

பொலிஸ் நிலையம் சென்ற அவர்கள்,

விசாரணையில் கிடைத்த தகவல்களை எல்லாம் சேர்த்து ஒரு அறிக்கை தயாரித்தார்கள்.

நாளை அதை,

துப்பறியும் இன்ஸ்பெக்டர் இன்பராஜிடம் கொடுத்தாக வேண்டும்.

எல்லாவற்றையும் முடித்து விட்டு,

இருவரும்,

மீண்டும் கதைக்க ஆரம்பித்தார்கள்.

"சேர்... அந்த பெண்கள் சொன்னதைப் போல் இந்த தீபனுக்கு ஒரு பெண்ணின் மீது தொடர்பு இருந்திருக்கலாம் அல்லவா?"

"அதைப்பற்றி விசாரிக்காமல் எங்களால் ஒரு முடிவிற்கு வர முடியாது வசந்தன்!"

"அதை விசாரிப்பதற்கு நாம் கொழும்புக்கு அல்லவா போக வேண்டும்?"

"துப்பறியும் இலாகாவில் உள்ள அதிகாரிகள் நாளை அங்கே போகிறார்கள். விசாரணை செய்வதற்காக!' "அங்கே போய் தீபனின் நண்பர்களிடம் விசாரித்தால் சில உண்மைகள் கிடைக்கலாம்.!"

(தொடரும்)

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

படித்ததும் பகர்வதும் 87



சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

நல்லதை சொல்கிறோம்

அரசியலில் இளைஞர் தலைமைத்துவம்

இளைஞர்களை எதிர்கால தலைவர்களாக உருவாக்குவதற்கான மிக முக்கிய களம் அரசியலே எனலாம். குடும்பம், பாடசாலை, இளைஞர் இயக்கங்கள், விளையாட்டுக் கழகங்கள் என எவற்றில் தலைமைத்துவத்திற்கான பயிற்சிகளை பெற்றாலும், இளைஞர்களுக்கு மிக முக்கியமானது அரசியல் தலைமைத்துவப் பயிற்சியே என்று அரசியல் அறிஞர்கள் தெரிவித்துள்ளனர்.

அரசியலில் ஈடுபடுகின்ற இளைஞர்களே மக்களுக்கு கூடுதலான சேவையாற்றக்கூடிய வாய்ப்புகளை பெறுகின்றனர். அத்துடன் பரந்த அளவிலானோருக்கு தலைமைத்துவத்தை வழங்கவும் வாய்ப்புகளும் அவர்களுக்கு கிடைக்கிறது.

நிலைமை இவ்வாறு இருப்பினும், அரசியலில் இளைஞர்களுக்கு உரிய இடம் அல்லது போதியளவு இடம் வழங்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டே நீண்ட காலமாக நிலவுகிறது. அரசியல் கட்சிகளில் உரிய இடம் இளைஞர்களுக்கு வழங்கப்படுவதற்கான சரியான ஏற்பாடுகள் இல்லாமையே இதற்குக் காரணமெனலாம்.

அரசியல் கட்சிகளில் தீர்மானகளை எடுக்கக்கூடிய நிறைவேற்று சபைகளில் போதியளவு அல்லது குறிப்பிடத்தக்க அளவு இளைஞர்கள் உள்வாங்கப்படுவதில்லை. இலங்கையை பொருத்தமட்டில் பெரும்பாலும் எல்லா அரசியல் கட்சிகளிலும் தலைவர்களாக, செயளாளர்களாக, பொருளாளர்களாக, நிறைவேற்றுச் சபை உறுப்பினர்களாக வயதில் மிகக் கூடியவர்களே இருப்பதை அவதானிக்கலாம். குறைந்த பட்சம் 35 வயதுக்குட்பட்டவர்களுக்கு இத்தகைய பதவிகள் வழங்கப்படுவதில்லை என்பதே யதார்த்தமாகும்.

இதற்கான ஏற்பாடுகளும் அவ்வரசியல் கட்சிகளின் யாப்புகளில் இருப்பதாக தெரியவில்லை. அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கும் முயற்சிக்கிறார்களில்லை. இளைஞர்களை எதிர்கால தலைமைத்துவத்துக்கு பயிற்சியளிக்கும் வகையில் பொருத்தமான பதவிகளை வழங்குவதற்கு ஏற்ற விதத்தில் இக்கட்சிகளின் யாப்புகள் உடனடியாக மாற்றியமைக்கப்பட வேண்டும்.

வயதில் மூத்தவர்கள்தாமே கட்சிகளின் உயர்பதவிகளை கட்டிப்பிடித்துக் கொண்டு இருக்கமால் இளைஞர்களுக்கு அவற்றை வழங்க முன்வர வேண்டும். இத்தகைய மூத்தவர்கள் பின்னணியில் இருந்துகொண்டு, தமது அனுபவத்தினூடாக இளைஞர்களை சரியாக வழிநடாத்தி, அவர்களை வெற்றிப்பாதையில் தலைமைத்துவத்தை நோக்கி அழைத்துச் செல்ல வேண்டும்.

இளைஞர்கள் தலைமைத்துவத்துக்கு முன்னேற மூத்தவர்கள் ஒத்துழைக்க வேண்டும். இது விடயத்தில் இலங்கையிலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் கவனமெடுத்து, ஆர்வத்தோடு செயற்படுதல் அவசியமாகும்.

நெஞ்சுக்கு நீதி

உன் கண்களை நன்றாகத் திறந்து கொள்
நின் சூழவும் நடப்பதை புரிந்து கொள்
உண்மைகளை சரியாகத் தெரிந்து கொள்
நன்மைகள் செய்திடவே உறுதி கொள்

பாராட்டுகிறோம்! வாழ்த்துகிறோம்!!

"பாரம்பரியம்", நூறாவதை நோக்கி...

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையில், மாதமிருமுறை மிக ஜனரஞ்சகமாக ஒலிபரப்பாகும் நிகழ்ச்சியாக "பாரம்பரியம்" பிரபல்யமடைந்துள்ளது. முஸ்லிம் சேவைக்கு பங்களிப்பு செய்த கலைஞர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள், நிர்வாகிகள் என பலதரப்பட்ட ஆளுமைகளையும் அறிமுகப்படுத்தி, அவர்களது சேவைகளை இது மீள் நினைவூட்டுகிறது.

எஸ். எம். ஹனீபா

2017.02.28ம் திகதி சத்திய எழுத்தாளர் எஸ். ஐ. நாகூர் கனி அவர்களது பங்குபற்றுதலோடு முதல் நிகழ்ச்சி ஒலிபரப்பானது. அன்றிலிருந்து இன்றுவரை எழுபதுக்கும் மேற்பட்ட ஆளுமைகள் "பாரம்பரியம்" நிகழ்ச்சிகளை அலங்கரித்துள்ளனர்.

அவர்களில், மூத்த மார்க்க அறிஞர் எம்.எம்,ஏ, முபாரக், பேராசிரியர், எம்,எஸ்.எம். அனஸ், மேல் நீதிமன்ற முன்னாள் நீதிபதி யூ.எல்.ஏ. மஜீத், உலக அறிவிப்பாளர், பீ.எச்.அப்துல் ஹமீத், சாத்தான்குளம் எஸ். எம், ஏ. ஜப்பார், நவமணி ஆசிரியர் என். எம், அமீன், ஒலிபரப்பாளர்களான குலாம் ரஷீத், ஆயிஷா ஜூனைதீன், ஆமினா பேகம் பாருக், மஹதி ஹசன் இப்ராஹிம், பிரபல இலக்கியவாதிகளான அல் அஸுமத், திக்வல்லைக் கமால், ஜவாத் மரைக்கார், கலைவாதி கலீல், ஜுனைதா ஷரீப், மேமன்கவி, நஜ்முல் ஹுஸைன் ஆகியோர் என் நினைவுக்கு வருவோரில் சிலர்.

அல்லாமா உவைஸ், காமில் மரைக்கார், வீ. ஏ. கபூர், எம். எச். குத்தூஸ், இஸட்.எல்.எம். முஹம்மத், முஹம்மத் மாஸ்டர், எம்.எம். இர்பான், இசைக்கோ நூர்தீன் உட்பட சுமார் இருபது காலஞ்சென்ற ஆளுமைகளின் நினைவுகளை மீட்டியும் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகின.

கடல் கடந்து வாழுகின்ற சட்டத்தரணி அபுல்கலாம், நாடகவியலாளர் எம். அஷ்ரப் கான், டாக்டர் மரீனா இல்லியாஸ், போன்றோர் இணையத்தளம் மூலமாக பங்குபற்றினர். அதிபர் எஸ். ஏ. எம். எம். அஷ்ரப், முதல் முஸ்லிம் பெண் தமிழ் பண்டிதர் ஹம்ஸா ஆரிப். அறிவுக்களஞ்சியம் ஏ, ஸீ. ராவுத்தர் நெய்னா முஹம்மத் போன்றோரது நிகழ்ச்சிகள் அவரவரது இல்லங்களிலேயே ஒலிப்பதிப்பு செய்யப்பட்டு ஒலிபரப்பானது.

பாத்திமா ரினூசியா

ஒலிபரப்பாளர் வீ. என், மதியழகன், நடிகர் சந்திரசேகரன், முஸ்லிம் சேவையில் பணியாற்றிய புஷ்பராணி சிவலிங்கம் போன்ற முஸ்லிம் அல்லாதோரும் பாரம்பரியத்தில் இணைந்து சில ஆளுமைகளைப் பற்றிய கருத்துக்களைப் பரிமாறினர். இதில் மற்றுமொரு திருப்புமுனையாக முஸ்லிம் நிகழ்ச்சியில் பங்களிப்பு செய்த முஸ்லிம் அல்லாத பிரபல பாடகி சுஜாதா அத்தநாயக்க பங்குபற்றிய நிகழ்ச்சி கடந்த மார்ச் 01ம் திகதி 92வது நிகழ்ச்சியாக ஒலிபரப்பாகி பலராலும் சிலாகித்துப் பேசப்பட்டது.

இலங்கை வானொலியின் 96வது ஆண்டு நிறைவையொட்டி, விசேட நிகழ்ச்சியாக, 'அன்றைய முஸ்லிம் சேவையின் பாரம்பரிய கண்ணோட்டம்' இரவு முஸ்லிம் சேவையின் முழு நேர நிகழ்ச்சியாக ஒலிபரப்பாகியது. கலாநிதி ஏ. சீ. ரஸ்மின், சிரேஷ்ட சட்டத்தரணி ரஷீத் எம். இம்தியாஸ் பங்குபற்றி, பலரும் அறியாதிருந்த முஸ்லிம் சேவையின் ஆரம்ப காலத்தின் மறுபக்கத்தை நினைவூட்டினர். ,

எம். எஸ். எம். ஜின்னா

இவ்வாறு பல சிறப்புகளைப் பெற்ற "பாரம்பரியம்" முஸ்லிம் சேவை முன்னாள் பணிப்பாளர் ஹாபிஸ் எஸ். எம். ஹனிபாவினால் வடிவமைக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்டதாகும். ஆரம்பம் முதல் இந்நிகழ்ச்சியை, தொடர்ந்து தொகுத்து வழங்குகின்ற கலைஞர் எம்.எஸ்.எம். ஜின்னாவின் முயற்சியும்,அர்ப்பணிப்பும் இதன் வெற்றிக்கு அடிப்படை என்றால் மிகையல்ல. தற்போது இதனை தயாரித்து வழங்குகின்ற பணிப்பாளர் பாத்திமா ரினூசியா ஜௌபரின் பங்களிப்பு அபாரம்.

'பாரம்பரியம்' நிகழ்ச்சியை ஆரம்பித்த ஹாபிஸ் எஸ். எம். ஹனிபாவையும், அதனை நூறாவதை நோக்கி வெற்றிகரமாக அழைத்துச் செல்லும் எம். எஸ். எம். ஜின்னா, பாத்திமா ரினூசியா இருவரையும் மனதார பாராட்டுகின்றோம். இத்தகைய நல்ல நிகழ்சிகளில் ஆர்வத்தோடு பங்களிப்பு செய்வோரை வாழ்த்துகிறோம்.

ஒரு தகவல்: நூறாவது நிகழ்ச்சியோடு பாரம்பரியத்திலிருந்து தான் நின்றுவிடப்போவதாக சில மாதங்களுக்கு முன்னரேயே என்னிடம் தெரிவித்தார் எம். எஸ். எம். ஜின்னா.

அதிசயம்! ஆனால் உண்மை!!

விளாடிமிர் புட்டின்

இரண்டாம் உலகப் போர் முடிந்து, சில வாரங்களுக்குப் பிறகு, ஒரு வீரருக்கு வீட்டிற்குச் சென்றுவர விடுமுறை கிடைத்தது. அந்த வீரர் தனது வீட்டின் அருகே உள்ள தெருவை அடைந்தார். அங்கு நிறுத்தப்பட்டிருந்த இராணுவ வாகனங்களில் சடலங்கள் ஏற்றப்பட்டிருப்பதைப் பார்த்ததும், எதிரிகள் தனது நகரத்தில் குண்டு வீசியுள்ளனர் என்பதைப் புரிந்துகொண்டார்.

பெருமளவு சடலங்கள் பொதுக் கல்லறைக்கு எடுத்துச் செல்லப்பட தயார் நிலையில் இருந்தன. அடுக்கப்பட்டிருந்த சடலங்களின் முன்னால் அந்த சிப்பாய் சற்றுநேரம் நின்றார்.

ஒரு பெண்ணின் பாதத்தில் இருந்த பாதணிமீது அவரது பார்வை சென்றது.. முன்பு தனது மனைவிக்காக வாங்கி வந்த பாதணி போல் அது இருந்தது. உடனே வீட்டுக்கு ஓடினார். வீட்டில் யாரும் இல்லை. வேகமாகத் திரும்பிச் வந்து வாகனத்தில் இருந்த அந்த உடலைப் பரிசோதித்தார். அது அவரது மனைவியே என்றறிந்து அதிர்ச்சியடைந்தார்.

பொதுக் கல்லறையில் தனது மனைவியைப் புதைக்க விரும்பவில்லை என்றும் தனிக் கல்லறையில் புதைக்க விரும்புவதாகவும் கூறி உடலைத் தருமாறு வேண்டினார். அதற்கு அனுமதி கிடைத்தது.

வாகனத்தில் இருந்து உடலை வெகு சிரமத்துடன் வெளியே எடுக்கும்போது மனைவி இன்னும் உயிருடன் இருப்பதைப் பார்த்து மீண்டும் அதிர்ந்தார். உடனே அவளை மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு தேவையான சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு, மீண்டும் உயிர் பெற்றாள் அந்த வீரரின் மனைவி. இந்த விபத்து நடந்து பல வருடங்களுக்குப் பிறகு, கிட்டத்தட்ட உயிருடன் புதைக்கப்பட இருந்த அந்த மனைவி கர்ப்பமுற்றாள். அவளுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. பிரசவம் பார்த்தவர்கள் பையனுக்கு பெயர் சூட்டினர். அந்தப் பெயர் என்ன தெரியுமா..?

''விளாடிமிர் புட்டின். அவர்தான் இன்று உலகமெல்லாம் பேசப்படும் ரஷ்யாவின் தற்போதைய ஜனாதிபதி.

பேசும் படம்

மற்றவர்கள் உங்களை எவ்வாறு நோக்குகிறார்கள் என்பது முக்கியமல்ல. உங்களை நீங்களே எவ்வாறு பார்க்கிறீர்கள் என்பதிலேயே உங்கள் வாழ்க்கையில் எல்லாம் தங்கியுள்ளது.

இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்எப் (WhatsApp): 0777314207

முன்னுதாரணமாக திகழ்ந்த அமரர் எஸ்.டி.சிவநாயகம்

ஞாபகார்த்த முத்திரை வெளியீட்டு விழாவில் பேராசிரியர் சோ.சந்திரசேகரன் புகழாரம்

இலங்கையில் ஏறத்தாழ அரைநூற்றாண்டு காலமாக பத்திரிகைத் துறையில் ஜாம்பவானாக வலம் வந்து, முத்திரை பதித்த அமரர் எஸ். டி. சிவநாயகத்துக்கு ஞாபகார்த்த முத்திரையொன்றை வெளியிடுவது சாலப் பொருத்தமானதாகும். இதற்கான அனுமதியை வழங்கி, அமரரின் 50 ஆண்டுகால ஊடகப் பணியை கௌரவிக்கும் முகமாகவும் 25 வருட காலமாக சத்திய சாய்பாபா நிலையத்தின் ஸ்தாபகத் தலைவராக இருந்து அதை வழிநடத்தியமைக்காகவும் அரசாங்க ரீதியாக அங்கிகாரத்தை வழங்கிய ஊடகத் துறை அமைச்சர் டலஸ் அலகப்பெருமவுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பேராசிரியர் சே.சந்திரசேகரன்

இம் முத்திரை வெளியீட்டு முயற்சியில் முன்னின்று உழைத்தவர்கள் இருவர். ஒருவர் முன்னால் கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஸ்ணன். மற்றவர் மூத்த ஊடகவியலாளரான எச். எச்.விக்கிரமசிங்க . வெளியீட்டு நிகழ்வை அதிகாரபூர்வமாக நடத்தி வைக்க இன்று வந்திருப்பவர் அஞ்சல் திணைக்கள மேல்மாகாண பிரதி பணிப்பாளர் நாயகம் திஸாநாயக்காவுக்கும் அவருடைய சக அதிகாரிகளுக்கும் எமது வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்.

மூத்த பத்திரிகையாளராக நாட்டின் அரசியல், பொருளாதார, சமூகத் துறைகளில் பெரும் பணியாற்றியவர் அமரர் சிவநாயகம். பத்திரிகைத்துறையில் ஏனைய இளம் பத்திரிகையாளருக்கு ஒரு குருவாக, ஞானியாக விளங்கியவர் என்ற பாராட்டு அவருக்கு உண்டு. தரவு, தகவல், அறிவு, ஞானம் என்ற அறிவின் படிமுறை வரிசையில் உச்ச கட்டத்தில் இருப்பது ஞானம். பத்திரிகைத்துறையில் அனைத்தையும் உணர்ந்தவர்களுக்கு கிட்டுவது ஞானம். இதனால் அமரர் அவர்கள் பத்திரிகைத்துறை ஞானி என்ற பாராட்டைப் பெறுகின்றார்.

தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியராக இருந்தவர் அமரர் ஆர். சிவகுருநாதன் மூத்த பத்திரிகையாளர் டாக்டர் ஜின்னா செரிப்புத்தீன் காப்பியக்கோ பட்டம் பெற்றவர், பல்காப்பியங்களை படைத்தவர். இவ் விருவருமே தமக்கு எழுத்துதுறை ஞான குருவாக அமரர் சிவநாயகத்தை வரித்துக் கொண்டவர்கள். நுணுகி நோக்கினால் இப்பட்டியல் மிக நீண்டது.

பத்திரிகை அச்சுத்துறையின் வரலாற்றில் மூன்று கட்டங்கள் பற்றிக் குறிப்பிடுவர். அச்சுக்களை கோர்த்தல், லினோ வகை அச்சு, கணினி Offset அச்சு எனப்படும். மூன்று காலகட்டங்களிலும், பத்திரிகை துறையில் பணியாற்றி வரலாறு படைத்த ஒரு சிலருள் பிரதானமானவர் அமரர் எஸ்.டி.சிவநாயகம்.

அமரரின் பிள்ளைகள் எவரும் பத்திரிகைத் துறையை நாடவில்லை. பல பத்திரிகையாளர்கள் அமரரிடம் இதற்கான காரணத்தை கேட்ட போது 'சகல பத்திரிகையாளர்களுமே எனது பிள்ளைகளே' என அவர் பதில் வழங்கினார் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

இலங்கைப் பத்திரிகை வரலாற்றில் சுதந்திரமாக எழுத முற்பட்ட பல பத்திரிகையாளர்கள் மீது சக்திவாய்ந்தவர்கள் பாய்ந்த சந்தர்ப்பங்கள்உண்டு. அப்போதெல்லாம் அமரர் சிவநாயகம் துணிந்து நின்று அவர்களைப் பாதுகாத்தவர் என நாம் அறிந்ததுண்டு. பத்திரிகைகளில் உயர்ந்த பண்புத் தரத்தையும் நேர்மைத் திறனையும் உயர்ந்த கோட்பாடுகளையும் பேணி, முன்னுதாரணமாக திகழ்ந்தவர் ஆவார்.

தமிழரசுக் கட்சியின் சுதந்திரன் பத்திரிகையின் ஆசிரியராக இருந்த காலத்தில், பரந்த தொலைநோக்குடன் தமிழ் மக்கள் மற்றும் விழிப்பு நிலை மக்களுக்காக குரல் கொடுத்தார். சிந்தாமணியிலும் தினபதியிலும் பணியாற்றிய காலத்தில் அவருடைய பத்திரிகைப் பாசறையில் வளரும் வாய்ப்பு பலருக்கு கிட்டியது.

எஸ்.டி.சிவநாயகம்

சத்திய சாயிபாபா எழுந்தருளி அடியார்களுக்கு அருள்பாலிக்கும் இந்த புனித தலத்தில் இந்த முத்திரை நிகழ்வு நடைபெறுவது அவருக்கு கிடைக்கும் அதிகபட்ச கௌரவமாகும். இன்றைய நிகழ்வில் கலந்து சிறப்பித்த கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவருமான மனோகணேசனுக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம்.

பத்திரிகைத் துறையோடு மக்களின் ஆன்மீகநலன்கருதிஸ்ரீசத்யசாயிபாபாவின் ஆசியுடன், கொழும்பு சாயிபாபா நிலையத்தை நிறுவி பல தசாப்தங்களாக மக்களுக்கு நல்வழி காட்டிய பெருமை பெற்ற பெருமகனாவார் அமரர் சிவநாயகம் அவர்கள்.

தொகுப்பு
சிவா ராஜஜோதி
உபதலைவர் சாய் மத்திய நிலையம் கொழும்பு

நூல் வெளியீட்டு விழா



தி.ஞானசேகரன் தினகரன் வாரமஞ்சரியில் தொடராக எழுதிய 'யாவரும் கேளிர்' என்ற தொடரின் தெரிந்தெடுக்கப்பட்ட கட்டுரைகளைக் கொண்ட 'யாவரும் கேளிர்' என்ற நூல் வெளியீட்டு விழாவும், தி.ஞானசேகரனின் 80ஆவது அகவையை முன்னிட்டு ஞானம் சஞ்சிகை நடத்திய இலக்கியப் போட்டிகளின் பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் 19.03.2022 சனிக்கிழமை காலை 9.மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் இடம்பெறும். லேக்ஹவுஸ் தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள இந்நிகழ்விற்கு தினகரன், தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர் தலைமை தாங்கவுள்ளார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக லேக்ஹவுஸ் நிறுவனத்தின் தலைவரும், நிறைவேற்றுப் பணிப்பாளருமான ஜனாதிபதி சட்டத்தரணி டப்ளியு. தயாரத்ன கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

கௌரவ விருந்தினர்களாக கொழும்பு ஈ சொப்ற் வளாக துணைவேந்தர் பேராசிரியர் சோ. சந்திரசேகரம் அவர்ளும் கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் சட்டதரணி ந. காண்டீபனும் கலந்து கொள்வார்கள்.

இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் நிகழ்விற்கு முன்னிலை வகிப்பார்.

தமிழ்த்தாய் வாழ்த்தினை செல்வி. ரோகிணி பாலச்சந்திரன் பாட வரவேற்புரையை கலாபூஷணம் கே. பொன்னுத்துரை நிகழ்த்துவார்.

வாழ்த்துரையை கொழும்புத் தமிழ்ச் சங்கப் பொதுச் செயலாளர் ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி வழங்க, நூல் அறிமுகத்தை திருமதி பவானி முகுந்தன் நிகழ்த்துவார்.

தொடர்ந்து, ஞானம் பிரதம ஆசிரியர் தி. ஞானசேகரனின் 80ஆவது அகவையை முன்னிட்டு நடத்திய மாபெரும் இலக்கியப் போட்டியின் பரிசளிப்பும், ஞானம் சஞ்சிகை நடத்திய அமரர் செம்பியன் செல்வன் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி 2021 பரிசளிப்பும் நடைபெறும்.

நிறைவாக ஞானம் சஞ்சிகை பிரதம ஆசிரியர் தி. ஞானசேகரனின் ஏற்புரையும் நன்றியுரையும் இடம்பெறும்.

வலம்புரி கவிதா வட்டத்தின் 78ஆவது கவியரங்கம் உலக கவிதை தின கவியரங்கு

வலம்புரி கவிதாவட்டத்தின் 78 ஆவது கவியரங்கம் கொழும்பு பழைய நகர மண்டபத்தில் 17/03/2022 வியாழக்கிழமை கிழமை காலை 10 மணிக்கு உலக கவிதை தின கவியரங்காக நடைபெறும்.

கவிஞர் கம்பளை ரா. சேகர் கவியரங்கிற்கு தலைமை வகிப்பார்.

வகவ சிரேஷ்ட ஸ்தாபகர் கலாபூஷணம் சத்திய எழுத்தாளர் எஸ். ஐ. நாகூர் கனி அவர்கள் முன்னிலை வகிக்கிறார்.

தொடர்புகள்
என். நஜ்முல் ஹுசைன் (தலைவர்) 0741438447
இளநெஞ்சன் முர்ஷிதீன் (செயலாளர்) 0777388149
ஈழகணேஷ் (பொருளாளர்)
0717563646

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 மார்ச் மாதம் 13ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

Senthooram

செந்தூரம்

இவ்வார சிறப்பிதழ்

2022 மார்ச் 13 ஞாயிற்றுக்கிழமை

வெற்றிப் பயணத்தின்

90th ANNIVERSARY

ஆவது ஆண்டில் தினகரன்

(15.03.1932 – 15.03.2022)

தினகரன்
THINAKARAN
தினகரன்

இலங்கையின் ஒன்பது தசாப்த கால
ஊடகத்துறை வரலாற்றில்
தமிழ் பேசும் மக்களின் தனித்துவ தேசியப்
பத்திரிகை உங்கள் அபிமான தினகரன்

Design By : Amanul Hudha

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

இலக்கிய உலகில் என்னை எழுந்து நடக்க வைத்த பத்திரிகை தினகரன்

இலங்கையில் மிக நீண்ட வரலாறு உடைய தமிழ்த் தினப் பத்திரிகைகள் இரண்டு. ஒன்று தினகரன், மற்றையது வீரகேசரி. தினகரனுக்குத் தொண்ணூறு வயதாகின்றது. வீரகேசரிக்கு அதை விட இரண்டு வயது அதிகம்.

1932 இல் தொடங்கப்பட்ட தினகரன் இன்று வரை தொடர்ச்சியாக வெளிவரும் தினசரி என்ற வகையில் ஈழத்துப் பத்திரிகை வரலாற்றிலும் ஈழத்துக் கலை இலக்கிய வரலாற்றிலும் முக்கிய இடம்பெறுகிறது. 1950களிலிருந்து, குறிப்பாக பேராசிரியர் கைலாசபதி ஆசிரியராக இருந்த காலப் பகுதியில் இருந்து ஈழத்து இலக்கிய வாலாற்றில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியதிலும் தினகரனுக்கு ஒரு முக்கிய இடம் உண்டு என்பது வரலாறு.

இதுபற்றியெல்லாம் இங்கு விரிவாகப் பேசாமல் எனது இலக்கிய வாழ்விலும் வளர்ச்சியிலும் தினகரன் எனக்கு எவ்வாறு உதவியது என்பதை மட்டும் இங்கு சுருக்கமாகப் பதிவு செய்ய விரும்புகிறேன்.

1955 முதல் நான் இடைநிலைக் கல்வி பயின்ற காலத்தில் என் வாசிப்புப் பழக்கத்தைத் தூண்டியதிலும் எனக்குள் இலக்கிய ஆர்வத்தை ஏற்படுத்தியதிலும் தினகரனுக்கும் ஒரு பங்கு உண்டு. அக்காலத்தில் புதன்கிழமை தோறும் 'புதன்மலர்' என்ற ஓர் இளைஞர் பகுதி தினகரனில் வெளிவந்தது. பாடசாலை மாணவர்களே அதன் பிரதான வாசகர்கள். மாணவர்களின் கவிதைகள், கட்டுரைகளும் அதில் வெளிவந்தன. நான் ஏழாம், எட்டாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்த அக்காலத்தில் அதன் தொடர்ச்சியான வாசகனாக இருந்தேன். அக்காலத்தில் அதனால் தூண்டப்பட்டு நானும் சில கவிதைகள் எழுதியிருக்கிறேன். ஆனால் அவற்றைப் பத்திரிகைக்கு அனுப்பியதாக ஞாபகம் இல்லை. ஆயினும், அக்காலத்தில் தினகரனில் வரும் படைப்புகளை எல்லாம் நான் மிகுந்த ஆர்வத்துடன் படித்திருக்கிறேன்.

அக்காலத்தில்தான் இளங்கீரனின் நாவல்கள், நீதியே நீ கேள், இங்கிருந்து எங்கே, சொர்க்கம் எங்கே முதலியவை தினகரனில் தொடராக வெளிவந்தன. மகாகவி, முருகையன், நீலாவணன், சில்லையூர் செல்வராசன் முதலியோரின் கவிதைகளும் அடிக்கடி வெளிவந்தன. அவை என் வாசிப்புப் பசியைத் தூண்டின.

1960இல் எனது இடைநிலைக் கல்வி முடிந்த சூழலில் நீலாவணன், கல்முனை எழுத்தாளர்கள், எஸ். பொன்னுத்துரை ஆகியோருடன் ஏற்பட்ட தொடர்பு காரணமாக நானும் இலக்கியத் துறையில் காலடிபதிக்கத் தொடங்கினேன். நான் எழுதத் தொடங்கிய ஆரம்ப காலத்திலேயே 1962, 1963 ஆம் ஆண்டுகளில் என் எழுத்துகளைப் பிரசுரித்து என்னையும் ஒரு எழுத்தாளன் ஆக்கியதில் தினகரனுக்கும் முக்கிய பங்கு உண்டு என்பதை நான் இங்கு பதிவு செய்ய வேண்டும்.

எனது பதினெட்டாவது வயதில் நான் எழுதிய 'பசி' என்ற சிறுகதை 1962 நவம்பரில் தினகரனில் ஒரு முழுப்பக்கத்தில் பிரசுரமாகியது. பத்திரிகையில் பிரசுரமாகிய எனது முதலாவது சிறுகதை அதுதான். அது எனக்குள் ஏற்படுத்திய பரபரப்பும் மகிழ்ச்சியும் மறக்க முடியாதவை. எனது தகப்பனார் அந்தப் பத்திரிகையைக் கையில் வைத்துக் கொண்டு "இவ்வளவையும் என் மகன் தான் எழுதியிருக்கிறான்" என்று தன் நண்பர்களிடம் காட்டிப் பெருமைப்பட்டது எனக்கு நினைவிருக்கிறது. அடுத்த ஆண்டு வை.எம்.எம்.ஏ இயக்கம் அகில இலங்கை ரீதியில் நடத்திய சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற 'வானவில்' என்ற எனது சிறுகதை 1963 டிசம்பரில் தினகரனில் வெளிவந்தது. அக்காலத்தில் பிரசித்தி பெற்ற ஓவியர் மூர்த்தியின் கோட்டுச் சித்திரங்கள் இக்கதைகளை அழகுபடுத்தின. இவை இரண்டும்தான் பத்திரிகையில் வெளிவந்த எனது முதல் சிறுகதைகள்.

இதே காலப்பகுதியில் (1962 – 1963) எனது கவிதைகள் பலவற்றையும், உருவகக் கதை ஒன்றையும் தினகரன் பிரசுரித்தது. அவ்வகையில் எழுத்துலகில் நான் தவழத் தொடங்கிய காலத்திலேயே என் ஆக்கங்களைப் பிரசுரித்து இலக்கிய உலகில் என்னை எழும்பி நடக்க வைத்ததில் தினகரனுக்கு ஒரு முக்கிய பங்கு உண்டு என்பதைப் பதிவு செய்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இதே காலப் பகுதியில் வீரகேசரியும் எனது கவிதைகள் பலவற்றைப் பிரசுரித்து என்னை ஊக்கப்படுத்தியது என்பதையும் நான் இங்கு குறிப்பிட வேண்டும். 1970கள் வரை தினகரனில் இடையிடையே எனது கவிதைகளும் கட்டுரைகளும் வெளிவந்தன. அதன் பின்னர் பத்திரிகைகளுக்கு எழுதுவதை நான் பெரும்பாலும் விட்டுவிட்டேன். ஆய்வுக் கட்டுரைகள் எழுதுவதில் பெரிதும் ஈடுபட்டது அதற்குக் காரணம் எனலாம். பத்திரிகைகளை விட ஆய்விதழ்களும் இலக்கிய சஞ்சிகைகளும் அதற்கு உகந்ததாக அமைந்தன. எனினும், அரசியல் மாற்றங்களுக்கும் அதில் ஒரு பங்கு உண்டு என்பதையும் நான் இங்கு குறிப்பிடலாம். தினகரனின் தொண்ணூறாவது வயதைக் கொண்டாடும் இச்சந்தர்ப்பத்தில் எனது வளர்ச்சியின் ஆரம்ப கட்டத்தில் தினகரன் ஆற்றிய பங்கை நினைவு கூர்வதில் நானும் மகிழ்ச்சி அடைகிறேன். தனிமனிதர்களைப் பொறுத்தவரை தொண்ணூறு வயது முதுமையைச் சுட்டும், ஆனால், ஊடகங்கள், நிறுவனங்கள், அமைப்புகளைப் பொறுத்தவரை அது முதிர்ச்சியைச் சுட்டும். அவ்வகையில், தினகரன் கடந்த தொண்ணூறு ஆண்டுகளில் இலங்கையில் ஏற்பட்ட சமூக, பண்பாட்டு, அரசியல் மாற்றங்கள், வளர்ச்சிகளுடன் தானும் வளர்ந்து வந்திருக்கின்றது, அதில் தனது பங்களிப்புகளையும் செய்திருக்கிறது. இச்சந்தர்ப்பத்தில் ஒரு நூற்றாண்டைத் தாண்டியும் அது இன்னும் வளர வேண்டும், தன் பங்களிப்பைத் தொடர வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

‘1955 முதல் நான் இடைநிலைக் கல்வி பயின்ற காலத்தில் என் வாசிப்புப் பழக்கத்தைத் தூண்டியதிலும், எனக்குள் இலக்கிய ஆர்வத்தை ஏற்படுத்தியதிலும் தினகரனுக்கும் ஒரு பங்கு உண்டு. தினகரன் தனது தொண்ணூறாவது வயதைக் கொண்டாடும் இச்சந்தர்ப்பத்தில் எனது வளர்ச்சியின் ஆரம்ப கட்டத்தில் இப்பத்திரிகை ஆற்றிய பங்கை நினைவு கூருவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்’

‘எனது பதினெட்டாவது வயதில் நான் எழுதிய 'பசி' என்ற சிறுகதை 1962 நவம்பரில் தினகரனில் ஒரு முழுப்பக்கத்தில் பிரசுரமாகியது. பத்திரிகையில் பிரசுரமாகிய எனது முதலாவது சிறுகதை அதுதான். அது எனக்குள் ஏற்படுத்திய பரபரப்பும் மகிழ்ச்சியும் மறக்க முடியாதவை’

பேராசிரியர்
எம். ஏ. நுஃமான்...

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

இவ்வாண்டு தனது 90 ஆவது அகவையைக் கொண்டாடும் தினகரனுக்கும் அதன் ஆசிரியர் குழாமுக்கும் எமது உளமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். தினகரன் தனது கடந்த 90 ஆண்டுகாலப் பத்திரிகைப் பணியின் சிறப்புக்களைப் பற்றி ஆராய்ந்து, அப்பின்புலத்தில் தனது எதிர்காலப் பணிகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பு ஆகும்.

இலங்கையின் புகழ்மிகு முன்னோடி தேசிய தமிழ்ப் பத்திரிகை தினகரன்



90 ஆவது அகவையில் காலடி பதித்துள்ள தினகரனையும், அதன் பயணத்தில் இணைந்துள்ள குழாமையும் உளமார வாழ்த்துகின்றேன்

இலங்கையில் தமிழ் நாளேடுகளின் வரலாற்றில் தினகரனுக்கு ஒரு பிரதான இடமுண்டு. அவ்வகையில் அதனை ஒரு முன்னோடிப் பத்திரிகையாகக் கொள்ள முடியும்.

யாழ். பாடசாலை மாணவனாக நான் இருந்த காலத்திலிருந்தே தினகரன் பத்திரிகையை நாளாந்தம் வாசிப்பதுண்டு. அக்காலத்தில் வெளிவந்த 'புதன் மலர்' என்ற பகுதி எம்போன்ற பாடசாலை மாணவர்களைப் பெரிதும் கவர்ந்திருந்தது. அதற்காகவே தினகரனை நாடும் மாணவர்கள் அக்காலத்தில் (1950 களின் இறுதியில்) ஏராளமாக இருந்தனர்.

க.கைலாசபதி (பின்னர் பேராசிரியர்), ஆர். சிவகுருநாதன் ஆகியோர் பிரதம ஆசிரியர்களாகப் பணியாற்றிய காலம் அது. தமிழ்மொழி இலக்கியம் என்றில்லாது தமிழ் எழுத்தாளர்களுக்கும் தினகரன் பத்திரிகை பரந்த அளவில் களம் அமைத்துக் கொடுத்த காலம். ஆரம்பத்தில் தமிழர் கதைப் பாணியைப் பின்பற்றிய ஈழத்து இலக்கிய மரபு, புதிய தேசிய இலக்கிய மரபுகளையும் மண்வாசனையையும் கொண்டு பிரகாசிக்க தினகரன் ஒரு காரணமாக இருந்தது என்றால் அதில் கைலாசபதி அவர்களின் பங்களிப்பு பிரதானமானது.

1960களில் முற்போக்கு இலக்கிய இயக்கத்துக்கும் மரபுவாதிகளுக்குமிடையே ஏற்பட்ட இலக்கிய சர்ச்சை பற்றித் தமிழ் வாசகர் உலகம் சிறப்புறப் புரிந்து கொள்ளத் தினகரன் முக்கிய பங்கினை ஆற்றியிருந்தது. முற்போக்கு அணியினர் சார்பாக முகமது சபீமும், மரபு வழியின் சார்பாக கலாநிதி ஆ.சதாசிவமும் தமது சிந்தனைகளைத் தினகரனுக்கூடாக முன் வைத்தனர். இலக்கியங்களில் பேச்சுவழக்கைக் கையாள்வதை 'இழிசனல் வழக்கு' என மரபுவாதிகள் சாட, முற்போக்கு இலக்கிய அணியினர் இலக்கியத்தில் மண்வாசனை, மக்கள் மயப்பட்ட தேசிய இலக்கியம் என தமிழ் உலகுக்குப் புதிய இலக்கிய சிந்தனைகள் அக்காலத்தில் முன்வைக்கத் தினகரன் களம் அமைத்துக் கொடுத்தது.

இவ்வணியினர் இந்த வகையில் ஈழத்துத் தமிழ் இலக்கியம் ஏறத்தாழ கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாக வீறுநடை போட அக்காலத்திலேயே தினகரன் வழிவகுத்துக் கொடுத்தது என்பதை நினைவுகூர விரும்புகின்றோம்.

இலக்கிய உலகில் இன்னும் மறுக்கப்படாத பல எழுத்துலக ஆளுமைகள் டானியல், டொமினிக் ஜீவா, அ.ந.கந்தசாமி, தெணியான், இளங்கீரன், என்.எஸ்.எம்.ராமையா, சி.வி. வேலுப்பிள்ளை, தெளிவத்தை ஜோசப், மு.சிவலிங்கம் எனப் பலரின் எழுத்துக்கு இந்த தமிழ் பத்திரிகை உலகம் களம் அமைத்துக் கொடுத்ததென்றால் அதற்குத் தினகரன் பங்களிப்பும் பிரதானமானது.

தனிப்பட்ட முறையில் இக்கட்டுரையாசிரியர் 1976 களில் எழுதி முடித்த 'இலங்கை இந்தியர் வரலாறு' என்ற ஆய்வுநூலின் பல ஆரம்ப அத்தியாயங்களைத் தினகரன் வெளியிட்டு என்னைத் தமிழ் கூறும் நல்லுலகுக்கு அப்போது அறிமுகம் செய்திருந்ததை பெருமையுடன் குறிப்பிட விரும்புகின்றேன்.

மற்றொரு விடயம், பிரதம ஆசிரியர்களில் இருவர் எனது பல்கலைக்கழக வாழ்வில் தமிழ் விரிவுரையாளர்களாக இருந்தவர்கள். பேராசிரியர்களான கைலாசபதி, தில்லைநாதன் ஆகியோரிடம் கற்றுள்ள பெருமை எனக்குண்டு. சிவகுருநாதன் அவர்களும் ஓர் ஆசிரியர் போன்று எனக்கு எழுத்துத் துறையில் பெரிதும் ஊக்கம் வழங்கியவர். தினகரனின் 90 ஆவது அகவையில் அவர்கள் அனைவரையும் நினைவு கூருகின்றேன்.

சிவகுருநாதன் அவர்கள் பற்றிய ஒரு முக்கிய சிறப்பு, தாம் பணியாற்றிய தினகரனையே அக்காலத்தில் தனது முதுமாணிப் பட்டத்துக்கான ஆய்வுத் தலைப்பாகக் கொண்டமையாகும். ('ஈழத்துத் தமிழ்ப் பத்திரிகை வளர்ச்சியில் தினகரன் 1993') இது தினகரனின் மற்றுமொரு சிறப்பு.

தினகரனின் மற்றுமொரு பிரதான அம்சம், நாட்டில் வாழ்கின்ற 'பலதரப்பட்ட' தமிழ் பேசும் மக்களைக் கருத்தில் கொண்டு செயற்படுவதாகும். வடக்கு, கிழக்கு, மலையகம் சார்ந்த சகல தமிழ் மக்களையும் தமிழ் பேசும் முஸ்லிம் என அனைவரது சமூக, பொருளாதார, கலாசார, நிலைமைகளை மேம்படுத்தும் முயற்சியில் தினகரன் செயற்பட்டு வந்ததற்காக யாம் உளமாரப் பாராட்ட முடியும்.

தமிழ் இலக்கியம் வீறுநடை போடுவதற்கு வழிவகுத்துக் கொடுத்த அபிமானப் பத்திரிகை

பேராசிரியர்
சோ. சந்திரசேகரன்
(துணைவேந்தர் ஈசொப்ட் வளாகம்)

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

தொண்ணூறு ஆண்டு கால வெற்றிப் பயணம்

ஊடகத்துறை வரலாற்றில் பெரும் சாதனை

ஏகாதிபத்தியத்திற்கு உட்பட்டிருந்த காலப்பகுதியில் வெளிவர ஆரம்பமான 'தினகரன் செய்திப் பத்திரிகை' இந்நாடு சுதந்திரமடைந்து 74 வருடங்களைக் கடந்துள்ள சூழலிலும் தொடராக வெளிவந்தபடி 90 வது அகவையில் தற்போது கால்பதிக்கின்றது. இது மாபெரும் வரலாற்று சாதனையாகும்.

தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட மக்கள் சிறுபான்மையினராக வாழ்கின்ற இலங்கையில் தமிழ்மொழிப் பத்திரிகையொன்று தொடராக 90 வருடங்கள் வெளிவருவதென்பது இலகுவான காரியமல்ல. அது இமாலயச் சாதனையே.

அவ்வாறான சாதனைக்கும் இப்பத்திரிகை உறுதியோடு நீடித்து நிலைப்பதற்கும் அதன் ஆரம்பத்தில் இடப்பட்ட அடித்தளம் பின்புலமாக அமைந்திருக்கின்றது. அதன் பயனாகவே இப்பத்திரிகை ஒன்பதாவது தசாப்தத்தில் தடம்பதித்து இருக்கின்றது.

இந்நாட்டில் வாழும் தமிழ் பேசும் மக்களுக்காக அமரர் டி.ஆர் விஜேவர்தன 1932.03.15 ஆம் திகதி தினகரன் செய்திப் பத்திரிகையை ஆரம்பித்தார். அவரது லேக் ஹவுஸ் நிறுவனத்தின் ஊடாக ஆரம்பிக்கப்பட்ட இப்பத்திரிகைக்கென தெளிவான நோக்கத்தையும் இலக்கையும் அவர் வரையறுத்திருந்தார். அதனை இப்பத்திரிகையின் முதலாவது வெளியீட்டின் ஆசிரியர் தலையங்கம் தெளிவாக வெளிப்படுத்தி நிற்கின்றது.

அதாவது 'இப்பத்திரிகை யாருக்காகப் பிரசுரம் செய்யப்படுகின்றதோ அவர்கள் எம் மீது வைக்கும் நம்பிக்கைப் பொறுப்புக்கு நாம் பாத்திரங்களாகவிருப்பதற்கு மனப்பூர்வமாக முயல்வோம். இலங்கையிலேனும் வேறெந்த நாட்டிலேனும் உள்ள கட்சியாளர்களில் எவராவது ஒரு கட்சியினரின் முகமனைப் பெறுவது எமது நோக்கமல்ல. எமது பத்திரிகை கட்சி பேதங்களுக்கு அப்பாற்பட்டதாகும். எவராவது ஒருவருக்கு மாத்திரம் பணியாற்றுவதற்கு அல்லாமல், ஏதாவது விஷேட உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் இது தோன்றியதன்று. தமிழ் பாஷையைப் பேசும் மக்கள் எவரெவரோ அவரவர்களின் நலவுரிமைகளைப் பாதுகாப்பதே இப்பத்திரிகையின் பெரும் பணியாகும். ஆகவே எல்லோருக்கும் பொதுவாக நன்மை பயக்கத்தக்க நீதியான வழியிலேயே நடப்பது எமது நோக்கமாகும்' என்று

ஒன்பது தசாப்த கால வரலாற்றில் இந்நாட்டின் சுதந்திரத்திற்கு மாத்திரமல்லாமல் சமூக, கலாசார, பொருளாதார, அரசியல் மேம்பாட்டுக்கும் அளப்பரிய பங்களிப்புகளை நல்கியுள்ளது தினகரன்

தெரிவிக்கப்பட்டுள்ளது,

இதன் ஊடாக தினகரன் செய்திப் பத்திரிகையின் நோக்கும் இலக்கும் மிகவும் தெளிவானது. எல்லா விவகாரங்களையும் தேசிய கண்கொண்டு நோக்கும் பாரம்பரியத்தைத் தொடக்கி வைத்த இப்பத்திரிகை, தேசிய ஒற்றுமையையும் நாட்டின் சுபீட்சத்தையும் அடிநாதமாகக் கொண்டுள்ளது.

இப்பத்திரிகையை கே. மயில்வாகனம் (1932 – 1934) என்பவரை முதலாவது ஆசிரியராகக் கொண்டு வெளியிடத் தொடங்கிய டி.ஆர். விஜேவர்தன, அன்று இந்நாட்டின் சுதந்திரத்திற்காக முன்னெடுக்கப்பட்ட போராட்டங்கள் நடவடிக்கைகள் தொடர்பான செய்திகளையும் தகவல்களையும் தமிழ் பேசும் மக்களுக்கு கொண்டு செல்வதை முக்கிய நோக்காகக் கொண்டிருந்தார்.

இப்பத்திரிகையின் முதலாவது ஆசிரியரான மயில்வாகனம் தமிழகத்தைச் சேர்ந்தவரான போதிலும் பத்திரிகை ஸ்தாபகரின் எதிர்பார்ப்புக்கு அமைய இந்நாட்டின் சுதந்திரப் போராட்ட செய்திகளுக்கு முக்கியத்துவம் அளித்தார். ஆனால் தமிழக எழுத்தாளர்களின் படைப்புகள்தான் தினகரனில் அதிகம் இடம்பிடித்தன.

அதனால் தினகரனின் ஆரம்பம் முதலான சொற்ப காலம் இப்பத்திரிகையின் மொழிநடை, வசன அமைப்பு, சொற்பிரயோகங்கள் மற்றும் படைப்புகளில் தமிழகத்தின் மண்வாசனையே பெரிதும் பிரதிபலித்தன.

அதன் காரணத்தினால் அமரர் டி.ஆர். விஜேவர்தன ஒரு தடவை, 'உள்நாட்டு எழுத்தாளர்களின் படைப்புகளுக்கு அதிகம் இடமளிக்குமாறும் இலங்கை தமிழ் பேசும் மக்களின் மண்வாசனை மிக்க பத்திரிகையாக தினகரனை மிளிரச் செய்யுமாறும்' ஆசிரியருக்கு ஆலோசனை வழங்கினார். அதற்கேற்ப உள்நாட்டு எழுத்தாளர்களின் ஆக்கங்களுக்கு தினகரன் அதிகம் இடமளித்தது.

இப்பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது முதல் செய்திகளுக்கு அப்பால் கட்டுரை இலக்கியத்திற்கு அதிக முக்கியத்துவம் அளித்தது. அதற்கு அன்றைய சர்வதேச அரசியல் சூழல், இந்திய விடுதலைப் போராட்டத்தின் தீவிரத்தன்மை, டொனமூர் ஆணைக்குழுவின் அரசியல் திருத்த யோசனைகளுக்கு இலங்கையர் காட்டிய வெறுப்பு,

தினகரன்
The Thinakaran

இலங்கையரின் சுதந்திர எதிர்பார்ப்பு உள்ளிட்டவை முக்கிய விடயங்களாக விளங்கின. அதேபோன்று கவிதை இலக்கியத்திலும் இதே விடயங்கள் பிரதிபலித்தன.

இந்தப் பின்னணியில் இப்பத்திரிகையில் ஆரம்பம் முதல் புத்திஜீவிகள், கல்விமான்கள் உள்ளிட்ட எழுத்தாளர்கள் எழுதலாயினர். குறிப்பாக பேராசிரியர் கணபதிப்பிள்ளை, சு.வித்தியானந்தன், பண்டிதமணி கணபதிப்பிள்ளை, புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை, வித்துவான் வேந்தனார், நவாலியூர் சோமசுந்தரப்புலவர், சோ. இளமுருகன், நல்லதம்பிப்பிள்ளை, வித்துவான் எப்.எக்ஸ். சி நடராசா உள்ளிட்டோரின் கட்டுரைகள் தினகரனில் அதிகம் இடம்பிடித்தன. அவர்களது படைப்புகள் விடயச் செறிவு கொண்டனவாக மாத்திரமல்லாமல் உரைநடை இலக்கியத்திலும் புதிய பரிமாணமொன்ற தோற்றுவித்தன. இவர்களது கட்டுரைகள்

எளிமையானவையாவும் தெளிவான சிந்தனை கொண்ட கருத்தாளம் மிக்கவையாகவும், புதியன புகுதல் கொண்டனவையாகவும் விளங்கின.

இதன் விளைவாக 1940 ஆகும் போது தமிழ் பத்திரிகைத் துறையில் முன்னேற்றகரமான கொள்கைகளையும் தேசியத் தன்மையையும் முன்னெடுத்து செல்லும் முக்கிய பத்திரிகையாக விளங்கியது தினகரன். 1932 முதல் 1948 வரை இவ்வாறு வெளிவந்தது இப்பத்திரிகை. இக்காலப்பகுதியில் வி. ராமநாதன் (1934 – 1936), எஸ்.ஈஸ்வர ஐயர் (1936 – 1938) , எஸ். கிருஸ்ண ஐயர் (1938 – 1942) ரி.எஸ். தங்கையா (1942 – 1948) போன்றோர் தினகரன் ஆசிரியர்களாகக் கடமையாற்றியுள்ளனர்.

இந்த நிலையில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸுக்குள் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக சமஷ்டி கட்சி உதயமானது. அதனால் தமிழ்க் காங்கிரஸ் ஆரம்பித்திருந்த 'சுதந்திரன்' எனும் பத்திரிகையும் சமஷ்டி கட்சிப் பக்கம் சென்றது. இதனால், தனக்கு தமிழ் பத்திரிகைகளின் ஆதரவு தேவை என்பதற்காகவும் அரசுக்கு ஒத்துழைப்பு நல்குவதற்காகவும் சுதந்திரனில் இருந்த வி.கே.பி. நாதன் என்பவரை லேக் ஹவுஸுக்கு கொண்டு வந்தார் ஜி.ஜி. பொன்னம்பலம். அவரது தலைமையில் தினகரன் வாரமஞ்சரி 1948 மே மாதம் 5 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதோடு தினகரனின் ஆசிரியராகவும் அவர் பணியாற்றினார். தினகரன் வளர்ச்சிக்கும் ஈழத்து தமிழ் இலக்கிய

பேராசிரியர் சு. வித்தியானந்தன், இளங்கீரன் சுபைர், டானியல், செ. கணேசலிங்கன், பேராசிரியர் ம.மு. உவைஸ், பேராசிரியர் கணபதிப்பிள்ளை, பண்டிதமணி கணபதிப்பிள்ளை, புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை, வித்துவான் வேந்தனார், நவாலியூர் சோமசுந்தரப்புலவர், சோ. இளமுருகன், புலவர் நல்லதம்பிப்பிள்ளை, வித்துவான் எப்.எக்ஸ். சி நடராசா உட்பட அன்றைய பல எழுத்தாளர்கள் தினகரனின் வளர்ச்சிக்கு பக்கபலமாக இருந்தனர்

பாரம்பரியத்துக்கும் கணிசமான பங்களிப்பை அவர் நல்கினார்.

அதன் பின்னர் 1958 களில் பேராசிரியர் கைலாசபதி தினகரன் ஆசிரியரானார். இவர் இரு வருடங்கள் தினகரன் ஆசிரியராகப் பதவி வகித்த போதிலும் தினகரன் வரலாற்றில் பொற்காலமாக அது இருந்தது. இலங்கையின் தமிழ் தேசிய கலை இலக்கியத்தை அவர் தினகரன் ஊடாக உருவாக்கினார். பேராசிரியர் சு. வித்தியானந்தன், இளங்கீரன் சுபைர், டானியல், செ. கணேசலிங்கன், பேராசிரியர் ம.மு. உவைஸ் உட்பட அன்றைய பல எழுத்தாளர்கள் அவருக்கு பக்கபலமாக இருந்தனர். இவரது காலத்தில்தான் நடிகர் சிவாஜி கணேசன் கலந்து கொண்ட மாபெரும் இலக்கிய விழாவை தினகரன் நடத்தியது.

பேராசரியர் கைலாசபதி பல்கலைக்கழகத்தில் பதவி கிடைக்கப் பெற்று சென்றதும் ஆர். சிவகுருநாதன் தினகரன் ஆசிரியரானார். அவர் 1994 வரை இப்பத்திரிகை ஆசிரியராகக் கடமையாற்றியதோடு இவரது பதவிக் காலத்தில் மாபெரும் நாடக விழாவும் நடாத்தப்பட்டது.

தினகரன் உள்ளிட்ட லேக் ஹவுஸ் நிறுவனம் 1973 ஆம் ஆண்டு ஜுன் மாதம் அரசுடமையாக்கப்பட்டது. அதன் பின்னரும் தொடர்ந்தும் ஆசிரியராகக் கடமையாற்றிய சிவகுருநாதன், இந்நாட்டில் புதிய எழுத்தாளர்களும் இலக்கியவாதிகளும் தினகரன் ஊடாக உருவாக களம் அமைத்துக் கொடுத்தார்.

தற்போது தினகரன், தினகரன் வாரமஞ்சரி மற்றும் வண்ணவானவில் பத்திரிகைகளின் ஆசிரியராக தே.செந்தில்வேலவர் கடமையாற்றுகின்றார். ஊடகத்துறையில் நீண்ட கால அனுபவம் கொண்டவர் அவர். அதேசமயம் லேக்ஹவுஸ் நிறுவனத்திலும் அவர் நீண்ட காலம் பணியாற்றும் சிரேஷ்ட பத்திரிகையாளராவார். தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவரின் பதவிக் காலத்தில் இப்பத்திரிகையின் மேம்பாட்டின் நிமித்தம் நாட்டின் பல பகுதிகளிலும் தினகரன் வாசகர் வட்டங்கள் உருவாக்கப்பட்டன. யாழ்ப்பாணம், ஹட்டன், தர்காநகர், பதுளை உள்ளிட்ட பல பிரதேசங்களில் இவ்வாறான வாசகர் வட்டங்கள் அமைக்கப்பட்டன. அதேநேரம் தினகரனை மேலும் ஜனரஞ்சகப்படுத்தி மக்கள்மயப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களையும் இவர் முன்னெடுத்து வருகின்றார்.

இப்பத்திரிகையானது தனது 90 வருட கால வரலாற்றில் இந்நாட்டின் சுதந்திரத்திற்கு மாத்திரமல்லாமல் நாட்டின் சமூக, கலாசார, பொருளாதார, அரசியல் மேம்பாட்டுக்கும் அளப்பரிய பங்களிப்புக்களை நல்கியுள்ளது. குறிப்பாக கடந்த 25 வருட காலப்பகுதியில் இப்பத்திரிகையில் வெளியான பல கட்டுரைகள் தேசிய மட்ட விருதுகளை வெற்றி பெற்று தினகரனுக்கும் லேக் ஹவுஸ் நிறுவனத்திற்கும் பெருமை சேர்த்துள்ளமை மறைக்க முடியாத உண்மையாகும்.

மர்லின் மரிக்கார்

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

தினகரன் என்ற பெருவிருட்சத்தின் நிழலில் ஆரோக்கியமாக வளர்ந்த ஈழத்து இலக்கியம்

இலங்கையின் தமிழ் படைப்பிலக்கியத்தில் தினகரனின் வகிபாகம் அழிக்க முடியாத வரலாறு

ஏரிக்கரை பத்திரிகை (Lake House) என வர்ணிக்கப்படும் தினகரன் 1932 ஆம் ஆண்டு தொடக்கம் தடையற்ற சீரான பயணத்துடன் நாளிதழாக வெளியாகிக் கொண்டிருக்கின்றது. 23. 05. 1948 ஆம் திகதியன்று தனது முதலாவது தினகரன் வாரமஞ்சரியை தமிழ் வாசகர்களுக்கு லேக் ஹவுஸ் அறிமுகப்படுத்தியது. ஆங்கில, சிங்கள ஏடுகளையும் சஞ்சிகைகளையும் வெளியிட்டு வரும் ஏரிக்கரையிலிருந்து இயங்கும் Lake House என்ற பெரிய நிறுவனத்தின் ஒரே ஒரு தமிழ்த் தினசரி தினகரன்.

இதன் நிறுவனர் (அமரர்) டீ. ஆர். விஜேவர்தன அவர்கள், "நாட்டின் தேசிய அடையாளமாக உருவாகிக் கொண்டு வரும் தேசியவாத எழுச்சியின் வீச்சை பத்திரிகைகள் கண்ணாடி போல் பிரதிபலிக்கும்" என்று ஏரிக்கரை ஏடுகள் தொடங்கப்பட்ட காலத்தில் தெரிவித்திருந்தார்.

இது இவ்விதமிருக்க (அமரர்) பேராசிரியர் க.கைலாசபதி அவர்களும், தினகரன் ஆசிரியராக பதவியேற்ற காலப்பகுதியில் "தேசிய உணர்வு வெள்ளம் வடிந்த பின்னும் அந்த இலக்கியம் அந்த நாட்டில் மட்டுமன்றி, உலகமெங்கும் மதிக்கப்படுவதற்கு சில நிரந்தர இலட்சியங்களே உதவுகின்றன. அந்த நிரந்தர உண்மைகளை தேசிய உணர்வு மூலம் கண்டு கொள்வதே தேசிய இலக்கியம் படைப்பவனின் பெருஞ்சோதனையும் பொறுப்புமாகும்" என்று தெரிவித்திருந்தார்.

இவர்களின் கூற்றுக்களிலிருந்து 90 ஆண்டுகள் பழைமை வாய்ந்த தினகரனின் கலை, இலக்கிய வகிபாகம் இலங்கையில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்த தொடங்கியிருந்தது என்பது புலனாகும்.

அமரர் கைலாசபதி, தினகரனை பொறுப்பேற்பதற்கு முன்னர் அதில் இந்திய எழுத்தாளர்களின் படைப்புகளுக்குத்தான் பத்திரிகையில் முன்னுரிமை வழங்கப்பட்டது. அத்துடன் அவர்களுக்கு சன்மானமும் வழங்கப்பட்டது.

தினகரனில் அவ்வேளையில் கதைகள் படைத்தவர்கள் சென்னை மவுண்ட் ரோட்டையும், மெரீனா பீச்சையும் பகைப்புலமாகக் கொண்டு எழுதினார்கள். இதனால் அன்றைய இலங்கைத் தமிழ்த் தேசிய படைப்பிலக்கியம் தேக்கம் கண்டது. அதனை உடைத்தெறிந்தவர் தான் தினகரனின் அன்றைய புகழ் பெற்ற ஆசிரியர் கைலாசபதி.

அவர் இலங்கை எழுத்தாளர்களுக்கு தினகரனில் களம் தந்து ஊக்கமளித்தார். தமிழ்ப் பத்திரிகையின் செல்நெறியை வகுத்தார்.

கைலாசபதிக்குப் பின்னர் தினகரன் ஆசிரியராக பொறுப்பேற்ற இ. சிவகுருநாதன் தினகரனில் படைப்பாளிகளுக்கு களம் அமைத்துக் கொடுப்பதில் பாராட்டப்பட வேண்டிய மற்றொருவர் ஆவார். யாழ்.பல்கலைக்கழகத்தில் முதுகலைமாணிப் பட்டம் பெறுவதற்காக சிவகுருநாதன் அவர்கள் சமர்ப்பித்த ஆய்வில், 'தேசிய இலக்கியம் உருப்பெற்று வளர்ச்சி காண கைலாசபதி களம் அமைத்துக் கொடுத்தார்' என்று குறிப்பிட்டுள்ளார்.

கைலாசபதி, தான் மாத்திரம் வளராமல், தன்னைச் சூழ இருந்தவர்களையும் வளர்த்தெடுத்தார். அவர்கள் பத்திரிகையாளர்களாயினும் படைப்பாளிகளாயினும் கலைஞர்கள், ஓவியர்கள், கார்டூனிஸ்ட்டுகளாயினும் சிற்றிதழ்காரர்களாயினும் அவர்கள் அனைவரும் தத்தமது துறைகளில் ஆரோக்கியமாக வளர்வதற்கு உற்றதுணையாக விளங்கியவர்.

தினகரன் பத்திரிகையின் முதலாவது ஆசிரியராக கே. மயில்வாகனம் பணியாற்றினார். அவருக்குப் பின்னர் வி.ராமநாதன், எஸ். ஈஸ்வர ஐயர், எஸ்.கிருஷ்ண ஐயர், ரி. எஸ். தங்கையா, வீ. கே. பீ. நாதன், ஆகியோருக்குப் பின்னர்தான் பேராசிரியர் க. கைலாசபதி அந்த ஆசிரிய பீடத்திற்கு வந்தார்.

1959 ஆம் ஆண்டில் பேராசிரியர் க. கைலாசபதி காலத்தில் கொழும்பில் தினகரன் பத்திரிகை மாபெரும் முத்தமிழ் விழாவை நடத்தியது.

யாழ்ப்பாணத்திலும் தினகரன் விழா நடந்தது. இவ் விழாவில் பேராசிரியர் தெ.பொ.மீனாட்சிசுந்தரம், எழுத்தாளர் அகிலன், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ஆகியேர் கலந்து கொண்டனர். சிவாஜி கணேசன் அந்த விழாவில்தான் 'கலைக்குரிசில்' பட்டமும் பெற்றார்.

தமிழ்த் தேசிய இலக்கியம், கோட்பாட்டு ரீதியான போராட்டங்களூடாக முன்னெடுக்கப்பட்ட சூழலில் இலங்கை தமிழ் இலக்கியத்தின் பாரம்பரியத்தையும் அதன் வளர்ச்சி போக்குகளையும் வெளிக்கொணரும் வகையில் ஆக்க இலக்கியங்களும், அது தொடர்பான கட்டுரைகளும் வெளிவருவதற்கு ஏற்ற வாறு தினகரன் வெளிவந்துள்ளது.

இலங்கை தமிழ் இலக்கியத்தின் தனித்துவத்தை வலியுறுத்திய அதேசமயம், பொதுவான தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சிப் போக்கினையும் கவனத்திலெடுத்து செயற்பட்டமை தினகரனின் தனித்துவமான சிறப்பாகும்.

தேசிய இலக்கிய செல்நெறி காரணமாக ஒவ்வொரு பிரதேசம் சார்ந்த மண்வாசனையும் மக்களின் சமகால பிரச்சினைகளும் இலக்கியத்தின் பாடுபொருள்களாயின. அந்த வகையில் வடக்கு கிழக்கு, தெற்கு, மலையகம் சார்ந்த இலக்கியப் படைப்புகளை தினகரன் வெளிக்கொணர்ந்துள்ளது.

> **கைலாசபதிக்குப் பின்னர் தினகரன் ஆசிரியராக பொறுப்பேற்ற இ. சிவகுருநாதன் தினகரனில் படைப்பாளிகளுக்கு களம் அமைத்துக் கொடுப்பதில் பாராட்டப்பட வேண்டிய மற்றொருவர் ஆவார். யாழ். பல்கலைக்கழகத்தில் முதுகலைமாணிப் பட்டம் பெறுவதற்காக சிவகுருநாதன் அவர்கள் சமர்ப்பித்த ஆய்வில், 'தேசிய இலக்கியம் உருப்பெற்று வளர்ச்சி காண கைலாசபதி களம் அமைத்துக் கொடுத்தார்' என்று குறிப்பிட்டுள்ளார்**

சி.வி. வேலுப்பிள்ளையின் வாழ்வற்ற வாழ்வு, எல்லைப்புறம், பார்வதி, முதலியன தொடர்கதையாக வெளிவந்தன. இது தொடர்பில் பேராசிரியர் சி.தில்லைநாதன் பின் வருமாறு கூறுகின்றார்.

"பல புதிய அம்சங்களும் பரிசோதனைகளும் தினகரனில் இடம்பெற்றன. வாசகர்கள் பங்கெடுக்கக் கூடிய வகையில் திங்கட்கிழமைகளில் திங்கள் விருந்தும், புதன்கிழமைகளில் புதன் மலர், வெள்ளிக்கிழமைகளில் முஸ்லிம் மஞ்சரி, சனிக்கிழமைகளில் மாணவர் உலகம் என்பன இடம்பெற்றன."

மூத்த தலைமுறை வாசகர்கள் சவாரித்தம்பர், சின்னக்குட்டி முதலான பாத்திரங்களை மறந்திருக்க மாட்டார்கள். இவர்கள் கூத்துக் கலைஞர்களோ, மேடை நாடக நடிகர்களோ அல்லர். கற்பனைப் பாத்திரங்கள்.

அந்த கேலிச்சித்திரங்களில் நடமாடிய அவர்கள் வடபுலத்தின் ஆத்மாவை பிரதிபலித்தவர்கள். அவர்களைப் படைத்தவர்தான் பின்னாளில் 'சிரித்திரன்' என்ற மாசிகையை வெளியிட்ட சிவஞானசுந்தரம்.

அக்காலத்தில் காலையில் தினகரனில் கண்விழிக்கும் இலங்கை, தமிழ் முஸ்லிம் வாசகர்கள், முதலில் பார்க்கும் பகுதி குறிப்பிட்ட சவாரித்தம்பர், சின்னக்குட்டி பாத்திரங்கள் என்ன சொல்கின்றன? என்பதை சித்திரிக்கும் பக்கம்தான்.

லெ.முருகபூபதி ...
(எழுத்தாளர், சிரேஷ்ட ஊடகவியலாளர்)
அவுஸ்திரேலியா

காவலூர் இராசதுரை, சுபைர் இளங்கீரன், பேராசிரியர் கா.சிவத்தம்பி, எச். எம். பி. மொஹிதீன், பி. ராமநாதன், சில்லையூர் செல்வராசன், இ.முருகையன், கே. கணேஷ், பிரேம்ஜி , அகஸ்தியார் ஆகியோர் தினகரனில் காத்திரமான பங்களிப்புச் செய்தவர்கள். பாரதி நூற்றாண்டு (1982 – 1983) காலத்திலும் தினகரன் தொடர்ச்சியாக பாரதி ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டு இலக்கியத்திற்கு வளம் சேர்த்துள்ளது.

தினகரன் பெருவிருட்சம். இந்த விருட்சத்தின் நிழலில் இலங்கை இலக்கியம் ஆரோக்கியமாக வளர்ந்துள்ளது.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

தினகரன் தோன்றிய வரலாறு முக்கியமானது. இலங்கையின் பிரபல பத்திரிகையாளரான டி.ஆர். விஜேவர்தன 'தினமின' என்ற சிங்களப் பத்திரிகையை வாங்கி நடத்தினார். அவரது 32 வயதில் 1918 ஆம் ஆண்டு 'சிலோன் டெயிலி நியூஸ்' என்ற ஆங்கிலப் பத்திரிகையை ஆரம்பித்தார். இப்பத்திரிகைக்கு ஆசிரியராக ஏ.வி. குலசிங்கம் என்ற தமிழரை நியமித்தார். இப்பத்திரிகையின் வார இதழான 'சிலோன் ஒப்சேர்வர்' 1923இல் ஆரம்பிக்கப்பட்டது, இப்பத்திரிகையை சிங்களவர்களும் தமிழர்களும் முஸ்லிம்களும் வாசித்தனர். மூவின மக்களும் வாசிக்கும் பத்திரிகை அது.

'இனவாதம் வளரக்கூடாது; தமிழ் பேசும் மக்களையும் தேசிய அரசியலுக்கு இழுத்துவரவேண்டும்' என்ற கருத்துடைய டி.ஆர். விஜேவர்தன, தமிழிலும் பத்திரிகை ஒன்றை வெளியிடவேண்டும் என்று விரும்பினார். அவரது எண்ணம் 1932 ஆம் ஆண்டு நிறைவேறியது. தமிழரும் முஸ்லிம்களும் செய்திகளை வாசிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் அவர் வெளியிட்ட 'தினகரன்' தமிழ்ப் பத்திரிகை 1932 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆம் திகதி முதல் வெளிவரத் தொடங்கியது.

1958 ஆம் ஆண்டு கைலாசபதி தினகரனின் பிரதம ஆசிரியராக நியமிக்கப்பட்டார். அவர் ஆசிரியராக வந்தபின் 'தினகரன்' இலங்கையின் ஒரு சுதேச பத்திரிகையாக மாறத் தொடங்கியது. தனியே செய்திகள் மட்டுமன்றி இலக்கிய ரீதியான கட்டுரைகள், பொழுதுபோக்கு அம்சங்கள் என்று பலவற்றை சேர்க்க வேண்டிய தேவை பத்திரிகைகளுக்கு ஏற்பட்டது. அந்த அவசியம் தினகரனுக்கும் வந்தது.

தினகரனில் ஈழத்து எழுத்தாளர்கள் பலர் எழுதத் தொடங்கினர். மண்வாசனைக் கதைகள் பல வெளிவந்தன. தேசிய இலக்கியம் என்றால் என்ன என்று 'தினகரன்' விளக்கம் கூறி பல கட்டுரைகளை வெளியிட்டது. இளங்கீரன் ஈழத்தின் முற்போக்கு நாவலாசிரியர் என்பதை தினகரன் வெளிக்காட்டியது. இளம் தமிழ் எழுத்தாளர்கள் மட்டுமன்றி முஸ்லிம் எழுத்தாளர்கள் பலர் முன்னுக்கு வருவதற்கு தினகரன் களம் அமைத்துக் கொடுத்தது.

பிறமொழி இலக்கியங்களின் மொழிபெயர்ப்புகள் தினகரனில் இடம்பெற்றன. கிராம இலக்கியங்களுக்கு தினகரன் முதன்மை வழங்கியது. கிராமியக் கலைகள், கூத்துக்கள் பற்றி பல கட்டுரைகள் வெளிவந்தன.

ஈழத்து இலக்கிய வரலாற்றில் உத்வேகம் மிகுந்த காலப் பகுதியாக அது மலர்ந்தது. தினகரனின் போக்கைக் கண்டு மற்றைய பத்திரிகைகளும் தனது போக்கை மாற்ற வேண்டியிருந்தது.

கா. கைலாசபதி தினகரனின் ஆசிரியராக கடமையாற்றிய காலத்தை ஈழத்துப் படைப்பாளிகளின் 'பொற்காலம்' என்றே கூறி விடலாம். 1960 ஆம் ஆண்டு கா. கைலாசபதி பல்கலைக்கழக ஆசிரிய பீடத்துக்கு மாறினார். அதன் பின்பு தினகரனின் ஆசிரியராக வந்த சி.வி. ராஜசுந்தரம் சில காலம் பணியாற்றிவிட்டு இலங்கை வானொலி நிலையத்துக்குச் சென்று விட்டார். 1961 ஆம் ஆண்டு தினகரனுக்கு ஆர். சிவகுருநாதன் ஆசிரியராக சேர்ந்தார். இவரும் கைலாசபதியின் பாணியை பின்பற்றினார். சில மாற்றங்களையும் செய்தார். முக்கியமாக செய்திகளின் வசன அமைப்புகளை எடுத்துக் காட்டலாம்.

பல்கலைக்கழகங்களின், பேராசிரியர்களின் விடயதானங்களை தினகரன் தாங்கி வந்தது. சமய விடயங்களுக்கு தினகரனில் இடமளிக்கப்பட்டது. பல வருடங்களாகவே திங்கட்கிழமைகளில் 'சைவமஞ்சரி' வெளிவந்து கொண்டிருந்தது. அதில் பயனுள்ள இந்துசமயக் கட்டுரைகள் பல பிரசுரமாகின. அறிஞர் செ. தனபாலசிங்கம் அவர்களின் கட்டுரைகள் இதற்கு நல்ல உதாரணமாகும்.

தமிழை வளர்ப்பதில் முஸ்லிம்களுக்கு உள்ள பெரும்பங்களிப்பினை தினகரன் என்றும் எடுத்துக்காட்டி வந்திருக்கிறது. இதற்கு அறிஞர் உவைஸ் எழுதிய பல கட்டுரைத் தொடர்கள் சிறந்த உதாரணங்களாகும்.

தினகரன் வெள்ளிக்கிழமைகளில் 'முஸ்லிம் மஞ்சரி'யைத் தொடங்கிய பின்பே மற்றப் பத்திரிகைகள் முஸ்லிம் பகுதிகளை ஆரம்பித்தன. தினகரனில் சிறந்த பல சிறுகதைகள் வெளிவந்தன. அதற்கு மேலதிகமாக

தமிழ் இதழியல் வளர்ச்சிக்கு தினகரன் வழங்கிய பங்களிப்பு அளப்பரியது

தமிழகத்தின் பழம்பெரும் எழுத்தாளர்களின் சிறுகதைகளும் மறுபிரசுரம் செய்யப்பட்டன. 1980 ஆம் ஆண்டு காலப் பகுதியில் எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப் 'வாரம் ஒரு சிறு கதை விருந்து' என்ற தலைப்பில் பழம்பெரும் தமிழக எழுத்தாளர்களின் சிறுகதைகளை தந்ததுடன் அவர்கள் பற்றிய அரிய அறிமுகத்தையும் தந்தார். தமிழக எழுத்தாளர்களை மட்டுமன்றி ஈழத்தின் பழம்பெரும் எழுத்தாளர்களின் சிறுகதைகளையும் அவர்கள் பற்றிய குறிப்புகளையும் வழங்கினார்.

இதே எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப் 1999 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 'மலைய இலக்கிய வரலாறு' என்ற தொடர் கட்டுரையை தினகரனில் எழுதினார். இது மலையக எழுத்தாளர்களின் பணிகளையும் பண்புகளையும் இலங்கை வாசகர்கள் அனைவருக்கும் எடுத்துக்காட்டியது.

இதழியல் பற்றிய வளர்ச்சிக்கு தினகரன் பாரிய பங்களிப்பினை வழங்கியிருந்தது. எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப் 2001 ஆம் ஆண்டுப் பகுதியில் 'இருபதாம் நூற்றாண்டின் ஈழத்து இதழியலும் இலக்கியமும்' என்ற தொடர் கட்டுரையை எழுதினார்.

ஈழத்தில் அதுவரை வெளிவந்த இதழ்கள் சஞ்சிகைகள் பற்றிய விரிவான ஆராய்ச்சியாக அது அமைந்திருந்தது. இப்படியான விரிவான ஆராய்ச்சிக் கட்டுரைகள் அப்பொழுது வேறு பத்திரிகைகளில் வெளிவரவில்லை.

இவ்வகையான முயற்சிகள் இலங்கைப் பத்திரிகை வரலாற்றில் தினகரன் பத்திரிகை செய்த பெரும் பங்களிப்பாகும்.

தினகரன் சிங்கள– தமிழ் இலக்கிய முயற்சிகளுக்கு பாலமாகவும் விளங்கியது. விளம்பரங்கள் பற்றிய விபரக்கட்டுரைகளும் தினகரனில் இடம்பெற்றன.



இலங்கைப் பத்திரிகை வரலாற்றில் தினகரனில் ஆசிரியராக கடமையாற்றிய அமரர் சிவகுருநாதனின் பணி மேலானது; பாராட்டத்தக்கது. இந்த அனுபவங்களைக் கொண்டு ஆர். சிவகுருநாதன் இதழியல் சம்பந்தமான புத்தகமொன்றை எழுதினார். அது இதழியல் பயிலும் மாணவர்களுக்கு பெரும் பயன் அளிப்பதாக அமைந்தது

உள்நாட்டு இலக்கியப் படைப்பாளிகளை உருவாக்கிய முதன்மைப் பத்திரிகை

2000 ஆம் ஆண்டு காலப் பகுதியில் காவலூர் ராஜதுரை தொடராக எழுதிய விளம்பரத்தின் மகிமை பற்றிய கட்டுரை வாசகர்களுக்கு புதிய அனுபவத்தை தந்தது.

தெளிவத்தை ஜோசப், காவலூர் ராஜதுரை ஆகியோர் எழுதிய தொடர் கட்டுரைகள் பின்பு நூலுருப்பெற்றன. நூலுருப் பெறும் அளவுக்கு இக்கட்டுரைகளை வழங்கிய ஆசிரியர்களைவிட அக்கட்டுரைகள் வெளிவந்த தினகரன் பத்திரிகை பெரும்பணியாற்றி இருக்கிறது என்றே கூற வேண்டும்.

இலங்கையில் வாழுகின்ற தமிழ் பேசும் மக்களின் பேச்சு மொழி பிரதேச உணர்வு கருத்துருவம் பெறுவதற்கு தினகரன் அதிகமாகவே உதவியது. அந்தந்த பிரதேச எழுத்தாளர்களின் படைப்புக்களை வெளியிட்டு இந்தக் கருத்தாக்கத்தை உருவாக்கியது. இவ்வாறான சந்தர்ப்பம் புது எழுத்தாளர்கள் பலர் உருவாகுவதற்கு காரணமாகியது.

பொழுதுபோக்கு அம்சமாக சினிமா சம்பந்தமான செய்திகளை வெளியிட்டது. அச்செய்திகளை உடனுக்குடன் வாசகர்களுக்கு வழங்கியது. ஈழத்துச் சினிமாவுக்கு ஆதரவு வழங்கியது. 'குத்துவிளக்கு', 'பொன்மணி' போன்ற ஈழத்துத் திரைப்படங்களுக்கு நேர்மையான விமர்சனங்களை வெளியிட்டது. கலைத்துறையில் ஈடுபட்டவர்களை இனங்கண்டு கௌரவித்து பேட்டிக் கட்டுரைகளை வெளியிட்டது.

நடிகர் திலகம் சிவாஜி கணேசனுக்கு 'கலைக்குரிசில்' என்ற பட்டத்தை வழங்கியது தினகரனே.

பத்திரிகைகளுக்கு ஆசிரிய தலையங்கங்கள் முக்கியமானவை. நேர்மையான ஆசிரிய தலையங்கங்களை ஆசிரியர் ஆர். சிவகுருநாதன் எழுதி வந்தார். அவை தேசிய ரீதியான ஆசிரியத் தலையங்கங்களாக அமைந்தன.

இனங்களை சிண்டுமுடியும் ஆசிரியத் தலையங்கங்களாக அவை அமையவில்லை. இனங்களுக்கிடையில் சமாதானத்தை ஏற்படுத்தும் தலையங்கங்களாக அவை அமைந்தன. ஆர். சிவகுருநாதன் 25 வருடங்கள் தினகரன் ஆசிரியராக சிறப்பாகப் பணியாற்றினார். இலங்கைப் பத்திரிகை வரலாற்றில் தினகரனில் ஆசிரியராக கடமையாற்றிய சிவகுருநாதனின் பணி மேலானது; பாராட்டத்தக்கது. இந்த அனுபவங்களைக் கொண்டு ஆர். சிவகுருநாதன், இதழ் இயல் சம்பந்தமான புத்தகமொன்றை எழுதினார். அது இதழியல் பயிலும் மாணவர்களுக்கு பெரும் பயன் அளிப்பதாக அமைந்தது.

தினகரன் 'வாரமஞ்சரி' 36 பக்கங்களுடன் புது மெருகுடன் வெளிவருகிறது. 'செந்தூரம்' என்ற இலவச இதழ் மிக நீண்ட நாட்களாகவே வெளிவந்து கொண்டிருக்கிறது. வர்த்தக மஞ்சரியில் பயன்மிகு பல கட்டுரைகள் இடம்பெறுகின்றன. வாராவாரம் சிறந்த சிறுகதைகள் பிரசுரமாகின்றன. புதுப்புது எழுத்தாளர்கள் அறிமுகமாவதுடன் அவர்களின் படைப்புகளும் புதுமையானவையாக இருக்கின்றன. 'கவிதை மஞ்சரி' மூலமும் பல கவிஞர்கள் உருவாகிறார்கள். மற்றைய பத்திரிகைகளை விட 'தினகரன்' பத்திரிகையிலேயே அரசாங்க விளம்பரங்கள் அதிகமாக வெளிவருகின்றன. தொழில் சம்பந்தமாகவும் கல்வி சம்பந்தமாகவும் பல விளம்பரங்கள் இடம்பெறுகின்றன. இப்பகுதி இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் வாய்ப்புளை உருவாக்கித் தருகின்றது.

'தினகரன்' செய்திகளை ஒரு நிலையான முறையில் வெளியிட முயல்கிறது. தினகரன் சிறந்த இலக்கிய விடயங்களுக்கும் கட்டுரைகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கிறது. இலங்கை பத்திரிகை வரலாற்றில் தினகரனின் பங்களிப்பு மிக அதிகம் என்றே சொல்லலாம்.

தம்பிஜயா தேவதாஸ்

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

2020 ஏப்ரல் 21 செவ்வாய்க்கிழமை
தினகரன்
THINAKARAN
தினகரன்

மாற்றமுறும் உலகுக்கு ஏற்ப மாசற்ற ஊடக கலாசாரம்

எழுத்துத்துறையில் என்னை வளர்த்து உருவாக்கிய பேராசான் தினகரன்

எமது பாடசாலைக் காலத்தில் கண்டி புனித சில்வெஸ்டர் கல்லூரியில் கனிஷ்ட தமிழ்ச் சங்கம், சிரேஷ்ட பிரிவில் சிரேஷ்ட தமிழ்ச் சங்கம் என்பன இருந்தன. சிறுவயதில் கனிஷ்ட தமிழ்ச் சங்கத்தில் செயலாளராக இருந்த காலத்திலேயே தினகரனின் சிறுவர் பகுதிக்கு எழுதும் ஆர்வம் காரணமாக எழுதத் தொடங்கினேன்.

அதன் பின்னர் சிரேஷ்ட தமிழ்ச் சங்கத்தின் செயலாளராகக் கடமையாற்றும் போது கலைப் பிரிவில் கல்வி கற்றதால் எழுதும் ஆர்வம் மேலும் அதிகரித்தது. அதற்குக் களம் அமைத்து கொடுத்தது தினகரன்.

பேராதனை பல்கலைக்கழக பட்டதாரி மாணவனாக அரசியல் விமர்சனங்கள், மலையகம் சம்பந்தமான கட்டுரைகள், மலையக அரசியல் சமகாலப் பிரச்சினைகள், மாணவர்களின் கல்விசார் பிரச்சினைகள் போன்ற வற்றை தினகரன் வாரமஞ்சரியின் மலையகப் பகுதியில் எழுதத் தொடங்கினேன்.

பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச்சங்கச் செயலாளராக இருந்த அனுபவத்துடன் இலக்கியக் கட்டுரைகள், நூல்விமர்சனங்கள் எழுதத் தொடங்கியதையடுத்து தினகரன் இலக்கியப் பகுதி, மலையகப் பகுதி, நூல் அறிமுக பகுதி போன்றவற்றில் எழுதத் தொடங்கினேன். எனது கட்டுரைகள் சிறந்த முறையில் முக்கியத்துவம் வழங்கப்பட்டு தினகரனில் பிரசுரிக்கப்பட்டன. மிகவும் அனுபவம் பெற்ற பத்திரிகை ஆசிரியர்கள், பிரதம ஆசிரியர்கள் தினகரனில் பணியாற்றி வருகின்றனர். இவர்கள் ஏனைய பத்திரிகைகளின் குழாமை விட ஆற்றல், அனுபவமிக்கவர்களாகக் காணப்பட்டனர்.

சிறந்த முறையில் எனது ஆக்கங்கள் பிரசுரிக்கப்பட்டதால் நான் ஓர் எழுத்தாளனாக என்னை மேலும் புடம்போட்டுக் கொள்ள முடிந்தது. நான் எழுத்துத்துறையில் நிலைத்திருக்க தினகரன் வழிவகுத்தது. இந்த வாய்ப்பு என்னை மேலும் எழுதத் தூண்டியது. நான் பல கலைக்கழகத்தில் உதவி நூலகராக நியமிக்கப்பட்டதிலிருந்து பிரதம நூலகராக பதவியுயர்வு பெற்று வரும் வரையில் எனது அனைத்து வளர்ச்சியிலும் தினகரனுக்கு முக்கிய பங்குண்டு. நூலகத் துறை மற்றும் வாசிப்பின் அவசியம் பற்றிய எனது பல கட்டுரைகளை தினகரன் முக்கியத்துவம் அளித்துப் பிரசுரித்துள்ளது.

இவற்றில் மலையக வாசிப்பு, வாசிப்பினை எப்படி ஊக்குவிப்பது போன்ற கட்டுரைகள் மூலம் மலையக சமூகத்தில் பலர் பயன் பெற்றதை என்னால் அறிய முடிந்தது. பல்கலைக்கழகத்தில் 'ராகிங்' பகிடிவதைக் கொடுமைகள் பற்றிய எனது பல கட்டுரைகள் ஞாயிறு தினகரனில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. மலையக பிரஜா உரிமைப் பிரச்சினை, வாக்குரிமைப் பிரச்சினை, வீடில்லாப் பிரச்சினை, தோட்டத் தொழிலாளர் சம்பளப் பிரச்சினை, காணிப் பிரச்சினை, சிறுவர் துஷ்பிரயோக சீரழிவுகள், பாடசாலை கல்வியில் இடைவிலகல், ஆடைதொழில்சாலைகளில் பெண் பிள்ளைகளின் பிரச்சினை, மலசலகூட பிரச்சினை, குடிநீர்ப் பிரச்சினை, யுத்தகாலத்தில் மலையக மக்கள் எதிர்கொண்ட தேசிய அடையாள அட்டைப் பிரச்சினை போன்றவை குறித்து நான் எழுதிய கட்டுரைகள் தினகரனில் அதிகளவில் பிரசுரமாகியுள்ளன.



நான் எழுதிய சர்வதேச மாநாட்டு ஆய்வுக் கட்டுரைகள் தினகரனிலேயே பிரசுரிக்கப்பட்டன. நான் சென்ற ஆய்வு மாநாடுகள் பற்றி பயணக் கட்டுரைகள் தினகரனிலும், லேக் ஹவுஸ் நிறுவனம் வெளியிடுகின்ற 'வண்ண வானவில்' சஞ்சிகையிலும் தொடராக பல வாரங்கள் பிரசுரிக்கப்பட்டன. இவை பிற்காலத்தில் நூலாக்கம் பெற்று வெளியிடப்பட்டன. தினகரனில் பிரசுரித்த தமிழ் ஆய்வுக் கட்டுரைகளை தொகுத்து நூலாக்கி 'நதி கடந்த களம்' என்று நான் வெளியிட்ட நூல் மத்திய மாகாண சாகித்திய பரிசு பெற்றது. லண்டன் தமிழியல் ஆய்வு மாநாடு முடிந்த பின்னர் தினகரனில் தொடராக எழுதிய லண்டன் பணயக் கட்டுரை 'ஆண்ட பரம்பரை' என்ற நூலாக வெளிவந்தது. மலேசியா இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு, காயல்பட்டின இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு ஆகியவற்றின் பயணக் கட்டுரைகளை தினகரனில் தொடராக வெளியிட முடிந்தது. அவை 'அமைதி வழியும் மதுர மொழியும்' என்ற பெயரில் நூலாக்கம் பெற்றன.

தீபாவளி, பொங்கல், புதுவருடப் பிறப்பு மற்றும் விசேட நாட்களில் எனது கட்டுரைகள் தினகரனில் ஏராளமாக வெளிவந்துள்ளன. அரசியலில் முக்கிய தினங்கள், குடியரசு தினம், சுதந்திரதினம் போன்றவற்றிற்கும் எனது கட்டுரையை கேட்டு பெற்று பிரசுரித்து எனது எழுத்துத்துறைக்கு ஒரு உந்து சக்தியை அளித்தது தினகரன் ஆகும். எனது எழுத்துக்கு ஆக்கத்தையும் ஊக்கத்தையும் தினகரன் ஆசிரியபீடத்திலுள்ளவர்கள் தந்தனர். எனவேதான் 'தினகரன் எனது எழுத்துகளை தினகரன் புடம் போட்டது' எனக் கூறுகிறேன். கண்டி செய்திகளுக்காக என்னை ஊடகவியலாளராக்கி, செய்திகள் எழுதத் தூண்டி பிரசுரித்து, இத்துறையில் என்னை தினகரன் ஊக்குவித்தது. இதனூடாகவே ஊடகவியலாளராக என்னால் உருவாக முடிந்தது.

தினகரனின் சேவை அளப்பரியது. 90 வருடங்களை எட்டியுள்ள தினகரன் இலங்கை தமிழ் பேசுவோர் மத்தியிலும், உலகெங்கும் வாழும் தமிழ் பேசும் மக்கள் மத்தியிலும் மென்மேலும் பிரகாசிக்க வேண்டும் என மனமார வாழ்த்திப் பிரார்த்திக்கின்றேன்

கலாநிதி
ஆர். மகேஸ்வரன்...
பிரதம நூலகர்
பேராதனை பல்கலைக்கழகம்

தினகரனின் சேவை அளப்பரியது. 90 வருடங்களை எட்டியுள்ள தினகரன் இலங்கை தமிழ் பேசுவோர் மத்தியிலும், உலகெங்கும் வாழும் தமிழ் பேசும் மக்கள் மத்தியிலும் மென்மேலும் பிரகாசிக்க வேண்டும் என மனமார வாழ்த்திப் பிரார்த்திக்கின்றேன்.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

THINAKARAN/VARAMANJARI EDITORIAL

T. SENTHILVELAVAR
CHIEF EDITOR

M.M.M. MARLIN
ASSOCIATE EDITOR

K.ASHOK KUMAR RAJAA
NEWS EDITOR

M. SHUMS FAHIM
LOCAL NEWS EDITOR

S. PANDIYAN
FEATURES EDITIOR

A. R. FAREETH
SPORTS EDITOR

S. SHRIKANTH
CHIEF SUB EDITOR

P.A. SATHIYANATHAN
DEPUTY EDITOR

L. SELVANAYAGAM
DEPUTY LOCAL NEWS EDITOR

VASUKI SIVAKUMAR
DEPUTY FEATURES EDITIOR

K. ESWARALINGAM
DEPUTY CHIEF SUB EDITOR

M. S. M. FIRDOUS
DEPUTY SPORTS EDITOR

P.VEERASINGAM
SUB EDITOR

N.A.M.S. SHIHAN
DEFENSE JOURNALIST

A. G. M. THOWFEEK
SUB EDITOR

M.F.M. AJWARD FASSY
SUB EDITOR

K. M. M. SAFEEK
SUB EDITOR

S.SURESH RAJ
SUB EDITOR

A.V.M. JAYAPPRIYAN
SUB EDITOR

S.M. RIZWAN
THINAKARAN ONLINE EDITOR

R.SUGANTHINI
NEW MEDIA

S. KRISHKANTHAN
DESIGN EDITOR

M.T. AMANUAL HUDHA
DESIGN EDITOR

S.M.VISHVAKANTHAN
DEPUTY DESIGN EDITOR

M.R.M.RIYAS
GRAPHIC DESIGNER

J. S. NADARASA
GRAPHIC DESIGNER

S. SIVARAMAN
GRAPHIC DESIGNER

L.HILBERSIUS
GRAPHIC DESIGNER

T.SUMAN
GRAPHIC DESIGNER

PIC BY:
SUDATH MALAVEERA

M.S.M.HILMY
TERMINAL OPERATOR

K.R.SIVAKUMAR
TERMINAL OPERATOR

M.N.M. RIMZAN
GENERAL ASSISTANT

M.K.S.A.S. SILVA
STAFF ASSISTANT



V. THAMARAI SELVI
TERMINAL OPERATOR



P.P. KRISHANTHINI
TERMINAL OPERATOR

V .N. R .VIOLET
TRANSLATOR

S.K.B.N.RUPANANDA
WORKS ASSISTANT

THINAKARAN ADVERTISING (BACK OFFICE)

M.R.M. MAHROOF

S.M. PRAM KUMAR

M.S.M.RAMZEEN
SUPERVISOR

M.H.M.NALEEM

A.A.A.FARHAN

N.LASHIHA

S.SUBASHINI

M.M.M.MUSHARRAF

K.K.PRASHATH

R.LOGADHARSHI

M.PRIYADARSHINI

M.M.M.FAIZEL

S.SANJUTHAN

GERALD NADESAN
DEPUTY PRODUCTION MANAGER

KITNAN UDAYAKUMAR
ASSISTANT MANAGER (GRAPHIC)

M.I. NIZAMDEEN
BUSINESS DEVELOPMENT OFFICER

REGEINA ILLANCHELIYAN
BUSINESS DEVELOPMENT OFFICER

YAZEER MUMTHAZ
BUSINESS DEVELOPMENT OFFICER

SUJEEVAN SHARAM
REGIONAL SALES EXECUTIVE
EASTERN PROVINCE

R.K.JAYAKUMAR
JAFFNA BRANCH OFFICE
MANAGER

AMEENULLA ALIYAR
KANDY BRANCH OFFICE
JOURNALIST

ASHOK KUMAR DUSHYANTHAN
REGIONAL SALES EXECUTIVE
NORTHERN PROVINCE

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

தினகரனின் பயணத்துக்கான உரிய பாதையை வகுத்தவர்களில் பிரதானமானவர்கள் இருவர்

தினகரனை இலங்கையின் தமிழ்த் தேசியப் பத்திரிகையாக்கிய பெருமை பேராசிரியர் க. கைலாசபதியையே சாரும். பல்கலைக்கழகத்திலிருந்து தமிழ்ச் சிறப்பு பட்டதாரியாக அவர் முதல் வகுப்பில் சித்தியெய்திய பின்னர், அன்று உயர்வாக மதிக்கப்பட்ட அரச நிர்வாகப் பதவியொன்றினைத் தேடியிருக்கவோ அல்லது உயர்கல்வி ஆராய்ச்சித்துறையில் இந்நாட்டிலோ வெளிநாடு சென்றோ, உயர்நிலைக்கு வந்திருக்கவோ கூடும். ஆனால், கைலாஸ் அவ்வாறு செய்யாது பத்திரிகையுட் புகுந்தார். அதனை வருவாய்க்கு வழியாக அன்றி, அதன் வாய்ப்புகளை உகந்தவாறு பயன்படுத்துவதில் கைலாஸ் குறியாயிருந்தமை தெளிவாகும்.

கைலாஸ் பத்திரிகைத்துறையுட் புகுந்த காலம் மேலைத்தேய நாகரிகமும் ஆங்கில மொழியும் தம் ஆதிக்கத்தை இழக்கத் தொடங்கிய காலம். பொருளாதார அரசியல் துறைகளில் மட்டுமின்றிப் பண்பாட்டுத் துறையிலும் அந்நிய ஆதிக்கம் தளரத் தொடங்கிய காலம். சிங்களம் மட்டும் அரசகரும மொழியாக்கப்பட்டதன் விளைவாகத் தமிழ் பேசும் மக்கள் இந்நாட்டில் தங்கள் இருப்பு, வரலாறு, வருங்காலம், தனித்துவம் முதலானவை குறித்து உத்வேகத்துடன் உணர சிந்திக்கத் தலைப்பட்ட காலம்.

தமிழ்மொழி உபயோகச் சட்டம் நிறைவேற்றப்பட்டமை, சுதேச மொழி முக்கியத்துவம் பெறத் தொடங்கியமை, புதிதாக உருவான கலாசார அமைச்சு தமிழ்க்கலை வளர்ச்சிக்கு ஊக்கமளித்தமை, அதுவரை ஆங்கிலப் பத்திரிகைகளே பெற்றிருந்த அரசியல் செல்வாக்கையும் முக்கியத்துவத்தையும் பொதுமக்களைப் பரவலாகச் சென்றடைந்த சிங்கள, தமிழ்ப் பத்திரிகைகளும் பெறத்தக்க வாய்ப்புத் தோன்றியமை, வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாடு காரணமாக இந்திய எழுத்தாளர்களுக்குப் பணம் அனுப்பும் வசதி கட்டுப்படுத்தப்பட்டமை — இவை யாவும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டியவை" என்று விரிவாக கைலாசபதியின் தினகரன் பிரவேசம் பற்றி பேராசிரியர் சி. தில்லைநாதன் பதிவுசெய்துள்ளார்.

இந்திய எழுத்தாளர்களுக்கு பிரசுரம் களமும் கொடுத்து அதற்காக பணமும் தினகரன் வழங்கியது தவறல்ல. எழுத்தாளர்களுக்கு சன்மானம் வழங்கத்தக்க மூலதனமும் வருவாயும் நிரம்பப் பெற்றதுதான் லேக்ஹவுஸ் நிறுவனம்.

பாரதியாரைச் சுற்றியும் எப்பொழுதும் நண்பர்கள் இருப்பார்கள். அவர்கள் இருக்குமிடத்தில் வாதங்களும் இடம்பெறும். யார் யார் என்ன எழுதியிருக்கிறார்கள் என்பது பற்றிய கலந்துரையாடல்கள் நிகழும். மொழிபெயர்ப்புகள் தொடர்பாக பேசப்படும். கைலாசபதியும் பாரதியைப் போன்றே தமக்கு நெருக்கமான இலக்கிய நண்பர்களிடம் கருத்துப் பரிமாறி பணிகளையும் ஒப்படைப்பார். யார்யார் தினகரனில் என்ன என்ன எழுத வேண்டும் எத்தனை நாளில் அவற்றை ஆசிரிய பீடத்தில் கொடுக்க வேண்டும் என்று அந்த மின்னஞ்சல் யுகமில்லாத காலத்திலேயே பத்திரிகை ஆசிரியர் பாரதியைப்போன்றே இயங்கியவர் அவர்.

கைலாசுக்குப் பின்னர், தினகரன் ஆசிரியப்பொறுப்பை ஏற்ற இ.சிவகுருநாதன் மாத்திரமே இங்கு நீண்ட காலம் பணியாற்றிய மூத்த பத்திரிகையாளராவார். இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தின் தலைவராக 1981 இல் தெரிவான சிவகுருநாதன், அதன் பின்னர் 1983 – 84 காலப் பகுதியிலும் அந்தப் பதவியை வகித்தவர். ஊடகத்துறையிலிருந்தவாறே சட்டமும் பயின்று, கொழும்பு சட்டக்கல்லூரியில் பகுதிநேர விரிவுரையாளராகவுமிருந்த சிவகுருநாதன், மற்றும் ஒரு பத்திரிகையாளர் எஸ்.திருச்செல்வம் தொடங்கிய கொழும்பு கலை இலக்கிய நண்பர்கள் என்ற அமைப்பிலும் காலப்போக்கில் கொழும்பு தமிழ் சங்கத்திலும் தலைவராக இருந்தவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பயின்ற காலத்தில் அங்கு வெளியான 'இளங்கதிர்' என்னும் இதழின் ஆசிரியராகவும் இயங்கியிருக்கும் இவர், அங்கு 'இந்து தர்மம்' என்னும் மற்றும் ஒரு இதழ் வெளிவருவதற்கும் முக்கிய பங்காற்றியவர். ஈழத்து இலக்கிய உலகையும் இங்குள்ள படைப்பாளிகளையும் நன்கு தெரிந்து வைத்திருந்த சிவகுருநாதன், தினகரனில் பல சந்தர்ப்பங்களில் பாரதி தொடர்பான ஆசிரியத் தலையங்கங்களும் எழுதியுள்ளார்.

தினகரன் வாரமஞ்சரியும் காலத்துக்குக்காலம் பாரதி ஆய்வுகளை வெளியிட்டும் மறுபிரசுரம் செய்தும் வந்திருக்கிறது. ருஷ்ய எழுத்தாளர் ஏ. ஷெலிஷேவ், கைலாசபதி, செ. கணேசலிங்கன், இளங்கீரன், சி. மௌனகுரு, சொக்கன், க. நவசோதி, மு. கனகராசன், மு. சடாட்சரன், வேல் அமுதன், அராலி வெ.சு. நடராசா, அன்புமணி, க. கந்தசாமி, அந்தனிஜீவா, பொன்னி ஆனந்தன், சகுந்தலா நல்லையா, ஏ. இக்பால், தமிழக எழுத்தாளர் ராஜம் கிருஷ்ணன் ஆகியோரின் பாரதி பற்றிய ஆக்கங்களும் ஸ்ரீதேவகாந்தன், ஷெய்கு இஸ்ஸதீன், மு. துரைசாமி, பாண்டியூரான், வளவை வளவன், சி. ஆறுமுகம் முதலான பலரின் கவிதைகளும் பாரதி நூற்றாண்டு காலத்தில் தினகரன் வாரமஞ்சரியை அலங்கரித்திருக்கின்றன.

தினகரன் ஆசிரியர் சிவகுருநாதன் காலம் அறிந்து அதற்குப் பொருத்தமாகவும் பல விடயங்களைச் செய்திருப்பவர். பாரதி நூற்றாண்டு காலத்தில்தான் பேராசிரியர் கைலாசபதி கொழும்பு அரசினர் மருத்துவமனையில் 1982 டிசம்பர் மாதம் 6 ஆம் திகதி காலமானார். அவர் அதற்கு சில தினங்களுக்கு முன்னர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவர் மறைவதற்கு முதல்நாள் டிசம்பர் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தினகரன் வாரமஞ்சரியில் கைலாசபதி எழுதியிருந்த 'பாரதியின் புரட்சி' என்ற கட்டுரையை சிவகுருநாதன் வெளிவரச் செய்திருந்தார். கைலாசபதி மருத்துவமனைக்கட்டிலிலிருந்து அதனையும் பார்த்துவிட்டுத்தான் நிரந்தரமாக கண்களை மூடிக் கொண்டார் என்பது துயரமான செய்தி.

(முருகபூபதியின் பதிவுகள்...)

காலத்தை வென்று என்றும் புதுமையுடன் வாழும் மனங்கவர் பத்திரிகை – தினகரன்

சூரிய உதயத்திற்கு முன்பே மக்களுக்காக உலகின் செய்திகள் அனைத்தையும் தாங்கிக் கொண்டு ஓடிவரும் பத்திரிகையே தினகரன்.

தமிழின் கலைகலாசார பண்பாட்டு விழுமியங்களை முன்னிறுத்தி, தமிழ் மக்களுக்குத் தகவலைக் கொண்டு சேர்க்கும் பணியில் 1932 ஆம் ஆண்டு முதல் இன்று வரை பத்திரிகைத்துறையில் 90 ஆண்டு காலமாக வெற்றியுடன் பயணிக்கின்றது தினகரன்.

அரசியல், ஆன்மீகம், பண்பாடு, பாரம்பரியம், சமூகம், கலைகள் என சமுதாயத்தின் பல்வேறு துறைகளுக்குமான காத்திரமான செய்திகளைத் தாங்கிக் கொண்டு ஓடோடி வந்து மக்களின் மனதில் தன்னைப் பதித்துள்ளது தினகரன்.

பத்திரிகைக்கு வாசகர்கள் முக்கியம். வாசகர்களை மையமாகக் கொண்டுதான் பத்திரிகைத்துறை இயங்குகின்றது. தினகரன் பத்திரிகைக்கென்று தனிப்பட்ட வாசகர்கள் அன்று தொடக்கம் இன்று வரை உள்ளனர். அதற்குக் காரணம் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் பாரிய தாக்கத்தை தினகரன் ஏற்படுத்தி உள்ளது. வாசகரை மையமாகக் கொண்டு தமிழ் எழுத்தாளர்களை வளர்த்து வந்துள்ளது தினகரன்.

பேராசிரியர் கைலாசபதி தினகரனில் பணியாற்றிய காலத்திற்கு முன்பிருந்தே தமிழ் இலக்கியம் சார்ந்த விடயங்களுக்கு இப்பத்திரிகை முன்னுரிமை கொடுத்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. 1959 ஆம் ஆண்டு கொழும்பில் மா பெரும் முத்தமிழ் விழா நடைபெற்றது. இவ்விழாவில் தோ.பொ.மீனாட்சி சுந்தரம்பிள்ளை, நடிகர் திலகம் சிவாஜி கணேசன் போன்றவர்கள் கலந்து கொண்டவர்கள் என்றால், இப்பத்திரிகையின் வாசகர் வீச்செல்லையை உணர முடிகின்றது.

வாசிப்பு மனிதனை பூரணப்படுத்தும். இந்த வாசிப்பை ஊக்குவித்த ஊடகமாக தினகரன் வளர்ந்து வந்துள்ளது. அந்தப் போக்கு இன்றளவும் பேணப்பட்டு வருகின்றது. அன்று மட்டுமல்ல இன்றைய பன்முகப்பட்ட ஊடக வளர்ச்சியை தன்னகத்தே ஈர்த்து இயல், இசை, நாடகம் என்று முத்தமிழுக்கும் இடம் கொடுத்தது மாத்திரம் அல்லாமல் உண்மைச் செய்திகளை பக்கச் சார்பின்றி மக்களுக்கு தெளிவுபடுத்தும் பத்திரிகையாக தமிழ் பேசும் மக்கள் மத்தியில் வலம் வந்து கொண்டு வருகின்றது தினகரன்.

பத்திரிகைகளினூடாக சமூகம் எதனை எதிர்பார்க்கின்றது என்பதை அவதானித்து அதற்கேற்ப செய்திகளின் முக்கியத்துவத்தை அறிந்து அவற்றை வரிசைப்படுத்தி பதிவு செய்வதில் தினகரன் பத்திரிகை ஆசிரியர்கள் மிகவும் தகுதிபடைத்தவர்களாக இருக்கின்றார்கள்.

எனவே எமது தமிழ் பேசும் சமுதாயத்தின் தேவைகளுக்கு ஏற்ப செய்திகளை இனங் கண்டு பதிவு செய்து மக்களின் மனதிற்குள் புகுந்து நிலைபெற்ற அச்சு ஊடகமான தினகரன் மேலும் பன்முக ஆளுமை கொண்ட செய்திகளுடன் தொடர்ந்து தனது சேவையை முன்னெடுக்க வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

கலாநிதி சண்முக சர்மா ஜெயப்பிரகாஷ்
பிரதிப் பணிப்பாளர்
(தமிழ் நாடக அபிவிருத்திப் பிரிவு)
டவர் மண்டப அரங்க மன்றம்
கொழும்பு 07

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

பிறமொழி எழுத்தாளர்களின் படைப்புகளை

60 வருடங்களுக்கு முன்னர் ஆய்வு செய்த தினகரன்

இலங்கையின் நீண்ட காலப் பெருமை வாய்ந்த தமிழ் தேசியப் பத்திரிகையான தினகரன் 15.03.2022 அன்று தனது 90 ஆவது வருட பிறந்த தினத்தைக் கொண்டாடுகின்றது. அமரர் டி.ஆர். விஜேவர்தன 1914 இல் 'தினமின' பத்திரிகையை வெளியிடத் தொடங்கியதோடு சுதந்திரத்திற்கு பத்திரிகையைப் பயன்படுத்தும் ஒழுங்கமைக்கப்பட்ட நிலைமை இந்நாட்டில் உருவானது. சிங்கள மொழியிலான இப்பத்திரிகைக்கு கிடைக்கப் பெற்ற ஆதரவும் வரவேற்பும் சொற்ப காலத்தில் ஆங்கில மொழிப் பத்திரிகையை ஆரம்பிக்கவும் அவரை இட்டுச் சென்றது.

இவ்வாறான நிலையில், இந்நாட்டின் சுதந்திரத்தின் தேவையையும், அதற்காக முன்னெடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளையும் இந்நாட்டில் வாழும் தமிழ் பேசும் மக்கள் மத்தியிலும் கொண்டு செல்லவும், அதனூடாக சுதந்திரத்தின் முக்கியத்துவத்தை முழுநாட்டிலும் ஏற்படுத்துவதையும் ஒரே நோக்காகக் கொண்டு 1932.03.15 அன்று தினகரன் தினசரியை டி.ஆர். விஜேவர்தன ஆரம்பித்தார்.

தமிழ் பேசும் மக்களின் சமய, கலாசார மொழிப் பாரம்பரியங்களின் ஊடாக இந்நாட்டின் சுதந்திரப் போராட்ட நடவடிக்கைகளைத் தமிழ் பேசும் மக்களுக்கு கொண்டு செல்வதே இப்பத்திரிகையின் பிரதான நோக்கமாக இருந்தது. 1932. 03. 15 அன்று வெளியான தினகரனின் முதலாவது இதழில் பத்திரிகையின் நோக்கத்தை டி.ஆர். விஜேவர்தன மிகத் தெளிவாகக் குறிப்பிட ஏற்பாடு செய்தார்.

ஆரம்ப காலப் பகுதியில் செய்திகளுக்கு மேலதிகமாக கட்டுரை இலக்கியத்திற்கு தினகரன் அதிக முக்கியத்துவம் அளித்தது. சுதந்திரப் போராட்டச் செய்திகள், கட்டுரைகள் உட்பட இலக்கிய படைப்புக்களையும் தினகரனில் வெளியிட டி.ஆர். விஜேவர்தன அடிக்கடி ஊக்கமளித்து வந்தார்.

கவிதை இலக்கியத்திற்கும் தினகரன் ஆரம்பம் முதலே இடமளிக்கத் தவறவில்லை. அதாவது 1932 இல் மகாத்மா காந்தி உண்ணாவிரதம் இருந்தார். அது இந்தியாவில் மாத்திரமல்லாமல் இலங்கையிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அதன் தாக்கத்தினால் மு. நல்லதம்பி புலவர் பத்துப் பாடல்களை எழுதினார். அப்பாடல்களை வெளியிட்டு தினகரன் அமோக வரவேற்பைப் பெற்றது.

அத்தோடு தொடர்கதை, சிறுகதை, உரைநடை இலக்கியங்களுக்கும் தினகரன் இடமளித்தது. நாடகத்துறை வளர்ச்சிக்கும், சமய இலக்கிய மேம்பாட்டுக்கும் கூட தினகரன் ஆரம்ப காலம் முதல் பங்களிப்பு நல்கி வந்துள்ளது. அதன் பயனாக 1940 காலப்பகுதியில் தமிழ்ப் பத்திரிகைத் துறையில் முன்னேற்றக் கொள்கையையும், தேசியத் தன்மையையும் முன்னெடுத்துச் செல்வதில் தினகரனால் பிரதான பாத்திரம் வகிக்க முடிந்தது. இக்காலப்பகுதியில் இந்நாட்டு தமிழ் மொழி அறிஞர்களின் படைப்புகளுக்கும் தினகரன் இடம்கொடுத்தது.

மேலும் சு. வித்தியானந்தன் லண்டன் சென்று கலாநிதிப் பட்டத்தைப் பெற்றார். அவர் தம் லண்டன் பயணம் தொடர்பாக எழுதிய பயணக் கட்டுரையைத் தினகரன் வெளியிட்டது. அதுவே பயணக் கட்டுரை இலக்கியத்திற்கு முன்னோடியாக விளங்கியது.

தேசிய இலக்கியமாக உருவெடுத்த ஈழத்து இலக்கியம், உலக இலக்கியங்களோடு தன்னைப் பரிச்சயம் செய்து கொள்ள வேண்டும்' என்ற சிந்தனை தோற்றம் பெற தினகரன் வழிவகுத்தது. அந்த வகையில் உலகின் சிறந்த நாவலாசிரியர்களின் படைப்பிலக்கியங்கள் குறித்து இலங்கை எழுத்தாளர்கள் தினகரனில் ஆய்வுகளை எழுதினர்.

மார்க்சிம் கோர்க்கி, ஜேம்ஸ் ரெய்லர், ஹெமிங்வே, ஏனெஸ்ட், எமிலி ஜோலா, வெர்ஜினியா வுல்ப், தகழி சங்கரப்பிள்ளை போன்ற பிறமொழி எழுத்தாளர்கள் குறித்தும், அவர்களது படைப்புகள் குறித்தும் 1960 காலப்பகுதியிலேயே ஆய்வு செய்த ஒரே தினசரி தினகரன்தான்.

இவ்வாறு இந்நாட்டின் தமிழ் பேசும் மக்களின் கலை இலக்கிய வளர்ச்சிக்கு நான்கு தசாப்தங்களுக்கும் மேலாகப் பங்களித்து வந்த தினகரன் பத்திரிகையும் அதன் வெளியீட்டு நிறுவனமாக விளங்கும் லேக் ஹவுஸ் நிறுவனமும் 1973.06.23 அன்று அரசுடைமையாக்கப்பட்டன.

ஆனாலும் எத்தனையோ தடைகளையெல்லாம் தாண்டி தினகரன் இந்நாட்டின் கலை இலக்கிய வளர்ச்சிக்கு தொடர்ந்தும் தனது பங்களிப்பை நல்கி வருகின்றது. இதன் பாசறையில் ஆரம்பம் முதல் இற்றைவரை நூற்றுக்கணக்கான கலை, இலக்கிய படைப்பாளர்களும் ஊடகவியலாளர்களும் உருவாகியுள்ளனர். அவர்கள் தொடர்ந்தும் உருவாக்கப்பட்டு வருகின்றனர்.

ஆகவே இந்நாட்டில் தமிழ் பேசும் மக்களின் கலை, இலக்கிய, கலாசார, அறிவியல் மேம்பாட்டுக்காக தினகரன் அளித்துள்ள பங்களிப்புகள் இலங்கையின் கலை, இலக்கிய, ஊடகத்துறை வரலாற்றில் அழியாத் தடம் பதித்துள்ளன. அதனால் அவை என்றும் பிரகாசமாக ஒளிர்பவையே.

_எம். எம்

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

என்றும் வற்றாத மகாநதி தினகரன்

அறுபதைத் தாண்டிய வடபகுதி மக்கள் உள்ளத்தில் தினகரனுக்கென்று பசுமையான இடமுண்டு. அவர்கள் தமது இளமைக்கால தினகரன் அனுபவங்களில் அடிக்கடி மூழ்கிப் போவார்கள்.

"அன்றைய காலத்தில் விடியலில் யாழ். ரயில் நிலையத்துக்கு தினகரன் பார்சல் வந்து விடும். ஆறு மணிக்கெல்லாம் யாழ். நகரத்தில் தினகரன் விற்பனைக்குக் கிடைக்கும். அறுபதுகளின் ஆரம்பத்தில் இலங்கையில் பரபரப்பாக விளங்கிய பத்திரிகை இது.

தினகரன் நாளிதழ் 1932 மார்ச் 15 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட போது முதலாம் உலகப் போர் முடிவுற்றிருந்த காலம். 17 வருடங்களுக்கு முன்னரே போர் முடிவுற்று உலக நாடுகள் தம்மைத்தானே சீரமைத்துக் கொண்டிருந்த காலம். அக்காலத்தில் சில பேரரசுகளே இவ்வுலகை ஆண்டு வந்தன. ஓட்டோமமான் பேரரசு, பிரிட்டிஷ் பேரரசு, ரஷ்ய பேரரசு, ஒஸ்டரோ – ஹங்கேரி பேரரசு ஆகிய பேரரசுகள் ஐரோப்பிய நிலப்பரப்பில் செல்வாக்கு செலுத்தி வந்தன. போருக்குப் பின் இப்பேரரசுகள் ஆட்டக் காணத் தொடங்கின. முதலாம் உலகப் போரின் பின் விளைவுகள் உலகை இரண்டாம் உலகப் போரை நோக்கி நகர்த்திக் கொண்டிருந்தன. 1933 இல் ஜெர்மனிய அதிபராக ஹிட்லர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். 1933 ஜனவரி இதழில் தினகரன் இச்செய்தியை வெளியிட்டிருந்தது.

எனவே, ஒரு முக்கியமான காலக்கட்டத்தில்தான் தினகரன் தமிழ் மக்களின் செய்தித் தூதுவனாக வருகிறான். அடுத்துவரும் 15 ஆண்டுகள் முக்கியமான காலப் பகுதி. இரண்டாம் உலகப் போர் மூள்கிறது. முதலாம் உலகப் போரின் பின்னர் உலக்குக் அறிமுகமாகும் பொதுவுடமை அல்லது கம்யூனிசம் ரஷ்யாவில் காலூன்றுகிறது. அமெரிக்கா ஒரு புது உலக வல்லரசாக உருவெடுக்க உலக சக்கராதிபத்தியமாக விளங்கிய பிரிட்டிஷ் பேரரசு படிப்படியாக வலுவிழக்க ஆரம்பிப்பதும் இந்த 17 வருட முடிவில்தான். அன்றைய நாளிதழ்களில் சக்கரவர்த்தி, சக்கராதிபத்தியம் என்றே பேரரசர்களையும் பேரரசுகளையும் குறிப்பிட்டு வந்தார்கள். இன்றைக்கு சக்கரதிபத்தியம் என்றால் என்னவென்று மாணவர்களிடம் கேட்டால் அவர்களுக்கு அதன் பொருள் தெரிந்திருக்க வாய்ப்பிருக்காது.

பத்திரிகை என்பது வரலாற்றின் தடங்கள். வரலாற்று நிகழ்வுகளை ஆதாரங்களுடன் தெரிந்து கொள்வதற்கான ஒரே மார்க்கம் பழைய பத்திரிகைகளாகவே இருக்கின்றன. இதனால்தான் செய்திகள் நடந்தவற்றை மட்டும் எந்த வர்ணனையும் யூகமும் அற்றதாக எழுதப்பட வேண்டும் என்பது மாறாத இதழியல் கோட்பாடாக விளங்கி வருகிறது. 1933 ஆம் ஆண்டு தினகரனை புரட்டிப் பார்க்கும் போது இரண்டாம் உலகப் போருக்குத் தயாராகிக் கொண்டிருக்கும் உலகையும் மறுபுறத்தில் விடுதலைக்காக போராடி வரும் இந்தியாவையும் செய்திகளினூடே தரிசிக்க முடிகிறது.

பத்திரிகையை நதியுடன் ஒப்பிடலாம். நதி நூற்றாண்டுகளாக ஓடிக் கொண்டிருக்கும். தன்னில் விழுபவற்றை அடித்துச் சென்றுவிடும். ஆனால் நதியைச் சூழவுள்ள மண்ணில் தொடர்ந்து மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டே இருக்கும். நதி அப்படியே இருக்க அதனைச் சூழவுள்ளவை மாறிக் கொண்டிருப்பதற்கு அந்த நதியே சாட்சி. 90 ஆம் ஆண்டில் காலடி வைத்திருக்கும் தினகரன் நாளிதழையும் நதியோட்டத்துடன் ஒப்பிடலாம். நைல் நதி

வடபகுதி மக்களால் பேரபிமானத்துடன் நேசிக்கப்பட்ட நாளிதழ்

இன்றைக்கும் ஓடிக்கொண்டிருக்க அது ஓடும் பகுதிகள் எத்தனையோ மாற்றங்களைச் சந்தித்து விட்டன. தினகரன் பழைய ஏடுகளைப் புரட்டிப் பார்க்கும் போது இந்தப் பெருநதி எத்தனை மாற்றங்களைக் கண்டு வந்திருக்கிறது என்பது புரிகிறது.

தமிழ் பேசும் மக்களுடன் அதே பழைய பாசத்துடனும் நேசத்துடன் கைகோர்த்துச் செல்கின்றது தினகரன். ஒரு தேசிய பத்திரிகையாக சேவையாற்றுகின்றது.

தினகரன் பற்றி பூபாலசிங்கம் ஸ்ரீதர்சிங்கிடம் பேசிக் கொண்டிருந்த போது அவர் அறுபதுகளின் நினைவுகளில் மூழ்குகிறார்.

"ஐயா, தினகரன் அந்த காலத்தில் எங்களுக்கு வாழ்வு அளித்தது என்றால் அது மிகையாகாது. யாழ்ப்பாணம் பூபாலசிங்கம் புத்தக சாலைதான் லேக்ஹவுஸ் நியுஸ் ஏஜண்ட், டெய்லி நியூஸ், ஒப்சேர்வர் மற்றும் தினகரன் பேப்பர்களுக்கு இங்கு நல்ல டிமாண்ட் இருந்த காலம் அது. அதிகாலையில் யாழ்தேவி

தமிழ் பேசும் மக்களுடன் பாசத்துடனும், நேசத்துடன் கைகோர்த்துச் செல்கின்றது தினகரன். ஒரு தேசிய பத்திரிகையாக தொடர்ந்தும் அது சேவையாற்றுகின்றது.இனிமேலும் இந்தத் தடத்திலேயே இம்மகாநதி பயணிக்கும்

வந்ததும் பத்திரிகைகளை கொண்டு வந்து விடுவோம். தினகரன் சுடச்சுட விற்றுத் தீர்ந்து விடும். இவை தவிர வாரத்துக்கு ஐயாயிரம் ஆனந்த விகடனும் ஐயாயிரம் குமுதமும் எங்களுக்கு கொழும்பில் இருந்து வரும். ஆனந்த விகடன். குமுதம் மற்றும் லேக்ஹவுஸ் புதினப் பத்திரிகைகள் விற்பனை மூலம் கிடைக்கும் வருவாய் அதிகம்" என்று கூறுகிறார் ஸ்ரீதர்சிங்.

தினசரிகளை ஆங்கிலத்தில் Heart beat of the Nation என்று அழைப்பார்கள். மக்களின் நாடித்துடிப்பாக சொல்லப்படுவதே பத்திரிகைகளின் பணி. தினகரன் அதை நீண்ட காலமாக செய்து வந்திருக்கிறது என்பதற்கு அது ஆற்றி வந்திருக்கும் கலை கலாசார மற்றும் இலக்கியப் பணிகளே சான்றுகளாகும்.

அறுபதுகளில் ஒவ்வொரு ஜனவரி அல்லது சித்திரை மாதங்களில் யாழ். முற்றவெளியில் தினகரன் விழா வருடா வருடம் நடந்து வந்திருக்கிறது. இந்த தினகரன் விழாக்களில் மாட்டு வண்டி போட்டி பிரசித்தம். யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் இருந்து வண்டில்கள் வந்து போட்டியில் கலந்து கொள்ளும். மாறுவேடப் போட்டி, ஓட்டப் போட்டிகள், கலாசாரம் சார்ந்த போட்டிகள் மற்றும் நிகழ்வுகள் வருடா வருடம் தினகரன் விழாவில் நடத்தப்பட்டு வந்திருக்கின்றன.

தினகரன் பொங்கல் மலர், நாடக விழா மலர் என அவ்வப்போது ஏரிக்கரை நிறுவனம் புத்தக வடிவில் இம்மலர்களை வெளியிட்டு வந்திருக்கிறது. 1969 இல் கொழும்பில் தினகரன் ஒரு நாடகப் போட்டியை நடத்தி வெற்றி பெற்றவர்களுக்கு ஆயிரம் ரூபா, 500 ரூபா என பணப் பரிசுகளையும் வழங்கி இருக்கிறது. அக்காலத்தில் ஆயிரம் ரூபா என்பது மிக உயர்ந்த தொகை, ஒரு ஏக்கர் காணி வாங்கிப் போடலாம்.

இவற்றை எல்லாம் சீர்தூக்கிப் பார்க்கும் போது ஒரு பத்திரிகையை எப்படி வழிநடத்த வேண்டும், அதன் சமூக பங்களிப்பு எத்தகையதாக இருக்க வேண்டும் என்பதை அன்றைய லேகஹவுஸ் நிர்வாகமும் தினகரன் ஆசிரியர்களும் மிகச் சரியாகப் புரிந்து செயலாற்றி வந்திருக்கிறார்கள் என்பதை அறிந்துகொள்ள முடிகிறது.

ஒரு நதியானது தான் செல்லுமிடமெல்லாம் வளமாக்கிப் பயணிக்கும். இது நதியின் இயல்பு, தினகரனின் வரலாற்றுத் தடங்களைப் பார்க்கும் போது இப்பெருநதியும் தான் சென்ற இடங்களில் எல்லாம் கலை கலாசாரம் மற்றும் இலக்கிய எழுச்சியையும் மறுமலர்ச்சியையும் ஏற்படுத்தி இருக்கிறது என்பதற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன. ஏனெனில் தினகரனை வெறும் செய்திப் பத்திரிகையாக மட்டும் தமிழ் பேசும் மக்கள் பார்க்கவில்லை. கலாசார மற்றும் இலக்கியக் காவலனாகவும் ஆசிரியனாகவும் பார்த்தார்கள்; நேசித்தார்கள். அன்றைய பிரபல எழுத்தாளர்கள், நாடகாசிரியர்கள், புலவர்மார் மற்றும் பொதுவுடமை, சீர்திருத்த சிந்தனையாளர்களுக்கெல்லாம் தினகரன் களம் அமைத்துத் தந்திருக்கிறது.

இனிமேலும் இந்தத் தடத்திலேயே இம்மகாநதி பயணிக்கும்.

அருள் சத்தியநாதன்

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

தமிழ் பேசும் மக்களுக்கு கிடைத்த மிகப் பெரும் கொடை தினகரன்

இளம் எழுத்தாளர்களை ஆதரிப்பதிலும், கைத்தூக்கி விடுவதிலும் தினகரன் எப்போதும் முன்னணியில் இருந்துள்ளது. இன்று எம்மை அறியாமலே 90 வருடங்களை தினகரன் நிறைவு செய்துள்ளது. தினகரனோடு கடந்த காலங்களில் நாங்களும் எமது முன்னோர்களும் பெற்றிருந்த இடையறாத தொடர்பு நம் நினைவுக்கு வருகின்றது

தினகரன் அதன் 90 ஆம் ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இந்தச் சந் தர்ப்பத்தில் எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் நான் பெரிதும் மகிழ்ச்சியடை கின்றேன். தமிழ் மொழியூடான இலங்கையின் தேசியப் பத்திரிகைகளில் தினகரன் எப்போதும் அதன் முக்கிய பாத்திரத்தை வகித்து வந்துள் ளது. இன, பிராந்திய வேறுபாடுகள் இன்றி தமிழ் பேசும் அனைத்து மக்களையும் தழுவி யதாக இன்றுவரை அது ஆற்றி வரும் ஊடக சேவை மக்களின் கவனத்தைப் பெற்றுள்ளது. பல்லின, பல்சமய மக்களைக் கொண்ட நமது நாட்டில் ஊடகத்திற்கு தவிர்க்க முடியாத பங்கும் பொறுப்பும் இருக்கின் றது. எழுதப்பட்ட மற்றும் எழுதப்படாத பல்வேறு ஒழுக்க நியாயங்கள் பிர மாணங்கள் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய சூழலில், அதைச் சரிவர நிறைவேற்றும் பத்திரி கைகளை நாம் பாராட் டாது இருக்க முடியாது.

தேசிய மட்டத்தில் மக்கள் ஒன்றிணைவ தற்கு அந்த மக்களைப் பிரதிபலிக்கின்ற செய்தி ஊடகங்கள் தவிர்க்க முடியாதவை. ஜனநாயக வழிமுறைகளுக் கும் ஜனநாயக உணர்வுகளுக்கும் ஊடகங்க ளின் பங்களிப்பு மிக முக்கியமானது. மொழி வளர்ச்சி, அந்த மொழியில் பங்கேற்கும் மக் களின் உணர்வுகள், பண்பாடுகள், சாதனை கள், எதிர்பார்ப்புகள், ஏக்கங்கள், துயரங்கள் பிரதிபலிக்கப்பட வேண்டும். எல்லா மக்களும் அதனை எதிர்பார்க்கின்றார்கள். மக்கள் செய் தித்தாள்களை பணம் கொடுத்து வாங்குவதில் இருக்கும் ஆர்வத்தில் ஒரு முக்கிய பகுதி இது வாகும்.

மக்களின் உணர்வுகளை நியாயமான முறையில் பிரதிபலிக்கும் பொறுப்பை ஊடகங் கள் ஏற்றுள்ளன. ஊடகங்கள் இன்றி ஒரு ஜன நாயக நாட்டில் நாளாந்த வாழ்க்கையைக் கூட சரிவரக் கொண்டு செல்ல முடியுமா என்ற அள வுக்கு அவை எம்முடன் நெருங்கிய தொடர்புகள் கொண்டு இருக்கின்றன.

90 வருடங்கள் என்பது ஒரு நீண்ட காலம். பத்திரிகைகளைத் தொடர்ந்து வெளியிடுவ தும், அதன் தரத்தைப் பேணுவதும், மக்கள் எதிர்ப்பார்ப்பை நிறைவேற்றுவதும், நீதியான பார்வையும் என்ற இலட்சியங்களில் வெற்றி பெறுவதுதான் ஒரு ஊடகத்தின் சாதனை. ஒரு காலத்தில் ஆங்கிலத்தில் 'டெய்லி நியூஸ்' சிங் களத்தில் 'தினமின' போன்ற பத்திரிகைகள் கோலோச்சி வந்தன. இவற்றுக்கு சளைக்காத ஒரு பாத்திரத்தை தினகரன் எடுத்திருந்தது. அது தமிழ் பேசும் மக்களுக்குக் கிடைத்த மிகப் பெரிய கொடையாகும். தினகரன் வாரமஞ்சரி அதன் நீண்ட வரலாற்றில் கலை, இலக்கியம், விமர்சனம், சினிமா, வாழ்க்கை, அரசியல், விளையாட்டு போன்றவற்றை ஒரு ஆய்வு நிலைப்படுத்தி வெளியிட்டு வந்த கட்டுரைகள் இலங்கையின் தமிழ் இலக்கியத் துறைகளி லும், அறிவு மற்றும் பண்பாட்டு மேம்பாட்டி லும் குறிப்பிடத்தக்க பங்களிப்பினை வழங்கி வந்துள்ளது.

எவ்வளவுதான் நவீன சாதனங்கள் செய்திச் சாதனங்களாக மாறி இருந்தாலும் பத்திரிகை அதன் சக்தியை எந்த நிலையிலும் இழக்க வில்லை. இன்றும் மக்கள் பத்திரிகையோடு நெருங்கிய தொடர்பை வைத்துள்ளனர்.

எந்த வழியில் நோக்கினா லும் உலகில் நடந்த மிகப் பெரிய புரட்சிகளில் செய்திப் பத்திரிகையின் தோற்றமும் வளர்ச்சியும் மிகப் பெரிய மனித சாதனையாகும். செய்திகளை அறிவதற்கும் தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்கும் தடுமாற்றத் தில் இருந்த மனித குலம் செய்திப் பத்திரிகைகள் மற்றும் ஊடகங்கள் ஊடாக ஏற்படுத்திய தாக்கம் மிகப் பெரியதாகும்.

ஜனநாயக சுதந்திர வளர்ச்சியிலும் பத்திரிகை களின் தாக்கம் மிக முக்கி யமானதாகும். அதனால், ஒரு தேசம் அதன் பத்தி ரிகை வளர்ச்சியில் அவற் றுக்கு வழங்கும் சுதந்திரத் தில் தாராளமாக நடந்து கொள்ள வேண்டிய பெரிய தேவை இருக்கின்றது.

எந்த நிலையிலும் பத் திரிகைகளின் சுதந்திர மான கருத்து வெளியீடுகள் காப்பாற்றப்பட வேண்டும் என்பதுதான் ஜனநாயக நியதி. எங்கள் பத்திரிகைகள் ஊடாகவும் இந்த உணர் வுகளை நாம் பெற்றிருக்கிறோம்.

தினகரன், தினகரன் வாரமஞ்சரி இரண்டும் தவிர்க்க முடியாத குடும்ப ரீதியான உறவுகளை எல்லாத் தரப்பு மக்களிடத்திலும் பெற்றிருந் தது வரலாறு. முஸ்லிம்கள், மலையக மக்கள், பிராந்திய ரீதியான மக்களின் தேவைகள், கலா சாரங்கள், செய்திகள் இவற்றை பாரபட்சமற்ற முறையில் செய்திகளாகவும், கட்டுரைகளாக வும், கருத்துரைகளாகவும், காட்சிப்படங்களா கவும் காட்டி வருகின்ற அல்லது பிரசுரித்து வருகின்ற பெருமை தினகரனுக்கும் அதன் சகோதர இதழ்களுக்கும் உண்டு.

ஏரிக்கரைப் பத்திரிகை என்ற பெயரில் தினகரன் ஆற்றிய சேவைகள் பசு மையாக மனதில் இன்றும் உள்ளன. இலங்கையின் தலைசிறந்த தமிழ் அறி ஞர்கள், முஸ்லிம் அறி ஞர்கள், எழுத்தாளர்கள், விமர்சகர்கள், ஆய்வுரை யாளர்கள் வழங்கிய பங்க ளிப்புக்களை நாம் எவ்வி தத்திலும் மறக்க முடியாது. எத்தனையோ அறிஞர்க ளையும் எழுத்தாளர்களை யும், விமர்சகர்களையும் மக்கள் மனதில் பதிய வைத்ததில் தினகரனுக்குப் பெரிய பங்கு உண்டு. இளம் எழுத்தாளர்களை ஆதரிப் பதிலும், கைதூக்கி விடு வதிலும் தினகரன் எப் போதும் முன்னணியில் இருந்துள்ளது. இன்று எம்மை அறியாமலே 90 வருடங்களை தினகரன் நிறைவு செய்துள்ளது. தினகரனோடு கடந்த காலங்களில் நாங்களும் எமது முன்னோர் களும் பெற்றிருந்த இடையறாத தொடர்பு நம் நினைவுக்கு வருகின்றது. மக்களை அரவ ணைத்து செல்வதும் மக்களின் நியாயமான உணர்வுகளைத் துணிவோடு சொல்வதும், தமிழ் பேசும் மக்கள் பிரிவினரிடையே ஒருமைப்பாட் டைக் கட்டியெழுப்புவதும் தேசிய நலன்களில் நம் அனைவரதும் பங்கினை வெளிப்படுத்துவ தும் பெரிய பொறுப்பாகும். இது ஒரு பெரிய பயணம். இப்பயணத்தில் தினகரன் தொடர்ந் தும் சாதனைகள் புரிய வேண்டும் என்பதே எனது அவா.

பேராசிரியர்
எம்.எஸ்.எம். அனஸ் ...

ஏரிக்கரைப் பத்திரிகை என்ற பெயரில் தினகரன் ஆற்றிய சேவைகள் பசுமையாக மனதில் இன்றும் உள்ளன. இலங்கையின் தலைசிறந்த தமிழ் அறிஞர்கள், முஸ்லிம் அறிஞர்கள், எழுத்தாளர்கள், விமர்சகர்கள், ஆய்வுரையாளர்கள் வழங்கிய பங்களிப்புக்களை நாம் எவ்விதத்திலும் மறக்க முடியாது. எத்தனையோ அறிஞர்களையும் எழுத்தாளர்களையும், விமர்சகர்களையும் மக்கள் மனதில் பதிய வைத்ததில் தினகரனுக்குப் பெரிய பங்கு உண்டு. இது ஒரு பெரிய பயணம். இப்பயணத்தில் தினகரன் தொடர்ந்தும் சாதனைகள் புரிய வேண்டும் என்பதே எனது அவா

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

வாசிப்பு பழக்கத்தை உலகிற்கு அறிமுகப்படுத்திய அச்சுக்கலை

***'எ**ண்ணும் எழுத்தும் இரு கண்ணெனத் தகும்' இரு கண்களான எண்ணையும், எழுத்தையும் புகைப்படத்தையும் இணைத்து மக்களுக்கு செய்தியையும்; வாசகனுக்கு கதையையும், கட்டுரையையும், நாவலையும்; பொதுமக்களுக்கு அறிவித்தல்களாக சுவரொட்டிகளையும், துண்டுப்பிரசுரங்களையும் என வழங்கி பல வடிவங்களில் தற்கால அச்சுக்கலை வளர்ந்து நிற்கின்றது.*

அச்சுக்கலை

அச்சுக்கலை என்பது, அச்சிடுவதற்கான ஒரு பகுதி, கற்பதற்கும், அடையாளம் காண்பதற்கும் கவர்ச்சியானதாக இருக்கும் வகையில் அச்செழுத்துக்களை ஒழுங்குபடுத்தும் ஒரு கலையும் தொழில்நுட்பமும் ஆகும்.

ஆரம்பத்தில் கைகளால் எழுதப்பட்டு ஒரு சில பிரதிகளுடன் சுவரொட்டிகளாக மக்களிடையே தகவல்களை பரப்புவதற்காக மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட தகவல் பரிமாற்றமானது, பின்னர் படிப்படியாக வளர்ந்த கல்வியறிவும், மக்களிடையேயான தகவலை பெறுவதற்கும் பரிமாறுவதற்குமான பல்வேறு தேவைப்பாடும் காரணமாக, அச்சிடும் கலையை நோக்கி உலகத்தை நகர வைத்தது.

அச்சுக்கலையின் ஆரம்பமானது, எழுதுவதற்கென பண்டைய எகிப்தியர்களால் 4ஆம் நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்ட கடதாசியின் ஆரம்பத்துடன் ஆரம்பமாகி, அதன் பின்னர் 8ஆம் நூற்றாண்டில் சீனர்களால் கண்டுபிடிக்கப்பட்ட நெகிழ்வுத் தன்மை கொண்ட கடதாசி மூலம் உயிர் பெற்றது.

அச்சிடல் ஆரம்பம்

அச்சிடும் வரலாறு கிமு 3500 இல் ஆரம்பமான போதிலும், அது ஆவணங்களை சான்றளிக்கும் முத்திரைகள் (சீல்) குத்துவதற்கும், நாணயங்கள், மட்பாண்டங்கள், துணிகளில் அச்சிடுதலை மையப்படுத்தியாக இருந்தது.

அதனைத் தொடர்ந்து, கி.பி. 220 இல் துணிகளில் அச்சிட பயன்படுத்தப்பட்ட Woodblock அச்சிடும் முறையானது, சீனாவில் 7 ஆம் நூற்றாண்டில் காகிதத்தில் அச்சிடுவதற்காக பயன்படுத்தப்பட்டது. இங்கு மரத்துண்டுகளில் அச்சுக்கான வெட்டுகள் மூலம் அச்சு தயாரிக்கப்பட்டு அதில் மை தடவி அச்சிடப்பட்டது.

அதன் பின்னர், அசையும் வகை (Movable type) அச்சிடலானது 11 ஆம் நூற்றாண்டில் சீன கைவினை கலைஞர் பி ஷெங் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் இது Woodblock அச்சிடலுடன் ஒப்பிடும்போது மட்டுப்படுத்தப்பட்ட பயன்பாட்டை கொண்டதாக இருந்தது. ஆயினும், இத்தொழில்நுட்பமானது சீனாவிற்கு வெளியே பரவியதுடன், உலோக அசையும் செயற்பாட்டுடன் மெருகூட்டப்பட்டு புத்தகம் அச்சிடுவதற்கும் உதவியது. 1377இல் கொரியாவில் Jikji எனும் புத்தகம் இதன் மூலம் அச்சிடப்பட்டிருந்தது.



அச்சிடும் இயந்திர கண்டுபிடிப்பு

அதன் பின்னர் அச்சுக்கலையின் தந்தை என வர்ணிக்கப்படும் ஜேர்மனியைச் சேர்ந்த ஜொஹன்னஸ் குட்டன்பேர்க் என்பவரால் 15ஆம் நூற்றாண்டில் இயந்திர வகை அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டது. அதனுடன் இணைந்தவாறு ஐரோப்பிய மறுமலர்ச்சியும் ஏற்பட்டது.

உருக்கி வார்த்த அச்சு

ஒவ்வொரு எழுத்துகளும் வார்க்கப்பட்டு அவை இடம் வலமாக கண்ணாடி விம்பம் போல் உருவாக்கப்பட்டு அதில் மை தடவப்பட்டு பின்னர் மீண்டும் மையின் பிரதிபலிப்பை தோன்றச் செய்வதன் மூலம் அதிலுள்ள எழுத்துகள் கடதாசியில் தோன்றச் செய்வதே ஆரம்ப இயந்திர வகை அச்சிடலில் தொழில்நுட்பமாக இருந்தது.

இவ்வகை அச்சிடலானது பெரும்பாலான நாடுகளில் பரவலாக பயன்படுத்தப்பட்ட ஒரு அச்சிடல் முறையாக காணப்பட்டது.

Movable type – அசையும் வகை (கிபி 1040)

அச்சிடும் கருவியிலுள்ள பாகங்களின் அசைவின் மூலம் அச்சிடப்படும் முறையாகும். இதுவே ஜொஹன்னஸ் குட்டன்பேர்க் கண்டுபிடித்த அச்சு இயந்திர வகையாகும். இது கி.பி. 1040ஆம் ஆண்டில் அறிமுகமானது.

Intaglio (கிபி 1430)

இது பள்ளம் மேடு என்பதன் அடிப்படையில் அச்சிடும் மை நிரப்பப்படும் பகுதி மற்றும் நிரப்பப்படாத பகுதி எனும் வகையில் வெட்டப்பட்டுள்ள அச்சு சட்டத்தின் மீது மை தடவப்பட்டு பின்னர் அது துடைத்தெடுக்கப்பட்டு பின்னர் அதில் கடதாசியுடனான உருளை மிகையான அழுத்தத்தில் உருட்டச் செய்யப்படும், இதன் மூலம் தவாளிப்புகளில் உள்ள மை கடதாசியில் அச்சிடப்படும்.

இம்முறையின் மூலமே பண நோட்டுகள் அச்சிடப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

Printing press (கிபி 1440) அச்சகம்

இவ்வகையான அச்சிடல் கிராமப்புறங்களில் இன்னும் காணப்படுகின்றன. ஈயம்சார்ந்த கலப்புலோகத்தில் இருந்து வார்க்கப்பட்டு, துண்டு துண்டாக தனித்தனியாக இடம் வலமாக மாறிய நிலையில் உள்ள தனித்தனி எழுத்துகளை (எழுத்துப் பிழையின்றி) சட்டகமொன்றில் கோர்த்து அவை அச்சு இயந்திரத்தில் இணைக்கப்பட்டு, வண்ணப்பூச்சை வழங்கும் உருளையினால் மைதடவப்படும். இவ்வாறு மை தடவப்பட்ட எழுத்துச் சட்டகம் கடதாசியில் பதியச் செய்யப்பட்டு அச்சு பிரதி செய்யப்படும். இதன்போது அச்சிடப்பட்ட கடதாசி உடனுக்குடன அகற்றப்படும். இச்செயற்பாடு தொடர்ச்சியாக இடம்பெறுவதன் மூலம் பிரதிகள் உருவாக்கப்பட்டு கொண்டிருக்கும்.

இதுவே மிகப் பிரபலமான அச்சிடும் முறையாக இருந்து வந்தது. இவை கைகளால் மற்றும் நீராவி மூலம் இயக்கப்பட்டதோடு, மணிக்கு 240 முதல் 2,400 பிரதிகளை வழங்கின.

இதில் ஒரு சில மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு பல்வேறு வகையான அச்சிடும் இயந்திர வகைகள் உருவாகின.

Lithography (கிபி 1796)

லித்தோகிராபி என்பது எண்ணெய் மற்றும் தண்ணீரின் கலப்படமற்ற தன்மையை அடிப்படையாகக் கொண்டு அச்சிடுவதற்கான ஒரு முறையாகும்.

இது தற்போதுள்ள கணனி மூலம் உருவாக்கப்படும் அச்சு Plate இற்கு ஒத்ததாகும். அச்சிடப்படும் பகுதி மையை தக்க வைப்பதாகவும், அச்சிடப்படக் கூடாத பகுதி எண்ணெய்த் தன்மையானதாகவும் இருக்கும். இத்தட்டில் மையை முழுமையாக பூசும்போது அதில் மையை உறுஞ்சும் பகுதி அச்சிட்டு வெளிவருவதோடு, எண்ணெய்த் தன்மையான பகுதியில் மை உறுஞ்சப்படுவதில்லை என்பதால் அது வெறுமையாக இருக்கும்.

Chromolithography (கிபி 1837)

குரோமோலிதோகிராபி என்பது பல வண்ண அச்சிட்டுகளை உருவாக்குவதற்கான ஒரு முறையாகும். இந்த வகை வண்ண அச்சிடுதல் லித்தோகிராஃபி செயல்முறையிலிருந்து உருவானதாகும்.



2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

அச்சுக்கலை நாகரிகத்தில் தினகரனின் பரிணாமம்



Rotary press (கிபி 1843)

இங்கு நீர் எதிர்ப்புத் தன்மையின் அடிப்படையில் மையைக் கொண்ட பகுதி மையை கொண்டிராத பகுதி என்பதன் அடிப்படையிலான அச்சுத் தகடு, உருளையில் இணைக்கப்பட்டு, அது நேரடியாக அச்சிடும் மையில் துவைக்கப்படும், அவ்வாறு மையில் துவைக்கப்பட்ட உருளை நேரடியாக அச்சிடும் கடதாசியில் அழுத்தப்பட, அச்சிடல் இடம்பெறுகின்றது.

இங்கு அச்சிடும் தகடு இடம் வலம் மாற்றமாக (கண்ணாடி விம்பம் போல்) காட்சியளிக்கும்.

Offset printing (கிபி 1875)

இங்கு நீர் எதிர்ப்புத் தன்மையின் அடிப்படையில் மையைக் கொண்ட பகுதி மையை கொண்டிராத பகுதி என்பதன் அடிப்படையிலான அச்சுத் தகடு, உருளையில் இணைக்கப்பட்டு, அது நேரடியாக அச்சிடும் மையில் துவைக்கப்படும், அவ்வாறு மையில் துவைக்கப்பட்ட உருளை மற்றொரு உருளையில் மை பதிந்த அச்சை பதிவு செய்ய, குறித்த உருளையின் ஊடாக இன்னுமொரு உருளையிலிருந்து வரும் கடதாசி அதில் அழுத்தப்பட, அச்சிடல் இடம்பெறுகின்றது.

இங்கு அச்சிடும் தகடு வெளியே வருகின்ற அச்சை போன்று காணப்படுவதோடு, அது மற்றொரு உருளையில் பதிவதனால் உருவாகும் இடம் வலம் மாற்றமடைந்த அச்சு மற்றொரு உருளையில் பதிவதனால் உருவாகும் அச்சு கடதாசியில் பதிந்து அச்சை வெளிப்படுத்துகிறது.

Hot metal typesetting (கிபி 1884)

உருக்கப்பட்ட உலோகத்தில் பாரிய நெம்பின் மூலம் (டைப்ரைட்டர் போன்று) நேரடியாக டைப் செய்து அதனை வார்ப்புகளாக வசனங்களாக மாற்றி பின்னர் அவற்றை கோர்த்து அச்சிடுதல்.

Mimeograph (கிபி 1885)

இது ஸ்டென்சில் அடிப்படையிலான அச்சிடும் முறையாகும். இது மிக இலாபகரமான முறையென கருதப்படுகின்றது. மெல்லிய ஸ்டென்சில் தாளை பிரதியெடுப்பதன் மூலம் இது அச்சிடலை மேற்கொள்கிறது.

கடதாசி தவிர உலோகங்கள், சீரான மேற்பரப்புகள் உள்ளிட்ட வெவ்வேறு பொருட்களிலும் அச்சிடுவதற்கு வெவ்வேறு முறைகள் பயன்படுத்தப்பட்டன.

Etching பொறித்தல் (கிபி 1515), Mezzotint (கிபி 1642), Relief printing (கிபி 1690), Aquatint (கிபி 1772), Hectograph (கிபி 1860), Hot metal typesetting (கிபி 1884), Daisy wheel printing (கிபி 1889), Photostat and rectigraph (கிபி 1907), Screen printing (கிபி 1911), Spirit duplicator (கிபி 1923), Dot matrix printing (கிபி 1925), Xerography (கிபி 1938), Spark printing (கிபி 1940), Phototypesetting (கிபி 1949), Inkjet printing (கிபி 1950), Dyesublimation (கிபி 1957), Laser printing (கிபி 1969), Thermal printing (கிபி 1972), Solid ink printing (கிபி 1972), Thermaltransfer printing (கிபி 1981), 3D printing (கிபி 1986), Digital printing (கிபி 1991)

இவ்வாறு பல்வேறு கால கட்டங்களில் நவீனத்துவமடைந்து, அச்சுக்கலையானது, பல்வேறு சவால்களுக்கு மத்தியில் தொழில்நுட்பத்துடன் இன்றும் போட்டி போட்டு தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது.

லேக் ஹவுஸ்

இவ்வாறு பத்திரிகைத் துறையின் தாய்வீடான லேக் ஹவுஸ் நிறுவனமும் பல்வேறு காலகட்டத்தில் காலத்திற்கேற்ப, வாசகர்களின் வசதிக்கேற்ப, பத்திரிகைகளை அச்சிடுவதற்கு பல்வேறு தொழில்நுட்பங்களை பயன்படுத்தி அச்சுக்கலையையும், பத்திரிகைக் கலையையும் வாழ வைத்துக் கொண்டிருக்கின்றது.

அச்சிற்கே அங்கீகாரம்

'தேசமானி' என்பது 'சேதமானி' ஆவதும், 'தயாரானார்' என்பது 'தாயாரானார்' ஆவதும், எழுத்துகளை கோர்க்கின்ற காலம் தொட்டு தற்காலம் வரை, தொழில்நுட்ப வளர்ச்சி ஏற்பட்ட போதிலும் மனிதப் பிழைகளால் ஏற்படும் தவறுகளால் அச்சும் அது சார்ந்த துறைகளும் பேசுபொருளாக மாறுவதும், பாதிப்பை எதிர்நோக்குவதும் ஒரு புறமிருக்க, மற்றொரு புறத்தில் அச்சுக்கலையில் உயிர் வாழும் பத்திரிகைகளும், சஞ்சிகைகளும், புத்தகங்களும் மாத்திரமன்றி வணிகம் முதல் சட்டம் வரை, காசோலை, காணிப் பத்திரம் என்று ஆவணங்களும், அங்கீகாரமும் அச்சிற்கே உண்டு என்பதை இன்றும், உணர்த்தியவாறு, அது தன் இடத்தை வளைந்து கொடுக்காது நிலைத்து நிற்கின்றது,

என்னதான் தொழில்நுட்பம் எம் கைகளுக்குள் கையடக்கத் தொலைபேசியாக சிக்கிக் கொண்டுள்ள போதிலும், விரல் நுனியில் செய்திகளும், தகவல்களும் வந்து சேர்கின்ற போதிலும், உறுதிப்படுத்திய செய்திகளை பத்திரிகைகளாக, இறுதிப்படுத்திய விடயங்களை புத்தகங்களாக கற்றறிவதற்கு அச்சு ஓர் அச்சாணியாக இருக்கின்றது.

அச்சிற்கு தனியான வாசம்

புதிதோ, பழையதோ ஒவ்வொரு புத்தகமும் ஒவ்வொரு பத்திரிகையும் கொண்டுள்ள வாசம், அதனைத் தொட்டு உணர்ந்து வாசிக்கும் போது ஏற்படும் ஆனந்தம், இவை யாவும் எத்தொழில்நுட்பத்தையும் தோற்கடித்து விடும் என்பதே உண்மை.

ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் இணையத்தில் எழுதிய எழுத்திற்கும், அதையே ஒரு நூலிலோ, கல்வெட்டிலோ அச்சிட்ட எழுத்திற்கும் பெறுமதி ஒன்றாகி விடாது என்பது, தொழில்நுட்பத்தை பறைசாற்றும் விஞ்ஞானமும், அகழ்வில் ஈடுபடும் ஆராய்ச்சியாளனும் உலகத்திற்கு சொல்லும் உண்மையாகும்.



நிஸ்வான்
சேகு முகைதீன்



2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

90th ANNIVERSARY

தினகரன் பத்திரிகையின் 89 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வின் போது லேக்ஹவுஸ் நிறுவனத்தின் ஆசிரிய பீட நுழைவாயிலில் தினகரன் அனைத்து ஊழியர்களும் எடுத்துக் கொண்ட படம்

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்ட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 மார்ச் மாதம் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.